12974

(7667)

# சுப்பிரமணிய பராக்கிரமம்

மேனைப் புலோலி

நா. கதிரைவேற்பிள்ளை.

706 [illegible]

MAHAMAHOPADHYAYA
R. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41
12974

# விஷய சூசிகை.


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| க | உபோற்காதம். | கூ |
| உ | கடவுள் வணக்கம். | க |
| ங | அவையடக்கம். | ங |
| க | சத்திமான் மூர்த்தி. | சா |
| உ | ஞான சத்திதர மூர்த்தி. | கஉ |
| ங | தாரகாந்தக மூர்த்தி. | கரு |
| ச | வாரகோன்மத்த பங்க மூர்த்தி. | உ0 |
| ரு | கூர்ம பங்க மூர்த்தி. | உங |
| சா | புலிங்க மூர்த்தி. | உஅ |
| எ | சரவணோற்பவ மூர்த்தி | ஙக |
| அ | சகலலோக குரு மூர்த்தி. | ஙஎ |
| கூ | கார்த்திகேய மூர்த்தி. | சங |
| க0 | அருணைரூட மூர்த்தி. | சஅ |
| கக | பிரம சாத்த மூர்த்தி. | ருசா |
| கஉ | சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தி. | சாக |
| கங | பிரம காராக்கிருக விமோசன மூர்த்தி. | சாஅ |
| கச | பரசிவ குரு மூர்த்தி. | எசா |
| கரு | சீகர மூர்த்தி. | அசா |
| கசா | குகசுவாமி மூர்த்தி. | அகூ |
| கஎ | ஞான தேசிக மூர்த்தி. | கூஉ |
| கஅ | அத்துவா மூர்த்தி. | க0ச |
| ககூ | வியாக்கிராசுர சங்கார மூர்த்தி. | கக்க |
| உ0 | கயாரூட மூர்த்தி. | ககஎ |
| உக | மாதங்காரி மூர்த்தி. | கஉஉ |
| உஉ | யாக ரக்ஷக மூர்த்தி. | கஉஎ |
| உங | புட்ப சத்திர மூர்த்தி. | கஙஉ |
| உச | பத்திர சத்தி மூர்த்தி. | கஙகூ |
| உரு | பிரணவாசல மூர்த்தி. | கசச |


RAKSHANDAR KOVIL

G/F
Q23.8/40

# விஷய சூசிகை.



| எண். | விஷயம். | பக்கப் |
|---|---|---|
| ௨௬ | இலிங்க தலேச்சுர மூர்த்தி. | ௧௪௪ |
| ௨௭ | முட்டைநாமக் குமார மூர்த்தி. | ௧௪௬ |
| ௨௮ | சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி. | ௧௫௧ |
| ௨௯ | வரதாராச மூர்த்தி. | ௧௫௯ |
| ௩௦ | பஞ்சாயுதப் பிரதான மூர்த்தி. | ௧௬௩ |
| ௩௧ | சதுர்முக சாபாரி மூர்த்தி. | ௧௬௮ |
| ௩௨ | யோகாசாரிய மூர்த்தி. | ௧௭௧ |
| ௩௩ | குழந்தை வேலப்ப மூர்த்தி | ௧௭௬ |
| ௩௪ | கோர நிருதாரி மூர்த்தி. | ௧௭௯ |
| ௩௫ | இடும்பாசுர சிக்ஷா ரக்ஷக மூர்த்தி. | ௧௮௨ |
| ௩௬ | சர்வலோக க்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தி. | ௧௮௬ |
| ௩௭ | தண்டதரக் குமார மூர்த்தி | ௧௯௨ |
| ௩௮ | புராண பாலன கிருபா மூர்த்தி. | ௧௯௫ |
| ௩௯ | இந்திர போகாநுக்கிரக மூர்த்தி. | ௧௯௯ |
| ௪௦ | நாகவாதன நிவாரண மூர்த்தி. | ௨௦௨ |
| ௪௧ | போக மோக்ஷாநுக்கிரக மூர்த்தி. | ௨௦௫ |
| ௪௨ | பரமைசுவரிய மூர்த்தி. | ௨௧௦ |
| ௪௩ | சேனாபதி மூர்த்தி. | ௨௧௩ |
| ௪௪ | சண்முக மூர்த்தி. | ௨௧௬ |
| ௪௫ | புரோகித மூர்த்தி | ௨௨௦ |
| ௪௬ | கலாவிநோத மூர்த்தி. | ௨௨௩ |
| ௪௭ | இலீலா மூர்த்தி. | ௨௨௮ |
| ௪௮ | தேவதண்டன ரக்ஷா மூர்த்தி. | ௨௩௨ |
| ௪௯ | தாரகாசுர சங்கார மூர்த்தி. | ௨௩௬ |
| ௫௦ | சத்திர நடன மூர்த்தி. | ௨௪௨ |
| ௫௧ | துடிக் கூத்த மூர்த்தி. | ௨௪௫ |
| ௫௨ | வித்வ மூர்த்தி. | ௨௪௯ |
| ௫௩ | மாதிருகா மந்திரரூப மூர்த்தி. | ௨௫௮ |
| ௫௪ | குகபரப்பிரம மூர்த்தி. | ௨௬௨ |
| ௫௫ | சந்தான வரத மூர்த்தி. | ௨௬௫ |
| ௫௬ | காமாசார தேவ மூர்த்தி. | ௨௬௮ |

## விஷய சூசிகை.





| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ௫௭ | கிரவுஞ்ச பேத மூர்த்தி. | ௨௭௧ |
| ௫௮ | முருக மூர்த்தி. | ௨௭௫ |
| ௫௯ | பாலசுப்பிரமணிய மூர்த்தி. | ௨௭௮ |
| ௬௦ | பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தி. | ௨௮௦ |
| ௬௧ | உக்கிர வர்ம மூர்த்தி. | ௨௮௬ |
| ௬௨ | வாருணேக்கிர மர்த்தன மூர்த்தி. | ௨௯௧ |
| ௬௩ | பாகசாதன கர்வ பங்க மூர்த்தி. | ௨௯௩ |
| ௬௪ | சுவணாசல தண்டன மூர்த்தி. | ௨௯௭ |
| ௬௫ | சகல கலாவல்லப மூர்த்தி. | ௨௯௯ |
| ௬௬ | அபிடேக குமார மூர்த்தி. | ௩௦௫ |
| ௬௭ | சீடாதிப மூர்த்தி. | ௩௦௬ |
| ௬௮ | குமாரப் பிரம சாரிமூர்த்தி. | ௩௦௮ |
| ௬௯ | வல்லி கல்யாண மூர்த்தி. | ௩௧௦ |
| ௭௦ | நடன நாத மூர்த்தி. | ௩௧௩ |
| ௭௧ | பராசர குமாரோப தேச மூர்த்தி. | ௩௧௫ |
| ௭௨ | திரிசுதந்திராபேத மூர்த்தி. | ௩௧௮ |
| ௭௩ | சர்வ விபுத்துவ மூர்த்தி. | ௩௨௦ |
| ௭௪ | தேவவாகன தான மூர்த்தி. | ௩௨௩ |
| ௭௫ | மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தி. | ௩௨௬ |
| ௭௬ | மதுகாவல மூர்த்தி. | ௩௩௦ |
| ௭௭ | அகிலலோக நடன மூர்த்தி. | ௩௩௫ |
| ௭௮ | இராம மூர்த்தி. | ௩௩௭ |
| ௭௯ | கதிர்காம மூர்த்தி. | ௩௪௪ |
| ௮௦ | சிங்கமுகாசுரவத மூர்த்தி. | ௩௫௧ |
| ௮௧ | சூரசங்கார மூர்த்தி. | ௩௬௧ |
| ௮௨ | விசுவரூப மூர்த்தி. | ௩௭௧ |
|  | அசுரபுர தகன மூர்த்தி. | ௩௭௮ |
|  | அகடித கடனா சாமர்த்திய மூர்த்தி. | ௩௮௧ |
|  | தேவசேனாபதி மூர்த்தி. | ௩௮௪ |
|  | [illegible]வபலப் பிரதான மூர்த்தி. | ௩௮௯ |
|  | [illegible]ங்காப வர்க்க மூர்த்தி. | ௩௯௮ |
|  | [illegible]ரிணய மூர்த்தி. | ௪௦௩. |

# இதன்கண் எடுத்தாளப் பெற்ற நூல்கள்

## வடமொழி நூல்கள்.

இருக்குவேதம்.
யசுர் வேதம்.
சாம வேதம்.
அதர்வண வேதம்.
சுவேதாச் சுவதரம்.
இராம ரகசியம்.
ஈசாவாசியம்.
மந்திரம்.
சாந்தோக்கியம்.
மகம்.
யோகதரிசனம்.
முக்திகம்.
சரபம்.
அதர்வசிரம்.
கூடாருணிகம்.
அதர்வசிகை.
பிரச்சினம்.
சாஸ்வதிரகசியம்.
காண்வசாகை.
மைத்திராயணம்.
மூண்டகச்சாகை.
புருட சூக்தம்.
வாதுளம்.
அசிதம்.
சந்தானம்.
காமிகம்.
சுவாயம்புவம்.
சூக்குமம்.
கிரணம்.
விம்பம்.
மகுடம்.
பாரமேசுரம்.
பௌட்கரம்.
மதங்கம்.
சிந்தியம்.
இரௌரவம்.
காரணம்.
சிவஞான போதம்.
நிசுவாச காரிகை.
குமார தந்திரம்.
வீராகமம்.
மிருகேந்திரம்.
இலிங்காமிர்தம்.
ஐந்திரவியாகரணம்.
பாணினிவியாகரணம்.
சித்தாந்தபோதம்.
மகிம்ந ஸ்தவம்.
ஸ்காந்தசம்பவம்.
ஸ்கந்தலகரி.
கந்தகாலோத்தரம்.
சங்கர சங்கிதை.
சூதசங்கிதை.
ஆலாஸ்ய மாகாத்மியம்.
வருணபத்ததி.
சோமசம்புபத்ததி.
காலோத்தரம்.
வாமன புராணம்.
மற்ச புராணம்.
வராக புராணம்.
கூர்ம புராணம்.
வாயுசங்கிதை
உபதேசகாண்டம்.



சத்திமான் மூர்த்தி.

பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என எட்டாகவும் வியாபரிக்கும் என்க.

அவற்றுள் முதன் மூன்றுங் குமாரப் பெருமானுக்குச் சூக்கும வடிவாகவும், ஏனைய ஐந்துந் தூல வடிவாகவும் சொல்லப் படும். அன்றியும் சேநநியாற் படைப்பும், இரௌத்திரியினுற் காப்பும் மறைப்பும், ஆரணி சத்தியால் அழித்தலும் அருளலும் ஆகிய சூக்கும கிருத்தியங்களும், ஈசானி முதலிய ஐந்தானுந் தூல பஞ்சகிருத்தியங்களுஞ் செய்தருளுவர். இங்ஙனமன்றி வேறுவிதமாகவும் கூறப்படும். அவைவருமாறு:— குமாரக்கடவுளின் வல்லமை யொன்றே பரை, பராபரை, அபரை யெனமூவகைப்படும். அவற்றுட் பரை யென்பது குகப்பெருமானின் சுவசிற்சத்தியாகும். பராபரை யென்பது உலக உபாதான சத்தியாகும். அபரை யென்பது பரிக்கிரகசத்தியாகும். பரை யென்னும் சத்தி இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருட்டிணை, உன்மனை யென ஐந்து வகையாகும். பராபரை என்னுஞ் சத்தி இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, ஆதிசத்தி என நால்வகைப்படும். அபரை யென்னுஞ்சத்தி பிராமிசத்தி, வைணவி சத்தி, இரௌத்திரிசத்தி என மூன்றுவகைப்படும். இச்சத்திகளையே அந்தணர் முதலாயினோர் முறையே காலை, உச்சி, மாலைகளிற் றியானிக் கின்றனர். பிராமி சத்தி க00-கோடிவிசால முள்ள இரத்தநிற மண்டலத்தில் சகல உலகங்களையும் படைத்தற்குக் காரணமாயிருப்பள். வைணவிசத்தி உ-கோடி விசாலமுள்ள சுவேதமண்டலத்திற் காத்தற்குக் காரணமாயிருப்பள். இரௌத்திரி ங-கோடி விசால முள்ள விந்துமண்டலத்தில் அழித்தற்குக் காரணமா யிருப்பள்.

பராசத்தி ஞானமே யாக வியாபரித்த போது சிவதத்துவம் இலயதத்துவம், நிட்கள தத்துவம் எனவும், கிரியை யாக வியாபரித்த போது சத்திதத்துவம் எனவும், இரண்டுஞ் சமமாக வியாபரித்த காலத்துச் சதாசிவ தத்துவம், போக தத்துவம், உத்தி யுத்த

தத்துவம், சகள நிட்களதத்துவம் எனவும்,இச்சையாக வியாபரித்த காலத்து ஈசுர தத்துவம், அதிகார தத்துவம், பிரவிர்த்தி தத்துவம், சகளதத்துவம் எனவும் பெயர் பெறும். அங்ஙனமே சத்திமானாகிய முருகப் பெருமானாரும் குகன், இலயன், நிட்களன் எனவும்,சத்தன் எனவும், சதாசிவகுகன், போகன், உத்தி யுத்தன், சகளநிட்களன், ஈசுரன்,அதிகாரன், பிரவிர்த்தன், சகளன் எனவும் வரூஉப் பன்னிரு திருநாமங்களையுங் கொண்டு நிற்பார். இதனை அவரது பன்னிரு திருக்கரப் பாங்கானும் உய்த்துணரப்படும் என்க. இக்காரணத்தால் இலய குகன், போககுகன், அதிகாரகுகன் என்னும் மூவகைச் சத்திமானும் அவரே யென்பது தெளியப்படும்.

இங்ஙனம் பராசத்தியின் வேறுபாட்டாற் றோன்றும் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு, எட்டு, பதின் மூன்று, ஐம்பத்தொன்று, அனந்தம் ஆகிய கூறுபாடுள்ள இச்சை முதலாயவற்றையும், அவாந்தர வேறுபாட்டால் வரும் மகாமாயை, உன்மனை, சமனை, வியாபினி, வியோம ரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சூக்குமை, அதிசூக்குமை, அமிர்தை, அமிர்தாமிர்தை, வியாபினி, இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, சாந்தியதீதை, சசீநி, அங்கதை, இஷ்டை, மரீசி, சுவாலினி, தமை, யோகை, இரக்ஷை, நிட்டை, மிருத்தியு, அபயை, இரசை, இரதி, வால்யை, காமை, சம்மியமை, கார்யை, தாத்திரி, பவை, மேதை, காந்தி, சுவதி, திருதி, மனோன்மணி, உமை, திரு, வாணி என்னுஞ் சத்தி பேதங்களுக் கெல்லாந் தலைவரும் அவரேயாம். வாமை, ஜியேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூத தமனி என்னும் எட்டுச் சத்திகளுக்கும் அதிபர் என்பது அறுமுகங்களானும் இரு திருவடிகளானு முணரப்படும்.

சுத்த வித்தியா தத்துவத்திலே யுள்ள பூர்ணோதரி, வீரசேனி, சான்மலி, உலோலாட்சி, வர்த்துளாட்சி, தீர்க்க நாசிகை, தீர்க்க

முகி, கோமுகி, தீர்த்த சிம்சு, குண்டோதரி, அர்த்த கேசி, விகிர்த முகி, சுவாலா முகி, உலூகமுகி, ஸ்ரீமுகி, வித்யா முகி, சாசுவதி, மகாகாளி, சர்வசித்தி, சமன்மிதி, கௌரி, திரிலோக்கியை, வித்யை, மந்திர சத்தி, ஆன்ம சத்தி, பூதமா, தேவாம்போதரி, இராவிணீ, நகரீ கேசரி, மஞ்சரி ரூபிணி, விரைசேகர ரோதரி, பூதாதினி, பத்திரகாளி, யோகினி, சஙகினி, கர்ச்சினி, காளராத்திரி, கூர்த்தங்ய கபர்த்தினி முதலிய உருத்திர சத்திகள் ஐம்பத்தொன்றாகப் பராசத்தி யுருக்கொண்ட போது, பச்சிம புலவகான நகரத்துப் புதுச்சந்நிதி என்னு மொருபெருங் கோயிலின்க ணெழுந்தருளும் குகேசக்கடவுளும் அவற்றிற் கேற்ப, ஸ்ரீகண்டர், அநந்தர், சூக்குமர், திரிமூர்த்தி, அமரேசர், அாபீசர், பாரபூதி, திநீசர், தாணுகர், அர சேங்கிடேசர், புவுரீகர், சத்தியோசாதர், அநுக்கிரகர், ஈசுரர், அக்குரூரர், மகாசேனர், கிராதேசர், சண்டேசர், பஞ்சாந்தகர், சிவோத்தமர், எகருத்திரர், கூர்மர், எகநேத்திரர், சதுரானனர், அசேசர், சரு, சோமேசுரர், இலாங்குலி, தாருகர், அர்த்தநாரீசுரர், உமா காந்தர், ஆஷாடி, இடிண்டி அத்திரி, மீனர், மேஷர், உலோகிதர், சகித்தர் முதலிய ஐம்பத்தொரு உருத்திரர்க ளாக நின்று அவ்வித்தியா தத்துவ புவன கிருத்தியஞ் செய்தலின், அச்சத்திகளையுடைய சத்திமானும் குமாரக் கடவுளே யாவர்.

இவற்றானே எந்தையாராய குகனே சிவபெருமானாகிய முழுமுதற் கடவு ளென்பதும், அவரே பிரேரக போக போக்கிய காண்டங்க ளென்னும் சுத்த சுத்தாசுத்த அசுத்த தத்துவங்க ளாகிய சொற் பொருட் பிரபஞ்சங்களைப் படைத்துங் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் விளையாடும் புவன பதித்துவ கர்த்தவ்விய சத்திமான் என்பதும் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதி னுணரப் படுமென்க. இத்தகைய அநந்த கோடி சத்திகளை யுடைய தலைவனாகலிற் சுப்பிர மணியக் கடவுள் சத்திமான் மூர்த்தி யாயினர்.

12974



7657

## மொழி நூல்கள்.

பிரமாண்ட புராணம்.
சைவபுராணம்.
சாரதா திலகம்.
சிகரிணிமாலை.
மகாபாரதம்.
சப்தார்த்த நிர்ணயம்.

கந்தஸ்தவம்.
வேங்கடகுகஸ்தலநிரூபணம்.
இலிங்கசோபானம்.
ஆயுர்வேதம்.
கிரியாவிவரணம்.
சதாசிவரூபம்.
பிரமோத்தரகாண்டம்.
கேசவாதி நாம சிவபாத்துவ நிரூபணம்.

## தமிழ் நூல்கள்.

திருவாசகத் திருவருட்பா.
திருமந்திரம்.
திருமுருகாற்றுப்படை.
பதினோராந்திருமுறை.
பெரியபுராணத் திருவருட்பா.
சிவஞான போதம்.
ஷை மாபாடியம்.
சிவஞானசித்தியார்.
சிவப்பிரகாசம்.
சிவஞான தீபம்.
தாகளறுபோதம்.
சித்தாந்தபோதம்.
கந்தபுராணம்.

வராகபுராணம்.
கூர்மபுராணம்.
சிவரகசியம்.
பாகவதம்.
காஞ்சிப்புராணம்.
பார்க்கவ புராணம்.
தணிகைப்புராணம்.
திருவிளையாடற்புராணம்.

வேப்பத்தூரார் திருவிளையாடல்.
திருப்பரங்கிரிப்புராணம்.
பிரமோத்தரகாண்டம்.
திருச்செந்தூர்ப்புராணம்.
வாசிட்டலைங்கபுராணம்.
திருக்காளத்திபுராணம்.
சீகாளத்தி புராணம்.
செவ்வந்திப் புராணம்.
பழநித்தல புராணம்.
கருவூர்ப் புராணம்.
சிவகங்கைப் புராணம்.
கடம்பவன புராணம்.
திருக்கோளிலிப் புராணம்.
பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.
திருப்போரூர்ப்புராணம்.
புலவர் புராணம்.
திருப்புகழ்.
வீரசோழியம்.
இறையனாரகப்பொருள்
திருக்குறள்.
சிறுபாணாற்றுப்படை.

## தமிழ் நூல்கள்.

நாடகநூல்.
சீவக சிந்தாமணி.

சுத்தானந்தப்பிரகாசயாதம்.
பாத சேனுபதீயம்.

பட்டினப்பாலை.
பரிபாடல்.
பத்துப்பாட்டு.
தொல் காப்பியம்.
மணிமேகலை.
சிலப்பதிகாரம்.
திவாகரம்.
பூதத்தாரவையடக்கியல்
கயாகரணம்.
குமார தரிசனம்.
இராமாயணம்.
கதிர்காமப் புராணம்.
கதிர்காமமான்மியம்.
பிங்கலந்தை.

கதிர்காமக் கோவை.
ப்போரூர்த்தலவெண்பா.
ிப்பாடல்.
நல்வழி.
சௌந்தரியலகரி.
முருகன்முறையீடு.
ாலை.
கதிர்காமக் கலம்பகம்.
மருட்பா மறுப்பு.
சுப்பிரமணியதலக்கோவைப் பிள்ளைத்தமிழ்.
நச்சினர்க்கினியருரை.
அடியார்க்குநல்லாருரை.
யோகதரிசனம்.
கருவூர்மான்மியம்.
செந்தமிழ் நாவலர் சரிதம்.
தொண்டைமண்டல சதகம்.
கந்தபுராணச் சுருக்கம்.
திருவள்ளுவமாலை.

குகமயம்.

புதுச்சந்நிதிக் கந்தநாதன்றுணை.

# உபோற்காதம்.

---

[illegible]

[illegible]

[illegible]

நாணின் மீதுள விரதமு மதனடு நட்டதோர் தனுவுமத் தனுவி, னேணி னுச்சியி னடக்குசக் கரங்களு மவைநடு வியைத்திடுங் கணையுங், கோணை யங்கதின் வயிறுவாழ் வலவனு மவன்றன்வாய்க் குதிரையு மவற்றின், பேணு மூச்சியுங் கொண்டவன் பிரமமெற் கருள்புதுச் சந்நிதிப் பெருமான்.

உலகமானது தோன்றி நின்றொடுங்க லென்னு மூவினையுடைமையிற் கடம்போலக் காரியமே யென்று அநுமித்துணரப்படும். செய்வோனை யின்றிச் செய்வினை யின்மையால் அவன் அவள் அது வென வவயவப் பகுப்புடைய இவ்வுலகந் தன்னைக் காரியப்படுத்தும் மகாசங்கார காரணனைக் கருத்தாவாக வுடைத்து. அதனை, "அநுமாநம்த்குடம் வ்யாப்ய பரோக்ஷார்த் தாவபோதக மிதி" எனவருஉம் பௌட்கராகம விதியானே ஐந் துறுப்புக்களானுங் காட்டி வலியுறுத்துவாம். என்னை?

க. இவ்வுலகம் ஒருகருத்தாவை யுடைத்து - பிரதிஞ்ஞை.

உ. அவன் அவள் அதுவென மூவினைப்படலின் - ஏது.

௩. கடமுதலிய காரியங்கட்குக் குலாலன்போல - உவமை.

௪. அங்ஙனே காரியமான வுலகும் ஒருகருத்தாவையுடைத்தென அநுமித் துணரப்படும் - உபநயம்.

௫. ஆகலின் உலக மொருகருத்தாவை யுடைத்து - நிகமனம்.

அம் மகாசங்கார காரணன் யாவனோ வென்று ஆயுழி, தோற்றக் கேடுகளிலா னெவனோ வவனே சங்கார காரணனாகிய பரமமுதல்வ னென்று வேதசிவாகமங்களாகிய அருணூல்கள் கூறாநிற்கும். அவனைப் பரசிவன் என்னும் விசேடப் பெயரான் அழைப்ப பெரியோர். ஆகவே சிவபெருமா னொருவரையே பரமபதியெனக் கொள்வது சித்தாந்த மாகவும், ஈண்டுச் சுப்பிரமணியக் கடவுளைப் பரப்பிரம மென்பது முரணாலோ வெனின், அற்றன்று. சிவபெருமானேதேவி யார்க்கு உபதேசிக்குங் காலைத் தாமே குகனெனவும் குகன் தாமே எனவுங் கூறியருளி யுண்மையைத் தெரித்தருளலா னன்றென்க.

"ஒருவனே யிராவணாதி பாவக முற்றுற்போலத் - தருவனிவ் வுருவமெல்லாந் தன்மையுந் திரியானாகும்" என்று சித்தாந்த உபநிடதங் கூறுமாற்றானே குமாரவடிவங் கொண்டு சுப்பிரமணியன் முதலாய பலதிவ்விய நாமங்களொடும் நின்று விளங்குகின்றவர் சிவனே யென்பது தெள்ளிதிற் றுணியப்படும். ஒருவன் கூத்திற் குரிய பல வேடங்களைக் கட்டி நடித்தா னாயினுந் தன்றன்மையிற் சிறிதுந் திரியாமைபோல, முதல்வனும் ஐந்தொழிற் குரியனவாய் ஈண்டுக் கூறப் படும் மூர்த்தங்களை யெல்லாம் எய்தியக்காலும் அவையெல்லாங் குணகுணி பாவமா யுடனிற்குந் தனது சத்தியிற் காணப்படுவன வாகலின், அதுபற்றித் தன்றன்மை வேறுபட்டு விகாரியாவா னல்ல னென்க. இவ்வுண்மையானே சிவனே குகன்; குகனே சிவனெனக் கூறும் பதிநூல்க ளெல்லாம். இக்கருத்துப் பற்றியன்றே,

ஈச னேயவ னாடலான் மதலையா யினன்கா
ணாசி லாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
றேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

என்று கூறிற்றுக் கந்தபுராணமும். "ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும் - பேதகமன்றால்" எனவரூஉம் வாக்கியங்களும் இப்பொருளை வலியுறுத்தும். தேவி திருமுகம் ஒன்றும், சிவபெருமான் றிருமுகம் ஐந்துஞ் சேர்ந்து ஆறுமுகமா யிருத்தலானும், சிவபெருமானது திருமுகம் திருக்கரங்கள், திருக்கண்கள் என்னு மவையிற்றை யொருங்கெண்ண முப்பதாகல்போல, சுப்பிரமணியக் கடவுளின் றிருமுகங்கள், திருக்கரங்கள், திருக்கண்கள் என்னு மவையிற்றையு மொருங் கெண்ண முப்ப தாகலானும், தாரகாக்கன் முதலிய அசுரர் புரங்களையும், காமனையுஞ் சிவபெருமான் புன்னகையானுந் திருவிழியானும் எரித்தழித்தாற் போலச் சுப்பிரமணியக் கடவுளும் அசுரசேனைகளின் புரங்களைப் புன்னகையானுந் திருவிழியானும் அழித்தருளலானும், சிவபெருமானுக்கு முச்சத்தி யிருத்தல் சிவண, குகபரப்பிரமத்திற்கும் வள்ளியம்மையாராம் இச்சா சத்தியும், தெய்வயானை யம்மையாராங் கிரியா சத்தியும், வேற்படையாம் ஞானசத்தியும் இருத்தலானும், சிவபெருமான் யோக போக வேக மூர்த்தங்களையும், அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையுங் கோடன்மான, குகப் பெருமானும் அவையிற்றைக் கோட லுண்மையானும், சிவபெருமான் பஞ்சகிருத்தியங்களையு நடத்துவதுபோல, இவரும் நடத்தியருளலானும், இன்னன பலப்பல வேதுக்களானுஞ் சிவனுங் குகனும் ஒருவரே யென்க. இதனை,

நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்து மொன்று
யுன்மக ஞமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே.

முகம்விழி மலர்க்கை மூன்று முப்பது முன்பு நாஞ்செய்
மகவினைக் கருளவந்த வள்ளலுக் கீண்டுச் சாடப்
புகுமிவைறக் கவைகண் மூன்று முப்பதே பொலிவு மற்றே
திருவுரு வானுஞ் சேயைச் சிவனெனத் தெளிதல் வேண்டும்.

என்றின்னோரன்ன பிரமாணங்கள் கூறுமுகத்தாற் கண்டுகொள்க. வேதமும் "அவனே மகேசுரன்; அவனே உமை; அவனே விநாயகன்; அவனே ஸ்கந்தன்" என்பது போதர "யச்ச மகேச்வரஃ! யா சோமா! யச்ச விநாயகஃ! யச்சஸ்கந்தஃ!"எனப் பஞ்ச ருத்திரங்களுளொன்றாய அதர்வசிரசு என்னுஞ் சாகையானும், "நீயே பெண்; நீயே ஆண்; நீயே குமாரன்" என்பது போதர "த்வம்ஸ்திரீ த்வம் புமாநஸி த்வம் குமார" எனச் சுவேதாசுவதரச் சாகையானுஞ் சிவனேகந்தனெனத் தெற்றென வுணர்த்திற்று. இவ் வுண்மையுணராது "கந்தன் பரசிவனல்லன்; அவன் பாலனே" என்று கொண்ட சூரபன்மன், தாரகன், பானுகோபன், அக்கினிமுகன், வச்சிரவாகு முதலிய அசுரர்கள் தங்கள் குலத்துடன் றாமழிந்ததையும், பொய்யாமொழி முதலாயினோர் அச்சுறுத்தப்பட்டதையும் உணர்ந்தவர் குகன் சிவனே யெனக் கொண்டுய்வார் என்பது.

அற்றேல் மகேசுவரிதயக்கணும், தடாதகையார் திருவயிற்றும், அக்கினியி னிடத்தும், சதாசிவ மூர்த்திகளின் நெற்றிக் கண்களினின்றுந் தோன்றியருளினாரென்பதும், சாபம்பெற்று மூகையானாரென்பதும் என்னை யெனின், அவை உபசாரமே யன்றி யுண்மையல்லவாம். அவ் வுண்மை கார்த்திகேயன், சரவணபவன், கங்கைதனயன் முதலிய வற்றானும், சுவாமிநாதன், சிவகுரு முதலியவற்றானும் உணருங்காற் போதரும். இங்ஙனந் திருவிளையாடலானே யன்பர்க் கருள்புரிதனிமித்தம் பலப்பல மூர்த்தங்களைக் கொண்டருளிய சுவாமி நாதனைச் சிவனுக்கு வேறாக வைத்தெண்ணி வழிபடுவார் சிலர் உண்மை யுணராது தம்மதத்திற்குக் கௌமார மதமெனப் புதுவதோர் பெயர்சூட்டி யொழுகுவர். அதனால்அவர் இடர்ப் படுத லன்றிப் பேரின்பங் கூட லொருகாலு மின்றாம். இக்கருத்தினிய றெரியாத மற்றோர் சாரார் குமாரக்கடவுள் சீகண்டருத்திரர் அனந்ததேவ நாயனார் என்பார்தங் குமாரர் என்றும், அவர் பிரளயாகலர் விஞ்ஞானாகலர் என்பாருள் வைத்தெண்ணப்

டுந் தகையரென்றும், பரிவார தேவரு ளொருவராகப் பூசித்தற்குரியரென்றும், சித்தாந்திகள் பதியெனக் கொள்ளா ரென்றும், ஆகலானவரைப் போற்றுவோர் சித்தாந்தத்திற்கு வேறான கௌமார சமயிகளென்றும், அவர்க்குச் சீகண்டபுவனப் பிராப்தியே முத்தியென்றுந் தம்மனம் போனவா றெல்லாங்கூறி யெளிவாய் நரகிற்கு இரையாவாரென்க. இவரெலாங் குகனே சிவனென்னு முண்மை தெளிவரேல் அங்ஙனங் கூறி யிடர்ப்படுகிலார். சிவனுக்கு வேறாக வைத்து வழிபடுவோரையே கௌமார மதத்தரென வொதுக்குவ மென்னும் அங்ஙனம் பெரியோர் ஒருமதம்வகுக்காமையானும், குமாரக்கடவுளை வழிபடுவோர் சிவனை வழிபட்டவ ரவரெனச் சுருதிகள் கூறலானும் அது பொருந்தாதென மறுக்க. காணாபத்தியம் என்பதும் அங்ஙனங் கொள்ளற்பாலதாம்.

இங்ஙனம் விளங்குஞ் சுப்பிரமணியக் கடவுளின் பிரபாவங்கள் மனவாக்குகட் கெட்டாதன. அவற்றினு ளொருசிறிதே யான்மாக்களெல்லாம் உய்யும் பொருட்டு வேத சிவாகம புராணேதிகாச முதலியவற்றிற் கூறப்பட்டவைக. தமிழ்ப் பண்டைநூல்கண் மாட்டு முருகனே கடவுளாக அறையப்பட்டுள்ளது. ஐந்திணைகளுண் முற்றிணையாய்க் கூடலானே யின்ப முறுத்தவல்ல வத்துணைச் சிறப்புடைய குறிஞ்சிநிலக்குத் தெய்வஞ் சுப்பிரமணியனே யென்று அகத்தியம், தொல்காப்பிய முதலியகூறலாற் றமிழ்நாட்டுத் தெய்வம் அவரே யென்பது தெளிவாம். அதனானன்றே செந்தமிழ்ப்பரமாசாரியரும், தமிழர் கடவுளு மவரெனத் தெளிந் தொழுகி வழிப்பட்டார் ஆன்றோர். வடக்கட் சுப்பிரமணிய தலங்கள் மல்கிக் காணாது தெற்கட் காணப்படுவது மிதனை வலியுறுத்து மாயிட்டு.

இத்தகைச் சிறப்பினையுடைய பரமநாதனுங் குகக்கடவுளார் கலியுகத்திலே விசேட பிரத்தியக்க தெய்வமாக விருந்து அன்பர்க்கருள்புரிதலாற் கலியுக வரதர் எனவுங் காரணப் பெயருற்றார். தமிழ்நாட்டகத்தார் பெரும்பாலும் அவரைத் தொழலும், அவர்புகழ்

பேசலும் கேட்டலுஞ் செய்துய்கின்றூர். ஆகலிற் பாவயுகமாகிய இக்கலிகாலத்தே யிருமை யின்பமும் எளிதிற் பெறவேண்டியோர், வேண்டியார் வேண்டுவன வெல்லாமீயும் இக்கலியுக வரதர்த்தொழுதல் ஆவசியகமாம். அங்ஙனந் தொழுவார்க்கும் அன்பு வேண்டும். அவ்வன்பும் அவரது மெய்ப்புகழ்களாகிய பராக்கிரமங்களைச் செவ்வனே யறிதலா லதிகரித்து நிலையுறும். ஆகலான் அளவிறந்து விளங்குஞ் சுப்பிரமணிய பராக்கிரமங்களை யெல்லாம் எடுத்துரைத்தலும், உரைத்தவழி யுணர்தலுஞ் சிற்றறிவினோர்க் கியலா தென்பது எவரு முணர்ந்த தொன்றே. அவற்று ளொருசிறிது ஞரையிற் போந்தவற்றி னின்றியமையாத பராக்கிரமங்களை யெடுத்து வகுக்கினுலகிற் குபகாரமா மென்று, என்மனம் பன்னாட் சிந்தித்து அவாக்கொண்டமைக் கியைய,

காஞ்சிபுரம் ஜமீந்தாரும், திருவேகம்பநாத சுவாமியாலய தர்மகர்த்தரும், வேளாளகுலப் பிரபுவும், பரோபகார சீலரும், பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்களை யவ்வாலயத் தாசுவாக்களினுலோர் கணிப்பித்து உலகின்க ணுள்ள வுண்மைச் சைவத் திருக்கூட்டத்தினர் யாவரு முவகைக் கடலிற் றிளைக்கும்படி மிக்க விமரிசையாக மகோற்சவஞ் செய்வித்தவரும், ஸ்ரீ சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டம் என்னுஞ் சபைத்தலைவரும், கொடைமுதலியவற்றாற் றிக்கெல்லாம் புகழ் விளங்கப் பெற்றோரும், வித்தியா விநோதரும் ஆகிய ஸ்ரீமந் கா - மு - சுப்பராயமுதலியார் அவர்களும் பெரிதும் விரும்பிப் பன்முறை வேண்டியதனுனே திடங் கொண்டு, வழிபடு கடவுளாயிருக்கும் அவ்வேதுவானுங் கல்வி கேள்விகளிற் சிறிதுமில்லாதே ஞணமின்றி யியற்றுவான் புக்கேன்.

சுப்பிரமணியப் பகவனூர்தம் பராக்கிரமங்களோ, சிவபராக்கிரமம், தேவிபராக்கிரமம், விநாயக பராக்கிரமம் என்னு மிவையிற்றைப்போல இத்துணையவென் றுவரையறை செய்து எந்நூன் மாட்டும் வகுக்கப்பட்டில. அதனுனே யவர் பராக்கிரமங்கள் வரையறைப்

படாதனவென்பது தெற்றெனப் போதரும். ஒன்று கூறுவதுபோன் மற்றொன்று கூறாது விகற்பித் துரையாநிற்கும். அஃதின்நூலினுங்காங் கெடுத்து வகுப்பதாற் றெரிப. பெரும்பாலும் வடமொழிக் காந்தபுராணத்துச் சங்கர சங்கிதைச் சிவரகசியகண்டம், தமிழ்க் கந்தபுராணம் ஆலாஸ்ய மாகாத்மியம், குமாரதந்திரம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புராணம், பாரதம், கூர்மபுராணம் முதலியவற்றிலே கூறப்பட்ட மகிமைகளுஞ் சரிதங்களு மொன்றற்கு ஒன்று விகற்பித்தியலாநிற்கும். ஆயின் மற்றைய கூறுவன சொல்லவும் வேண்டுமோ? ஆகலால் அவையிற்றையும் ஏனைய நூல்களினின்றெடுக்கப்பட்டவைகளையும் முரணுவன நீக்கி ஒருவா றியைத்தும், பின்னிகழப் பெறீஇ ஆன்றோரா னுரைக்கப் பெற்று வழங்கிவருஞ் சரிதங்களையுஞ் சேர்த்துஞ் சுப்பிரமணியபராக்கிரமம் என்னும்பெயரானியற்றினும்.

அங்ஙனம் இந்நூலிற் சேர்த்த பராக்கிரமங்கள் எண்பத்தெட்டு. அவைகள் வடமொழி தென்மொழி மேற்கோள்கள் பலப்பலவானிறுவப்பட்டுள்ளன. அவற்றுட் கூர்ம தண்டன மூர்த்தி, வராகோன்மத்தபங்கமூர்த்தி முதலாய சில பராக்கிரமங்கள் சிவபெருமானியற்றியனவாக நூல்களில் ஆங்காங்கே கிளக்கப்படினும், அவையிருவருக்கு முளதா மபேதப் பெற்றியானே, தக்கயாக சங்காரம், மலரோன்றலை கொய்தன் முதலாயினவே போலக் கூறப்பட்டனவாமெனக்க.

இன்னுங் கந்த மூர்த்தி யொருவரானே மேட மூர்தல், பிரமனைச் சிறையிடல், பரசிவோபதேசம் பகர்தல், கிரவுஞ்சவரை பிளத்தல், அசுர புர தகனம், சிங்க முகாசுர வதம், சூரபன்ம வதம், தேவசேனு பரிணயம், வள்ளி பரிணயம் முதலாய வல்லமைகள் இயற்றப்படினும் அவை பராக்கிரமப் பாகுபாடு பற்றி வேறு மூர்த்திகளாக வைத்தெண்ணப் பட்டன. இவ்வாறே யேனையவற்றிற்குங் கண்டுகொள்க.

இன்னும் பலப்பல பராக்கிரமங்கள் உள்ளன. அவை சண்மாதுர மூர்த்தி, கந்த மூர்த்தி, தத்துவஞான போதக மூர்த்தி, சுவாமிநாத மூர்த்தி, சைவாட்ட மங்கள மூர்த்தி, ஆவரண தேவ மூர்த்தி, திக்குப்பாலகாதிக்க மூர்த்தி, சப்தாசாரிய மூர்த்தி, இருதய பீட மூர்த்தி, சதுர்வேத ரூப மூர்த்தி, திரு வேங்கடாசல

மூர்த்தி, சமுத்திரகத மூர்த்தி, புசங்காபரண மூர்த்தி, நவகோட்டாதிக்க மூர்த்தி, அஷ்ட தேவாதிக்க மூர்த்தி, அஷ்ட சூலாதிக்க மூர்த்தி, செயந்திபுர மூர்த்தி, முசுகுந்த வரப்பிரசாத மூர்த்தி, சுப்பிரமணிய மூர்த்தி, குமார மூர்த்தி, மனு வரப் பிரசாத மூர்த்தி, அகத்தியோபதேச மூர்த்தி, நந்தி போதன மூர்த்தி முதலிய பராக்கிரமங்கள் இருப்பினும் அவையெல்லாம் பின்னர் வெளியிடப் படும்.

திருஞான சம்பந்த சுவாமிகள் சுப்பிரமணியக் கடவுளின் திருவவதார மாகவும், அவர் செய்தருளிய அத்தி யற்புத பராக்கிரமங்களை யீண்டுவகுக்காமை யென்னை யெனின், அவர் சுப்பிரமணியக் கடவுளின் திருவருளானே சாரூப்பியம் பெற்றுள்ளதோர் அபர சுப்பிரமணிய ரெனக் கொள்ளுமாறு, திராவிட மாபாடியத்தார் முதலாய வான்றோர் கூறுப வாகலின் உலகமலையாமை யென்னும் அழகுபற்றி விடுத்தாம். அருணகிரி நாத சுவாமிகள் முதலாய வடியார்கட் கருள் புரிந்த பராக்கிரமங்கள் சண்மாதுர மூர்த்தி முதலியவற்றிற்குப் பாரத மாதிய கூறும் புராண சரிதங்கள் போலப் பிறழ்வுற்றுத் தெளிவாய் விளங்கப் படாமையானும், பலரும் பலவாறுரைத்தலானும் இதுபோது பதிக்கா தொரீஇச் சென்றனன்.

ஈண்டுக் காட்டப்பட்ட விடயங்கள் ஒரேகாலத்து எழுதப் படாது சமயம் வாய்த்துழி யெல்லாம் எழுதப்பட்டன வாகும். ஆகலாற் சுப்பிரமணிய பத்தியின் முதிர்ந்த அன்பர்கள் இவற்றின்கட் குறையிருப்பினும் குணங் கொண்டு கோதாட்டுவா ரென்னும் துணிபானே யொருவா றியற்றி, சத்த முத்தித் தலங்களு ளொன்றாய், செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய முந்து காஞ்சி மூதூர்த் திருவேகம்பநாதப் பெருமான் திருச் சந்நிதிக்கண் பலப்பல புலவசிகாமணிகள் சமுகத்திற் செவ்வனே யரங் கேற்றி வெளியிட்டாம்.

சென்னை
பராபவளு
ஆனிமீ ௨௨.

இங்ஙனம்.
நா. கதிரைவேற் பிள்ளை.
பச்சிம புலவகான நகரம்,
யாழ்ப்பாணம்.



சுப்பரமணியப் பெருமான்.

LITHO, MEENAKSHIAMMAN PRESS MYLAPORE 1904.

சிவகுகமயம்.

ஓம்குகபரப்பிரஹ்மணே நம:

# சுப்பிரமணியபராக்கிரமம்.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

என்றும் புதுமைவிளைத் தெண்ணுவோர்க் கெந்தியு
மன்றவரு ளங்கதிரை மாநகர்போற்—றுன்றுபுதுச்
சந்திதிவாழ் மாமுகனார் தன்றுணைவ னின்வலத்தாற்
சந்திதிவாழ் வெற்கருளுந் தான்.

## கடவுள் வணக்கம்.

### நான்கடியின் மிக்குவந்த கலித்தாழிசை.

ஆரணமுங் காணரிய வறுபொருளென் றெவரும்
பாரணஞ்செய் துணியேத்தப் பதிந்தருளெம் பரனைச்
சீரணவும் பொழிலுடுத்த திருக்கதிரைத் தலம்வாழ்
காரணனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கந்தனூருக் காணாத கண்ணென்ன கண்ணே. (க)

---

(க) அறுபொருள் = அற்ற பொருள். வினைத்தொகை யாகலின் ஐயமற்ற பொருளெனக் கொள்க. இனி "அற்ற காரியம்" என்றாற் போலத் தீர்ந்த பொருளென்றுமாம். அறுவகைச் சமயத்தாருந் துணிந்த பொருளென்னது மொன்று. "அறுபொருளிதுவென்றே" எனச் சிலப்பதிகாரத்துங் கூறல் காண்க. "கண்ணென்ன கண்ணே" என்றது, மண்ணினும் மரத்தினுங் கல்லினும் உள்ள கண்களுடன் பீலிக்கண்ணு முண்டாகலின். கதிரை = கதிர்காமம் என்னும் தலம். இதுவே பாடிவீடாய ஏமகூடயாம்.

சீரானைப் பிறவானைச் சேவலனை மஞ்ஞைத்
தேரானைப் போற்றலர்க டோரானை யெம்மு
னீரானை யளத்தற்கு நேரானைப் பொய்யிற்
சேரான்சீர் கேளாத செவியென்ன செவியே
செவ்வேளின் சீர்கேளாச் செவியென்ன செவியே. (௨)

அவஞான மதுசேர்ந்திங் கலையாமற் சைவத்
திவஞான மெய்ம்மையெனத் தெள்ளியுய நம்மூர்
நவமான சந்நிதியி னண்ணியெமை யாளுந்
தவயானன் சீருரையாத் தாலென்ன தாலே
சரவணன் சீருரையாத் தாலென்ன தாலே. (௩)

இடந்தானு முணரானை யின்முருகை யெல்லாங்
கடந்தானை யருளாந்தண் கடலானை வேல்கைக்
கிடந்தானை யெப்பொருளுங் கிடப்பானைச் சூர்க்கா
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நம்பானை யேத்தாத நாவென்ன நாவே. (௪)

---

(௨) செவியென்ன செவி என்றது, மண், மரம், கல் இவையிற்றினுஞ் செவி யிருத்தலானென்க.

(௩) அவஞானம்=ஏனைய சமயிகள் கொண்ட பசுபாச ஞானங்கள். திவஞானம்= சிவஞானம். சைவம் என்றது ஈண்டுச் சித்தாந்தத்தை. நவமான சந்நிதி=புதுச்சந்நிதி யென்னு மொருபெருங் கோயில்; அது யாழ்ப்பாணத்து மேலைப்புலோலிக்கணுள்ளது. உடையகதிர்காமம் எனவுங் கூறுப. தாலென்ன தால் என்றது, மண் மரம், கல் என்பவற்றின் நாக்களுடன் சிற்கைநா, கலப்பைநா என்பவு முளவாகலின்.

(௪) இடந்தான்=பூமியைத் தோண்டினவன், திருமால். அவனு முணராமையை "விஷ்ணுர் வாராஹம் ரூபமாஸ்தாய" என வரூஉம் இருக்குவேத மந்திர வசனத்தானும் தமிழ்வேதத் திருவாக்குகளானும் பிறவற்றானு முணர்க. சூரபன்மனைக் கொல்வான்படை யுடனடந்தமையால் "சூர்க்கா நடந்தானை" என்றும், இவை நான்கும் படர்க்கைப் பரவல் என்க.

## தெய்வயானையம்மையார்.

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சிவன்பரிக் கிரக சத்தியாந் திருமாற்
றேவிதன் வலக்கணிற் றோன்றிப்
பவன்வடி விடக்க ணிருந்தெமக் கருளைப்
பாலிக்குந் தேவியைப் பரையைத்
திவன்செயுந் தவத்தா லவன்மக ளெனவே
சென்றுவாப் பெயரதைத் தாங்கு
மவளெவள் கிரியா சத்தியாந் தெய்வ
யானையி னடிமலர் பணிவாம். (௬)

## வள்ளி யம்மையார்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புள்ளிமான் றரிகரத்தம் புல்லியான் மகன்றடத்துப்
போந்து நீநங்
கள்ளிமான் வனசரர்கை யள்ளுமா னெனவருதி
யெனமாக் கண்ட
புள்ளிமான் வயிற்றுதித்தங் குகமடங்காக் குகமடங்கற்
புல்லு மானும்
வள்ளிமா னிச்சையெனச் சொல்லுமான் மலர்ப்பதங்கள்
வழுத்து வாமால். (௬)

## வேலாயுதம்-(படைக்கல நாயகம்.)

கடையிலா வலிமை யாதி காணலாற் சிவன்கண் வந்த
வடைவிலு லறுமு கத்தை யடைதலா லாவி மெய்யாய்
மிடைதலா லாய்தம் போலு மேன்மையான் முருக னுக்கும்
படைமுதல் சீர்த்தி பாடும் வரமதைப் படைத்தே னுனே. (௭)

## ஊர்தி, கொடி.

### கொச்சகக் கலிப்பா.

மால்யனூர் காண்பரிய மலர்ப்பதத்து முடிமீதுங்
கோலமதா யெஞ்ஞான்றுங் குடிகொண்டீர் நும்பெருமை
பாலனே னென்றறியேன் பத்தியா ளென்னவைப்பீர்
மேலமயில் வாகனமே சேவலா மெய்க்கொடியே. (அ)

## குகனடியார் வணக்கம்.

### கட்டளைக் கலித்துறை.

விறல்வா கவன்றனை மற்றிலக் கத்தவர் வென்றநந்தி
குறுமா முனிவிதி யிந்திர னாதியர் கொண்டனக்கீ
ரறவோ னருண கிரிகச்சி யப்ப னலகினர்தந்
திறமாப் பதமல ரென்னுளத் தோடையிற் சேர்ந்தொளிர்மே.

## * அவையடக்கம.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தன்னளவைத் தானறியான் றலைவனென மறைகூவு
மவன்றன் சான்ற
மன்னளவு வலனெல்லா நானறைவ லெனவருதன்
மத்த னாளி
கொன்னளவும் பாற்கடலைக் கொளச்சகத்திற் களிப்பனெனுங்
கொள்கை யன்றே
வென்னளவோவென்னென்னேயளியெழுப்பவெழுந்தனன்மெய்ப்
புலவோ ரெள்ளார். (க)

---

* அவையடக்கம் என்பதனை, அவையை யடக்குதல் என இரண்டன் றொகையாகக் கொள்க. அஃதாவது சபையி னுள்ளா ரடங்குமாற்றல் இனியவாகச் சொல்லி யவரைப் புகழ்தல். "அவையடக் கியலே யரிறபத் தெரியின் - வல்லா கூறினும் வகுத்தனர்கொண் மினென் - றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே" என்றது தொல்காப்பியவிதி. அதனை "நிரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போல்" எனவரூஉம் பூதத்தாரவையடக் கியற் செய்யுளானுந்தெரிக.

கந்தனு மொருதேவப் பரம்பரன் * வல் லமைகடமைக்
    காண்ட லென்னுன்
வந்ததோ மறைமயங்கு மெவருணர்வர் வாய்மையவை
    வாக்குட் கெட்டா
வெந்தமா னுடையான்ற னருள்வழிய ரியம்பினமுன்
    னூல்கொண் டேற்ற
மந்தணமு மமைத்தேன்மெய்ப் புலவரன்ன மாட்சியென
    வரிப்பார் மாதோ. (௨)

## † ஆர்வமொழி.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கண்ணே வாயா முருகுண்மை களித்து நோக்கிப் பருகுமின்கள்
வண்ண மூக்கே வாயாக வையன் மேனி மணநுகர்மி
னெண்ணு மனமே வாயாக வெழுத்தா ளுளத்திற் பதித்திடுமி
னண்ணல் வலனுஞ் செவிவாய்க்கொண் டருந்தி யுய்ம்மி னமரங்காள்

### கோச்சகக் கலிப்பா.

காதல்கூர்மெய்ப் புதல்வரொடுங் கிளைஞரொடுங் கடிமனைவாழ்
மாதரொடுந் தோழமையர் யாவரொடு மனமகிழ்ந்து
தீதின்ஞானப் பொருளென்னுந் தேனருந்தி யருட்குமர
நாதன்றனது சீர்பாடி யாடியுய்ம்மி னமரங்காள். (௨)

கடவுள்வணக்க முற்றிற்று.

---

* வல்லமைகள் = பராக்கிரமங்கள்.

† வாக்கு உள் = சொல்லும் மனமும். மந்தணம் = இரகசியம். ஆர்வமொழியாவது - உலகர்மேல் வைத்த அன்பினாற் றமடைந்த வுண்மையை யன்னேரு மடைவான் கூறல். "எந்தை புகலூர் பாடுமின் புலவர்கள்" எனவும்; "ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்" எனவும் வருவுந் திருவாக்குகளா னறிக.

உ

குகன்றுணை.

முதலாவது,

# ஓம் சத்திமான் மூர்த்தி.

---

ஊரிலான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலான்குகக் கடவுளா யென்னுளே நின்றான்.

அநாதிமல முத்த விபுத்துவப் பொருளாய், உரு குணம் குறி செயல் பெயர் முதலியன இல்லாராய், ஒப்புயர் வின்றி ஆன்மாக்களின் இருதய புண்டரீக வீடாகும் தகராலயக்கண் சிதாகாயப் பொருளா யிருப்பவர் குகேசப் பெருமானே யாவர். அவரே சத்திகளுக்கு எல்லாந் தலைவராகலிற் சத்திமான் எனப்படுவர். ஆன்மாக்களின் * சகச மலத்தைக் கெடுத்து அத்துவித முத்திப் பேற்றை யளிப்பதற்காகக் கொள்ளும் மூவகை வடிவிற்கும் ஐந் தொழிற்குங் காரணமா யுள்ளது சத்தியேயாம். அஃதாவது சிவகுரு நாதன் ஆன்மாக்கட்கு அருள்புரிதல் மாத்திரங் குறித்துப் பொதுவகையால் அறிந்தும் அறிவித்தும் நிற்பதான தடையிலா ஞானமே யென்றுணர்க. சத்தி யென்பதற்கு வல்லமை யென்பதே பொருளாகும். அதனால் நீருக்குக் குளிர்ச்சியும், நெருப்பிற்குச் சூடும் போலக் குணகுணி பாவமாக நிற்றலின், பரனோடு பிரிவிலதாய் மரத்திற்கு வைரம் போன்ற தொன்றாம். இக்கருத்தையே "அதபத்யு ரதிஷ்

---

* சகசம் = கூடவுதித்தது. ஆணவ மலம் ஒன்றே யதுவாகும். ஏனைய மலங்கள் ஆகந்துகமலமே. அற்றேல் ஆணவமும் ஆன்மாவுங் குணமுங் குணியுமாகி, குணங் கெடுமாயிற் குணியுங் கெடுமன்றே யெனின், அற்றன்று. சகசம் என்பது குணம் குற்றம் என இருவகைப்படும். அவற்றுள் இது குணமாகாது செம்பிற்குக் களிம்பும், அரிசிக்குத் தவிடும் போல்வதாய குற்றமே யென்க.

## சிவஞான சித்தியார்.

சத்திதான் பலவோ வென்னிற் றுனென்றே யனேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லா
முய்த்திடு மொருவன் சத்தி போலரா னுடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவ னினைந்த வாறும்.

ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றுருமூன் றாகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணேச மாகு
நன்றெலா ஞான சத்தி யானயந் தறிவ னாத
னன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகில மெல்லாம்.

## துகளறு போதம்.

கிரியையறி விச்சை கிளந்த சத்தியேதோ
பெரியபரா சத்தி யெனப் பேசு.

## சிவப்பிரகாசம்.

நீடுபரா சத்திநிக ழிச்சா ஞான
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்துவாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொ டனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே.

## சித்தாந்த போதம்.

சத்தியுரு வெனலானும் மத்துணையே நிருக்காரத்திற்
றுங்கலானுஞ்
சித்துருவின் றொழிலானுஞ் செவ்வேடன் வனசமலர்க்
கரஞ்செம்பாதம்

வித்துரும முகத்தானு மன்னவனே சத்திமான்

சத்தியமுக் காலுமிது சத்தியமே வேதமதுஞ்
சாற்றுஞ் சாட்சி.


ஓம் சத்திமான் மூர்த்தயே நமஃ

---

இரண்டாவது,

# ஓம் ஞானசத்திதர மூர்த்தி.

சிவகுகப் பெருமானுடன் அபேதமாக விளங்கும் தடைப்படாத அறிவே ஞானசத்தி யெனப்படும். அந்தப் பராசத்தி யொன்றே ஆன்மாக்கண் மீது வைத்த பெருங்கருணைத் திறத்தானே மூவகைப்படும். அந்த மூன்று சத்திகளையும் உடையர் என்பதனை விளக்குதற்கே பெருமான் வள்ளியம்மையார், தெய்வயானை யம்மையார், வேலாயுதம் என்னு மூன்றனையுங் கொண்டருளினர். இச்சா சத்தியையே வள்ளி யம்மையாரென்றும், கிரியா சத்தியையே தெய்வயானை யம்மையா ரென்றும், ஞானசத்தியையே வேலாயுத மென்றும் உருவகித்துப் புராணாதி சுத்த வித்தைகள் புகலாநிற்கும். வேற்படைக்கலம் ஞான சத்தியென்பது, "எம்முடைய சத்தியே நம்மைக் கொல்லும்" என்று சிவபெருமான் சூரமன்ப ணுதியர்க்குச் சொன்னமையாலும், அவ்வாறே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலம் என்றெண்ணப்பட்ட சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் மூவரையும், ஆகாமியம் சஞ்சிதம், பிராரத்தம் எனும்வினைப்பகுதியென்றெண்ணத் தகுந்த கிரவுஞ்ச மலையையும், அதன் கொடுவினைகளையும் அழித்தமையாலும், மற்றை யாயுதங்கட்



ஞானசக்திதர மூர்த்தி.

கும் வழங்கப்படாத சத்தி என்னுஞ் சிறப்புப் பெயரைத் தனக்கே யுடைமையானும், மும்மல காரியத்தொகுதிகள்என்றெண்ணப்படும் சூராதி மூவரது சேனைகளையும் மாயங்களையும் வலிமைகளையும் அழித்தமையாலும்,

பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும்
பொருவிலா வுருவமுந் தொன்று
ணன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர்
நவிலருந் தோமரங் கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு
மணிமலர்ப் பங்கயந் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறன்மிகு மறுமுகன் கரத்தில்.

என்று கந்தபுராணங் கூறியபடி தோமரம், துவசம், குலிசம், அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில் என்னும் பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரர்களே யென்றும், வேலாயுதம் சிவசத்தியே அவ்வுருவாக வந்திருந்த தென்றும் கந்தபுராணம் உரைத்தலானும், மற்றைய ஆயுதங்கள் போலச் சடத்துவமின்றிச் சித்துவ முடைமையானும் பிறவாற்றானும் தெற்றெனத் தெளியப்படும். இன்னும் பராசத்தியை அபேத மென்னலால் அது பரம்பரனே யென்றுங் கருதப் படுதல் போல இவ்வேற்படைக்கலமும் கந்தசுவாமியே யென்று கூறப்பட் டிருக்கின்றது.

## கந்த புராணம்.

அந்தமி லொளியின் சீரா லறுமுகம் படைத்த பண்பா
லெந்தைக ணின்றும் வந்த வியற்கையாற் சத்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தேம்.

இன்னும் ஒருபடையானுந் தான் அழிக்கப் படாமையாலும், தாமொருவரே பலப்பல உருவங் கொண்டு வென்றமையாலும், பாசங்களை நிக்கிரகிப்பது என்பதனைப் பானுகோபன், சிங்கமுகன் என்பவருடைய மாயாபாசங்களாற் கட்டப்பட்டு வீரவாகு தேவர் முதலாயினோர் மயங்கிய வழி அவற்றை யறுத்தமை யானும் பெறுதும்.

இத்துணைச் சிறப்பினதாகிய பராசத்தி என்னும் ஞானசத்தியைக்கொண்டு ஆன்மாக்களின் பந்தங்களை யறுத்துத் தமது திருவடிப் பேற்றை யளித்தருளத் திருவுருவங் கொண்ட பரமாசிரியன், இச்சை, ஞானம், கிரியை என்னும் இவை மூன்றிலைபோலக் கிளை கொண்டு பவக்கடலைச் சுவற்றும் ஞானசத்தியாம் வேலாயுதத்தை வலத் திருக்கரத்திற் றரித்து, தாமரை மலர்போலும் இடத்திருக்கரத்தைத் தமது † குறங்கில் வைத்து, ஒருதிருமுகமும் இருவிழிகளும் உடையராய், கோடி சூரியப்பிரகாசமொருங்கு சேர்ந்த ஒளியுடையராய், தேவர்களும், வித்தியாதரர்களும் சூழ்ந்து சேவிப்ப வீற்றிருந்தருளுவர். ஞானசத்தியைத் தரித்தமையால் ஞான சத்திதரர், ஞானசத்தி யாத்மா எனப் பெயர் பெற்றார்.

## * குமார தந்திரம்.

𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 । 𑌏𑌕𑌾𑌸𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌕𑌟𑌿𑌦𑌕𑍍𑌷𑌿𑌣
𑌕𑍇𑌕𑌰𑍇 । 𑌇𑌚𑍍𑌛𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌂 𑌭𑌜𑍇 ॥

|சக்திதரஸ்வாமீ| ஏகாஸ்யத்வி புஜம் வாமே கடிதக்ஷிண கேகரே|
இச்சா ஞான க்ரியாசக்தி ரூப சக்தி தரம் பஜே||

---

* குமார தந்திரம் என்பது எண்ணாயிரம் சுலோகங்களையுடைய இலளிதம் என்னும் ஆகமத்தின் முப்பிரிவினுள் ஒன்று. இது குமாராகமம் எனவும், கௌமார தந்திரம் எனவும் வழங்கப்படும். கௌமார தந்திர மென்னும் உபாகமம் இக்காலத்து இல்லையாயிற் றென்றும், இப்போதுள்ளது குமாரவிதிபற்றிய சாரதாதிலகம் முதலிய அநேக நூல்களின் திரட்டு என்றுஞ் சிலர் கூறுவர். "எந்தையுமை தேர்ந்திட வியம்பியகுமார-தந்திர விதிப் படி தவாதறு முகற்கு" எனக் கந்த புராணமுரைத்ததுங் காண்க.

† குறங்கு—அரை.



தாரகாந்தக மூர்த்தி.

தணிகைப் புராணம் - அகத்தியப் படலம்.

இச்சா ஞானக் கிரியையெனு மிவைமூன் றிலையாய்க் கிளைத்தெழுங்
டச்சா ஞுழி யறச்சுவற்று மயில்வே லொருகை வலத்தமைத்து [திட்
நச்சா தவரைத் தெறுமொருகை நளினங் குறங்கி னமைத்திமையோ
விச்சா தரர்சூழ் ஞான சத்தி தரன துருவம் விதிப்போரும். [ர்

ஓம் ஞானசத்திதர மூர்த்தயே நமஃ

---

மூன்றாவது,

## * தாரகாந்தக மூர்த்தி.

---

முன்னர்க் காலத்திலே அசுரர்க் கெல்லாந் தலைவனா யிருந்த தாரகன் ஒருவ னுளன். அவன் பிரம தேவரை நோக்கி ஐம்பதினாயிரந் தேவ வருடம் தவஞ் செய்தான். அது கண்ட மலரோன் தோன்றி வேண்டிய வரங்களைக் கொடுத்தான். அதனாலே சுவர்க்க மத்திய பாதலங்களி லுள்ளார் யாவரையும் வென்று, அவரெலாந் தன்னேவல் கேட்டு நிற்ப அரசு செய்வா னாயினான். மும்மூர்த்திகளையும் வெல்லத் தகுந்த திறலை யுடைய தன்னைப் போன்ற மூன்று புத்திரர்களைச் சிவானுக்கிரகத்தாற் பெற்றான். தனக்கு எதிர் ஒருவரு மின்றித் திருமால் முதலிய யாவரையும் வென்று கடந்தவனாதலால் தாரகன் எனக் காரணப் பெயரோடு விளங்கினான். (தாரகம்=கடத்தல்) அவன் றன்மைந்தர்களாகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்துன் மாலி யென்னும் மூவரையும் நோக்கி, மைந்தர்காள்! என்னை யித்தகைய பெருநிலையில் வீற்றிருக்க வைத்தது தவமே. தவத்தைப் பார்க்கிலுஞ் சிறந்த தொன்றில்லை. அதனால் அடையப்

---

* இத்தாரகன் சூரபன்மனது தம்பி என்று சிலர் கூறுப, அவனன்று. இவன் திரிபுரத் தசுரர் தந்தையாகலின் வேறாயினான் என்க.

படாத பொருள்களு மில்லை. ஆதலால் அழியாத வரத்தைப் பெறு தற்கு அருந்தவஞ் செய்ம்மின் என்ருன். அவரும் அதனைச் சிரமேல் வகித்துச் சென்று தவங்கிடந்தார். இவற்றை யுணர்ந்த தேவர், முனிவர், இந்திரன், பிரமன், திருமால் முதலிய மேலவர் யாவரும் என்செய்வேம் என்று வியாகுலங் கொண்டு அவனிடம் ஏவல் செய்யப் போகாது வைகுண்டத்தி லிருந்து யோசித்தார்கள்.

என்னே? தாரகன் இணையொருவ ரின்றி யெங்களை யேவல் கொண்டான். அவனுல் யாம்படும் வருத்தங்களோ அளவில. ஆகவே யவனெடு மைந்தரும் அழியாவரம் பெற்று வருவரேல் எங்கதி யெவ்வாருகும். என் றிவ்வாறு எண்ணி யெண்ணி யேக்க முற்ருர். தாரகனையும் அவன்மைந்தர்கள் மூவரையும் கொல்வதற்கான உபாயங்கள் பலவற்றை யாராய்ந்து அபிசார வேள்வி யொன்றையாற்று வாராயினர். தாரகன் இதனையறிந்து தேவர்கள் முனிவர்கள் யாவரையும் வேரோடு அழிப்பே னென்று உருத்தெழுந்து வைகுண்டத்திற்குச் சென்ருன். திருமால் முதலியோர் அறிந்து நடு நடுங்கி இப் புகலிடம் யாதென்று பொன்மலையைத்தேடி யோடிச் சென்று புகுந் தொளித்திருந்தார். தாரகன் ஆங்கும் பெருஞ் சீற்றத்துடன்போய், தேவர்களே! முனிவர்களே! நும்பேடித் தன்மை வியக்கத்தக்கதே யென்று இகழ்ந்து, இதோ நுங்கட்கு இடந்தந்தமேரு மலையை வேருடன் பிடுங்குகின்றேன். அதன்பின் எவ்விடத்துப் புகுவீர் என்று முழங்கி, முன்னர்க்காலத்து வெள்ளிமலையை யெடுத்த இராவணன்றன் மூத்தோன்ருனே யென்ன, தன் இருகைகளாலுங் குடைந்து மேருமலையை மேலே தூக்கினன். குடைபோலச் சுரித்துச் சுழற்றினன்; குலுக்கினன்; பிரசண்ட மாருதம் ஆர்த்தடித்த போது சிறுமரக் கொம்பரி னுள்ள அறக் கனிந்த பழங்கள் கீழ் வீழ்தல் போல, தேவர் முனிவர் இந்திரன் பிரமன் விட்டுணு முதலாயினேர் யாவருங் கீழ்வீழ்ந்து ஓடிக் கயிலைக்குச் சென்ருர். தாரகன் அவரோடியது கண்டு மலையை முன்போல நிறுவி யூர்க்குச் சென்ருன்.

பிரமதேவரிடத்துஞ் சிவபெருமா னிடத்தும் வரப்பிரசாதமடைந்த தாரகன் என்பான் மூவுலகையும் அடிப்படுத்தி யாளாநிற்புழி, பிரம விட்டுணு முதலிய தேவர்களும் ஏனைய கணத்தவர்களும் மிக்க வச்ச முற்றாராய்க் காடு மலை, கடல், அண்டப்புறம் என்னுமிவ்விடங்களி னுருமாறி வசித்தார்கள். அவருள் இந்திரன் றாரகனோ டெதிர்த்துத் தன் வச்சிராயுதத்தை யெறிய, அது துரும்பு போன் மடிந்து கீழ்விழவே அச்சங் கொளீஇ மனைவியாகிய இந்திராணியும், குமாரனுஞ் சயந்தனும் உடன்வர இருடி வடிவமெடுத்து, ஓர்வனக்கட் பன்ன சாலையி னிருந்தான். அக்கினி மடைத் தொழில் செய்தான். வருணராசன் புனல் வழங்கினான். வாயுதேவன் அரண்மனைத் துகள் துடைத்து அலைந்தான். மற்றைய வானவரும் இட்ட குற்றேவல்களைச் செய்தார். சூரியனும் மறைந்து வானிற் சென்றான். பிரமதேவர் தமது மனோவதியி னின்றும் நீங்கித் தோணிபுரம் என்னுஞ் சீகாழிப் பதியையடைந்து, வாணியுந் தாமுமாக இருடிவேடந் தரித்துப் பூசித்திருந்தார். அதனாலே அப்பதி பிரமபுரம் எனப்பெயருற்றது. வாமனராம் வாசுதேவர் தாரகனோடு பொருது தோற்று, வைகுண்டத் திருத்தற்கு வெருவி மீன்வடிவெடுத்துச் சமுத்திரத்தில் வீழ்ந்து சஞ்சரித்திருந்தார்.

இஃதறிந்த தாரகன் வைகுண்டஞ் சென்று ஆங்குள்ள சித்திர சபையின்கண் இருந்து அரசுசெய்தனன். அங்கணுள்ள விரசாநதியின்கண் விட்டுணுவி னேவலால் அங்கிதேவன் சூலங்கொண்டுவர அவுணன்கண்டு வெருட்ட வருந்தி யோடி யவண் வாரானாயினன்.

இங்ஙனம் வருத்தமுற்ற தேவர்கள் யாவருந் திருக்கயிலாய மலையை யடைந்து அரனாரை யஞ்சலித்து வணங்கி யேத்தி, அடியரிடர் தீர்த்தருளும் ஐயனே! தாரகனாற் படுந் துன்பம் அடியேங்களாற் சகிக்க வொண்ணாது. அதனை நீக்கி யருள் புரிக என்று பெரிதும் வேண்டினார். மகேசப் பெருமான் அவர் துன்பத்தை

யறிந்து தந்திருவுளத்து உன்னிய மாத்திரையே, ஆறுமுகமும், பன்னிரு விழிகளும், அபயம், வாள், சூலம், சக்கரம், முசலம், வேல் என்பன வமைந்த வலத் திருக்கரம் ஆறும், வரதம், கொடி, கேடகம், அங்குசம், பாசம், குலிசம் என்பன அமைந்த இடத்திருக்கரங்கள் ஆறுங் கொண்ட, கோடி சூரியப்பிரகாசம் போன்ற திருவுருவமுடையராய், சுப்பிரமணியப் பெருமான் அவரது இருதயத்தினின் முந் தோன்றி யருளினர். சிவபெருமான் அவர் திருமுகம்நோக்கி, குமார! தாரகனை வதைத்துத் தேவர் துன்பை நீக்குதி யென்று அனுப்ப, குகப் பெருமானர் படைகளொடுஞ் சென்று * தாரகனுடன் பத்துநாட்பொருது சுக்கிர வாரத்து இரவிலே கொன்று, விட்டுணு முதலிய தேவர்களை முன்போ லிருத்திக் குமாரசிகரத்தின்கணெழுந்தருளினர். தாரகாசுரனுக்கு அழிவைச் செய்தமையால் **தாரகாந்தக மூர்த்தி** எனப் பெயர் பெற்ருர்.

## சிவரகசியம். (பரமஇதிகாசம்.)

### தாரகன் கதையுரைத்த அத்தியாயம்.

ஆனகேளசுரருக்கிகலனவரியுந்
தானவன்சமரினெந்துதளர்வுற்றுவலிபோய்
மீனமாயுவரிமீதினில்விழுந்ததுமலா
லூனமுற்றெழியுமின்மினியையொத்தனனரோ.

இத்திறத்தமரர்யாவருமிடைந்தயரவே
முத்திறத்துலகும்வெள்ளவியமூரண்கொளசுர
னத்தெடுத்தவனலங்கொள்பதிநண்ணியவன்வாழ்
சித்திரச்சபையிருந்தாசுசெய்தனனரோ.

---

* இவன்இருந்த இடம் திருக்கூவமென்று அத்தலமான்மியமுரைக்கின்றது. இவனுடன் பொருதஇடம் தொண்டை மண்டலத்திற் செங்கற் பட்டு என்னும் ஊர்க்குச் சமீபத்துள்ள திருப்போரூர் என்ப. சமர புரி என்ற காரணப் பெயரானும் போதரு மென்க.

### கணபதியுடன் கடவுளுத்தரச் சருக்கம்.

என்றுகங்கைமைந்தனையாமேவினேமவனிவ்வாறிதயத்துன்னிச்
சென்றுதாரகனையடர்த்தெய்தினனப்பரிசுதிகழுந்தொந்திக்
குன்றனையதந்திமுகத்துண்டிவிநாயகன்சரணங்குறித்துப்போற்ற
நன்றிகொளுன்றுயிடத்தினடத்தியெனவெடுத்துரைத்தானுதன்று
னே.

### குமாரதந்திரம்.

### கௌசிகசங்கிதை மந்திரோத்தாரப் படலம்.

𑌤𑌾𑌰𑌕𑌾𑌰𑌿𑌸𑍍𑌵𑌾𑌮𑍀! 𑌵𑌰𑌦𑌮𑌙𑍍𑌕𑍁𑌶𑌧𑍍𑌵𑌜𑌝𑌷 𑌕𑌟𑌕𑌚𑌾𑌪𑌵𑌜𑍍𑌰
𑌮𑌭𑌯𑌪𑌾𑌶𑌵𑌜𑍍𑌰𑌖𑌡𑍍𑌗𑌮𑍁𑌸𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌵𑌹𑌮𑍍 | 𑌦𑍍𑌵𑌿𑌦𑌶𑌪𑌾
𑌣𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌂 𑌤𑌾𑌰𑌮𑌰𑍁𑌣𑌕𑍋𑌟𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌂 𑌭𑌜𑌤 𑌤𑌾𑌰𑌕𑌾𑌰𑌿
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰 𑌭𑌵𑌨𑌾𑌶𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 |

| தாரகாரிஸ்வாமீ| வாத மங்குசத்வ ஜெள்ச கடக சாப
வஜ்ர மப்யயய பாச வஜ்ர கட்க முசல சக்தி மங்வஹம்|
த்விதசபாணர்ப்பிதத்தாரு மருணகோடி சங்நிபம் பஜத
தாரகாரி மத்ர பவநாச காரணம்.||

### தணிகைப்புராணம்-அகத்திய னருள்பெறு படலம்.

வரதங் கொடிகே டகங் தோட்டி வளர்ந்த வெறுழ்ப்பா சங்குலிசம்
பாவு மபயம் வாள்சூலம் பரிதி முசலம் வேன்மூங் நாற்
காமும் விளங்க வறுமுகமுங் கதிர்ப்ப விழிகள் கருணைமழை
தரவென் றருளுங் தாரகாந்த கன்சீ ருருவஞ்சமைப் போரும்.

### பழநித் தலபுராணம்-ஷடக்ஷரமந்தச் சருக்கம்.

பாவடி யானைத் தாரக னுயிருண் படையொள்வேற்
றேவர்க டேவன் கதையமு துண்டான் செவிவாயான்

மேவின ஞேர்பா லான வரைப்பான் மிளிர் நெல்லிக்
காவி லடைந்தான் றுபதர் குழுவைக் கண்ணுற்ருன்.

**கூர்மபுராணம்-திரிபுரதகன முரைத்த அத்தியாயம்.**

கார்தவழ் மேருவெற்பைக் கடவுளர் வெருவி யோட
வேரொடும் பிடுங்கி மீட்டும் வைத்திடும் விறல்கொ டிண்டோட்
டாரகன் றன்னை வெற்றி யறுமுகன் சாய்த்த பின்னர்ச்
சீர்கெழு மவன்றன் மைந்தர் திசைமுகற் பழிச்ச லுற்ருர்.

தாரகாந்தக மூர்த்தயே நம:

---

நான்காவது,

# வராகோன்மத்த பங்க மூர்த்தி.

---

பிரமதேவரின் புத்திர ரான காசிபமுனிவர்க்குப் பதின்மூவர் மனைவியர். அவர் அதிதி, திதி, தனு, அரிட்டை, சுரசை, கடை, சுரபி, விநதை, தாம்பிரை, குரோதவசை, இளை, கத்துரு, முனி என்னும் இவரேயாம். இவர்களுள் திதி யென்பா ளிடத்திலே இருவர் மக்கள் பிறந்தனர். அவருட் பொன்னிற முடையான் இரணியன் எனவும், பொன்னிறமான கண்களை யுடையவன் இரணியாக்கன் எனவும் பெயர் பெற்றனர். இரணியம்=பொன், அக்கன்=கண்களையுடையவன். இவர்கள் இருவரும் வைகுண்ட துவார பாலகரான விசயன், சயன் என்பவரே. பிருகு முனிவர் சாபத்தால் இங்ஙனம் பிறந்தனர். இரணியனுக்குப் பிரகலாதன், அனுகிலாதன், சங்கிலாதன், கிலாதன் நால்வரும், அவருட் பிரகலாதற்கு விரோசனனும், அவனுக்கு மாவலியும் குமாரராகப் பிறந்தனர்.

இரணியாக்கன் என்பான் தவவலிமையுடையனுய், சர்ச்சரன், சகுனி, பூதசந்தாபனன், மகாநாபன், மகாவாகு, காலநாபன்



வராகோன்மத்தபங்கமூர்த்தி.

என்னும் ஆறுபுத்திரர்களைப் பெற்று மூவுலகமுந் தனது ஏவல் கேட்ப அரசியற்றினன். தானே பிரமம் என்றுந் தன்னை யன்றி வேறு கடவுள் இல்லை யென்றும் அகங்காரங் கொண்டான். இவ்வாறாய மாயாவாதக் கொள்கையை யுடைய இரணி யாக்கன் இடம் ஓர் முனிவர் சென்று பூதேவி நாயகனை மாயவனே கடவுள் என்றார். அது கேட்ட இரணியாக்கன் முனிவரைச் சினந்து, அப்பூமி தேவியைப் பாயாகச் சுருட்டிப் படுகடலிற் கரைத்து விடுகின்றேனென்று தன் றவ வலியாற் பாயாகச் சுருட்டிக் கடலிற் கொண்டு சென்றான். தேவர்களும் முனிவர் அந்தணர் முதலியோரும் ஓலமிட்டனர். பூமிதேவியும் நாராயணா! மாதவா! என்னைக் காத்தருள்க என்று அபயமிட்டாள். மாலார் அவற்றை யுணர்ந்து ஆதிவராகம் போன்ற வராகரூப மெடுத்துச் சென்று, ஏழு கடல்களுக்கும் அப்பாற்பட்டு, அளவின்றி நின்ற பெரும்புறக்கடலுட் சென்று முழுகி, இரணியாக்கனோடு போர் செய்து தமது தந்தத்தால் இடித்து அவனைக் கொன்று பூமியைத் தங்கொம்பி னுனியில் தாங்கி மேலெழுந்தார். கொண்டபூமியை முன்போல நிறுத்தினார். அதுகண்ட உயிர்களும் மேலுலகத்தவருந் துதித்தார்கள். அதனாலே விட்டுணுவாகிய பன்றிக்கு அகங்காரந் தோன்றித் தானே முழுமுதற் கடவுளென்று பிரமையுற்று, இரணியாக்கனது இரத்தத்தைப் பானஞ்செய்த வெறியினாலும் ஒன்றுந் தெரியாததாகிப் பூமியைக் குத்தித் தோண்டிக் கடலினுக்குள் வீழ்ந்து கலக்கி உயிர்களையு மலைத்து மதங்கொண்டு குமுறித் திரிந்தது. பிரமன் இந்திரன் தேவர் முனிவர் முதலாயினோர் திருக்கயிலாய பதியிடத்திற் சென்று முறை யிட்டனர். வேத புருடசூக்தத்திற் பிரதிபாதிக்கப்பட்டவராய், பதினைந்து முகம், பதினைந்து பாதம், அவ்வளவு திருக்கரங்கள், நாற்பானைந்து விழிகள் என்னு மிவையுற்ற திருவுருவத்தையுடையாராய் விளங்கும் ஆதி சதாசிவப் பெருமான் தம்மிடத்தினின்றும் ஆறு திருமுகம்,

பன்னிருகை, மூப்பாதம் என்னும் உறுப்புக்களையுடைய ஜுப்தேசராகிய குகப்பெருமானை அனுப்பியருளினர்.

"அத்தியன்னியவள்நரித்தி" என்று வேதம் முழங்கித் துதித்த மகேசுரான அறுமுகப்பெருமான் உயிர்களை வருத்தும் அகங்காரப் பன்றியைத் தேடிக் கண்டு, தந்திருவடியால் ஓர் உதை உதைத்தார். பன்றி அண்டச் சுவர் இடிந்து வீழ்ந்தாற் போல வீழ்ந்தது. வீழ்ந்த மாத்திரையே பெருமானார் அதன் பிற்காலிரண்டனையும் பிடித்துக் காகா வென்று சுழற்றினார். பாணுகம்பன் தன் ஆயிரம் வாயினுஞ் சங்கை வைத்து முழக்கினான். தேவர் பூமாரி பொழிந்து அபயமிட்டார். பிரமர் வந்து இவ்வளவிற் றேவரீர் உயிர்ப்பிச்சை யளித்தருள்க வென்று குறையிரந்தார். பெருமானார் விட்டுணு வாகிய வராகஸ்தோத்திரத்தையுங் கேட்டுத் திருவுள மிரங்கி, அதன் கொம்பை மாத்திரம் பிடுங்கிச்சென்று சிவபெருமானது திருமுன்வைத்தருளினார். இறைவனார் தேவர்கள் வேண்டுகோட்படி தந்திருமேனியி லணிந்தருளினர். திருமாலாகிய வராகமூர்த்தி அகங்காரந் தொலையப் பெற்று, சிவசண்முக உற்கருடங்களை யெல்லாந் தெளிவிக்கும் வராகபுராணத்தைத் தம்மையடுத்த தேவர் முதலாயினார்க்குக்கூறி வைகுண்டமடைந்தனர். திருமாலாகிய வராகத்தின் வெறித்தன்மையாகிய அகங்காரத்தை யடக்கின்மையால் வராகோன்மத்த பங்கமூர்த்தி எனப் பெயருற்றனர். இவ்வவதாரம் பிரதம மகா சிருட்டி யாரம்பத்திலே வந்த வராககற்பத்திலே யாகும்.

* சங்கர சங்கிதை - உபதேச காண்டம்.

அறுபத்து நான்காம் அத்தியாயம். (சுரு-எச) சுலோகங்காண்க.

---

* பொற்கண்ணனாகிய இரணியாக்கனைக் கொன்று உன்மத்தங்கொண்ட மாயப் பன்றியின் கொம்பைமுரித்துக் கொடுக்க, சிவபெருமான் அணிந்தருளியதலம் திரு அரதைப் பெரும்பாழில் என்னும் அரித்துவார மங்கலம் என்ப. இது சோழநாட்டிற் காவிரியின் தென்கரையி லுள்ளது.



கூர்மதண்டனமூர்த்தி.

**சிவரகசிய கண்டம் - யுத்த காண்டம்.**

௯.-அத்தியாயம்-௪௯-சுலோகம் பார்க்கவும்.

(ஆதி வராக மூர்த்தியின் சிங்கப் பல்லைப் பிடுங்கின பலசுப்பிர மணியர்கள் போல விளங்கினார்.)

**கந்தபுராணம் - இரணியன் வதைப்படலம்.**

*அங்கண்மா ஞாலந் தன்னை மேலினி யகழு மோட்டுச்*
*செங்கண்மா லேன யாக்கை யெயிற்றையோர் சிறுகை பற்றி*
*மங்குல்வா னுலகிற் சுற்றி மருப்பொன்று வழுத்த வாங்கித்*
*தங்கணா யகற்குச் சாத்தச் சண்முக னளிக்கு மென்பர்.*

வராகோன்மத்த பங்க மூர்த்தயே நம:

---

ஐந்தாவது,

# கூர்ம பங்க மூர்த்தி.

---

மூன்னர்க் காலத்திலே தேவர்க்கும் அசுரர்க்கும் பகைமூற்றிப் போர்மூண்டது. அப்போரிலே தேவர்களிற் பலரும், அசுரர்களிற் பலரும் இறந்தார்கள். அதனை யிருபகுதி யாரு மறிந்து சாவாமல் நின்று யுத்தஞ் செய்யும் வழியை யருள் செய்ய வேண்டு மென்று முகுந்த மூர்த்தி யிடத்தில் முறையிட்டுக் கொண்டனர். அவர் இரு பகுதி யாரையும் அழைத்துச் சென்று, மந்தர மலையை மத்தாகவும், சந்திரனை அடைதாண் ஆகவும் நிறுத்தி, வாசுகியைக் கயிறாகப் பூட்டி, தேவர்கள் வாலினும், அசுரர்கள் தலையினும் பிடித்து இழுத்துக் கடையும்படி செய்தார். இவர்கள் இழுக்கும் விசையினாலே வாசுகி என்ற சர்ப்பம் உடல் தேய்ந்து வருந்திப் பொறுக்க முடியாமல், தனது ஆயிரம் வாய்களினு முள்ள காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்னும் நால்வகைப்பட்ட நாலாயிரம் பற்களினின்றும்

விடத்தைக் கக்கியது. அது ஆர்ப்பரித்து உருத்திராக்கினி போல் வருதலும் தேவரும் அசுரரும் பயந்து ஓடினர். நாராயண மூர்த்தி "நான் காப்பே" னென்று எதிர் நின்று நஞ்சின் வேகம்பட்ட மாத்திரத்தே பவளவண்ணமா யிருந்த மேனியெல்லாங் கறுக்க, அஞ்சியோடிக் கயிலாய பதிக்கு அறிவித்தார். அவர் அதனைச் சுந்தர மூர்த்தி நாயனாரைக் கொண்டு வருவித்து உண்டு நீலகண்டராய் விளங்கினார்.

தேவர்களும் அசுரர்களும் விட்டுணு பிரமனென்னு மிவருடன் சென்று முன்போற் கடைந்தார். மந்தரமலை பாதலத்தில் அமிழ்ந்திற்று. திருமால், விநாயக பூசை செய்யாமையால் அன்றோ இவ்வல்லல்கள் சம்பவித்தன என்று கணபதி பூசை செய்து கடைவித்தார். கடையுங் காலத்தில் மந்தர மலை, மேலும் கீழும் பக்கத்தும் சரிந்து போவதைப் பார்த்து, திருமா லானவர் ஆயிரங் கைகளையுடைய கூர்ம வடிவங் கொண்டு, மந்தரமலைமேலே யெழும்பாதும், கீழே யாழாமலும், பக்கத்திற் சரியாமலும் கைகளால் தாங்கி, தோன்றிய அமிர்தத்தைத் தேவர்க்குக் கொடுத்தார். அதனால் விட்டுணு தன்னை விடப் பரப்பிரமம் வேறு கிடையாதென்று அகங்காரங் கொண்டு ஆயிரங் கைகளாலுங் கடலைக் கலக்கி உலகினுக்குப் பெருந் துன்பத்தைச் செய்வாராயினார். உயிர்களெல்லாம் இறக்குங் கால நேரிட்டது. நட்சத்திர கூட்டங்களுஞ் சூரிய சந்திரர்களும் விண்ணிற் சஞ்சரித்த லின்றி யலைந்து பரம பதியை நோக்கி யோலமிட்டுக் கதறினர். பாற்கடல், கூர்மங் கலக்கி மோதுதலாலே பொங்கிப் பிரளய வெள்ளம் போல வழிந்து உலகத்திற் பரந்து உயிர்களைவாரி யழிக்கத் தொடங்கிற்று.

தேவர் முனிவர் முதலாயினோர் யாவருஞ் சிவபெருமானது சந்நிதியிற் சென்று காளகண்ட மூர்த்தியே! நீலமேகம் போன்ற பெருங் கூர்மத்தினாலே யாமெல்லாந் துன்பம் அடைகின்றோ

மென்று புலம்பி முறையிட்டார். பெருமானார் திருப்புன் முறுவல் கொண்டு, அன்பர்களே! அஞ்சாதீர் என்று அபயங் கொடுத்து, தந் தொடை மீதுஇருந்த சுப்பிரமணியக் கடவுளைத் திருநோக்கஞ்செய் தருளினார். புதுச் சந்நிதிக் கந்த நாதன் அக்குறிப்பை யோர்ந்து விரைவிற் பாற்கடல் சென்று ஓர் உங்காரஞ் செய்தார். விட்டுணு வாகிய கூர்மம் அவ்வுங் காரத்தைக் கேட்டு வலியொடுங்கி யிடி கேட்ட சர்ப்பம் போல் தியங்கி மூர்ச்சையாயிற்று. அதுபோது சுப் பிரமணியப் பெருமானுடன் பின்றொடர்ந்த அரிகர புத்திரர் தமது தாயான கூர்மத்தைப் பற்றிக் கரகர வென்று இழுத்து வெளியிற் கொண்டு வந்தார். கந்தவேள் தந்திருவடியானே எற்றுதலும் * கூர் மம் அண்டமுகடு மேலிடிந்து விழுந்தாற் போல மேலே யெழுந்து, நிலம்பிளக்கத் திக்குகள் செவிடுபடப் பேரொலியுடன் கீழ்விழுந்து மல்லாந்தது. முருகவேள் இருப்புலக்கை கொண்டு ஓடியடிக்க வுன்னும் போது, தாமரை மலர்ப் பொகுட்டில் வீற்றிருக்கும் இலக் குமி தேவி கேட்டு ஓடிவந்து கண்ணீர் விட்டு வணங்கி,

மருவார் செழுங்கூந்தல் வாணிகலன் பூண்டிருப்பத்
தருநீழன் மேவிச் சசிவாழ்வி னோடிருப்பத்
திருவோ திருவிழப்பா டேவர்சூ ளாமணியே
மருகோ வுயிரளித்தென் மங்கலநாண் காப்பாயே.
மங்காத காமர்பிடி மான்மருங்கு வைத்தருளு
மெங்கள் பெருமானே யேத்துவார் கண்மணியே
கங்கை குமாரவென் காதலனை யுய்வித்து
மங்கலநாண் பிச்சை வழங்காய் வழங்காயே.
மூவரொன வோது முதற்றே வரிலொருவ
னாவி யழிந்தா லவுணர்வினை யேசாரோ

* கூர்மத்தின் அகங்காரத்தை யொழித்து ஓட்டினைப் பிடுங்கியதலம், சோழநாட்டி லே காவிரிநதியின் தென்கரையிலுள்ள திருத்தண்டலை நீணெறி என்பதாம். அது திருக்க டிக்குளம் என்னுந் தலத்திற்கு வடகிழக்கே பதினொன்றுமயில் தூரத்திலுள்ளது.

தேவரிடர் தீர்ப்போய் சிற்றடிச்சி மங்கலநாண்
காவல் புரியாயே யென்றுங் களேகண்ணே.

என்று துதித்துத் தனது மூன்றுனையை நீட்டித் தாலிப்பிச்சை கொடுத்தருள வேண்டு மென்று குறை யிரந்து கேட்டாள். எம்மை யடிமையாகவுடைய கதிரை நாயகக் கடவுள் இலக்குமியாரின் றுதிக்கு இரங்கி, விட்டுணுவாகிய கூர்மத்தி னுயிர்போக்காது ஓட்டை மாத்திரம் பெயர்த்து, உறுதிகூறிக் கயிலை யடைந்து தமது தந்தையார் சந்நிதியில் ஓட்டினை வைத்து நின்றூர். தாணுவாய் நின்ற சங்கர பகவான் குமாரரை யணைத்து முதுகு தைவந்து பக்கத்தி லமரச் செய்தனர். பின்னர்த் தேவர்களை நோக்கி இவ்வோட்டினை யென் செய்து மென்று வினவ, அவர்கள் வேதமுதலே! தேவரீர் திருமேனியி லோராபரண மாகத் தரித்தருள வேண்டு மென்று வேண்ட, பரமனுர் அவ்வாறே தரித்தார். அது முதல் எமது குமாரக்கடவுளுக்குக் கூர்ம பங்க மூர்த்தி யென்னுந் திருநாம முண்டாயிற்று. திருமாலாகிய கூர்மமும் மயக்கந் தெளிந்து சிவனையுங் குகப் பெருமானுரையும் வேதங்களாற் றுதித்து, தெளிந்த அறிவுடனே நாரதர் முதலிய முனிவர்க்கும் பிறர்க்குஞ் சிவபெருமானது பிரபாவங்களை யுணர்த்துங் கூர்ம புராணத்தைக் கூறித் தம்வடிவுடன் வைகுண்டஞ் சார்ந்தது.

### கூர்மபுராணம்-இந்திரத்தியும்நன் முத்திபெற்ற அத்தியாயம்.

கரைகொன் றிரங்கு திரைக்கடல்வான்
குழிசி யாகக் கறையனல்வா
னரவங் கயிறு மதிதறியா
வமா ரமுதங் கடைந்தெடுப்ப
வரைமுன் னிடலுந் தாழாது
மாயோன் வளர்கூன் புறத்தாமை
யுருவிற் றூங்கிக் கடன்மதித்து
வானோர்க் கமுத முதவினுன்.

### பாகவதம் - கூர்மப் படலம்.

படிதிசை ககன முதலெரிந் திடவான்
  பரந்துவந் தெதிருமா விடத்தைக்
கொடியிடை பாக னுலகெலா முவப்பக்
  கோமள வங்கையி னேற்பக்
கடுகுபோ லாலந் திரண்டமர்ந் திடலுங்
  கடிதினில் விழுங்கிடக் கண்டத்
திடையினி லமர வெழிலுறு காள
  கண்டனும் பெயரிறை யானன்.

அந்தரந் திசைபா ரடங்கலு மெரித்தங்
  கடர்த்திடு மாலகா லத்தைக்
சந்தரந் தரித்த விறையினைக் கண்டே
  களிப்புறு மமரரோ டவுணர்
துந்துபி முழங்கத் தருமலர் பொழிந்து
  துதித்துநின் றாடினர் பாடி
யெந்தைநீ யெமைக்காத் தருளுமீ சனுநீ
  யென்றடி யிறைஞ்சியேத் தினரால்.

### கதிர்காமக் கோவை-ஊர்பெயர் வினாதல்.

வனமாலை யஞ்சுறுப் புற்றவன் வேலை வடித்தெழுப்ப
வனமாலை யஞ்சுறுப் போடது கொண்டெதந் தைக்குவைத்த
வனமாலை யஞ்சுறுப் பேவயில் கொண்டவன் வாழ்கதிரை
வனமாலை யஞ்சுறுப் பாயிடம் பேர்தமை வாய்ந்துரையே.


கூர்ம பங்க மூர்த்தயே நம:

ஆறாவது,

# புலிங்க மூர்த்தி.

---

சிவபெருமான் உமாதேவியாரை விவாகஞ் செய்து திருக்கயிலை மலையின்கணெழுந்தருளி யிருக்குங் காலத்திலே சூரபன்மனது கொடுந் துன்பத்திற்கு ஆற்றாத தேவர், முனிவர், கந்தருவர், நாகர் முதலாயினோரும், இந்திரன், பிரமன், விட்டுணு என்பவரும் மேருமலையிற் கூடி யெண்ணுவாராயினர். யோகியா யிருந்த சிவபெருமான் எம் பிரார்த்தனைக்கு இரங்கி யுமையவளை வதுவை செய்தருளினர். செய்தும் ஒருதிருக்குமாரைப் பயந்து எம்மைக் காக்காது வாளா விருக்கின்றனர். அவரை நோவதிற் பயனில்லை. யாங்கள் தவஞ் செய்திலேம். தவறுகளே செய்தேம். இன்னுங் கைலாசபதியை வேண்டுவே மாயிற் றிருவுள மிரங்குவர் என்றனர். அப்போது பிரமதேவர் "சிவபெருமானது செய்கையை யறிந்தே போதல் தகுதி" என்ன, வாயுதேவனை யனுப்பினர். அவனும் இவர் பிடிவாதத்தினாலே யஞ்சி யஞ்சி, சோலைமலர் வாசனை யளாவி, கங்கை தோய்ந்து, தென்றலாய் அசைந் தசைந்து மெல்லெனத் திருக்கோயிலிற் செல்வானாயினான். திருநந்தி தேவர் கண்டு உரப்பினார். இடிகேட்ட சர்ப்பம் போல வாயு தேவன் சிறிதும் வலியின்றி வெருவி விழுந்தான். பின் றெளிவுற்றுப் பண்டைய வுருவத்தைக் கொண்டு திருநந்திதேவரது திருவடிகளை வணங்கி, எம் பெருமானே! விட்டுணு முதலிய தேவர்கள் சிவபெருமானைத் தரிசித்துத் தங்குறைகளை விண்ணப்பஞ்செய்ய நினைத்து அவர் செய்கையை யறிந்து வருமாறு என்னை முன்னராகவே யனுப்பினர். நான் மறுக்கவும் அவர்தம் வருத்தங்களைப்புகன்று போகுமாறு வலிந்து அனுப்பினர். அதனாற் றென்றலாய் மெல்ல நுழைந்தேன். தேவரீர்க்கு விண்ணப்பஞ் செய்ய நினைத்திலேன். சூரபன்மனால் வருத்த முற்று அறிவு குன்றப் பெற்றேன். அறிவிலியாகிய எனது பிழையைப் பொறுத்தருள்க என்று விழுந்து வணங்கிப் பிரார்த்தித்தான். திருநந்திதே



புலிங்கமூர்த்தி.

வர் கோபந் தணிந்து "நாம் இங்கே யுன்னுயிரைத் தந்தேம். நில்லாதே மீண்டு போவாய்" என்று ஏவினர். வாயுதேவன் மேருமலை சென்று பிரமன் முதலாயினோர்க்கு நிகழ்ந்தனவற்றைக்கூறினன்.

அவர்கள் யாவரும் துன்ப முற்று, மேருமலையி னின்றும் யாவரும் புறப்பட்டுக் கைலையை யடைந்து, கோயிலின் முற் சென்று திருநந்தி தேவரைப் பணிந்து, அடியேங்களுடைய வரவைப் பரமனுர்க்குத் தெரித்தருளல் வேண்டு மென்று குறையிரந்தார். அங்ஙனே நந்திதேவர் அறிவிக்கச் சிவபெருமான் "அவர்களை யழைத்து வருதி" என ஆஞ்ஞாபித்தார். நந்தி தேவர் யாவரையும் அழைத்துச் சென்றனர். நாரணன் முதலாயினோர் பலகாலும் வணங்கி அஞ்சலி செய்து தங்குறைகளை யெல்லாம் முறையிட்டார். நித்திய கன்னிகையான உமா தேவியாரைத் திருமணஞ் செய்தமை யோரோதுக் காட்டன்றி யவரிடத்து மைந்தரைப் பெறுதற்கு அன்று. ஆகலால் அநாதி மலமுத்தரே! தேவரீரிடத்திலே தேவரீர்க்கு ஒப்பாக ஒரு திருக்குமாரரைத் தோற்றுவித்தருள வேண்டும் என்றனர். சிவபெருமானும் அபயங் கொடுத்து, தமது பழமையாகிய ஆறு திருமுகங்களையுங் கொண்டு, அம்முகங்களினுள்ள நெற்றிக் கண்கடோறும் ஒவ்வோர் அக்கினிப் பொறியைத் தோற்றுவித்தருளினர்.


அத்தகைய ஆறு பொறிகளும் பிரம விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் சிறிதும் அணுக லாற்றாத மிக்க வெம்மையை யுடையனவாகி உலக மெங்கும் பரந்தன. அப்பொழுது வாயுக்கள் உலைந்து ஒய்ந்தன. கடல்கள் எல்லாம் வற்றின. வடவா முகாக்கினியுந் தன்செருக்கு நீங்கிற்று; பூமியினளந்தது; மலைகள் யாவும் நெக்கன; அட்ட நாகங்களும் நெளிந்து நீங்கின; எட்டுத்திக்கு யானைகளும் வெருவி யலறி யோடின. ஆயினும் அவ்வக்கினிப் பொறிகள் உலகுயிர்களைப் புரத்தற்குத் தோன்றின வாகலின் ஒருயிரைத் தானும் நாசஞ்செய்தில. எவர்களையும் எவைகளையும் அஞ்சச் செய்தன.

அவற்றின் வெம்மைகண்டு பாமேசுவரியுந் தமதுசிலம்புகள் புலம்பு மாறு திருக்கோயிற்கு ஓடிச்சென்ருர். விட்டுணு முதலாயினோர் வெருவி நடுநடுங்கி யிடந்தோறும் ஓடினர். ஆங்காங்கு நின்று சதாசிவப் பெருமானைத் துதித்துப் புலம்பினர்; ஓலமிட்டார். ஒருகணத்துள் இப்பொறிகளின் வெம்மையை மாற்றுதொழிவீராயின் உலகம் அழியும் எனக் கூவினர். சிவபெருமான், அமரர்களே! அஞ்சன்மின் என்று, முன்போலவே யொருதிருமுகத்தோடும் எழுந்தருளி யிருந்து, அக்கினிப் பொறிகள் தம்முன் வருமாறு திருவுளத் துன்னினர். உடனே பொறிகள் முன்போல் ஆறுகி வந்து நின்றன. வாயுவையும் அக்கினியையும் அழைத்து இவைகளைத் தாங்கிச் சென்று கங்கையாற்றில் விடுதிர் எனச் சிவபெருமான் கட்டளை யிட்டார். அவர் வணங்கி? ஐயனே, இவற்றைத் தாங்க வல்லவர் எவர்? அடியேங்களாற் கூடுமோ வென்று வெருவினர். ஒருகணநேரந் தாங்கும் வல்லமையைச் சிவபெருமான் அவர்க்கு அளிக்க, வாயுதேவன் ஒருகணம் அரிதிற் சுமந்து சென்று ஆற்றுமல் அக்கினியிடஞ் சேர்த்தினன். அவனும் ஒருகணத்துட் டாக்கிக் கங்கையாற்றில் விடுத்தான். தேவர்கள் முதலினேர் கயிலையினின்றும் நீங்கி மிக்க வுவகையோடும் சென்றனர். இங்ஙனம் பரமசிவன்றன் நெற்றிக்கண்ணினின்றும் பொறிகளாகத்தோன்றி யருளலாற் சுப்பிரமணியக் கடவுள் புலிங்க மூர்த்தி, (சிவதேசசு மூர்த்தி) யாயினர்.

கந்தபுராணம் - திருவவதாரப்படலம்.

திற்புறுமமரர்யாரு நெஞ்சுதுண்ணென்னநீடு
மற்புதநீராகி யருண்முறையுன்னிப்போற்றச்
சிற்பான்றன்கொண்டுள்ள திருமுகமாறுதன்னிற்
பொற்புறுநுதற்கண்டோறும் புலிங்கமொன்றென்றுதந்தான்.

ஆவதோர் காலையீச னறுமுக நுதற்கண்யாட்டே
மூவிருபொறிக டோன்றி முனரியான் முதலாவுள்ளோ



சரவணோற்பவ மூர்த்தி.

ரேவருமணுகல் செல்லா வெல்லைநீர் வெம்மைத்தாகிப்
பூவுலகண்ட முற்றும் பொள்ளெனப் பாயவன்றே.

சிறத்தலுங் கன்னலொன் றெரியின் றீஞ்சுடர்
பொறுத்திட லரிதெனப் புலம்பிக் காலினோன்
மறுத்தவிர் பிறைமுடி வரத னாணையாற்
றிறற்படு வன்னிதன் சென்னி சேர்த்தினான்.

சேர்த்தலுமொருபதந்தீயின்பண்ணவன்
வேர்த்துடல்புழுங்குறமெலிவிற்றுங்கியே
பேர்த்தொருபதமிடப்பெறுதுவல்லைபோ
யார்த்திடுகங்கையினகத்துய்த்தானரோ.

புலிங்க மூர்த்தயே நம:

---

ஏழாவது,

## சாவணோற்பவ மூர்த்தி.

அக்கினிதேவன் சுமந்து விடுத்த பொறிகள் ஆறும் அடை தலும் கங்கையானது சிவபெருமானது சடைக்காட்டின் முன்னர் ஒன்று மறைந்தாற்போல வறந்தது. சிவபெருமானுடைய திரு வருளை யறிந்து கங்கையானது அப்பொறிகளைச் சுமந்து கொண்டு சரவணப் பொய்கையில் விடுத்தது. பிரமன் விட்டுணு முதலிய தே வர்கள் யாவரும் வந்து அண்ணியதாகிய விளைவைக் காக்கும் வறி யார்போலக் காக்கத் தலைப்பட்டார். பிரமா ஆகாயத்திலும், விட் டுணு பூமியினும், இந்திரன் முதலிய திக்குப் பாலகர்கள் எண்டிசை களினும் நின்று காத்தார்கள். சரவணப் பொய்கையும் சிவபெருமா னுடைய திருவருளினாலே வறத்தலின்றி முன்போலிருந்தது.

அருவமும் உருவும் ஆகி, அநாதியாய், பலவாய், ஒன்றாகி, பிரம மாக விளங்காநின்ற பரஞ்சோதிப் பிழம்பே, ஆன்மாக்க ளுணர்ந்

துய்யும் பொருட்டு ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்காங்களும் கொண்டு முருகக்கடவுளாக அவதரித்தது. ஆகாயத்திலே துந்துபிகள் ஒலித்தன. வேதங்க ளெல்லாம் ஆரவாரித்தன. பிரம விட்டுணு முதலாயினோர் பூமாரிபெய்து "அடியேங்கட்கு அருள்செய்க" என்று துதித்துச் சூழ்ந்தார்கள். உலகத்துள்ள வுயிர்களெவற்றிற்கும் உவகைக் குறிகளுண்டாயின. சூரபன்மன் முதலிய அசுரர்கள் யாவருக்குந் தீய நிமித்தங்கள் காணப்பட்டன. வேதங்களாலும் மனத்தாலும் வாக்காலும் அறியப்படாது எங்கணும்நிறைந்துநின்ற நிருமலராகிய முழுமுதற்கடவுள் அறுதிருமுகங்களை யுடையராய்த் தோன்றி, ஆன்மாக்களிடத்துள்ள பேரருளுடன் செந்தாமரை மலரின்கண் தந்தைபோல வீற்றிருந்தருளினர்.

இம்மூர்த்தமே சரவணோற்பவ மூர்த்த மெனப்படும். இது ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும், அவற்றினிடையே வேல், கேடகம், கண்டாமணி, தாமரை, கோழிக்கொடி, இடங்கம், அம்பு, வாள், வரதம், அபயம், வில் என்பனவும் பொருந்த விளங்காநிற்கும் என்று நூல்கள் கூறின. சரம்=நாணற்புல். வனம்=நீர். நாணற் புல் செறிந்த நீரையுடைய பொய்கையே சரவணவாவியாகும். இது இமயமலையின் பாங்கரினுள்ளது. அப்பொய்கையில் உற்பவித்தமையாற் சரவணோற்பவ மூர்த்தி யாயினர்.

இம்மூர்த்தத்தான் அறியப்படும் உண்மை யென்னெனில், சுப்பிரமணியக் கடவுள் மற்றைய தேவர் மனிதர் விலங்கு முதலிய வுயிர்கள் போல, மாதாவுதரக்கணிருந்து கருப்பாசயப்பையுறுத்தல், சலம்பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிராணவாயு முரித்துத்தள்ளுதல், யோனித்துவாரத்தா னெருக்குண்ணுதல் முதலாய கருப்பவாதனைப்படாமலும், அதோமுகமாகத் தோற்றாமலும் சிவவீரியத்தானே ஊர்த்துவ முகமாகத் தோன்றியவ ரென்பதூஉம், சிவாக்கினியினின்றும் ஆறு பொறிகளாகத் தோன்றலால் அக்கினிகோத்திரிகளாகிய அந்தணர்களென முக்கியமாக ஆராதிக்கப்படுகின்ற பிரா

மனத்தெய்வர் தாமேயென்பதும், அக்கினிகொண்டுசெய்யும்யாகத்திற் கதிபதியும், யாகபலத்தை யளிப்பவரும், யாகபரிபாலனருந் தாமேயென்பதும், வெளியாகிய ஆகாயத்திறபரந்து, வாயுவினாலும் அக்கினியினாலுஞ் சுமக்கப்பட்டு, கங்கை, வாவிக்கண் விடப்பட்டு, மலைகளினும் பூமியினுஞ் சேர்ந்து திருவிளையாடல் செய்தமையால் ஆகாயத்திற் சப்தகுணமாகவும், வாயுவிற் சப்தம், பரிசம் என்னுமிரண்டாகவும், தேயுவின்கண் அவ்விரண்டனோடு உருவம் என்னுங் குணமாகவும், அப்பு பூதத்தில் அம்மூன்றனோடு இரசகுணமாகவும், பிருதிவி பூதத்தின்மாட்டு அந்நான்கனோடு கந்தம் என்னுங் குணமாகவும் இருப்பவர் தாமேயென்பதும் விளக்கியருளிய திருச்செயலாம். இவையன்றி ஐம்பூதங்கட்கும் அதிபதியாகிய பஞ்சமூர்த்திகளாகவும் இருப்பவர் தாமே யென்னும் உண்மையைத் தெரித்தவாறுமாம்.

குமாரக் கடவுளாகும் ஆறு திருப் பொறிகளையும், மற்றைய தேவரெல்லாம் இருப்பவும், வாயுவும் அக்கினியுஞ் சுமத்தற்குக் காரணமென்னை? பரமபதியாகிய பெருமானார் அவர்களை யழைத்துத் தாங்கும் வல்லமை கொடுத் தருளியது போல, மற்றைத் தேவர்க்கு ஏனோ செய்திலர்? என்னுஞ் சங்கையுந் துக்கமும் பலதேவர்கட்கும் உண்டாயிற்று. அஃதுணர்ந்த விட்டுணு அமரர்களை நோக்கி, "தேவிர்காள்! துன்பப் படாதிர். பரமான்மாவாகிய குமாரக் கடவுளை யணுகுந் தன்மை வாயுவிற்கும் அக்கினிக்கும் உண்டன்றி யெம்மனோர்க்கு இல்லை! எஞ்ஞான்றும் இல்லை!! ஆகலாற்றான் உமாபாகராகிய பரசிவனார் அவர்தமை யழைத்து அருள்புரிந் தனுப்பினர். யாது காரணமோ வெனக் கேட்டிரேல், அதனை விளங்கக் கூறுதும். நீவிரெல்லீரு மாயா வன்மையானே மறந்தனிர் போலும்.

முன்னோர் ஞான்று நங்கட்கும் அசுரர்கட்கும் போர் விளைந்ததன்றே? அதன் கண் முதலிற் றைத்தியர் வென்றி பெற்றார்;

யாங்கள் தோல்வி யுற்றேம். இரண்டாவ்து யாங்கள் வென்றி கொண்டேம்; அசுரகுல மடியோடழிந்தது. அவ்வெற்றிக் களிப்பினாலே யாமெல்லா மகங்கார மடைந்து, எங்களையே யாங்கள் புகழ்ந்து, அவ்வென்றிக்குக் காரணம் ஒவ்வொருவரும் யாங்களேயென்று இறுமாப்புற் றிருந்தேம். அதனானே கடவுளாகிய பரசிவனாரையும் மறந்து நின்றேம். இயற்கையே ஆன்மாக்களின் அறியாமைகளைப் போக்கி யன்னோர்க்குத் தந்திருவடிப் பேற்றை யளித்தல்வேண்டு மென்னுங் கருணையையுடைய சிவநாதன், எங்கள் அகங்காரங்களையும், யாமே பரப்பிரம மென்றெண்ணுந் தற்போதத்தையுங் கெடுத்துத் திருவருள் புரியத் திருவுளங் கொண்டு, எவ்விடத்துங் காணப்படாத அழகிய இயக்க வடிவம் உற்று, நங்கள் இடத்தி னடுவே தோன்றி யிறுமாந்து வீற்றிருந் தருளினார். அதுபோது தேவர்களெல்லாம் அந்த வடிவம் யாதென்று அறிய நினைத்தார்கள். அக்கினியை நோக்கி "நீ அறிந்து வருவாயாக" என்ன அவன் சென்று இயக்கரூபத்தைநெருங்கி "நீ யார்" என்று வினவ. இயக்க மூர்த்தி அக்கினியை நோக்கி "நீ யார்" என்று வினவியருள, அக்கினி தேவன் கூறுவான். "நான் அக்கினியாக இருக்கிறேன்" என்றான். "அங்ஙனம் பிரசித்தமான நின்னிடத்தில் என்ன பராக்கிரமம் இருக்கிறது" என்று கேட்டருளினர். "பூமியிலிருக்கும் எவ்வகைப் பொருளையும் எரிக்குஞ் சாமர்த்தியம் எற்கு உண்டு" என்றான்.

இயக்க மூர்த்தி "இத் துரும்பை எரி" என்று, ஓர் துரும்பை அக்கினி முன்வைத்தார். அவனால் எரிக்க முடியாது திரும்பிப் போனான். வாயு தேவனும் போய்த்திரும்பினான். மூன்றா முறை இந்திரனைத் தேவர்கள் அனுப்பினர். அவன் அவ்வுருவை நோக்கி ஓடினான். இயக்கமூர்த்தி யாகிய பரம சிவம் மறைந்தனர். அக்கினிக்கும் வாயுவுக்கு மண்மையாய் நின்று, அவர்களுடன் வசனித்த இயக்க வடிவப் பரமான்மா, இந்திரனைக் கண்ட காலத்து என்

மறைந்தனர்? என்று வேதங்கள் ஆராய்ந்தன. "இந்திரன் அதிக கருவ முடைய னாகலால் அவனுக்குத் தன் றிருமொழிப் பேச்சைப் பிரமங் கொடுத்திலது. ஆகலாற்றான் அக்கினியும் வாயுவுந் தேவதைகளுட் பிரதானமாக மதிக்கப் படுகின்றனர்" என்று வேதங்கள் அறுதி யிட்டுரைத்தன. இத்தகைய நியாயங்களாற்றான் பரப்பிரமமாகிய புலிங்கங்களைச் சிவபிரானார் மற்றைய தேவர்களிடம் அளிக்காது, அங்கியந் தேவன், வாதராசன் என்னு மிவர் வயினளித்தருளினா ரென்று திருமால் கூறத் தெளிந்தனர் தேவர்.

சாமவேதம் - தலவகார சாகை.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌤𑌿𑌤𑌰𑌾𑌮𑌿𑌵𑌾-
𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌦𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍇
𑌹𑍍𑌯𑍇𑌨𑌨𑍍𑌨𑍇𑌦𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍁𑌸𑍍𑌤𑍇 𑌹𑍍𑌯𑍇𑌨𑌤𑍍𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑌾𑌰
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 ।

𑌅𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌮𑌘𑌵𑌨𑍍𑌨𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 ।
𑌕𑌿𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌿𑌤𑌿 𑌤𑌥𑍇𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌤𑌿𑌤𑌰𑌾𑌮𑌿𑌵𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 । 𑌸
𑌹𑍍𑌯𑍇𑌨𑌨𑍍𑌨𑍇𑌦𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑌸𑍍𑌪𑌰𑍍𑌶 । 𑌸 𑌹𑍍𑌯𑍇𑌨𑌤𑍍𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑌾𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 ॥

𑌯𑌦𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍇 𑌹𑍍𑌯𑍇𑌨𑌨𑍍𑌨𑍇𑌦𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪-
𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍁𑌸𑍍𑌤𑍇 𑌹𑍍𑌯𑍇𑌨𑌤𑍍𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑌾𑌰
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 ।

யசுர்வேதம் மந்திரசாகை.

ஸௌவாக்நிஸ் ஸலிலே ஸம்நிவிஷ்ட:|

"நீரிலுள்ள அக்கினியும் அப்பரப் பிரமமே" என்று சிலேடையாற் கூறுவது முணர்க."

கந்தபுராணம் - திருவவதாரப் படலம்.

*அரனருண்முறையினை யறிந்துகங்கைதன்*
*சிரமிசையேந்தியே சென்றொர்கன்னலிற்*
*சரவணமெனுந்தடந் தன்னிற்சேர்த்தனண்*
*மரையிதழாயிடை மல்குற்றுலெனா.*


*கங்கையுமொல்கப்புக்க கடுங்கனற்கடவுட்சோதி*
*யங்கிருமூன்றுமுன்ன ரம்மைவாழிமயச்சாரற்*
*றங்கியகமலம்பூத்த சரவணம்புகலுமுக்கட்*
*புங்கவனருளாற்றொன்மை போன்றதுவறத்தலின்றி.*

*அருவமுமுருவுமாகி யநாதியாய்ப்பலவாயொன்றாய்ப்*
*பிரமமாய்நின்றசோதிப் பிழம்பதோர்மேனியாகிக்*
*கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே*
*யொருதிருமுருகன்வந்தாங் குதித்தனனுலகமுய்ய.*

குமாரதந்திரம்.

சரவணபவஸ்வாமீ|| சக்திம் கண்டாத் வஜ சரசிஜே குக்குடபாச தண்டௌ டங்கம் பாணம் வரதமபயம் கார்முகம் சோத் வகந்தப்| பீதம் சௌம்யம் த்விதசநயநம் கேகயம் சைஸ்தைர்ய சமீந்த்ரைச் சத்ப்ப் பூச்யம் சரவணபவம் ஷண்முகம் பாவயாமி||

சரவணோற்பவ மூர்த்தயே நமஃ



எட்டாவது,

# சகல லோக குரு மூர்த்தி.

---

இருடிகளுட் டிருமாலின் வம்சத்திற் றோன்றியவரும், பிரம தேவரின் துணைவரு மாகிய * கபில முனிவர், சாங்கியத்தை விடுத்துச் சிவாகமப் பொருளை நன்குணர்ந்து சைவ சித்தாந்த நெறி நின்றார். இவர் பிரம தேவரைப் போல, ஆதியிலே சிவபெருமானிடத்தினின்றுந் தோன்றினார் என்று, "𑌅𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌕𑌪𑌿𑌲𑍋 𑌹𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌃 | (அகம் ப்ரஹ்மா கபிலா தாப்பிய நந்தஸ்த்வத் தஸ்ஸர்வே தேவ தேவ ப்ரசூதா: | யானும் பிரமதேவன், கபிலன், இனி அநந்தன் முதலாம் எல்லோரும், தேவ தேவனே ! உம்மிடந் தோன்றினோம்) என்ற பாரதவசனத்தைக் காட்டுவர். அங்ஙனங் கூறுவ தடாது. சிவசாரூப்பிய முற்ற வோருருத்திரனையே மீண்டுத் தேவதேவனென உபசார மாத்திரையாற் கூறிய தெனக் கொண்டு, மற்றையோர் போல இவரும் ஓர் உருத்திரர் வயிற் றோன்றினா ரெனக் கொள்க. சிவனிடம் பிறந்தார் புருடதத்துவமே முதலென்று சிவாகமத்திற்குப் புறமான வோர்நூலை யோர்காலு முணைக்கா ரென்றுணர்க.

இங்ஙன மாகிய முனிவர் சைவசித்தாந்தமே மெய்ந்நெறியெனத் தெளிந்து, முத்திக்கு நேர்வாயில், ஞான சாதனமா மென்றும், அந்த ஞானத்திற்கு நேர் வாயில் சிவயோக மாமெனவுமுணர்ந்து, தாங் கைக்கொண்ட வைதிக வேள்வி முதலாயின

---

* இக்கபிலமுனிவர், புறச்சமயங்களுள் ஒன்றாகிய சாங்கிய மதத்தை யுண்டாக்கினவர். சாங்கியத்துட் சேசுர சாங்கியமேயன்றி, நிரீச்சுர சாங்கியரல்லர். கபிலர் பொன்னிற முடையவர் எனக் காரணங்கொள்க. இச்சேசுர சாங்கியம்யோகமதம் போன்று, சைவ சித்தாந்தத்தைப் பெரும்பாலும் பிரதிபாதித்து, அதனை புணர்தற்குப் பேருபகாரமா மென்பர் சிவஞானபோத மாபாடியத்தாரும்.

வெல்லாம் அழிதன் மாலையவாய போகங்களையே பயப்பவை யெனக் கைவிட்டு, சகுணபாவனை, நிர்க்குணபாவனை, பிராமீபாவனை யென்னும் மூவகைப் பாவனைகளுட் பிராமீ பாவனையைக் கைக்கொண்டு சிவயோகம் புரிவாராயினர்.

"𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌦𑌯𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍍। 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾𑌹𑌾𑌰𑌃 𑌶𑍌𑌚𑌂 𑌚𑍇𑌤𑌿𑌯𑌮𑌾 𑌦𑌶। (அஹிம்சா ஸத்யமஸ்தேயம் பிராஹ்ம சர்யம் தயார்ச்சவம் | க்ஷமா த்ருதிர் மிதாகார꞉ சௌசம் சேதியமாதச) என்னுஞ் சாம வேத சாகா வசனங்களானே அகிம்சை, மெய், கள்ளாமை, பிரமசரியம், தயை, நேர்மை, பொறுமை, தைரியம், அளவுண்டி, சுத்தி என்னும் இயமங்கள் பத்தனையுங் கொண்டு, அவற்றுட், பிரமசரியம், அகிம்சை, எற்காமை, மெய் என்னும் நான்குமே முக்கியமா மென்று, கூடாநுணிகோபநிடதம் "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌹𑌿𑌂𑌸𑌾𑌂𑌚 𑌅𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌂𑌚 𑌸𑌤𑍍𑌯𑌂𑌚 𑌯𑌤𑍍𑌨𑌤𑍋 𑌰𑌕𑍍𑌷𑌤𑍋 𑌹𑍇 𑌰𑌕𑍍𑌷𑌤 (ப்ராஹ்மசர்யம கிம்சாபரிக்கிருகஞ்ச சத்யஞ்ச யதோ நகோரக்ஷதோ ஹேரக்ஷத) எனவுரைத்தாங்கு, அவையிற்றை முக்கியமாக் கொண்டும், தவம், சந்தோடம், ஆத்திகபுத்தி, தானம், ஈசுரபூசை, சித்தாந்த சிரவணம், இலச்சை, உத்தி, செபம், விரதம் இவைகளே நியமங்களெனக்கொண்டும், மற்றைய ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அங்கங்களையுற்றுஞ் செய்யாநின்றார். அக்காலத்திலே கபிலனுர்க்குக் காலமுடிவு சமீபித்தது. அதனை யறிந்த முனிவர், முற்காலத்தே யொரு முனிவன் தந்தையைப் பூசித்துக் காலனை வென்று சுத்த முத்தனாய் விளங்கினான். யான் இப்போது அவனைப் பூசித்தற்குத் தலங்க டோறுந் திரியக் காலமில்லா தாயிற்று. தந்தையாம் அவனும் விரைவிற் றோன்றி அருளகில்லான்; ஆகலா னவன் மைந்தனாங் குமாரக் கடவுளையே

பூசித்து உய்குவல் எனத் தீர்மானித்தார். சகல லோக குருமூர்த்தி யாகிய அறுமுகக் கடவுள் பாலி னெய்போ லெங்கணும் வியாபித்து இருப்பாராயினுந் தயிரி னெய் போல விளங்கி நின்றருளுந் தான மெதுவோ வென் றாராய்ந்தார். பல்வகைத் தலங்களினும் மேலான தாய், முருகக்கடவுளார் ஒருகணமு நீங்காது வீற்றிருந் தன்பர்க் கெளிவந் தருளுந் தலம் மூகாம்புரி என்னுந் தலமெனக் கண்டார். அத்தலத்திற்கு விரைவிற் சென்றார்.

ஆங்கே, "எந்தை யுமை தேர்ந்திட வியம்பிய குமார
தந்திர விதிப்படி தவாதறு முகற்கு
முந்திய குடங்கர் முதன் மூவகை யிடத்தும்"

எனக் கந்தபுராண முரைத்தபடி, கந்தக் கடவுளைக் கும்பம், தம்பம், விம்பம் என்னு மூன்றிடத்துந் தாபித்துக் கந்தாகமம் ஆகிய குமார தந்திர விதிப்படி மெய்யன்புடன் பூசிப்பாராயினர். எமன் இவர் கால முடிந்தமையினாலே தன்றூதுவரை நோக்கி, "கிங்கரர்காள்! கபிலனுயிரை யொருகணத்தே யீங்குக் கொண்டு வருதி" யென்று கட்டளை யிட்டனன். யமதூதர் விரைவிற் கபிலனி ரிருக்கு மிடம் வந்து அவரைத் தூரத்தி னின்றழைத்தனர். முனிவர் அவர்களை நோக்கிக் "கிங்கரர்காள்! இருபைக் கடலாகிய கதிரை நாயகனார்தம் அடியார்கள் நும்மைக் காணின் வெறுப்பான்றி நும்முடன் வாரார். நுங்களைப் பொருட் படுத்தி யானும் பேசுகிலேன். நான் வாரேன்; போமி" னென்று புனித மாதவனர் தோத்திரம் புகலத் தொடங் கினர். யம தூதர்களின் ஆரவாரமும், அவர்களின் ஆழ்ந்த கண் களும், செந்நிறக் குறுமயிரும், கருமலை போலு மேனியும் வக்கிர தந் தங்களுங் கண்டு அஞ்சுகின்றேன். ஹே! பாமபதி! குமரேசா, அசுர குலாந்தகா! தேவயானை காந்தா! வல்லீபதே! "என்று துதித்தார். தூதர்க்கு அவை யெலாம் பெரிய பாணங்கள் போ

னுழைந்து அவர் தம்மனத்தை யலைத்து வெருவச் செய் தமையாற் கிட்டிப் பற்ற வியலாது அங்குற்று யமனிடங் கூறினர். அவன் றன் மந்திரியாகிய காலன் என்பானை அனுப்பினன். அவன் சான் மலி கணவனுகிய யமனுடைய உத்தரவின்படி யஜோவதி யாகிய எமபுரத்தினின்றும் நீங்கி மூகாம்புரித்தல மடைந்து கபில னிலை யைத் தூரத்தே நின்று கண்டான். கபில முனிவர் அங்ஙனம் பல வாறு தோத்திரித்து அபயம்! அபயம்!! என்று இரங்க, சரவண பவ மூர்த்தி சடிதியிற் றோன்றி, மிருந்தியுஞ்சய மந்திரம் எனப் படுங் காலாந்தக மந்திரத்தை உபதேசித் தருளினர். அது வரு மாறு:—

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

எனத் தொடங்கி,

[illegible]
[illegible]

[illegible]
என்று முடியு மதுவாம்.

இம்மந்திரத்தை யதற்குரிய பீசம், அதிதேவதை, தியானம், சந்தசு, நியாசம் முதலிய வியல்புகள் பொருந்த உபதேசித் தருளிய மாத்திரையே, கபில முனிவர் கந்தக் கடவுளாகிய சகல லோக குரு

மூர்த்தியை விழுந்து விழுந்து பன்முறை வணங்கியெழுந்து, வேத முதலே! சிவாகமச் செல்வமே! அஞ்சினுர்க் காணே! அளப்பருங் கருணையங் கடலே! ஒவ்வோர் சிருட்டியினும் பிறக்குங் காலதத்து வத்திற் குட்பட்ட பிரமனுக்குச் சாத்திரங்களின் விரிவை யுப தேசிப்பவர் தேவரீரேயாம். காலத்திற் குட்பட்ட குருக்கண் மாருக் கெல்லாந் தேவரீரே ஆதிகுரு. காலாந்தகரும் காலாதீதரு மாகிய சிவபெருமானுக்குக் குருவாக விருந்து ஒருமொழிப்பொருளை உப தேசித்தருளிய பரமகுரவருந் தேவரீரே. ஆகலான் எல்லாவித்தை கட்கும் பரம்பொருளாகிய தேவரீரே பரமாசாரியர். தேவரீரே யான்மாக்களாகிய எம்போலிய ருய்யும் பொருட்டுப்பலவேறுவகைப் பட்ட சாத்திரங்களை யெல்லாம் உண்டாக்கியருளினீர். கூடத்தங் களாகிய நால்வகை வித்தைகளையும் அவையிற்றின் வேறுபாடுகளை யுந் தோற்றுவித் தருளினிர். மந்திரங்க ளெல்லாம் அத்துவாக்களி லடங்கு மென்று வேத சிவாகமங்கள் கூறின. அவ்வாறத்துவாக் களும் ஆறு முகமாகப் பெற்ற தேவரீருக்கு எந்தமந்திரம் அரியது தேவரீர் அருளிய சாத்திரங்கள் மூந்நூறு வகையும், மகாதந்திரங் கள் எழுபது வகையுமாம் என்று "ஶதகாஶ் ஶைவஸூத்ராணாம் ஸூத்ராஸ்ஸந்தி ஸஹஸ்ரஶ: | ஶதானி த்ரீணி ஶாஸ்த்ராணாம் மஹா

தந்த்ராணி ஸப்ததி: | எனவரும் வேதாங்க வசனங்களானே யறிந்தாம். ஏ! மந்திரமகாஞான மகோததியே! எண்பத்து நான்கு இலக்கம்யோனி பேதங்களில் அரிதினு மிக்க அரியதான இம் மா னுடப்பிறவியை யெளியே னெடுத்து, அறிவு பெற்றுத் தேவரீரை வழிபட்டமையாற் கொடியதோர் மரணத் துன்பத்தி னின்றும் நீங்கினேன். காலவாதனைப் படாதேயுய்ந்தேன். நின்றிருவடிப் பே றும் பேற்றையும் நாயினேன் பெரிது மடைந்தேன்." என்று புகழ்ந்துவணங்கி, யெழுந்து துதி பலபாடி யானந்தக் கூத்தாடி, இன்னமொன் றனையம்.

தடங் கருணைப் பெருங்கடலே! ஓர் வரமெற் கருளுதி. என்னெனிலோ, இத்தல மெனது மரண வாதனையை யகற்றியது. ஆகலின் ஈண்டுள்ள தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு முதலிய வுயிர்வருக்கங்களும் உடலம் விடுங்கால் யமவாதனையிலகப்படா தியோகிகண் மானச் சேறல் வேண்டும்" என்று இரந்தார். தெய்வ குஞ்சரி நாயகனார் புன் முதலாய எல்லாவுயிர்கட்கும் பக்குவக் கேற்பப், பலவகை மந்திரங்களையும் உபதேசித்தருளி அன்னோர் பாவங்களைத் தொலைத்தருளி வீற்றிருக்கின்றார். இங்ஙனஞ் சகல லோகத்திற்குங் குருவாக வெழுந்தருளி யிருந்து அருள் புரிதலாற் சகல லோக குரு மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

### கிருஷ்ணயசுர் வேதம்.

𑌯𑍋 𑌯𑍋𑌨𑌿𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌕𑌃
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌯𑍋𑌨𑍀𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 ।
𑌋𑌷𑌿𑌂 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌂 𑌕𑌪𑌿𑌲𑌂 𑌯𑌸𑍍𑌤𑌮𑌗𑍍𑌰𑍇
𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌰𑍍𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 ।

"யோயோநிம் யோநிமதிஷ்டத்யேக :
விச்வாநி ரூபாணியோநீச்சசர்வா : |
ருஷிப்ரஸூதம் கபிலம்யஸ்தமக்ரே
ஜ்ஞானைர் பிபர்த்திஜாயமாநஞ்சபச்யேத் |

### மேற்படி மந்திரசாரை.

[illegible]
[illegible]



கார்த்திகேயமூர்த்தி.

[illegible]
[illegible] ।

திருச் செந்தூர்ப் புராணம்.

புகலுதற் கரிய மூகாம் புரியினிற் கபில யோகிக்
ககமகிழ் சிறந்து கால ஞாணையைக் கடக்க வேண்டித்
தகையமந் திரஞ்சொல் வாய்ந்த தந்திரப் பசும்பூ டாதித்
தொகைசொலிச் சகல லோக குருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

சகல லோக குருமூர்த்தயே நமஃ

---

ஒன்பதாவது,

## கார்த்திகேய மூர்த்தி.

---

சுப்பிரமணியப் பெருமான் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களுமுடைய பாலராய்ச் சரவணப் பொய்கையினுள்ள செந்தாமரை மலரின்மீது வீற்றிருந்த திருவிளையாடலைக் கண்டு, விட்டுணு முதலிய தேவர்கள் யாவருங் கார்த்திகை மகளிர் அறுவரை நோக்கி, சரவணப் பொய்கையிற் சென்று ஆண்டுள்ள இறைவனாகிய குழந்தைக்கு நுங்கள் பாலை யூட்டி வளர்ப்பீராக என்றார். அவரும் அதற்கு இயைந்து முருகக்கடவுளை அடைந்து துதிக்க, அவ்வறுமுகக் கடவுள் தம்மை யடைந்தோர்க்கு வேண்டியன அருள் செய்யும் பெருங்கருணைக் கடல் ஆதலால் வெவ்வேறாக ஆறு சிறுவர் வடிவங் கொண்டருளினார். கார்த்திகை மகளிர்கள் அறுவரும் மிக மகிழ்ந்து ஆறு குழவிகளையும் வெவ்வேறெடுத்துத் தங்கள்

தங்கள் முலைப்பாலை யூட்ட அவ்வறு முகக் கடவுள் திருமுறுவல் புரிந்து, நீங்காத பேரருளினாலே மிகவருந்தினர் போல உண்டருளினர். ஆறுசிறுவராய் நின்ற தனிமுதற் கடவுளை அம்மகளிர்கள் சரவணப் பொய்கையினுள்ள தாமரை மலர்களாகிய சயனத்தின் மீது சேர்த்துத் துயில் செய்வித்தனர். முருகக் கடவுள் திருவருளினாலே துயில் செய்தற்கு ஒருருவமும், துயில் செய்து விரைந் தெழுந்து மழலைபேச ஒருருவமும், தாயின் முலைப் பாலைச் செம்பவளவாய் வைத்து அருந்த ஒருருவமும், நகைத்துக் கொண்டிருக்க ஒருருவமும், விளையாட ஒருவடிவமும், அழுவார் போல அழுதற்கு ஒரு திருவுருவமுங் கொண்டருளினர்.

தவழ்தற்கு ஒருருவமும், தவழ்ந்து செல்லுதற்கு ஒரு திரு வுருவும், நில்லாது விரைந்து எழுந்துவிழ ஒருருவமும், இருத்தற்கு ஒரு வடிவமும், பொய்கை யெங்குஞ் சென்றுழக்க ஒருருவமும், மாதாவிடத்து இருக்க ஒருருவமும் உடையாராயினர். அவையன்றிக் கூத்தாடவும், செங்கை கொட்டவும், பாட்டுக்கள் பாடவும், பார்த்தற்கும், ஓடுதற்கும், ஒவ்வோர் இடத்து ஒளித்தற்கும், எங்குந் தேடவும் ஒவ்வோருருவங்களாகப் பற்பல திருவுருவங்களைக் கொண்டருளினர். இவ்வாறே ஆறுதிருமேனியும் கணமொன்றினுள்ளே ஆயிரம் பேதமாம் வண்ணம் முழுமுதற் கடவுளாய் நின்ற குமாரசுவாமி யெண்ணிறந்த திருவிளையாடலை இயற்றுவார் ஆயினர். கார்த்திகை மகளிர்கள் அறுவரும் அறுமுகக் கடவுளுடைய திருவிளையாடல் முழுதையும் நோக்கி நோக்கி மிக்க அற்புத மடைந்து குழந்தைக ளெனக் கொள்ளுதலை யொழித்து, சிறிதும் பிரியாது அஞ்சி வழிபடுகடவுளாகவே கொண்டு மெய்யன்புடன் துதித்தார்கள்.

சிவபெருமான் உமாதேவியார்க்கு முருகக் கடவுளின் பெருமைகளை யெல்லாம் எடுத்து உணர்த்தி, குமரனே நாம், நாமே குமரன் என்று திருவாய் மலர்ந்தருளினர். பார்வதி தேவியார் அது

கேட்டு, எம்பெருமானே! நம்முடைய குமரனை நாம் கொண்டு வருவேம். எழுந்தருளுக என்று சிவபெருமானோடும் இடபவாகனத்து இவர்ந்து, சகல கணத்தவர்களுடன் சரவணப் பொய்கை சார்ந்து, ஆறுருவங் கொண்ட முருகக் கடவுளின் தன்மையைப் பார்த்துத் திருவருள் செய்து கரையின்கண் நின்றனர். குமாரக்கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையுங் கண்டு திருமுக மலர்ந்து உளங் களித்தார். அப்பொழுது மகாதேவர் தேவியாரைநோக்கி "உமையே! நீசென்று உன் புதல்வனைக் கொணர்தி யென்றனர். தேவியார் இடபவாகனத்தினின்றும் இறங்கிப் பேரன்புடன் சென்று தமது திருக்குமாருடைய ஆறு திருவுருவங்களையும் இருதிருக்கரங்களாலும் வாரி யெடுத்துத் தழுவினர். ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களு முடைய ஓருருவாயினர். முருகக்கடவுள் அதனாலே கந்தன் என்னுந் திருநாமத்தைப் பெற்றனர். கந்தம்= கலந்தல். உமாதேவியாராலே யொன்று சேர்க்கப் பட்டவர் என்க. பாஞானப்பாலை யூட்டிட, பரமனார் பெருங்கருணையோடுக் தமது பக்கத்திருத்தியருளினர். பின்னர் உமாதேவியாரையும் திருக்கரத்தினால் எடுத்துத் தமது இடப்பக்கத்தில் அமர்த்தினார். அம்மூவருஞ் சேர்ந்தமூர்த்தமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும். ச= கூட, உமா=உமையும், ஸ்கந்த=கந்தசுவாமியும் இருக்கும் மூர்த்தமே சோமாக்கந்த மூர்த்த மெனப்படும்.

அப்பொழுது கார்த்திகை மகளிர்கள் பேரன்புடன் துதித்து வணங்கி நின்றார். கைலாயபதி யாகிய சிவபெருமான் அவர்கள் மீது திருவருணோக்கஞ்செய்து, நம்முடைய குமாரனாகிய இவன் உங்களால் வளர்க்கப் பட்டமையாற் கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நட்சத்திரத்திலே நம்செல்வக் குமரனை மெய்யன்புற்று வழிபடுவாராயின் அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து முத்தியையு மளிப்பேம் என்று திருவாய் மலர்ந்தருளினார். கார்த்திகை மாதத்துக் கார்த்

திகை நட்சத்திரந் தொடங்கிப் பன்னிரு வருடங்காறும் அநுட்டித்து விரதத்தை முடித்து உத்தியாபனஞ் செய்தவர் இம்மைப் போகங்களை யநுபவித்து உண்மை யுணர்வு தலைக்கூடப் பெற்று, கந்த சாயுச்சிய மடைவர் என்பது திண்ணம். கார்த்திகை நாளிலே கார்த்திகேய மூர்த்தியை விதிப்படி பூசை புரிந்தோர் பெறற்கரும் பே றடைவார்.

**கார்த்திகேய மூர்த்தியின்** இலக்கணம் உரைக்குங்கால், தாமரை மலர்போலுஞ் செவ்வி யுடைய ஆறுதிருமுகங்களும், ஆறு திருக் கரங்களும், வலப்பாலிற் கூர்மைபொருந்திய அழகையுடைய வேலாயுதம், வாள், அபயம் என்பனவும், இடத்திருக் கரங்கள் மூன்றனில், சிறப்புப் பொருந்திய வச்சிராயுதம், கேடகம், வரதம் என்பனவும் கொண்டு, நோய், பயம் முதலியவற்றையும் பிறவிப்பிணியையும் நீக்கித் திருவருள் செய்யும் மூர்த்தியாம். இதனையே வாகுளேய மூர்த்தியெனவுங் கூறுநிற்பர். **வாகுளம்=கார்த்திகை. வாகுளேயன்=கார்த்திகேயன்.** பிறப்பு இறப்புக் குணம் குறி செயல் முதலியன வில்லாத பரம்பொருளைக் கார்த்திகைப் பெண்களின் புத்திரனெனப் புகல்வது உண்மையன்று; உபசாரமேயென்று வேத உபப்பிருங்கண முரைத்தது. கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையாற் கார்த்திகேய மூர்த்தி ஆயினர்.

**கந்தபுராணம்-சரவணப்படலம்.**

கந்தன்றனை நீர்போற்றிய கடனாலிவ னுங்கண்
மைந்தன்னெனும் பெயராகுக மகிழ்வா லெவரேனு
நுந்தம்பகலிடையின்னவ னேன்றுள்வழிபடுவோர்
தந்தங்குறை முடித்தேபரந் தனைநல்குவ மென்றான்.

**குமாரதந்திரம்.**

[illegible]
[illegible]

[illegible]

* கார்த்திகேய ஸ்வாமீ || வரத குலிசகேடம்வாமஹஸ்த
த்ரயேச தததபய சக்திம் கட்கமந்ய த்ரயேச |
தருணரவி சமாபம் ஸ்வாதுபி꞉ பூஜ்யமாநம் கமல வதந
ஷட்கம் கார்த்திகேயம் பஜாமி ||

தணிகைப் புராணம் - அகத்தியப்படலம்.

சேர்த்த குலிசங் கேடகமே செழித்த வரத மிடப்பாலுங்
கூர்த்த மணிவேல் வாளபயங் குலாவு வலப்பாலுங் கவின
வேர்த்த வாறு மலர்க்கரமு மிலங்கும் வதன மோராறுஞ்
சூர்த்த பிணிக டபுங் கார்த்திகேய னுருவந் தொகுப்போரும்.


கார்த்திகேய மூர்த்தயே நம꞉

* கார்த்திகைப் பெண்கள் பாலை யுண்டற்கும், அவர்களால் வளர்க்கப்படற்குங் காரணங்கள் பலவாறு பலருங் கூறுவர். அங்கி தோன்றியகாளாகலின், அந்நாட்களாம் கார்த்திகைப் பெண்களே வளர்த்தார் என்ப. பத்துப்பாட்டு என்னு நூலின்கண், "நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை - யைவரு ளொருவ னங்கையேற்ப - வறுவர் பயந்த வாறமர் செல்வ" என்று நக்கீரனார் கூறினர். அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "அங்கியங் கடவு ளுருத்திர வீரியமேற் றுண்டொழிய, அருந்ததி யொழிந்த வறுவர் மங்கையருங் கொண்டு விழுங்கிச் சூன் முதிர்ந்து சரவண வாவியிற் பதுமப் பாயலிற் பயந்தார் என் றுரைத்தனர். இங்ஙனமே பாரதத்துங் கூறப்பட்டுளது. எங்ஙனமெனில், அசுரரான் மெலிந்த இந்திரனாதிய தேவர்கள் கயிலை நண்ணிச் சிவனை யிரக்க, அவர்தமது வீரியமாகிய அக்கினியை, அக்கினி யுண்ணுமா றேவினர். அதனை யுண்ட அக்கினி மெலிந்து வாடுங்கா லெழுமுனிவர் மகம்புரிந்தார். அம் முனிவபத்தினிமார் எழுவர் மீதும் அக்கினி மிக்க காதல் கொண்டோர் சோலைக் கட் போயிருந் துயிர்விட வெண்ணும் போது, மனைவி சுவாகை, அருந்ததி யுருவெடுக்க முடியாமையால், மற்றை யறுவர் பெண்கள் வடிவெடுத்துத்தன்கணவ னக்கினியைப் புல்லி யவ்வீரியத்தை காணற்புற்றடத்திலுமிழ வவ்வுருத்திர வீரியஞ் சுக்கிலபக்கப் பிரதமை தொடங்கி யுருப்பெற்றுச் சட்டிதிதியிற் பன்னிருதோள் அறுமுகங்களுட னவதரித்தது என்று கூறியது. இச்சரிதத்துட் சிலபிறழ் வுடைத்தாகலானும், கந்தபுராணத்திற்கு மாறுக விருத்தலானும் விடப்பட்டது.

பத்தாவது,

# அஜாரூட மூர்த்தி.

எல்லா வாற்றலும், எல்லா முதன்மையும் எல்லா வநுக்கிரகமுமுடைய சிவகுகக்கடவுள், வெள்ளியங் கிரியாகிய திருக்கயிலாய மலையின் முன் றிருவாயின் மண்டபக்கண், வீரவாகு, வீர தீரன், வீர புரந்தரன், வீர மார்த்தாண்டன் முதலிய துணைவர் ஒன்பதின்மரும், இலக்கஞ் சேனை வீரர்களும், தம்மைப் புடைசூழ்ந்துபோற்றி நிற்ப வீற்றிருந் தருளினர். அக் காலத்தே தேவ விருடியாகிய நாரத மகாமுனிவர், வேள்வி யொன்று செய்ய விரும்பினர். தேவர் முனிவர், அந்தணர், இந்திரன், பிரமன், விட்டுணு முதலிய சகல கணத்தவர்களோடுஞ் சேர்ந்து பூவுலகின்கண் இடம் வகுத்து,வேத சிவாகம விதிப்படி செய்யத் தொடங்கினர். அங்ஙனஞ் செய்யா நின்ற காலத்தே மந்திர மாறுபாட்டானே யாகாக்கினியி னின்றுஞ் செக்கர் வானம் போன்ற ஆட்டுக்கடா வொன்று தோன்றியது. அதன் வடிவத்தையுஞ் சினத்தையும் ஆரவாரத்தையுங் கண்டு அங்குள்ளார் யாவருஞ் சாலவுந் திகிலடைந்து அஞ்சினர். ஆட்டுக்கடா தோன்றியதை யாராயுங் காலத்து, பூமியின்கணுள்ளாருட் சிலர் அந்தண ரென்றிருப்பார், பெரிது மேத மென்று எதஞ் செய்கின்றனர். வேதத்தினுட் பொருளை யறியாமே, அவ்வுட் பொருளைச் சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதிகளிற்கண்டுணராமே, தாமூனு மதுவு முண்பா னசை யுற்று, பௌண்டரீகம், பசுநிருட பந்தம், அசுவமேதம் முதலிய பெயர்களை வைத்துக் கொண்டு பசுக்களையுங் குதிரைகள் முதலாயினவற்றையுங் கொன்றருந்துகின்றனர். அதுமட்டோ, அசமேத மென்று பெயர் காட்டி "நம்மினத்தவாம் அசங்களை யெல்லாம் அறுத்தருந்து கின்றனர். சோம யாக மென்பதன் கண்ணும் நங்குடர்க் கொடிகளையே சோமலதை யென்று அநியாயமாக் கொண்டுறவைத்து எச்சின் மயங்க வோர் பாத்திரத்திற் பலரும்வாய்வைத் துரிஞ்சிக் குடிக்கின்றனர். இங்



அருணைரூட மூர்த்தி.

ஙன மிவர், தம் பொழுது போக்கிற்காகவும், விருப்பத்தை முடித் தற்காகவும் இக்கொடுந் தொழில் செய்கின்றனரே. ஆகலான் அவ் வகைத்தாய கொடுவேள்வி முதலியவற்றைக் கனவினும் இனிமே னினைக்காதும், நமரங்களை யறுத்துண்ணாதும், அவரெலாங் குழுமி யிருக்கு மிவ்விடத்திற் றானே வேரோ டழித்துப் பழிக்குப் பழி வாங்குவே னென்று புறப்பட்டது போல் இருந்தது.

ஆட்டுக் கடாவானது அண்ட கோளகையும் வெடித்து நுண் டூளாகுமாறு ஆர்த்துக் கொண்டும், தலையைச் சாய்த்துக் கொம்பர் களை நிலத்திற் குத்தித் தூளி கிளப்பியும், ஊழிக் காலத்தே பிர சண்ட மாருதமும், வடவை யென்னுந் தீயினையுந் தண்ணியதாக்கு மூழித்தீயும், எழுவகை மேகத்திடியும், எழ்கடலும் ஒன்று கூடி முழங்கி வருதல் போலச் சீறிக் கிளம்பியும் வருதல் கண்ட நாரதர் முதலினோர் அவ் யாகத்தை முடிக்காது தம் முயிர் பிழைத்தாற் போது மென்னுஞ் சிந்தையராய் நடுநடுங்கி யோடுவாராயினர். அங் ஙனம் வெரீஇ யோடுகின்றவர்களை யெல்லாம் ஆட்டுக் கடாபார்த்து, அவர்களைப் பின் றொடர்ந்து கொம்பர்களாற் றாக்கியபோது, சிலர் காலொடிந்தார். சிலர் கரம் அற்றார். சிலர் குடர் கிழியப் பெற்றார். சிலர் மாண்டார். இங்ஙனம் உலக மெலாந் திரிந்தது. உயிர்கள் பல வற்றை யதஞ் செய்தும், அச்ச முறுத்தியுந் திரியா நிற்புழி, நாரதர் முதலிய முனிவர்கள் ஒட்டமா யோடிச் சென்று, ஊழியினு மழி யாத் திருக்கயிலை மலையை யடைந்தனர். ஆங்கே முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய உபய கதிர்காம வாசன் எழுந்தருளி யிருக்கக் கண்டனர். சந்திரனைக் கண்ட சமுத்திரம் போல வுவகை பொங்கச் சொல்வார். முனிவிர்காள்! ஈண்டே குகப் பெருமானார் தமதருந் துணைவர்களும், இலக்கம் வீரர்களுஞ் சேர்ந்து நிற்பத் திருவிளையாடல் செய்தருளுகின்றார். யாங்கள் சிவபெருமான் திருமுன்னர்ச் சேறல் வேண்டா. அன்னவரே

ஙன மிவர், தம் பொழுது போக்கிற்காகவும், விருப்பத்தை முடித் தற்காகவும் இக்கொடுந் தொழில் செய்கின்றனரே. ஆகலான் அவ் வகைத்தாய கொடுவேள்வி முதலியவற்றைக் கனவினும் இனிமே னினைக்காதும், நமரங்களை யறுத்துண்ணாதும், அவரெலாங் குழுமி யிருக்கு மிவ்விடத்திற் றானே வேரோ டழித்துப் பழிக்குப் பழி வாங்குவே னென்று புறப்பட்டது போல் இருந்தது.

ஆட்டுக் கடாவானது அண்ட கோளகையும் வெடித்து நுண் டூளாகுமாறு ஆர்த்துக் கொண்டும், தலையைச் சாய்த்துக் கொம்பர் களை நிலத்திற் குத்தித் தூளி கிளப்பியும், ஊழிக் காலத்தே பிர சண்ட மாருதமும், வடவை யென்னுந் தீயினையுந் தண்ணியதாக்கு மூழித்தீயும், எழுவகை மேகத்திடியும், எழ்கடலும் ஒன்று கூடி முழங்கி வருதல் போலச் சீறிக் கிளம்பியும் வருதல் கண்ட நாரதர் முதலினோர் அவ் யாகத்தை முடிக்காது தம்முயிர் பிழைத்தாற் போது மென்னுஞ் சிந்தையாய் நடுநடுங்கி யோடுவாராயினர். அங் ஙனம் வெரீஇ யோடுகின்றவர்களை யெல்லாம் ஆட்டுக் கடா பார்த்து, அவர்களைப் பின் றொடர்ந்து கொம்பர்களாற் றாக்கியபோது, சிலர் காலொடிந்தார். சிலர் கரம் அற்றார். சிலர் குடர் கிழியப் பெற்றார். சிலர் மாண்டார். இங்ஙனம் உலக மெலாந் திரிந்தது. உயிர்கள் பல வற்றை யதஞ் செய்தும், அச்ச முறுத்தியுந் திரியா நிற்புழி, நாரதர் முதலிய முனிவர்கள் ஓட்டமா யோடிச் சென்று, ஊழியினு மழி யாத் திருக்கயிலை மலையை யடைந்தனர். ஆங்கே முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய உபய கதிர்காம வாசன் எழுந்தருளி யிருக்கக் கண்டனர். சந்திரனைக் கண்ட சமுத்திரம் போல வுவகை பொங்கச் சொல்வார். முனிவிர்காள்! ஈண்டே குகப் பெருமானார் தமதருந் துணைவர்களும், இலக்கம் வீரர்களுஞ் சேர்ந்து நிற்பத் திருவிளையாடல் செய்தருளுகின்றார். யாங்கள் சிவபெருமான் திருமுன்னர்ச் சேறல் வேண்டா. அன்னவரே

யோர் திருவிளையாடலான் நங்களை யெல்லாம் புரந்தருளற் கிவ்வுருவங் கொண்டு தோன்றி யருளினார். ஆகலால் நங்கள் அல்லல்களை யகற்றும் பொருட்டே முருகநாதனார் முன்வந்தருளினர். இன்னோரைச் சிறுவ ரென்று நினையற்க. நங் கரங்க ளெல்லா முகிழ்வுற்றுச் சிரமேலேற, வாய் கீதங்களை யோயாமே பாட, கண்கள் ஆனந்தக் கண்ணீரை யருவிபோன் மாறாது பொழியாநிற்ப, ஓலமிட்டு அவர் பாத கமலங்களை நோக்கித் தீர்க்க தண்டஞ் செய்குவம்; வம்மின் என்று தமக்குள்ளே தெளிந்து கொண்டு, புதுச்சந்நிதி யென்னுமொரு பெருஞ் சோயின்மிசை யெழுமையாள வந்தருளுங் கதிரைநாதனார் திருமுன்னர்ச் சென்று, சொல்லியாங்கு அடியற்ற மரம் போல வீழ்ந்து துதிப்பாராயினர்.

மறைகளுக் கிறைவா வோல மந்திர முதல்வா வோல
நிறைகுணக் குன்றே யோல நிதசிவாக் கினிபூ வோலங்
குறைமுடித் தருள்வா யோலங் கூடமக் காணே யோல
மறைகழற் குரிசி லோல மான்சுத வோல மோலம்.

என்றின்னன துதிகளைக் கூறி யோலமிடப், பெருமானார், முனிவிர்காள்! தேவிர்கா ளுமக்குற்ற குறை யென்னை? அஞ்சன்மின்! அஞ்சன்மி னென் றபயாத்தம் அருளித் தெரியார் போல் வினவியருளினார். அவர்கள், "எம் பெருமானே! தேவரீர் அறியாதன்றே! யாகாக்கினியி னின்றுந் தோன்றிய அஜத்தால் (ஆட்டுக் கடாவினால்) யாங்கள் பெருந்துன்ப முற்றேம். இத்துணைக்குள் உலகத்துள்ள வுயிர்க ளெல்லாம் அழிந்திருக்கு மென்பதொருதலை. அடியேங்கட்கு வேறு புகலிட மில்லை. தேவரீரே தஞ்சம் ஆகலாற் காத்தருளுதிர்" என்று பிரார்த்தித்தனர். பகவான் திருவுளமிரங்கிப் பக்கலில் நின்ற வீரவாகுவைத் திருநோக்கஞ் செய்தருளி, "அவ்வாட்டுக் கடாவை யின்னே கொணர்தி யென்றாஞ்ஞாபித்தருளினார். ஆண்டகையாராம் வீரவாகு தேவர், அத்திருவரு ளாஞ்

ஞையைச் சிரமேற் கொண்டு, குகேசப் பெருமானுடைய திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கித் துதித்து விடைபெற்றுக் கடாவைத் தேடிச் செல்வாராயினர்.

அதுகாலே, ஆட்டுக் கடா வானது, தேவர், முனிவர் முதலாயினோர் அஞ்சி யோடினமையாற் பூமியி லுள்ளாரைச் சிதைத்து, கீழ் ஏழுலகினுஞ் சென்று, ஆங்குள்ளாரையும் வதைத்து, மேலுலகஞ் சென்று, திவ்விய லோக மெனப்படுஉஞ் சுவர்க்க வுலகைத் தன் கொம்பாற் றகர்த்துக் குலைத்துநாசம் பண்ணி, பிரமனுலகான சத்திய வுலகத்தை யடைந்து, இறுமாந்து ஆரவாரித்து நின்றது. வீரவாகு தேவர் பூமி யெங்கணுந் தேடிக் கீழுலகினும் போந்தாய்ந்து தேடிக் காணப் படாதாகச் சுவர்க்க வுலகமுஞ் சென்று துருவ, கடாக் காணுதாயிற்று. அதற்கு மேல் உள்ள பதவிகளுங் கடந்தப் பாற் பிரம பதம் அடைந்தார். அங்ஙனந் தேடுழி யோரிடத்து, வடவா முகாக்கினி அநேகாயிரம் யோசனை யுயர்ந்துபரந்து வளர்ந்தாற் போன்ற உடலையும், அதன் கொழுந்து நீண்டாற் போன்ற நாக்கையும், சுவர்ணசலமாகிய மேரு மலையுந் தன்னடிச் சிலம்பர்களுள் கனு ளொன்றினுட் பெய்த பருக்கைக் கற்கள் பலவற்று ளொன்று போல்வ தெனுமத்துணைத் தோற்றத்தையு முடைய ஆட்டுக் கடாவைக் கண்டார். கடா இவரைக் கண்டதுங் குமுறிக் கிளம்பியது. வீரவாகு தேவர் அவ்வாட்டுக் கடா அஞ்சும் வண்ணம் உரப்பி, விரைந்து போய் அதன் கொம்பர்களைப் பற்றி, கரகரவென்னு மொலியுண்டாக இழுத்துச் செல்வாராயினர்.

திருக் கயிலாய மலையை யடைந்து முருகக் கடவுடிரு முன்னரே அவ்வசத்தை விடுத்துப் பணிந்து நின்றார். சிவகுருவா மெந்தை பெருமானார், விட்டுணு, பிரமன் முதலிய தேவர்களையும், நாரதர் முன்னுக நின்ற இருடியர் குழாங்களையு நோக்கித் திருவாய் மலர்ந் தருளும். "நம் மாட்டுச் சான்ற அன்புடையீர்! ஆட்டுக் கடா நம்

மிடத்திற்கு வந்து விட்டது. இனி நீவிர் ஒரு சிறிது மஞ்சாது பூமியிற் சென்று தொடங்கிச் செய்தவேள்வியை முற்றுதிர். வேள்வியி னுண்மைப் பொருளையுந் தெளிந்து கொள்ளுதிர்." என்று திருவாய் மலர்ந்தருளினார். அன்னவரெல்லாம் அது கேட்டுத் தம்மை மறந்தவராய் ஆனந்தக் கூத்தாடி, சர்வலோக சரணியரே! தேவரீர் திருவருட்கோ ரெல்லை யுளதோ? இன்னும் ஓர்வரங்கேட்குதும். அதனை நீக்காது பிரசாதித் தருளல் வேண்டும். என்னெனில், இவ்வாட்டுக் கடாவை வேறெங்கணும் விடலொல்லாது. தேவரீர் வாகனமாக் கொண்டு நடத்தி யருளல் வேண்டும். அடியேங்களும் மற்றை யோரும் அஜாரூடராகிய தேவரீரைக் கண்டகாலத்தே, எங்கட் குண்டாகிய இடர்களைத் தவிர்த்தாட் கொண்ட பரம்பொரு ளிவரென்று நல்லறிவுற்று உய்தற்கேதுவாகும் என்று குறை யிரந்தனர். வேண்டியார் வேண்டியாங் கீந்தருளு மொரு முதல்வன் அங்ஙனஞ் செய்வே மென்று இசைந்தார்.

அவ்வன்பரெலா முன்ன ருஞற்றிய தவங் காரண மாகவே, அவ்வாட்டுக் கடாவை வாகனமாக் கொண்டருளினார். அதன் மேலேறி யெவ்வுலகங்களினுஞ் சென்று * ஐவகை நடைகளாகிய ஆகந்திதம், தோரிதகம், இரேசிதம், வற்கிதம், புலுதம் என்னு மிவையிற்றை நடத்திக் காட்டி விண்ணும் மண்ணுந் துதிக்கப் பற்பல திருவிளையாடல்களைச் செய்தனர். நாரதர் முதலினோர் தாந் தொடங்கிய யாகத்தை முடித்து, கந்தக் கடவுள் யாகாதிபதியும், யாக பரிபாலனரும் யாகபலப் பிரதானரு மென்றுணர்ந்து, அவரைத் தொழுதனர். † "அக்கினிபூ" என்று வேதங்களாற் பிரதிபாதிக்கப்

* ஐவகை நடைகளின் விவரமாவன:— ஆகந்திதம் = அசைவில்லாத நடை. தோரிதகம் = அதிகமாகவுஞ் சமமாகவும் இருக்கின்ற நடை. இரேசிதம் = வட்டமிட்ட நடை. வற்கிதம் = முன்காலைத் தூக்கிவரும் நடை. புலுதம் = வேகமுள்ள நடை.

† அக்கினி—"தேவாநாம் அக்ரே வர:" அதாவது தேவதைகளுக்கு முன்னே இருக்கிறவன் ஆகலால் அக்கினி யென்னும் பெயர் போந்ததென்க. பூ = குமாரன். சிவபெருமானை "தவேவாக்நி" என்று வேதங் கூறிற்றாகலின் குமாரரை "அக்கினி பூ" என்ப தொக்குமன்.

பெற்ற முருகக்கடவுளார், அதற்கியையவும், அவ்வுண்மையை யெம் போலிய ருணர்ந்துய்யவும், அக்கினி தேவனைப் போலத் தாமும் ஆட்டுக் கடாவாகன முடையாயினார். அதனானே வேதங்களெல்லாம் அவரை அஜன் எனக் கூப்பிடுகின்றன. அருணமாகிய (அஜமாகிய) கடாவினேறிச் செலுத்துங் காரணத்தாற் கந்தக் கடவுள் அருணாரூட மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

யசுர்வேதம்.

𑌅𑌜𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌲𑍋𑌹𑌿𑌤𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂
𑌬𑌹𑍍𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌸𑌰𑍂𑌪𑌾𑌂 ।
𑌅𑌜𑍋 𑌹𑍍𑌯𑍇𑌕𑍋 𑌜𑍁𑌷𑌮𑌾𑌣𑍋𑌽𑌨𑍁𑌶𑍇𑌤𑍇
𑌜𑌹𑌾𑌤𑍍𑌯𑍇𑌨𑌾𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌭𑍋𑌗𑌾𑌮𑌜𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 ।

'அஜாமேகாம் லோகிதசுக்ல கிருஷ்ணாம் பக்வீம்ப்ரசாம்ஜநயந்தீம் சரூபாம்| அஜோக்யேகோ சுஷ மாணோநுசேதே ஜகாத்யேநாம் புக்தபோகா மஜோந்ய: |

காமிகாகமம் - அர்ச்சன விதிப்படலம்.

𑌓𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌮𑍇𑌷𑌾𑌯𑌪𑌦𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌤𑍍 ।
𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌯𑍈 𑌨𑌮 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌤𑌲𑌾𑌗𑍍𑌰𑌕𑍇 ।

'ஓம் நம்சாரம் சமுத்திருத்திய மேஷாயபத முத்தரேத் |
கர்ணிகாயை நம இத்யேதத் வாமபாத தலாக்ரகே |

கந்தபுராணம் - தகரேறுபடலம் முழுதும்,

இதுவிடயமாக வுள்ளன வாகலால் ஆங்கும் பார்க்கக் காண்க.

### கந்தபுராணம்.

*மேடமூர்தியாகவுய்த்து விண்ணுமண்ணுமுருகவே*
*ளாடல்செய்துலாவிவெள்ளி யசலமீதிலமர்தரு*
*நீடுநாளிலொருபகற்க ணெறிகொள்வேதன்முதலினோர்*
*நாடியீசனடிவணங்க வவ்வரைக்கணண்ணினார்.*

அருணாரூட மூர்த்தயே நமஃ

---

## பதினொன்றாவது,

# பிரம சாத்த மூர்த்தி.

---

சுப்பிரமணியக் கடவுள் ஆட்டுக் கடாவை வாகனமாகச் செலுத்திப் பற்பல திருவிளையாடல் புரிந்து, வெள்ளி மலைக்கண் வீற்றிருந்தருளினர். அது காலைப் பிரமதேவன் இந்திராதி தேவர்களுடனும், * கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்தியாதரர், முதலிய கணர்களோடுஞ் சிவபெருமானைத் தரிசித்தற்காகக் கயிலை மலைக்குச் சென்றனன். ஆங்குத் திருமுன் வாயிலிற் கந்தக் கடவுள் நிற்கக் கண்டும் அவரை வணங்காது, "இவன் ஓர் இளைஞன் றானே" என வுரைத்து இறுமாந்து சென்றனன். சுப்பிரமணியப் பெருமானா மவரைக் கவனிக்காது வேறுபடுத்திச் சிவனை வணங்குவதுண்மைப் பயனை யளிக்காது. என்னை? தாமுஞ் சிவனும் மாணிக்க மணியும் அதனொளியும்போ லிருக்கின்றே மென்னு முண்மையை யுலகிற் குணர்த்தவும், பிரமன் கொண்ட அபராதத்தைத் தீர்க்கவுந் திருவுளங் கொண்டழைத்து, "நீ யாவன்" என வினவி யருளினர்.

---

* கின்னரர்=மானுட முகமுங் குதிரை யுடலு முடையவர். கிம்புருடர்=குதிரை முகமும் மானுட வுடலு முடையவர். சித்தர்=சித்திகள் பெற்றோர். அவர் ஆதிநாதர், அநாதிநாதர், கோரக்கநாதர் முதலாயினோர். வித்தியாதரர்=யாலிகாஞ்சன முதலிய வித்தைகளைத் தரித்தார்.



பிரமசாத்தமூர்த்தி.

விதியோன் நடுநடுங்கித் துணுக்க முற்று, என் விளையுமோ வென்று ஏங்கி "அடியேன் படைத்தற் றொழி லுடைய பிரமன்" என்றான். "அங்ஙனமாயி னினக்கு வேதம் வருமோ?" என்று பகவான் கேட்டனர். பிரமதேவன் கூறுவான் - ஐயனே! † பதினெட்டு வித்தைகளிலும் வல்லமை யுள்ளேன். வித் (அறிவு) என்னுந் தாதுவின், அடியாகப் பிறந்த, வித்தைகள் என்று உள்ளன வெலா மோதி யுணர்ந்துளேன். அவற்றைப் பலர்க்கு முபதேசிக்கு மாசாரியனாகவு முள்ளேன் என்றான். பரமான்மா அவைகேட்டுத் திருவாய் மலர்ந் தருளும். நன்று! நன்று! அத்துணை வல்லமை யுடையையோ? அங்ஙனாயி னிருக்குவேதங் கூறுதி. நின்வன்மை யறிது மென் றுஞ்ஞாபித்தமை கேட்டு மலரோன் வாய்திறந்து, பதின் மூன்றா மெழுத்தாகிய ஓகாரத்தை ‡ விந்து நாதங்களுடன் சேர்த்து ஓம் என்று உச்சரித்த மாத்திரையினே, சர்வலோக பரமாசாரிய மூர்த்தியாகிய விசாக மூர்த்தி, நிறுக்கா மமைத்து, சதுர்முகா! நிற்றி! நிற்றி. அதன் பொருளை விளங்க வுரைத்தியென் றருளினர். பிரமன் சொல்லத் தொடங்கினன்.

ஐயனே! ஓம் என்பது பிரணவ மெனப்படும். எல்லாவித்தைகட்கும் எல்லா மந்திரங்கட்கும் முதலாயுள்ளது. சொல்லுமிடத்துச் சொற்பிரபஞ்ச மெல்லா மிதன்கட் டோன்றி நிற்கும். ததீசி முனிவன் றந்தை யாகிய அதர்வண விருடியென்பான் பண்டை ஞான்று இவ்வோங்கார மான்மியத்தைப் பிப்பலாத முனி புத்திரனான பைப்பலாதனும், சத்திய வாக னென்னும் பாரத்துவாச முனி சீடனான ஆங்கிரசும், என்குமரன் சனற்குமாரனுங் கேட்டபோது உபதேசித்துளான். அது அதர்வணவேதத்தின் ஒன்பான் சாகை

† பதினெட்டு வித்தைகளாவன—வேதம் - ௪, அங்கம் - ௬, உபவேதம் - ௪, மீமாஞ்சை, நியாயம், புராணம், மிருதி என்னு நான்குஞ் சேர்ந்தவையாம். இவ்வண்ணம் வாயுசங்கிதை கூறுமென்க.

‡ விந்து என்பது மகர வெழுத்து. நாதம் என்பது ஒலி.

களு ளொன்ருகக்காணப்படும். இங்ஙனம் வேதங்கடோறும் அதன் பெருமை விளக்கமாக் கூறப்பட்டுள்ளது. பிரகருட மென்னுந் தத்துவ ஞானத்தை யுண்டாக்கலாற் பிரணவ மெனப் பெயர் பெற்றது. அது வியட்டிப் பிரணவம், சமட்டிப் பிரணவ மென இரு வகைப்படும். வியட்டிப் பிரணவமாவது அகார, உகார மகாரங்களாம். சமட்டிப் பிரணவம் ஆவது அவை மூன்றெழுத்துஞ் சேர்ந்து ஓம் என்று ஒலிப்ப தாகும். வியட்டிப் பிரணவம் அபரப் பிரணவம் எனவும், சமட்டிப் பிரணவம் பரப் பிரணவ மெனவுஞ் சொல்லப்படும். இப்பிரணவம் வந்த வரலாறு கூறுகின்றேன்:—

பகவ! முன்னர் ஞான்று பன்னுட் டவமுழந்து, அதன் பயனுனே பூமி அந்தரம் சுவர்க்கம் எனு மூன்றனேயுஞ் சங்கற்ப மாத்திரையானே படைத்தனன். அவையிற்றைப் பின்னர்த் தவாக்கினியாற் கொளுத்தினேன். அவற்றினின்றும் முறையே அக்கினி, காற்று, சூரியனென்னு மிவைதோன்றின. அவற்றையுந் தகித்தேன். அவற்றி னின்று முறையே இருக்கு, யசுர்சாமம் என்னும் வேதங்க டோன்றின. அவையு மென்ஞ லெரிக்கப்பட்டன. அவற்றினின்றும் பூர், புவ: சுவ: என்னும் வியாகிருதிகள் மூன்றுந்தோன்றின. அவற்றையுந் தகித்தேன். ஆங்கிருந்து முறையே அகாரம், உகாரம், மகாரம் என்பன தோன்றின. அவை மூன்றனேயுஞ்சேர்த்து ஓம் என வைத்தேன். அகா உகா மகாரங்களி னியற்கையை யொரு சிறிது உரைக்கின்றேன்.

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।

த்ருஸ்வம் ஸ்யாத் ப்லுதம் வைதிகம் ஸ்வரிதம் ப்ரணவம் ப்ரஹ்மவாதிநஃ ।
ஓங்காரம் பஞ்சதா ஸம்ப்ரோக்தம் த்ருதீயம் ஸ்வர்ணாம்ஸகே ।
அகாரஃ பீதவர்ணஸ்து ப்ராஹ்ம்யோ ராஜோகுணஸமீரிதம்।
உகாரஸ் ஸாத்விகஶ்ஶுக்லோ மகாரஃ க்ருஷ்ண தாமஸஃ ।
அஷ்டாங்கஞ்ச சதுஷ்பாதம் த்ரிஸ்தானம் பஞ்சதைவதம்।

என்று சாமவேதங் கூறியாங்கு, இப்பிரணவம் முத்திகாமிகளாலே தியானிக்கப் படுமொன்று. எட்டு அங்கங்களையும், நான்கு பாதங்களையும், மூன்று தானங்களையும், ஐந்து தேவதைகளையுமுடையது. பிரணவத்தின் மூன்றெழுத்திற்கு முரிய வியல்பு வாக்கு மனங்கட் கெட்டாது. ஆயினுஞ் சொல்கின்றேன்.

அ- திறத்தல், படைத்தல், பிருதிவி, உதாத்தம், இறந்த காலம், சுத்தா சுத்த தத்துவம், சகலநிலை, பொன்னிறம், இராசத குணம், சொப்பனவத்தை, இருக்குவேதம், காருக பத்தியம், காலைப்போது, பிரமநாடி, அக்கினி மண்டலம் என்னு மிவையதன்கண் உணரற் பாலன.

உ - குவிதல், காத்தல், அந்தரம், அநுதாத்தம், நிகழ்காலம், சுத்ததத்துவம், சுத்தநிலை, வெண்மை நிறம், சாத்விககுணம் சாக்கிராவத்தை, யசுர்வேதம், ஆகவனீயம், உச்சிப் போது, பிங்கலைநாடி, சூரிய மண்டலம் என்னு மிவை யதன்கண் உணரற் பாலன.

ம - மூடுதல், அழித்தல், சுவர்க்கம், சுவரிதகம், எதிர்காலம், அசுத்த தத்துவம், கேவலநிலை, கருமைநிறம், தாமதகுணம், சுழுத்தி யவத்தை, சாமவேதம், தக்கிணாக்கினியம், மாலைக் காலம், இடைநாடி, சந்திரமண்டலம் என்னு மிவை யதன் கண் அறியற் பாலனவாம்.

இவற்றிற்கு முறையே நானும், திருமாலும், உருத்திரனுமே அதிதேவதை யாவேம். இவ்வாறு தோன்று முறை, தொழில், இடம் அல்லது பூதம், காலம், தத்துவம், நிலை, நிறம், குணம், அவத்தை, வேதம், அக்கினி, பொழுது (சந்தி), நாடி, மண்டலம் முதலியவற்றை யோகிகள் அறிவார்கள். இதனை அக்கர பரப்பிரமம் என்று வேதங் கூறுகின்றது. ஞானத்தை நிலைநிறுத்தும் பொருளிதுவாகும். அதனாற்றான் ஆலம்பனம் என்னும் பெயரை யிதற்கு வரித்தார் பெரியோர். இப்பிரணவ வுண்மை யுணர்ந்தார் எமது சத்தியவுலகிற் பூசிக்கப்படுகின்றனர். இங்ஙனம்,

𑌏𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑍇𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ॥

ஏததா லம்பனம் சிரேஷ்ட மேததாலம் பநம்பரம் |
ஏததாலம் பநம் ஞாத்வா ப்ரஹ்மலோகே மஹீயதே ||

என்று யசுர் வேதங் கூறுகின்றது. இப்பிரணவம் மூன்று மாத்திரைகளை யுடையது. இந்தப் பிரணவ உபாசனத்தைப் பிரதீகோபாசனம் என்றல் பொருந்தாது. பிரம உபாசன மாகவே எண்ணுதல் வேண்டும். அதனால் அகர மென்னு முதல் மாத்திரையை யெவர் உபாசிக்கின்றாரோ அவர் அப்பெருமையால் விவேகஞானம் பெற்று மேலாய அரிய மானுடப் பிறவியை யெடுத்து, அதன்கட் சிவஞான மடைந்து, முத்தியை யடைத றிண்ணம். எங்ஙனெனில் அகாம் இருக்குவேத வடிவாயிருத்தலால் என்க. யசுர் வேதம் மந்திர வடிவமாக விளங்கும். உகர மகரங்களைத் தியானிக்கின்றவர் சந்திர லோகத்தை அடைவர். எவரொருவர் மூன்று மாத்திரைகளை யுடைய பிரணவத்தை யுபாசிக்கின்றாரோ, அவர் சூரியனது ஒளி மண்டலத்தை யடைந்து பாம்பு பழைய தோலினின்றும் விடப்பட்டாற் போலப் பாவத்தி னின்றும் விடுபட்டுப் பிரம லோகத்தை யடைவார்.

பிரச்சிஞேபரிடதம் ஐந்தாவது பிரச்சினம்.

[illegible]

[illegible]

[illegible]

இங்ஙனங் கூறுகின்றது. என்றிவ்வாறு பிரம னுரைத்துப் போதலும், சுப்பிரமணியக் கடவுளார், "இவைதாமோ வப்பிரணவத்தின் பொருளாவன ? " வென்று நகைத்து உண்மைப் பொருளையுரைத்தி என்றூர். கமலாசனன் றிகைத்து ஒன்றுந் தெரியாது மயங்கி நிற்ப, இங்ஙன முள்ள நீயோ படைக்குந் தொழில் செய்வாய்; இவ்வாறே சிருட்டியும் புரிகின்றாய்? நீயோ அகாரப் பொருளாயிருப்பவன்? நன்று நன்று என வுரைத்து, அப் பிரமனது நான்கு முடிகளுங் குலுங்கும்படி * குட்டி யருளினூர். இத்தகைய

* வீரவாகு தேவரே சுப்பிரமணியக் கடவுளின் திருவாக்ஞைப்படி பூண்டு, பிரமன் முடியிற் குட்டிச் சிறையில் வைத்தனரென்று வடமொழிச் சங்கர சங்கிதை கூறுகின்றது. தணிகைப்புராணம் முருகக்கடவுள் ஒருவரே கோபித்து அங்ஙனஞ் செய்தவெனக் கூறிற்று.

விருண்ட வுளத்தனைச் சிறை யிடுக வென்று ஆஞ்ஞாபித்தார். வீர வாகுதேவரும், ஆங்கு நின்ற வீரர்களுமாகப் பற்றிச் சென்று கந்த மலைக்க ணுள்ள குகை யொன்றனில் அடைத்தனர். பிரமன் மிக வும் வருத்தம் உற்று ஆங்குச் சிறையிருந்தான். சுப்பிர மணியப் பெருமான் பிரமனைத் தண்டித்துச் சிறைவைத்தமை கேட்டுக் கூட வந்த கணர்களெல்லாம் விதிர் விதிர்ப்புற்று வணங்கிச் சென்றார்.

பிரமசாத்த மூர்த்தியின் இலக்கணங் கூறுமிடத்து ஒரு திரு முகமும், நான்கு திருக் கரங்களும், வரதம், கமண்டலம் என்னும் இரண்டும் இடத் திருக்கரங்களிற் பொருந்தவும், அபயம், அக்கவடம் என்பன வலத் திருக்கரங்களிற் பொருந்தவும், தாமரைமலரை யொத்த பிரகாசமு முடையராய் விளங்குவார் என்க.


யசுர் வேதம் - அத்தியாச்சிரம சாகை.

𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌤𑍋𑌮𑌹𑍀𑌯𑌾𑌨𑍍
𑌆𑌤𑍍𑌮𑌾𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂𑌨𑌿𑌹𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌯𑌜𑌨𑍍𑌤𑍋𑌃।
𑌤𑌮𑌕𑍍𑌰𑌤𑍁𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑍋
𑌧𑌾𑌤𑍁𑌃𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍀𑌶𑌮𑍍॥

அணோ ரணீயாந் மகதோ மகீயாந்
ஆத்மா குகாயாம் நிகிதோஸ்ய ஜந்தோஃ।
தமக் கிரதும் பச்யதி வீதசோகோ
தாதுஃ ப்ரசாதாந் மகிமாந மீசம் ||

குமார தந்திரம் - மந்திரோத்தாரப் படலம்.

[illegible]
[illegible]



சிருட்டிகர்த்தத்துவ மூர்த்தி.

[illegible]

[illegible]

ப்ரஹ்ம சாஸ்தஸ்வாமீ | வாமேகரேச யுகளே
வர குண்டிகேச சவ்யேகூ்ஷ ஸூத்ரே மபயந்ததம்
விசாகம் வல்லீ யாயுதம் வநஜ லோஜந மேக வக்
திரம் வந்தாமகே வநஜ சம்பவ சாசிதாரம்.

தணிகைப் புராணம் - அகத்தியப் படலம்.

வரத மணிக்குண் டிகையிரண்டும் வாமத் திருக்கைத் தலமாக்கிப்
புரவு புரியு மபயமொடு புரைதீ ரக்க வடம்வலப்பா
லிரவை யிரிக்கும் வலத்த மைத்திட் டெல்லாவுலகு மினிதளித்துப்
பிரம சாத்த னெனப்பொலிந்த பெருமா னுருவம் பிறக்குரும்.

பிரம சாத்த மூர்த்தயேநமஃ

---

பன்னிரண்டாவது,

# சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தி.

---

பிரம தேவன், சுப்பிரமணியக் கடவுளினுஞ்ஞையானே சிறை செய்யப்படும்போது, வலிய கணங்க ளெல்லாம் அவனைத் துன்பப் படுத்தத் தொடங்கின. முடிகளி னின்றும் பல ரத்தினக் கூட்டங் கள் சிந்தவும், இரத்தங் கொப்பளித்து அருவிநீர் போற் றிரண்ட தோளினின்று குதிப்பவும், அழகும் அவனது காந்தியும் படைத்தற் றொழிலுஞ் சிந்தவும் முடிகடோறுங் குட்டி, வலிய காதைப் பிறைபோற் பிடித்துப் பிடரிற் பிடித்துத் தள்ளி, அக்கவடமுங்

தாமரை மலர் மாலையும் அறுந்து வழிகடோறுஞ் சிதறக் கொடு சென்று, ஓர் குகைக்கட் சிறையிட்டன. ஆங்கே நான்முகன் தந்தை தாயாராலே தண்டிக்கப்பட்ட மழலைக் குழவிகள் போல, வருவதை யறியானாய், வேறொரு துணையு மின்றி மரணகாலத் துயிர்களேபோல மாழ்கிநின்றான். பாம்புகளின் வாய்ப்பட்டுப் பலநாள் வருந்துஞ் சூரிய சந்திரர் போலவும், துன்பங்க ணிறைந்த கருப்பையிற் பலவாண்டு கிடக்குங் குழந்தை மானவும், விடியாத இருளின் வயப்பட்ட கண்களே சிவணவும், பிரமன் றனது ஒளி, வன்மை, பெருமை, அறிவு முதலிய யாவுங் குறையப் பெற்றுத் தேம்பியிருந்தான்.

இசை மடந்தை யாகிய சரசுவதி, தன துயிர்த் துணைவனாகிய விரிஞ்சன் குமாரக் கடவுளாலே தண்டிக்கப்பட்டுச் சிறைப்படுவதை முன்னரே யறிந்தாள் போலும். என்னெனில், அவனகத்தி னின்றும் நீங்கவருமே. அதுகாலைக் குடியிருத்தற்கு ஓர் இடம் வேண்டுமே என்று புட்பக் கொத்துக்கள் விளங்கா நின்ற தருக்களையும், வெண்டாமரைப் பூக்களையும், இசைகளையுந் தான் வாழுமிடமாக்கிக் கொண்டனள். நல்லுணர்ச்சி யிருக்கின் நரகமு மொருவனுக்குச் சுவர்க்கத்தைப் போல இன்பத்தைக் கொடுக்கும். அஃதின்றேற் சுவர்க்கமும் நரகத்தைப் போலத் துன்பத்தையே கொடுக்கும். அங்ஙனம் நல்லுணர் வின்மையா னன்றே, உலகத் துள்ள வுயிர்கள் யாவற்றிற்கும் பேரானந்தத்தை விளைக்குங் கயிலாயத்தினோர்பாங்கராங் கந்தமலைக் குகையும் பிரமனுக் களவிலாத் துயரத்தைக் கொடுத்தது. தேவர்கள் இன்பத்தையும், நரகர் துன்பத்தையும், மானுடர் இரண்டனையும் அநுபவிப்பார்க ளென்று புலவர் புகலாநிற்பர். அவரெல்லாம் பிரமன் அன்றுபட்ட வல்லற்றுணையை யறிவரேல் அங்ஙனம் புகலார்; புகலார்.

இப்பால் உலக மெங்கணு நிறைந்தவரும், அன்பர்தங் குற்றங் களை யெல்லாந் தவிர்த்துத் தந்திருவருட் செல்வத்தை வழங்கு வோரும்,

𑌨𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌪𑍁𑌰𑍇 𑌦𑍇𑌹𑍀
𑌹𑌂𑌸𑍋 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍇 𑌬𑌹𑌿𑌃।
𑌵𑌶𑍀 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯
𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌸𑍍𑌯 𑌚𑌰𑌸𑍍𑌯 𑌚

(ஒன்பது துவாரம் உள்ள வோர் புரத்திற் றேகியாகி அம்சன் வெளிப்பட் டலைகின்றான். இவன் தாவர சங்கமப் பொருளின் வடிவாய எல்லாப் பிரபஞ்சத்திற்கும் வசியாம்.)

என்னும் வேத வசனத்தைப் பிரமனுக்கும் இலக்கிய மாக்கிய வரும், காலகாலரும், உலகத்தை யறிந்தவரும், தம்மையே காரண மாகப் பெற்றவரும், எல்லா வித்தைகளாலும் அறியப்பட்டவரும், குணேசரும், பிரதானரும், மோக்கத்திற்கும், திதிக்கும் பந்தத்திற் கும் எதுவானவரு மாகிய சுப்பிரமணியக் கடவுள், பிரம தேவன் சிறையிடைப் புக்கமையால் அவன் செயும் படைப்புத் தொழிலைத் தாமே செய்தருளத் திருவுளங் கொண்டு, சிறப்பின்மிக்க திரு வேங்கட மலையை யடைந்தருளினர்.

மேலாய தகுதி கொண்ட வரைப்பாய், செந்தமிழ்க்கு வரம்பெ னப் பண்டை யோராற் புகலப்பட்டதாய், அகத்தியனார்க்குச் செந் தமிழைச் செவியறிவுறுத்திய தலமாய் விளங்காநின்ற திருவேங் கடமலையை யடைந்த பெருமானார், ஒவ்வொரு காலத்தையும் பல வகையாக மாற்றி யிந்த க்ஷேத்திரத்திலேயே சங்கரிக்கின்றார்; மீட் டும் பலபதிகளைப் படைத்துத் தாமொருவரே மகான்மாவாய்ச் சர் வாதிபத்தியஞ் செய்பவர் என்பதை யுலகந் தேறி யுய்யுமாறு பெரு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
... MADRAS

கிய கருணையுடன், அம்மலைக்கணோருத்தம தானங் கண்டு கோயில் புனைவித்து, நடுவணிடப்பட்டு விளங்குந் தவிசின் மத்தியில், நீண்டசடாமுடியும், வரத அபயங்களும், கமண்டலம் அக்கவட மென்பவும் நாற் றிருக்கரங்களி னிடத்து மமைய, முனிவர், தேவர்கள், இந்திரன், விட்டுணு, கணத்தவர்கள், நவவீரர்கள், இலக்கம் வீரர்கள் என்னு மிவர்க டம்மைச் சூழ்ந்து துதிக்க வீற்றிருந்து சிருட்டித் தொழில் செய்யத் தொடங்கி யருளினார்.

தாஞ் செய்தருளுகின்ற படைப்புத் தொழிற் கேற்பத் துழாய் மாலை தரித்தோன் காக்க மாட்டானென்று அவன் செயுங் காத்தற்றொழிலையும், தந்தை செல்வம் மைந்தர்க்கு உரியதாகலான் அவர் செய்யும் அழித்தற் றொழிலையும் அதனோடு செய்தருளினார். ஆகவே முத்தொழிலுந் தாமே செய்தருளி முத்தொழிற்கும் மும்மூர்த்திகட்குங் காரண ரென்பதைத் தெற் றென விளக்கினார். இந்திரற்கும் அதனால் அரசில்லை யாயிற்று. தேவ வருடங்கள் பலசழிந்தன. விருப்பு வெறுப்பென்பன தனக்கொன்று மின்றி, தம் பணி புரியும் அடியார்கட் குரிய விருப்பு வெறுப்புக்களை நீக்கி யருள்புரியும் பராபரமூர்த்தியாகிய செவ்வேட் கடவுள், படைத்த வப் படைப்பிற் றோன்றிய ஆன்மாக்கள் பெற்ற பேற்றை யிற்ற தென்று நுண்ணிய அறிவுடையார் தாமுங் கூற வல்லரேயோ? யாவரும் புண்ணிய வடிவாகவே விளங்கினர். தீவினை யென்பது எவ்வுயிர்களையும் விட்டு நீங்கிற்று. சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்ச மென்னு மிருவகைப் பிரபஞ்சங்களை யெல்லாம், தாம் நிமித்த காரணனாக நின்று, முதற் காரண மாகிய மாமாயையி லிருந்துந் துணைக் காரண மாகிய சத்தியைக் கொண்டு படைத்தார்; அளித்தார்; துடைத்தார்; இதனானே மும் மூர்த்திகட்கும் முதல்வர் அவரே யென்பதூஉம், இருத்திய சுதந்திரர் அவரே யென்பதூஉம் பெறப்பட்டன. மலைபோலும் பெருவன்மை யுள்ள சாத்தற்கு மூன்றுகலப் பாரஞ் சுமத்த லோர்

விளையாட்டாயினமை சிவனை, வேங்கடாசல பதியாகிய சுப்பிர மணியக் கடவுட்கும் இஃதோர் திருவிளையாட்டாயிற்று.

"காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி"

"ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தேம்"

எனத் திருவாசகத் திருவருட்பாவிற் கூறியதூஉ மிவ்வுண்மையைத் தெரிக்குமென்க. சர்வ கர்த்தத்துவ பதியாகிய ஞான சத்திதாய்ப் பெருமான், சிருட்டித்தன் முதலியன வெல்லாம், குயவன் முதலி னோர் செய்யுங் காரணவினை போலாது, "இஃதிவ்வாறாக; இஃதிவ் வாறாகாமே யொழிக" என்று எண்ணுத லாகிய சங்கற்ப மாத்திரை யே யென்க. இக்கருத்து அமையவே,

"நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவன்"

எனச் சிவஞானபோதமுந் தெளித்தருளிற்று. * பன்னிரு திருமுறைத் திருவருட் பாக்களு மிங்ஙனே கூறுமென்க. இதனானே பிரம விட்டுணு உருத்திர னென்னு மிவர்க்குத் தொழிற் சுதந்தர மில்லை யென்பதூஉம், அங்ஙனே முத்தி பெற்ற ஆன்மாக்க ளிறை வனே யான வைந்தொழிலுஞ் செய்யுமென்று சிவசமவாதி, உருவ சமவாதி, சித்தாந்தந் தெரியாது அதற்கு மாறாக நின்றவெம்மதமுஞ் சம்மத மென்னு நவீனமத வாதியென்னு மிவர் கூறுங் கூற்றுக்க ளெல்லாம் † பொய்யேயா மென்பதூஉம், விஞ்ஞான தீக்ஷைக்கண் உடல் பொருள்களோ டொப்பச் சற்குரவன் கையிற் றானுஞ்செய்

* பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்களாவன:—தேவாரங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பெரியபுராண மென்பன.

† இதன் விரிவைச் சிவஞானபோத மாபாடியத்து ஆறாஞ் சூத்திர வுரையினும், மருட்பா மறுப்பு என்னும் நூலினுங் கண்டுகொள்க.

தளித்தும், அங்ஙன மளித்த பொருளென்றறியு மறிவு சலியாமைப் பொருட்டு நாடோறுஞ் சிவ பூசையிற் செபங் கன்மங்க ளோ டொப்பச் "சிவோதாதா" என்னு மந்திர மோதி ஆன்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூநீரோடு தானஞ் செய்தளித் தடிமையாகப் பாவிக்கும் ஆன்மாக்கட் கெஞ்ஞான்று மைந்தொழின், முத்தொழி லன்றி யொரு தொழிலுமுஞ் செய்தற் காற்றலில்லை யென்பதூஉம், கந்தப் பெருமானார் விளக்கி யருளின ரென்க. இங்ஙனம் பிரம னைச் சிறையிலிட்டுத் ‡ திருவேங்கடக்கண் முத்தொழிலையும்நடத் தலானும், முக்கியமாகப் பிரமன் இடம் நிகழ்த்திய தொழிலை, ஈண்டு அதிட்டான மின்றித் தாமே நடத்தலானுஞ் சிருட்டிகர்த் தத்துவ மூர்த்தியாயினர்.

கிருஷ்ண யசுர்வேதம்.

ப்ரஹ்மாணம் ஸ்வயஞ்ஜாத: க்ருதவேஷ்வராதி
ஸம்ருத்தம் ஸர்வம் யத்வேஷாவதம்ஸ்தி।
ஸுப்ரஹ்மண்ய: ப்ரஜாதேவி ஸ்வேச்சயா
ஸுப்ரஹ்மண்யோ ப்ரஹ்மாயாஸம் ஸ்ருஜதி॥

‡ திருவேங்கட மென்பது இக்காலத்து விட்டுணுத் தலமென்று வைணவர் கொண்டாடுகின்றனர். நாகாபரணமும், சடா தாரணமும், வில்வார்ச்சனையும், சஷ்டியுற்சவமும், தேவிமார்கள் இன்றித் தனியே வீற்றிருத்தலும், ஆயுத மின்றி யமர்ந்தமையும், வேங்கட சுப்பராய னென்னும், பெயர்வழக்கும், புதிதாக ஆயுதம் வைத்திருத்தலும், சுப்பிரமணிய ராலயத்திற்குரிய அந்தரான அளவு இருத்தலும், விட்டுணு வாலயத்திற் குரிய வந்தராளமின்மையும், கந்தபுராணம், உபதேச காண்டம், தணிகைப்புராணம், சங்கரசங்கிதை, சூத சங்கிதை, திருப்புகழ், பிரமாண்டபுராணம், கந்தஸ்தவம், வேங்கடகுகஸ்தல கிருபணம், க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களிற் சொல்லப்படுதலுமாகிய இன்னோரன்னகாரணங்கள் பலவுற்றால், திருவேங்கடத் தலம் சுப்பிரமணிய தலமேயாகத் தெளியப்பட்டது. விஷ்ணு தலமன்றென்பது பிரசித்தமாம்.

### யஜுர் வேதம் - மந்திர சாகை.

ஏகைகம் ஜாலம் பஹுதா விகுர்வந்
அஸ்மிந் க்ஷேத்ரே ஸம்ஹரத்யேஷ தேவ꞉ ।
பூய꞉ ஸ்ருஷ்ட்வா பதயஸ்ததேச꞉
ஸர்வாதிபத்யம் குருதே மஹாத்மா ॥

(ஒவ்வொரு சாலத்தையும் பலவகையாய்த் திரித்து இந்தத் தலக்கண்ணே இக்கடவுள் அழிக்கின்றான். மீட்டும் அநேக கர்த்தாக்களைச் சிருட்டித்து இவனே மகான்மாவாய்ச் சர்வாதிபத்தியஞ் செய்கின்றான்)

### இருக்கு வேதம்.

ஸமாத்ருத்தஸம்கலம் ஸ்ருஷ்ட்வா
விஶ்வஸ்ய ஸ்ரஷ்டாரம் ஏகமீசம்
விஶ்வேஶ்வரம் வரிஷ்டம் ப்ரபும்
ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை꞉ ॥

*கந்தபுராணம் - அயனைச் சிறைபுரி படலத்துங் காண்க.*

### தணிகைப் புராணம்-வீராட்டகாசப் படலம்.

கண்டவர் பிறவி மாய்க்குங் கமண்டல மக்கமாலை
கொண்டிரு காத்துச் சார்வோர் கொடும்பய மொதுக்கிநல்க
வொண்டொடிக் கமலச் செங்கை யோரிரண் டமைத்தவ்வாற்றின்
விண்டவர் கடப்பக் தாரான் வீற்றிருந் தருளுநாளில்.

சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தயே நம꞉

பதின்மூன்றாவது,

# பிரமகாராக்கிருக விமோசனமூர்த்தி.

---

இங்ஙனம் வேங்கட மலைக்கட் டிருக்கோயில் கொண்டு எழுந்தருளி, நெடிய முடிப் பெருமான் படைத்தன் முதலிய தொழில்களை நடாத்துவா ராயினர். நந்த கோபன் மகனான விட்டுணு இதனை யறிந்து வருத்தங் கொண்டு யாவரும் வருக வென்று தம் மனத்தி னினைத்தனர். இந்திரன், தேவர்கள், முனிவர்கள் முதலிய யாவரும் வந்து சேர்ந்தனர். அவர்களுடன் திருமால் கயிலை சார்ந்து, திருவாயிற்க ணுள்ள திருநந்தி தேவரின் பாதங்களை வணங்கி, அவர் விடைபெற்றுச் சென்று, உமையம்மையாரோடு மெழுந்தருளி யிருக்கின்ற ஆயிர நாமத் தண்ணலாஞ் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதித்து, விரிந்த கரங்களைக் குவித்து அஞ்சலித்து நின்றனர். துன்ப மானது தம்மனத்தை யலைக்குமாறு நின்ற தேவர் முதலினோரை, தேன் றுளிக்கின்ற கொன்றை மாலையை யணிந்த வழகனார் திருநோக்கஞ் செய்து, நீவிர் வந்த காரணத்தைச் சொல்வீராக வென்றருளினர். அவர்கள், பெருமானே! தேவரீர் திருமுன்னிலையிற் சொல்லுதற்குப் பெரிதும் அஞ்சுகின்றேம் யாமென்றார். கருணையங் கடலார் அவர்ப் பார்த்து, அளியீர்! எம்மு னுரைத்தற்குச் சிறிதும் அஞ்சன்மின்; சொல்லுக வென்றருளினார். விட்டுணு முதலாயினோர் விளம்புவர்.

[illegible] ।
[illegible] ॥

யந்மநஸாந மநுதேயே நாகுர் மனோமதம் |
ததேவப்பிரஹ்மத்வம்வித்திநேதம் யதிதமுபாஸதே ||

ஆன்மாக்கள் எதனை மனத்தினால் நிச்சயிக்க வில்லையோ?, எதனால் மனம் நினைக்கிற தென்று சிவஞானிகள் உரைக்கின்றனரோ, எப்



பிரமகாராக்கிருக விமோசனமூர்த்தி.

பொருள் நின் சமீபத்தில் உள்ளதோ, அதுவே பிரமம் என்று அறிதி. இவ்வான்மாவைப் பிரமம் என்று அறியற்க.

என்று சாமவேதங் கிளந்த மகாமகிமையுடைய பகவ! அடியேங்கள் விண்ணப்பிப்பன வற்றைக் கேட்டருளுதி. துன்பமாகிய பெரிய சாகரத்து ளாழ்ந்து கரைகாணு திகைக்கு மெங்களை யெல்லா மெடுத்தருளுவான் றிருவவதாரம் புரிந்து விளங்குங் கடப்பந்தா ரண்ணலை இளையோ னெனத் தன்பேதைநீரான் விளங்கிய பிரமன், அறியாமை யென்னு மிருட் டன்மையால் அவரை வணக்கஞ் செய்யாது, தேவரீர் திருச்சந்நிதானம் புக்கு வணங்கி மீண்டனன். அதனைக் கந்தக் கடவுள் தந்திரு வுள்ளத்துவைத்து, ஆண்டுச் செல்லும் அவனைப் பிடித்து வருக என்று ஆஞ்ஞாபிக்க, வீரர்தலைவராகிய வீரவாகு அண்ணல் அன்னோனைப்பிடித்தீர்த்துச் சென்று கடம்பனூர் திருமுன் விடுத்தனர். வேதமுதல்வராய அவர், பிரமனைப் பிரணவப் பொருள் வினவித் தலையின் மொத்தி, அவனைச் சிறையிடுவித்துத் திருவேங்கட மலைக்கணமர்ந்து சிருட்டித் தொழிலைத் தாமே புரிந்தருளுகின்றார். அத் தொழிலோடு காத்தற் றொழிலு மவரே புரிகின்றார். இதுகாரண மாகவே தேவரீரது திவ்விய சந்நிதானத்தைப் புகலிடமா நினைத்து வந்தேம் என்றார். பூரணராய சிவபெருமான் பொலிவுபெற்ற கூந்தலையுடைய உமாதேவியாரைத் திருநோக்கஞ் செய்து, நின் செல்வக் குமா ரனற்ற லிவ்வளவிற்றே வென்று புன் முறுவல் பூத்து, தேவர்க்குத் திருவாய்மலர்ந்தருளுவார். அன்பர்களே!

செம்மைய ஞானசத்தித் திருவுருக் கொண்ட செம்ம
லெம்மின்வே றல்லன் யாமு மவனின்வே றல்லேங் கண்டீ
ரம்மழ வடிவினன்பா லன்புசெய் தவர் பிழைத்தோர்
நம்மடித் தொண்டு செய்தோர் நவைபடப் பிழைத்தோராவர்.

பிழைகள் எல்லாவற்றினும் மேலான பிழையைச் செய்த பிரமனுக்கு, நங்குமானியற்றிய தண்டனை தகுதியை யுடையதே யாகும். அவனைச் சிறையினின்றும் விடுவித்த லெவ்வாறு? குழுமி வந்து இவண் சேர்ந்த நீவிரெல்லாம் யோசித்துச் சொன்மின் என்ன, கொன்றை மாலைக் குழகனுர் முன் அவரெல்லாம் நடுங்கிய மனத்தராய்ச் சொல்வார். பரம்பொருளே! முன்னர் ஞான்று ஆணவ மென்னு மிருளி னகப்பட்ட பெரும்பிழையைத் தேவரீரே யுணர்ந்து, ஒரு செயலு மற்றுக் கிடக்கும் அக்கேவல அவத்தையிலே கருணை வைத்து ஆண்டருளினிர். அங்ஙனந் திருவருள்புரியுந் தேவரீர் இப் பிழை யொன்றனையு முட்கொள்ளா தருள் புரிதல் அரிது போலும் என்றார். அதற்கு இறைவன் றிருவாய் மலரும். ஞானசத்தி தானுய அவனும் யாமும் வேறல்லேம். நாமே குமரன். குமரனே நாம். அவ்வாறே,

“[illegible]”

என்று யசுர் வேதத்திலே அத்தியாச் சிரம சாகை யானது கூறுகின்றது, அதுமட்டோ.

“[illegible] । யா தேவீ । [illegible] நாயக: । [illegible] ।”

என்று அதர்வண வேதங் கூறுகின்றது. ஆகலால் நான் வேறு, குமரன் வேறு எனப் பிரித்தோர் இரௌரவம் மகாரௌரவ முதலிய கொடிய நரகங்களினின்று மேறமாட்டார். ஒருகால் ஏறுவரேல் மலப்புழுவாகவும், மலந்தின்னும் பன்றி யாகவும், புலையாகவும், பிறந்து பிறந் துழல்வர்; இது உண்மை! உண்மை!! முக்காலும் உண்மை!!! அவர் பவக் கடலினின்றுங் கரையேறுதலில்லை. குமாரனிடம் அன்பு செய்தவரே உய்ந்தார். அவனடிக் கன்பு செய்யாது எம்மைப் பூசிப்பாராயினும் அவர் பிழைப்பட்டவரே. ஆகலாற் பிரமன் செய்தது மேலான அதிபாதகம். அப்பாதகத்தையும்

நங்குமரன் காருணியத்தினாற் றீர்ப்பதற் கன்றோ குட்டிச் சிறை யிடுவித்தான். தன்னை வணங்கில னென்னுஞ் சினத்தானன்று. பிரணவத்தின் பொருள் யாமும் அவனுமே யன்றி வேறொருவரு மாகார். பிரணவத்திற்கு அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம், சத்தி, சாந்தம் என்னும் எழுபகுப் புள்ளன. அவற்றுட் சத்தி என்பது வேலாயுத மாகவும், மற்றைய ஆறும் ஆறு முகங்களாகவும் அவற் றுண்மையானும் அது நன்கு விளங்கும்.

வேதங்களில் ஆங்காங்கே.

𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌂 𑌓𑌂𑌕𑌾𑌰𑌮𑍇𑌣 𑌯𑌏𑌨𑌾 𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍇
𑌸𑌦𑌾 𑌸𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯𑌃 |

𑌸 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 𑌯 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 | 𑌸 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃
𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌤𑍍 𑌸𑌂𑌤𑌾𑌰𑌯𑌤𑌿
𑌶𑌿𑌵𑌃 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌇𑌤𑌿 ‖ எனவும்.

𑌓𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍇
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌹 𑌭𑍂𑌤𑍈𑌃
𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌂 எனவும்

எம்மைக் கூறியதன்றி, எங்குமரனையும் யாக காலத்தே "சுப் பிரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்பிரமண்யோம்!!! என மூன்று முறைகூவி யழையா நிற்கும். இங்ஙன மிருப்பவு மிவற்றை யறியாது தானே அகாரப் பொருள் என்ற பிரமனை விடுவிப்பது கூடாதன்றே.

காஞ்சிப் புராணம்.

எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும் பிரமனுக்கு மீசனென்னத்
தக்க முதற் பாப்பிரமஞ் சதாசிவனே யெனவேதஞ் சாற்று மல்லால்

மூக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணிய னேமெனவு மூக்காற் கூறு மிக்கருத்தை யறியானே யெவ்வாறு விடுவிப்ப தியம்பு மின்னே.

என்று பெருமானர் அருளியதைக்கேட்டு விட்டுணு நடுநடுங்கி யுரைப்பார். மூவா முதலே! தேவ சிங்கமே! முன்னர் ஞான்று அவன் இயற்றிய எத்தனையோ பிழைகளைப் பொறுத்தருளினிர். அங்ஙன முள்ள தேவரீர் இந்தப் பிழையைத் தான் பொறுக்கல் அரிதோ? வேத முதலே! பூரண! புராதனப் பொருளே! குமா ரப் பெருமா னிடஞ் செல்வே மானுல், யாங்க ளெல்லா மிறந்து படுத லொருதலை யென்றே யிச்சந்நிதியை யடுத்தேம். ஈண்டும் வரு தற்கு மிகவும் அஞ்சியே யிந் நாள்காறுந் தரித்திருந்தேம். கடனடு வட் போதாநிற்கும் மரக்கலப் பாய்மர மேலிருந்த காகம், அங்கு நின்றோர் தூரத்த நாற்பாங்கரு மோடி யோடிப் போந்து கரையுந் தங்கு மிடமும் வேறு காணுது, முன்றங்கிய கூம்பரையே மீட்டும் நாடி வருதல் போல, அடியேங்களும் யாங்குச் செல்வேம்? யாரைத் துணைக் கொள்வேம்? தேவரீரேயன்றி வேறு தஞ்ச மென்னே? என்று மற்றைய தேவர் முதலினரோடுஞ் சேர்ந்து தாழ்ந்து தாழ்ந்து இரந்தார். தாழ்ந்தவரை வறியராக்கவிடாத பரசிவஞர் கருணை கூர்ந்து, அஞ்சற்க வென்று அபயங் கொடுத்து நந்தி தேவரை யழைத்துத் திருவாய் மலர்ந் தருளுவார்.

நந்தியே! பொன் மணி கொழித்துப் பாயும் பொழி லுடுத்த வேங்கடப் பொருப்பை யடைந்து, கடப்பந் தாரா னடிமலர் வீழ்ந்து கைகுவித்துத் துதிகள் கூறி, "பிரமன் சிறையை விடும் வரத்தைத் தந்தையார் அவண் திருமான் முதலானோர்க்குக் கொடுத்தார். அவ் வரம் இவண் கொடுத்த வரமே யாகும்" என்று அவன் சிறையை நீக்கி வருதி" என்றருளினர். திருநந்தி தேவர் வேங்கட மலையை யடைந்து சிவபெருமான் அருளியவாறு வணக்கமுதலாய புரிந்து "பிரமன் சிறையை விடும் வரத்தை" என்று கூறிய மாத்திரையே

சர்வகர்த்தத்துவ மூர்த்தி வெகுண்டு, "நீ இவண் நிற்பையேல் நின்னையுஞ் சிறையிடுவிப்பாம்" என்று கூறியருள, நந்திதேவர் நடுநடுங்கி மிகப்பயந்து வேறொன்று முரையாராய் ஓடிச் சென்று பாசிவனார்க்கு அங்கு நிகழ்ந்தவற்றை யுரைத்தார். பெருமானார் புன்முறுவலூற்றுக் கணர்கள் யாவருஞ் சூழ்ந்து போற்ற இடபாரூடரா யெழுந்தருளித் திருவேங்கடஞ் சென்று புதல்வரைத் தழுவிப் பிரமன் சிறைவிடுமாறு கூறியருளினர். பிரணவப் பொருள் தெரியான் படைப்புத் தொழிலை யெங்ஙனம் புரிவான். அவனை விடலொல்லாதென, பாசிவனார் வெகுள்வார் போல, மைந்த நின் செய்கை யென்னே? பிரமன் சிறை விடென்று யாம் உரைக்கவும் மறுக்கின்றனையெனக் குமாரக் கடவுள் மலரவன் சிறையை விடுவித்தனர். பாசிவனார்வெள்ளியம் பொருப்பிற் சேர்ந்தார். குமாரப் பெருமானார் தம்மை வணங்கிய பிரமனுக்கு உறுதி மொழி கூறி யனுப்பினர். அதன்பின் கயிலைப் பாங்கருள்ள கந்தமலைக் கோயிலிற் சென்று வீற்றிருந்தார். பிரமனைக் காராக்கிருகம் என்னுஞ் சிறைச் சாலையினின்றுஞ் சிவபிரான் வேண்ட விடுத்தமையாற் பிரமகாராக் கிருக விமோசன மூர்த்தி யாயினர்.

கந்தபுராணம் - அயனைச் சிறை நீக்குபடலம்.

நன்சிறை யெகின மேன நாடுவா னருளை நல்சத்
தன்சிறை நின்றோர் தம்மைச் சண்முகக் கடவு ளோக்கி
முன்சிறை யொன்றிற் செங்கேழ் முண்டகத் தயனைவைத்த
வன்சிறை நீக்கி நம்முன் வல்லைதந் திடுதி யென்றான்.

என்றலுஞ் சாரதர்க்குட் சிலவர்க ளேகி யங்க
ணொன்றொரு பூழைதன்னு ளொடுங்கின னுறையும் வேதா
வன்றனை விடுத்தல் செய்து மற்றவன் றனைக்கொண் டேகிக்
குன்றுதொ ருடல் செய்யுங் குமரவேண் முன்ன ருய்த்தார்.

பிரம காராக் கிருக விமோசன மூர்த்தயே நமஃ


பதினான்காவது,

# பரசிவ குரு மூர்த்தி.

---

கந்தாசலத் திருக் கோயிற்க ணிருந்த குகக் கடவுள், தந்தையா ராகிய சிவபெருமானைத் தரிசிக்கச் சென்றார். தந்தையாராம் பசுபதி "குமார! இங்ஙனம் வருக." என்று எடுத்து உச்சி மோந்து, முதுகு தைவந்து "நின் பெருமையை யுலக மெவ்வாறு தெளியும்" என்று உரை வழங்கி அதனை விளக்குவா னுன்னி, கங்கையைச் சடையிற் காக்கச் செய்தருளிய வானார், திருப்புன் முறுவல் பூத்த முகத்தினராய், வரைபக வெறிந்த வள்ளலாரை நோக்கி யுரைப்பா ராயினார்.

செல்வக் குமர! "பேதைமையா ருதல், பெருங் கிழமையா ருதல், நட்பினர் மாட்டும் பிழைகடோன்ற லியற்கை. அறிவிற் சிறந்த பெரியர் தாந் தெரிந்து ஒரு பிழையுஞ் செய்கிலார். அறிவிற் குறைந்த சிறியோர் அறிந்தும், அறியாமையானும் பெரும் பிழைகளையுஞ் செய்வர். அவ்வத்திறங்களி னுண்மைகளை யறிந்த பெரியோர் அதுபற்றிக் கோபித்து வைரங் கொள்ளார். ஆகலானே பிரமனும் அறிவின்மையானே நின்னைக் கண்டு வணக்கம் புரியாது விரைவி னம்பால் வந்தான். பின்னர் அவனை விளித்து, அவன் மூக்கினுஞ் செவிகளினும் வாயினுங் கண்களினும் இரத்தஞ் சொரியுமாறு குட்டி, கணங்களால் அடிப்பித்துப் பல நாளாகச் சிறையி லிடுவித்து, எல்லார் தொழிலையும் நீயே யியற்றினை. எல்லார்க்குச் செய்யும் வணக்கமு நினக்கே யெய்துந் தகையது" என்று எம்பிரானார் தந்திருவுள்ளத் தோர்மறைவைத்து அருளலும், குமாரக்கடவுள் புன் முறுவல்கொண்டு உரைத்தருளும். எந்தையே! பிரணவத்தின் மெய்ப்பொரு ளறியாப் பிரமன் எங்ஙனுலகங்களைச் சிருட்டிப்பான். அங்ஙன மறியாத வவனுக்குச் சிருட்டித் தொழிலை யெவ்வாறு கொடுக்கலாம்? என்றார். அதுகாலைச் சிவபெருமான்,



பரசிவதிருமூர்த்தி.

12974


மைந்தனே! நீ அதன் பொருளைத் தெரிக்குதி, என்ன, சேந் தமிழ்ப் பரமாசாரிய மூர்த்தி திருவாய் மலர்ந்தருளும். எந்தப் பொருள்களும் உபதேச முறையினுலன்றி யுரைத்த றகாது. காலம் இடம் என்பன அறிந்து, முறையினுற் கழற வல்லேம் என்ருர்.

அரனுர் கேட்டு, "மைந்தாவோ! உண்மையே யுரைத்தாய். ஞானபோத உபதேசப் பொருள்கேட்டற்குச் சிறந்ததென்னு மாசி மாதத்து மக நாள் இதோ வருகின்றது. நீ யெஞ்ஞான்றும் நீங்காது விருப்புடனமருந் தணிகை வெற்பை யடைகின்ரும். என்று கணங்களோடும் வெளிப்பட்டு எழுந்து சங்கரனுர் தணிகைமலை சார்ந்தார். குமாரக் கடவுடோன்ருமை கண்டு, பிரணவப் பொருண் முதலிய உண்மை யுபதேசமெல்லாந் தவத்தானும் வழிபாட்டானுமே கிடைக்கற் பாலன வென்று உலகங் கண்டு தெளிந்துய்வான் றவம்புரிய ஆரம்பித்தார். ஞானசத்திரக் கடவுளாரின் அத்தாணி மண்டபம் எனப் படூஉம் திருத்தணிகை மலைச் சாரலின் வடகீழ்ப்பாற் சென்று, தம்புரிசடை தூங்க, ஒருகணப் பொழுது, வேலாயுதப் பெருமானை யுளநிறுவித் தவம் புரிந்தார். எல்லாம் வல்ல இறைவன், அங்ஙன மொருகணம் நோன்பு ஞற்றலா னன்றே யத் தணிகை மலை கணிக வெற்பு எனப் பெயர் பெற்ற தென்ப.

தான் வழிபடுங் கடவு ளொன்றில்லாமையானும், வழிபடுவோ ரெல்லாம் வடக்கு முகமா யிருப்ப, வழிபாட்டைப் பெறூஉந் தாந் தென்றிசை முக நோக்கியிருந்து அதனுலே தக்ஷிண மூர்த்தி யென வேதங்க ளெல்லாங் கூறிய பெருமான், இப்போது கந்தக் கடவுள் தோன்றலும் வடதிசை முக நோக்கி யிருந்தனர். பெருமானுர் தென்முக நோக்கி வீற்றிருந்தருளினுர். இவ்வாருகத் தென்றிசை நோக்கி விளங்கும் மூர்த்தத்தை யன்றே மேதா தக்ஷிண மூர்த்தி, யோகதக்ஷிணமூர்த்தி, வீணுதக்ஷிண மூர்த்தியெனச் சுத்த வித்தைகள் சொல்லித் துதிக்கும்.

வேதங்களும்,

[illegible]

[illegible]

'அஜாத இத்யேவ கச்சித் பீருஃ ப்ரபத்யதே
ருத்ரீயத்தே தக்ஷிண முகந்தே நமாம் பாஹிநித்யம்', எனவும்

[illegible]

[illegible]

'அஜாதமிம மேவைகம் மத்வா ஜந்மநி பீரவஃ |
ருத்ரஸ்யாஸ்ய ப்ரபத்யந்தே ரக்ஷார்த்தம் தக்ஷிணம்முகம்||

இவ்வாறு துதியாநிற்கும் மாகேசுர மூர்த்தி யவரைத் தவிசி லிருத்திக் குருவிற்குச் சீடன் எவ்வெவ் வழிபாடு செய்ய வேண்டுமோ வவையெலா மியற்றி யிருந்தார். முருகக்கடவுளார் சிவபெருமானுக்குப் பிரணவத்தி னுண்மைப் பொருளை யெல்லாம் மொழிந் தருளினர். அவை அவாங்மனோகோசரமா யிருப்பினும் சில காட்டுதும்.

அதர்வண வேதம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

என்றற் றொடக்கத்தவா வுரைத்துப்போகு மிவ்வாற்றானே, "ஓ பகவ! ஆதிகாலத்தி லுபயோகித்தது யாது? தியான மென்ப தூஉம் எது? தியாதா எவன்? எவன் தியேயன் என்று வினவிய வற்றிற்கு வேதம் என்ன விடை யிறுத்த தென்று நோக்குங் காலத் தே, பிரணவாக்கரமே முதற்கண் தேவரீரால் நந்தி முதலாயி னோர்க்கு உபதேசிக்கப் பட்டது. அதுவே தியானம்; அதுவே தியானிக்கற் பாலது. இவ் வக்கரம் பரப்பிரம வடிவமாம். இப்பிர ணவம் நான்கு பாதங்களுடன் கூடியது. இதன் நான்கு பாதங் களும் நால்வகை வேதங்களாம்.

முதலாம் மாத்திரை பிருதிவி, அகாரம், இருக்குவேதம், வசுக் கள், காயத்திரி சந்தம், காருகபத்தியாக்கினி யெனு மிவையிற்றை யுடையது. இரண்டாம் மாத்திரை ஆகாயம், உகாரம், யசுர்வேதம், உருத்திரர்கள், திருட்டுப் சந்தம், தக்கிணாக்கினியம் என்னு மிவை யிற்றை யுடையது. மூன்றம் மாத்திரை தியுலோகம், மகாரம், சாம வேதம், சூரியர்கள், ஜகதி சந்தம், ஆகவனீயாக்கினி யென்னும் இவையிற்றை யுடையது. நாலாவதாம் அர்த்தமாத்திரை சோம லோகம், ஓங்காரம் அதர்வண வேதம், மருத்துக்கள், விராட் சந்தம், ஏகரிஷி யென்னுஞ் சிவாக்கினி, பாஸ்வதி சக்தி என்று தியானிப் பார் யோகிகள். முதன் மாத்திரை சிவந்தும்பொன்னிற மாகவும் விளங்கும். இரண்டாவது மின்னலென்னுமது கருநிறமுடையது. மூன்றாம் மாத்திரை சுபம் அசுபம் உடையது, வெள்ளைநிறங்கொ ண்டது. நான்காம் மாத்திரை மின்னல் போன்றது அன்றியெல் லாநிறமு முடையது. பரம்பொருளாகிய எம்மைத் தெய்வமாக உடை யது. இப்பிரணவத்தை மூன்று முறை விதிப்படி யுச்சரித்தலினாலே ஆன்மாச் சாந்தி யடைகிறான். நான்காமுறை அளபெல்டைப் பிர ணவப் பிரயோகத்தால் அவ்வான்மாவுக்கு நம் ஒளி வடிவு தோன் றப்படும். இம்மந்திரம் மகாமநு, ஓங்காரம், பிரளயம், பிரணவம்,

தாரணம், தாரகம், வித்தியுத், பிரகாசம், சுயம்பிரகாசம், சுயம்பிரமம் என்று சொல்லப்படும் பெயர்களை யுடைத்து. மேலான மந்திரமாகலின் மகாமநுவாம்.

𑌸𑌕𑍃𑌦𑍁𑌚𑍍𑌚𑌰𑌿𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍁𑌨𑍍𑌨𑌯𑌤𑍀𑌤𑍍𑌯𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 ॥

என்னும் வேதவசனப்படி, ஓர் முறை யுச்சரித்த மாத்திரையே உயர்ந்த கதியிற் சேர்ப்பதால் ஓங்கார மெனப்படும். பிராணன்களெல்லாம் மகாசங்கார காலத்தே ஒடுங்கப் பெறுதலாற் பிரணய மெனப்பட்டது. எல்லாப் பிராணன்களையும் (உயிர்களையும்) எம்மிடத்தே சேர்ப்பிக்கின்றமையாற் பிரணவ மெனப்படும். எல்லாத் துக்கங்களி னின்றும், எவ்வகைப் பயங்களினின்றுந் தாண்டச் செய்வதாற் றரண மெனப் பெயர் பெற்றது. பிறவியாகிய பெருங் கடலினின்றுங் கடக்கச் செய்வதாலும், மனவாக்குகட்கு எட்டப் படாது கடந்து நிற்பதனாலும் தாரகம் என்னும் பெயர்பெற்றது.

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌸𑍋𑌤𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑌂
𑌤𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑍇𑌵𑌿𑌦𑍍𑌯𑍋𑌤𑌯𑌤𑌿
𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌰𑌿𑌤𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍 ।

'ப்ரகாசேப்பிய ஸ்ஸோதோமித்யம்
தச்சரீரேவித்யோதயதி
முகுர்முகுரிதிவித்யுத் |

என்ற வேதவசனப்படி எல்லாப் பிரகாசங்கட்கும் மேலானதாய் விளங்கிச் சரீரத்தினுள்ளே அடிக்கடி ஓம் என்று பிரகாசிப்பதனால் வித்தியுத் என்னும் பெயருடைத்து. உள்ளேயிருக்குந் தியானயோக்கியமான பதார்த்தங்களைத் தீபத்தைப் போற் பிரகாசஞ் செய்விப்பதனாற் பிரகாசம் எனப்படும். வேறொன்றி னுதவி யின்றித் தானே யொளிர்தலாற் சுயம்பிரகாச மெனும் பெயர்த்து. சுயம்பு

வான நம்வடிவா விளங்கலிற் சுயம்பிரமம் என்னும் பெயரை யுடைத்து. இவையே யன்றி,

ஸர்வகரணோபஸம்ஹாராத்யாரோ

பாரணாத்ஸுஷ்டு துரீயம் |சர் வகரணோபஸங்காராத்
தார்ய தாரணாத் ப்ரஹ்ம துரியம்

என்னும் வேதவசனப்படி, எல்லாக் காணங்களையும், அதாவது அகக்ரணங்கள் புறக் காணங்கள் என்னு மிவையிற்றை மேற்போக வொட்டாது அவையிற்றின் விருத்திகளை நசித்தலாலும், தரிக்கத் தக்கன வெவையோ வவற்றைத் தரித்தலானும் பிரமதுரியம் என்று சொல்லப்படும். பிரணவம் வியட்டி, சமட்டி என விருவகை. வியட்டி - அகர, உகர, மகாங்களாம். சமட்டி அம்மூன்றுஞ் சேர்ந்த ஓம் என்பதாம். உலகங்களாகிய சராசரப் பிரபஞ்சங்க ளெல்லாம் மூவகையி னடங்கும். அதன்க ணடங்காதது ஒன்று மில்லை. ஆகலால் அகர உகர மகரப் பிரணவங்களான் அம் மூவகை யெல்லாங் கோடலாற் பிரணவத்து ளெல்லா மடங்கு மென்க. பிரணவப் பொருளா யிருப்பவரும், பிரண வடிவினரும், பிரண வாதிபரும், பிரணவாதீதரும், பிரணவாந்தரியாமியரும், பிரணவ வாச்சியரும், பிரணவப் பிரோகரும், பிரணவப் பிரசாரணரும் ஆக விளங்குவோர் தேவரீரும் அம்மையுஞ் சேட்டனும் யாமுமே. வேறொருவரு மாகார். பிரம விட்டுணு ருத்திரர்களை யொரோவழிக் கூறுவ துப சாரமேயாம். பிரணவமே யெல்லாமந்திரங்கட்கும் மேலானதாம். ஸ்ரீ பஞ்சாக்ஷர நீங்க வேனைய மந்திரங்கள்யாவும் பிரணவத்தை முத லாக் கொண் டியங்கப் பெறும். ஆகலால் அறிவுடையோர் அதனை மகாமனு வென்றும், சிவமந்திரமென்றும் உரைப்பர். பிரணவம் ஆறுவகை யாகவும், எழுவகை யாகவும் கொள்ளப்படும். அ, உ, ம, விந்து, நாதம், சத்தி என்னு மிவையே யாறும். இவையிற்றுடன்

சாந்தம் என்னு மொன்று சேர்த்துக் கோடலே யெழுவகையாம். இவ்வேழனுட் சத்தி என்பது நம் வேற் படைக்கல மாகும். ஏனைய வாறும் அறுமுகங்களாக வமர்ந்திருத்த றெரிந்த தொன்றே. சொற் பிரபஞ்சங்களெல்லாம் அதனிடத்தி னின்றுந் தோன்று கின்றன.

[illegible]
[illegible]
[illegible] ॥

ஏவந்த்யாத்வா க்ஷணமேகம்
க்ரது சதஸ்யாபிசதுஸ் ஸப்த
த்யாயத்பலம் ததவாப்நோதி|

என்னும் அதர்வண வேத வசனப்படி, பிராணவ தியான பலத்தை யாராயுங்கால், ஒரு முறை தியானத்தால் நூறு நூறு யாகங்களை எழுபத்து நான்கு முறை செய்தவனுக்குரிய பலங் கிடைக்கும் என்று தெரிகிறது. பிரணவம் வேதத்தின் முதலினுங் கூறப்பட் டுள்ளது. முடிவிலும்,

[illegible]
[illegible] ।

ப்ரதிஷ்டித: ப்ரஹ்மண: ப்ரணவம் குர்யாதாதா வந் தேச சர்வதா ஸ்ருவத்ய நோம் க்ருதம் ப்ரஹ்ம பரஸ்தா ச்ச விசீர்யதே,

என்றிருத்தலாற் சர்வ வேதங்களும் பிரணவத்தி னடங்கு மென்க. பிரணவத்தினுடலாக விளங்கும் அகாரத்திற்கும் பொரு ளாவார் தாமும் யாமுமே. அது,

12974



அகாரோ ணாவ ப்ரஸம்ஹாஸ்வரோ கேஷு ரோ
ஹஃ அகாரோ ஸம்ஹாரகஃ ।

என்ற இருக்குவேத வசனப்படியும்,

யஜுர்வேதாத்மஸ்தஃ ப்ராக்ஷோ வேதாத்மவ்யாதிகஃ,
ஸ்வப்ரகாசீ ஸ்வயம்பஃ பரஸ்மாத்பரஃ ।

என்னும் யசுர் வேத வசனப்படியும் யாங்களே யாவேம்.

ஓம் பூஃ | ஓம் புவஃ | ஓம் ஸுவஃ | ஓம் மஹஃ | ஓம் ஜநஃ | ஓம் தபஃ | ஓம் சத்யம் | ஓம் தத்சவி தூர்வ ரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமகி தியோ யோநப் பிர சோத யாத் ஓமா போஜ்யோ தீர ஸொமிருதம் ப்ரஹ்ம பூர் புவச் சுவ் ரோம் | என்ற வேத மந்திரங்களெல்லாம், பூமி புவர் லோகம், சுவர்க்க லோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்திய லோகம் என்னு மிவை யெல்லாம் ஓங்காரமே. எவன் நம்முடைய ஞானங்களை யவுகின்றனோ அந்தச் சிருட்டி கர்த்தாவான ஈசன்ற னுயர்வுடைய சொரூபத்தைத் தியானிப்பார். நீர், நெருப்பு, அவற்றின் குணங்கள், மூத்தான்மா, மூவ் வியாகிருதிகள் இவையெல்லாம் பிரணவமே யென்று தெளிவார்கள் உசைர். ஓங்காரத்திற்கு வடபுறம் சிர முண்டு. தென்புறம் பாதம் விளங்கும். இவ்வுண்மை யாங்கள் தக்ஷிண மூர்த்தியா யிருத்தலா னன்கு தெளியப்படும்.

அதர்வண வேதம்.

ஸ ஓங்காரோ ய ஓங்காரஃ
ஸ ப்ரணவோ யஃ ப்ரணவஃ
ஸ ஸர்வவ்யாபீ யஃ ஸர்வவ்யாபீ

ஸோऽநந்தோ யோऽநந்த:
தத் தாரம் யத் தாரம்
தத் ஸூக்ஷ்மம் யத் ஸூக்ஷ்மம்
தச் சுக்லம் யச் சுக்லம்
தத் வைத்யுதம் யத் வைத்யுதம்
தத் பரம் ப்ரஹ்மேதி । ய ஏக: ஸ ஏகோ ருத்ர:
ஸ ஈசான: ஸ பகவான் மஹேச்வர:
ஸ மஹாதேவ இதி ॥

என்னும் வசனங்களின்படி, "அவன் ஓங்காரன். எவன் ஓங்காரன்? அவன் பிரணவன். எவன் பிரணவன்? அவன் சர்வ வியாபி. எவன் சர்வ வியாபி? அவன் அனந்தன். எவன் அனந்தன்? அவன் தாரம். எவன் தாரம்? அவன் சூக்குமம். எது சூக்குமம்? அது சுக்கிலம். எது சுக்கிலம்? அது வைத்தியுதம். எதுவைத்தியுதம்? அது பரப்பிரமம். எவன்பரப்பிரமம் அவன் ஏகன். எவன் ஏகன்? அவன் ஏகனுன உருத்திரன். அவன் ஈசானன்; அவன் பகவான்; அவன்மகேசுரன்; அவன் மகாதேவன்" என்று தெரிகிறது. இதன் கண் பிரணவத்தையும் நங்களையும் அபேதப் படுத்தி ஓங்காரம், பிரணவம், சர்வ வியாபகம், அநந்தம், தாரம், சூக்குமம், சுக்கிலம், வைத்தியுதம், பரப்பிரமம், ஏகம், உருத்திரம், ஈசானம், பிரமம், மாகேசுரம், மகா தேவம் என்னு நாமங்களை வாசகமாகிய பிரணவத்திற்கும் பெற வைக்கப்பட்டன. வாச்சியப் பொருள் வேறெவர்க்குஞ் செல்லாதென்பது இதனானுந் தெளியப்படும். இங்ஙனம் உரைத்த வுண்மையெல்லாம் சிவற்கே தெரியும். இவ்வாறாகப் பிரணவத்தினுண்மைப் பொருளெவை யெவையோ அவை யெல்லாவற்றையும் முருகக்

கடவுள் மொழிந்தருளினர். தமக்குத் தாமே மகனாக விளங்கிய சிவ பெருமான், தமக்குத் தாமே யொருகுற்றமு மில்லாத ஆசாரிய ராக விருந்து, தாமாகிய தத்துவப் பொருளைத் தாமே சொல்லத் தாமே கேட்டுக் கூத்தாடினர். உயிர்களை யலைக்கும் ஆணவப் பகை யும், சூரனும் பகையும், பிரணவப் பொருளாய் விளங்கு மிவ்வீரனு லின்றே யழிந்தன வென்று உளக்கட் டோன்றும் வீரக் குறிப்பால் ஆர்த்தலால் அந்த இடம் வீராட்ட காச மென்று பெயர் பெற்றது. பிறப்பு இறப்பு இன்றிப் பேரின்பத்தை அளிக்குஞ் சிவ பெருமா னுக்குப் பிரணவப்பொருளைக் கொடுத்த காரணத்தால், பிரணவ வருத்த நகரம் என்றும், சிவபெருமா னேர்கணம் முருகக்கடவுளை நோக்கித் தவஞ் செய்தலாற் கணிக வெற்பு என்றும், முதலும் முடிவு மில்லாதும், தனக்கோர் மூலமில்லாதும் தானே யெல்லா வற்றிற்கும் மூலப்பொருளாய் விளங்குஞ் சிவபெருமானுக்கு, அறம் பொருளின்பம் வீடு என்னும் நால்வகைப் பொருட்கு மூலமாகிய வேதங்களின் முதலாய பிரணவ மூலப் பொருளை எவர்க்கும் மூல மாக விளங்கும் கந்தக்கடவுள் உணர்த்தலால் மூலவேதண்ட மென் றுந் தணிகைத்தலம் பெயர் பெற்றது. இங்ஙனம் லோக குரு வா கிய சிவபெருமானுக்குக் குருவாக வீற்றிருந்து பிரணவப்பொருளை யுபதேசித்தருளலாற் கந்தக் கடவுள் பரசிவ குரு மூர்த்தி யாயினர்.

> எதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
> கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயிற்
> சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
> முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்டனன்.

மரணமும் பிறப்புங் கடந்தபேரின்பம் வழங்குமப் பெரும் பெ யரிறைக்குப், பிரணவப் பொருளைக் கொடுத்த காரணத்தாற் பிர ணவ வருத்தநன்னகரா, மிரணவல் லவுணக்கிளை யெலா முருக்க விலங்கருட் டிருவுருத்தாங்கி, யரணமா யமரர்ப் புரப்பவ னென்று மமர்ந்தரு டணிகைமா நகரம்.

பணிகிளராரப் பண்ணவன் முருகற் படர்ந்தருந் தவத்தினை யாங்குக், கணிகமே புரிந்து கருத்துமுற் றுறலாற் கணிக வெற்பெனப் பெயர் விளங்கும்.

மூலமீறிகந்து மூலமேலில்லா மூலகா ரணப்பொரு டனக்கு, மூலமாயிருந்து நால்வகைப் பொருட்கு மூலமாகிய வருமறையின், மூலவான் மொழிக்குப் பொருட் செறி வெவர்க்கு மூலமானவன் விரித்தமையான், மூலவேதண்ட மெனப்படுங் குறவர் மூலந் தேரருவரைப் பறம்பு.

பரசிவ குரு மூர்த்தயே நமஃ

---

பதினைந்தாவது,

# சீகர மூர்த்தி.

---

நீர்வள நிலவளங்களாற் சூழப்பட்ட * உச்சயினி நகரத்திலே மனுநீதி வழுவாது செங்கோல் நடாத்திய அரசன் ஒருவ னுளன். அவன் பெயர் சந்திரசேனன் ஆகும். அவன் யாகாளேசுரப் பெருமானை மெய்யன்புடன் பூசித்து வருங் காலத்திலே, சிவகணத் தலைவருள் மாணிபத்திரர், திருக்கயிலைக்க ணுள்ள சிந்தாமணியைச் சிவபெருமானது கட்டளைப்படி கொண்டுவந்து கொடுத்துச் சென்றார். அதனை யன்புடன் வாங்கிச் சந்திர சேனன் தரித்திருந்தது கேட்ட அரசர்கள் யாவரும் தாமும் அதனைத் தரித்தற்கு விரும்பித் தூது

---

* உச்சயினி நகரம் என்பது அவந்தி தேசத்தின் தலைநகரம். பிரச்சோதனன் என்னும் அரசனுடைய இராசதானி யென்று மணிமேகலை யென்னுங் காவியத்துட் கூறப்பட்டது. உஞ்சை, உஞ்சையினி எனவும் சொல்லப்படும். பிரமோத்தர காண்டத் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகளிலே சேரன் என்னும் பெயர்க்கு, தேரன் என்று பாடபேதமாக உள்ளது. அதனை யாராய்ந்த காலத்துச் சேரன் என்பதே புன்மையெனக் காணப்படுகின்றது.



சீகாமூர்த்தி.

விடுத்தனர். சந்திரசேனராசன் தன்புய வலிமையும் வரங்களும் அழிந்த பின்னர்த்தான் கொடுப்ப துண்மையென்று அறிவித்தான். அது கேட்ட அரசர்கள் யாவரும் வெகுளி கொண்டு படையெடுத்து வந்தார்கள். பகைவர்கள் திரண்டு மதிலை வளைத்தன ரென்று கேள்விப்பட்ட அரசன் சிறிதும் பயப்படாமலும், வேறோர் காரியங்களைச் செய்தற்கு எண்ணாமலும் பூசைத் திரவியங்களை யெல்லாங் கொண்டு சென்று மாகாளேசுரப் பெருமானைப் பூசித்துத் தியானித் திருந்தான்.

அவ்வாறு இருக்குங் காலை, இடையர் குலத்திற் சிறந்தா ளொருத்தி, தன் மைந்தனுடன் சிவபெருமானைத் தரிசித்து வந்தாள். மற்றைநாள் அவள் புத்திரன் சந்திரசேன மகாராசன் பூசை செய்த படியே தானும் பூசிக்க நினைத்து, மணலாற் சிவலிங்கஞ் செய்து, பச்சிலைகளை மற்றைத் திரவியங்களாகப் பாவித்துப் பரசிவன் திருவடியைத் தியானித்து அசைவற விருந்தான். அவன் தாய்வந்து மைந்தனே! உணவு கொள்ளுதற்கு வருவாய்" என்று பலமுறை அழைத்துங் கேட்காமல் இருப்பது கண்டு கொடுங்கோப முற்று, "என்ன விளையாட்டுச் செய்கின்றாய்" என்று தன்கைகளால் மோதிப் புடைத்து, சிவலிங்க முதலாயவற்றை யெல்லாங் கலைத்துச் சென்றாள். ஆயமைந்தன் விழித்துப் பார்த்து வருந்தி அழுது உணவு கொள்ளாமற் சோர்ந்து மூர்ச்சை யாயினான். பின்னர்த் தெளிந் தெழுந்து பார்த்த காலை, அவ்விடம் திவ்விய தலமாகிச் சிவலிங்கப் பெருமானுஞ் சோதி வடிவாக விளங்குவது கண்டு அதிசயமடைந்து துதித்து, பெருமான் திரு வருளை வியந்து மீட்டும் பூசித்தான். வீடுசென்ற இடைச்சி நித்திரை செய்து விழித்துப் பார்க்கவே, தன்வீடு முற்றும் பொன்மயமாக விளங்குவது கண்டு மனங்களித்து, நன்மகப் பெற்றேனென்று மகனைப்புகழ்ந்து, நிகழ்ந்தவற்றை யெல்லாம் அரசனுக்கு அறிப்பே னென்று சென்று

தெரித்தாள். அரசனும் மந்திரிமார்களும் தானைகள் சூழச் சென்று கோயிலை வலம் வந்து சிவலிங்கப் பெருமானையுந் தரிசித்து, பொன்மயமா யிலங்கும் மனையையும் பார்த்துக் கரையிறந்த ஆனந்த முற்று நின்றார்.

படையெடுத்து வந்த அரசர்கள் யாவரும் இவ் வற்புதங்களை யெல்லாங் கேட்டறிந்து அஞ்சி, சந்திர சேனராசனை வந்து வணங்கிச் சனிப் பிரதோஷத்திற் பூசித்துப் பேருளடைந்த சீகான் என்னும் அப்பிள்ளையைப் புகழ்ந்து வணங்கி நின்றார். அப்போது அஞ்சனை வயிற்றிற் பிறந்து, இந்திரனால் அருளிச் செய்யப்பட்ட * ஐந்திரவியாகரணத்தை ஆறுநாட்குளோதியுணர்ந்து, இராவண யுத்தத்தில் இராமருக்குப் பற்பல உதவிகள் புரிந்த பெருவலிமையுடைய அனுமார் அவ்விடம் வந்தார். யாவரும் வணங்கினர். அஞ்சனைகுமாரர் சீகானை யெடுத்து அணைத்து உச்சி மோந்து, பிரம விட்டுணுக்கள் முதலினாாலும் அடையப்பெறாத பெரும்பேற்றை யடைந்தாய். ஆயர்குலக் கொழுந்தே! நின்றவமே தவம். நின்பேறே பெறற்கரும் பேறு. தருமவடிவாகிய பசுக்களைப் பாதுகாத்த நின்குலத்தார் பயனெலாந் திரண்டு ஓருருவெடுத்தாய். சனிப் பிரதோஷ விரதத்தின் மகிமையை யெவர்க்குந் தெரித்தாய். இப்பூசனையின் பலத்தினாலே விட்டுணு வானவர் நின் எட்டாந்தலைமுறைப் பிள்ளையாகத் தோன்றி வளர்வார். நின்குலத்துத் தோன்றும் நந்தகோபன் என்பான் ஒருவன் வளர்ப்பான். அதனால் உன்குலத்திற்கும் பிதிரர்களுக்கும் உலகத்திற்கும் நன்மைகள் விளையும் என்றார். சீகான் கண்ணபிரான் பிறப்பதும் வளர்வதும் செய்வனவும் அடியனேன் இப்போதே யறிந்தானந்திக்க வேண்டுகின்றேன் என்றான். அஞ்சனை குமாரர், அன்பனே! அவை யெம்மாற் செய்த லியலா. காள

* ஐந்திர வியாகரணம்—இந்திரனாற் செய்யப்பட்ட தோரிலக்கண நூல். "இந்திரனெட் டாம் வேற்றுமை யென்றனன்" என அகத்தியனாரும், "ஐந் திரநிறைந்த தொல்காப்பியன்" எனப் பனம்பாரனாரு முரைக்குமாற்று னறிக.

கண்டப்பெருமானது செல்வக் குமாரராகிய சுப்பிரமணியப் பெருமானை நினைத்துத் தவங்கிடப்பையேல் அவைகூடும் என்று சென்றார். மற்றையோர்களுந் தத்த மிடஞ் சென்றார்கள்.

சீகரன் என்பான் விந்த மலைக்கு மேலைப் பக்கத்திலே சோலைகளாற் சூழப்பட்ட குமார வனம் என்னுந் திருத்தலஞ் சென்று முழுமுதற் பொருளாகிய சுப்பிர மணியப் பெருமானை நினைந்து பற்பல வருடந் தவஞ் செய்தான். தவாக்கினியினாலே சுவர்க்கலோக வாசிகளுஞ் சகிக்க முடியாது துன்பப்பட்டார். அடியர் இடர் தீர்க்கும் அறுசிகரச் செந்தழற் பொருப்பு, கருநிறக் கடலிற் றோன்றி யாங்கு வெளிப்பட்டது. சீகரன் வணங்கிப் பலதுதி பசர்ந்து தன் எண்ணங்களையும் எடுத்து வகுத்தான்.

யாதவத் தலைவனாகிய சீகரன் விருப்பப்படியே, கண்ணபிரான் றோன்றியதும், நந்த கோப னிடம் வந்து வளர்ந்ததும், சகடாசுரன் பூதனை, அகாசுரன், பகாசுரன், குவலயாபீடம், சாணூரன், முட்டிகன், கஞ்சன், சிசுபாலன் என்னு மிவர் முதலாயினோரை வதைத்தும், உருக்குமிணி, சத்தியபாமை, மித்திர விந்தை, காளி, நப்பின்னை, சத்தியை, பத்திரை, சாம்பவதி யென்னு மாதரை மணந்ததும், அவருட் சாம்பவதி என்பாட்குப் புத்திரப் பேறின்மையால் வருந்தி, உபமன்னிய முனிவரையடுத்து வேண்ட அவர் திருவடித் தீக்ஷை செய்து, விபூதி ருத்திராக்கங்களை யணிவித்துத் தவஞ் செய்ய அநுப்ப அதனால் மகவீன்றதும், கண்ணன் சிவபூசை செய்ததும், தாம் கண்ணற்குச் சாரூப்பியம் அளிக்குங் காட்சியும், பாரந் தீர்த்ததும் பிறவும் ஆகிய எல்லாவற்றையும், சீகரன் கண்ணாற் கண்டு ஆனந்திக்கக் காட்டியருளினர். அவற்றை யெல்லாம் தரிசித்து ஆனந்த முற்றுப் பெருமானே! இத்தகைய கண்ணனும் இறந்தா னென்றால் அவன் சரிதையும் பெருமையும் என்னாகும். தேவரீர் திருவடியிற் சேரும் பெரும்பேற்றை யருளல் வேண்டும்.

இவ்வாறாய சிறப்புடைச் செல்வங்களை யெல்லாம் அடியனேன் பொருட்டிற் செய்தருளினமையாலும், என் பெயருஞ் சீகரன் என விருப்பதனாலும், தேவரீர் சீகரமூர்த்தி யென்னுந் திரு நாமத்துடன், இத்தலத்தில் எழுந்தருளி யிருந்து அன்பினர்க்கு அருள் புரிதல் வேண்டும் என்று இரந்தான். அங்ஙனமாய பெருஞ் சிறப்பை யெல்லாம் செய்தருளலாற் சுப்பிரமணியப் பெருமான் சீகர மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

## பிரமோத்தர காண்டம்.

அப்பூசனை கண்டார்பெறும் பேறித்துணை யளவோ
விப்போதிவன் வழியாவரு மெட்டாந்தலை முறையிற்
கைப்போதக மழைக்கும்மழைக் கார்வண்ணனை வளர்ப்பான்
மெய்ப்போதத்து நந்தன்னெனுங்கோன்றோன் றுவன்விளங்க.

இன்றேமுதல் வேல்வேந்தர்க ளெல்லீருமற் றிவனை
நன்றேதரு புகழ்ச்சீகர னெனவேபெயர் நவில்வீர்
என்றேயட லனுமான்சிவ பூசாபலத் தியல்பை
யன்றேதவ மதலைக்கினி தருள்செய்தனன் போனான்.

## திருச்செந்தூர்ப் புராணம்.

விந்தமால் வரைக்கு மேல்சார் வெய்யவ னெடுந்தேர் தட்டக்
கொந்துலாங் கவடுபோக்குங் குமாரமா வனத்தி னப்ப
ணைந்தகோ பாலர்தம்மி னிளங் கதிர்போ லுற்ற
மூந்துசீ கரப்பேர்கொண்டு மூதுல கேத்துங் கோமான்.

கண்ணனுற் பத்தியான காரண முதலா யன்ன
வெண்ணுதற் கரியவாய வைகுண்ட மெய்துங் காறு
நண்ணிய வினமோர் பத்தி னடைகத் தியற்கையாகத்
தண்ணளி சிறப்பவாடிக் காட்டென வணங்கித் தாழ்ந்தான்.



குகசுவாமிமூர்த்தி.

கோகுலத் தாயன்வேட்ட குறிப்பெலா நடித்துப் பின்ன
ரோகையிற் கண்ணனென வுயர்திருக் கோலங் காட்டி
வாகுறு கண்ணன் சாயுச் சியத்தையும் வழங்கிச் செவ்வேள்
சீகாக் கடவுளென்றோர் திருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

சீகர முர்த்தயே நமஃ

---

பதினொருவது,

# குக சுவாமி மூர்த்தி.

---

கங்கை யாற்றின் பக்கத்திலுள்ள சிருங்கி பேரம் என்னும் நகரத்திற் பொருந்திய சானகத்திலே குகன் என்னும் கிராத ராசன் இருந்தான். அவன் பெரிய வில்லைத் தரித்தவன். திரண்ட புயங்களை யுடையவன். பல்லாயிர நாய்களை யுடையவன். பலகோடி வேடர் கூட்டங்களை யெல்லாஞ் சொல்லி னடக்கி யாளுவோன். கங்கையின் ஆழங்கண்ட நெடியவன். ஆயிரம் மாக்கலங்களுக்கு அதிபதியாக வுள்ளவன். சிவனடியார் குகனடியாரைக் காணிற் றன்னாலாகுந் தொண்டு செய்வோன். குறிஞ்சி நிலத் தெய்வமாகிய குகப் பெருமானிடத்திலே மிகுந்த பத்தியுடையவன். சிருங்கி பேர நகரத்திலே வீற்றிருக்குங் குகப் பெருமானைத் தரிசித் தற்கு வரும் அடியார்க்கு ஓடஞ் செலுத்துவோன். சுப்பிரமணியப் பெருமானது ஆயிரந் திருநாமங்களுள் ஒன்றான குகன் என்னுந் திருநாமத்தை இடைவிடாது சொல்லுகின்றமையால் குகன் என்னும் பெயரால் அழைக்கப் படுவோன். வழிநடப்பார்க்குத் தேனுந் தினைமாவும் கிழங்குங் கனியும் பிறவுங் கொடுத்து ஆதரிப்பவன். இவ்வாறுள்ள குகன் என்னும் வேடத் தலைவன், இராம பிரான் சீதையுடன் வனம் வர்து கங்கையாற்றின் கரையை யடைந்து, மிக நீண்ட சடைமுடி

யும் மரவுரியுந் தரித்து, விபூதியை யுடல முழுதும் உத்தூளனஞ் செய்து * சீதாதேவியுடன் வருவதைக் கண்டனன். அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான், குமரனும் பார்வதி தேவியாரு முடன்வர வருகின்றாரோ? அல்லது சுப்பிர மணியப் பெருமானாகிய நங்குல தெய்வம், திருவிளையாட்டி னிமித் தம் வள்ளியம்மை யாருடன் தமது உற்ற துணைவர் ஆகிய வீரவாகு தேவரும் உடன்வர எழுந்தருளினரோ? என்று வியப்புடன் வந்து இராமரையுஞ் சீதையையும் வணங்கி அவருடன் பெருநண்புற்று, அவர்களை ஓடத்தி லேற்றிக்கரைவந்து சித்திரகூடம் போகும் இராம ருடன் தானும் வருவதாக வருந்தி நின்றான்.

இங்ஙனம் பிரியாது நின்ற குகனைத் தேற்றி, "என்னன்பனே! என்சொற் கடவாதே! வடதிசைக்கு வருங்காலத்து உன்னைக் கண்டு கலப்பேன்" என்று இராமர், சீதை யிலக்குமணர் என்பா ருடன் சித்திர கூட நோக்கிச் சென்றார். அதுதொடங்கிக் குகன் மனமயர்ந்து வருந்தி இராமனையே நினைத்து இருந்தான். பின்னர்ப் பலநூறு வருடங் கழிந்தும் இராமர் தன்னிடம் வாராமையினாலே அங்குள்ள தன்குலதெய்வ மாகிய குகசுவாமியை நோக்கித் தவஞ் செய்தான். சுப்பிர மணியப் பெருமான் அவன் முன் ஓர் வேட ரூபத்துடன் சென்று, குகனே! இராமன், சீதையை யிராவணன் கவர்ந்து செல்லப் பல துன்பங்களை யடைந்து இராவணனைக் கொன்று, சீதையை மீட்டு அயோத்தி சென்று இறந்து பற்பல நாள்கழிந்தன என்றார். இராமன் இறந்தான் என்று கேட்டதும் இடிகேட்ட சர்ப்பம் போலவும், கணவன் இறந்தது கேட்ட தலை யன்புடைய பதிவிரதை நோவும் விழுந்து மூர்ச்சை யடைந்தான்.

---

* சீதா = படைச்சால். சனகன் புத்திர காமேட்டி செய்ய உழும்போது படைச் சாலிற் றோன்றியபடியால் சீதா என்று பெயரிட்டு வளர்த்தான். இவள் இராவணனுக்கு மண்டோதரி வயிற்றிற் பிறந்தவ ளென்க.

இராம! இராம!! என்றே கதறினன். அவனையேயன்றி வேறொன்றனையு நினையாதவனன். அதனைச் சிவராம மூர்த்தி யாகிய சுப்பிரமணியப் பெருமான் நோக்கி, தசரத ராமனுடைய வடிவத்தையெடுத்துக் காட்டி, நடந்த காதைகளையும் நடித்துத் தெரித்து, உண்மை ஞானத்தினு லடையும் பரமானந்த முத்தியையும் அவனுக்கு அளித்தருளினர். குகன் என்னும் வேடத் தலைவனுக்கு அருள்புரிந்தமையாற் குகசுவாமி மூர்த்தி ஆயினர். இதனை ஆனந்த நாயக மூர்த்தி யெனவுங் கூறுவர்.

இராமாயணம் - கங்கைப்படலம்.

ஆய காலையி னுயிர மம்பிக்கு
நாயகன் பொற் குகனெனு நாமத்தான்
றூயகங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினன்.

சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையா
னொருங்கு தேனொடு மீயுப காரத்த
னிருந்த வள்ளலைக் காணவந் தெய்தினன்.

படருற வுளனும்பி கானுறை பகலெல்லா
முடருறு பகையாபோ யானென வுரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேல்யான்
வடதிசை வருமங்கா ணின்னுழை வருகின்றேன்.

திருச் செந்தூர்ப் புராணம்.

கங்கையின் வடபாற் சிங்கிபேரி பட்டினத்திற்காமர்
தங்கெழிற் சிலையிராமன் றனைத்தியா னித்துவாழுந்
துங்கமா குகற்கிராமன் றொல்கதை யனைத்துஞ்சோரா
தங்குநா டகக்கூத்தாக வருளொடு நடித்துக்காட்டி.

சுந்தரச் சிலையிராமன் றோற்றமுங் காட்டிஞான
மூந்திய பிரமானந்த முத்தியுங் கொடுத்துவேத
மந்திர குகச்சுவாமி யென்னவும் வாய்ந்துபோ
னந்தநா யகனென்றோது நாமமுங் குமரன்பெற்றான்.

குகசுவாமி மூர்த்தயே நம:

---

பதினேழாவது,

# ஞான தேசிக மூர்த்தி.

---

பூவுலகின்க ணுள்ள புண்ணிய தீர்த்தங்க ளெல்லாவற்றினும் மிக்க மேன்மையை யுடைய பிரம தீர்த்தம், கோகன்ன தீர்த்தம், குக தீர்த்தம், சத்தி தீர்த்தம், பரமானந்தகூபம், அகத்திய தீர்த்தம், சந்திர புட்கரணி, சூரிய புட்கரணி, குருக்கள், சோமம், கன்னி, கங்கை, விசுவம், காவிரி, பவானி, ஆம்பிராவதி, விரசை, மாகாளம் வைகை, கனகலம், கோதாவரி, வைதரணி, சித்திரநதி, வியாதம், பிருகு துங்கம், கௌசிகம், காளிந்தி, கனகம், நந்தை, தசாச்சுவமேதம், மாதுங்கம், சுவாமி, சுழுமுனை, சிந்து, நருமதை, சரச்சுவதி, காயத்திரி, சக்கரம், சேது, தனுக்கோடி, கிருட்டிணை, புண்டரீகம், குபேர துங்கம், பஞ்சநதி, மேகரானனம், பாவநாசம், தாம்பிரவன்னி, சொன்ன வதி, விட்டுணு, சலசை, பிலக்காவதானம், கால சற்பி, மானசம், தன்மம், புருடை, யமுனை, சந்திரம், சாளக்கிராமம், பிரயாகை, வாரணை அசி, வாமனம், மற்சம், காருடம் என்னுந் தீர்த்தங்கள் விசேடித்தன. இவற்றினும் மாவலி கங்கை, மாணிக்க கங்கை, நகுலதீர்த்தம் விடேடித்தன. இவற்றினுங்



ஞானதேசிகமூர்த்தி.

துங்கபத்திரை என்னும் * நதி தீர்த்தமே விசேட முடையது. இந் நதிக்கு வடக்குத் திசைக்க ணுள்ள ஞானபுரத்திலே, அரிய தவத்தா லுயர்ந்த கௌசிக முனிவர் தத்துவ ஞானங் கைகூடப் பெறாமையாலும், அது இது வென் றுணராமையாலும், வருத்த மூற்றுத் தவஞ் செய்தார். குகக்கடவுட் குகந்த தாகுஞ் சோடசமகா மனு, சடக்கரம், சப்தாக்கரம், நவாக்கரம், தசாக்கரம் என்பவற்றுட் சிறந்த சடக்கர மந்திரத்தைத் தியானித்துச் சகல லோக குரு மூர்த்தியாகிய குக நாதனே இவ்வையப் பாட்டை நீக்கித் தெளி வித்தல் வேண்டு மென்று கடுந்தவம் புரிவாராயினர்.

கந்தக் கடவுள் ஞானசாரிய மூர்த்தி யாகத் தோன்றி, ஆங் குள்ள கடப்ப மர நீழலின்கண் வீற்றிருந்து, தென்றிசை முகநோக் கிக் கௌசிக முனிவரை வடதிசை முகமா வைத்து, அருளாசனத் தின்க ணிருந்து, ஒரு திருக்கரத்தை மார்பின்கண் வைத்து, மற் றோர் திருக்கரத்தைச் சின் முத்திரை யாகப் பிடித்து, ஏனைய திருக்கரங்க ளிரண்டனையும் வரத அபயங்களாகக் காட்டி உபதே சிப்பா ராயினர். அன்பனே!

ஞானம் பசுஞானம், பாச ஞானம், சிவஞானம் என மூவகைப் படும். பசுஞான பாசஞானங்கள் மயக்கத்தை விளைக்கும். சிவஞா னம் என்னும் பதிஞானந் தெளிவை யுண்டாக்கும். ஆகலான் முன்னைய விரண்டானும் அத்துவித முத்தியாகிய பேரின்பங் கைகூடாது. பதிஞான மொன்றானே அதுகிடைக்கும். புறப்புறச் சமயிகளும், புறச் சமயிகளும் கொண்டுள்ள ஞானம் என்பன

* தீர்த்தவிசேடம் நதி, நதம், நதிதீரம், நத்யம் என நான்குவகைப்படும். மேற்கி லிருந்து கிழக்கு முகமாய் ஓடுவது நதி. கிழக்கிலிருந்து மேற்குமுகமாய் ஓடுவது நதம். வடக்கிலிருந்து தென்றிசையை நோக்கி ஓடுவது நதிதீரம், தெற்கிலிருந்து வடதிசையை நோக்கி ஓடுவது நத்யம். இதனை "நதீம்ப்ராகு: ப்ரதீச்யாஸ்து ப்ராசிநிக்பாக காமிநீம்" எனவரூஉம் அசிதாகம சுலோகத்தானுணர்க.

பசுஞான பாச ஞானங்களாம். அவருள், உலகாயதர் இவ்வுலகின் கண் மிக்க அழகுடைய வனிதையரைப் பெற்றுக் காமதந்திரங் கூறி யாங்கு புணர்ந் தின்புறுதலே முத்தியென்பர். வேதத்திற் கன்ம காண்டத்தையே பிரமாண மாகக் கொண்டு அநுட்டிக்கும் மீமாஞ் சகர் சோதிட்டோமம், சௌத்திராமணி, வாசபேயம், பசுநிரூட பந்தம், பௌண்டரீகம் முதலிய கர்ம பலங்களானே சுவர்க்கம் அடைதலே முத்தி யென்பர். புத்தரிற் பிரதீப நிருவாண வாதி கள், உருவகந்தம், வேதனை கந்தம், சஞ்ஞா கந்தம், ஞானகந்தம், விஞ்ஞான கந்தம் என்னும் பஞ்ச கந்தங்களும் அறக் கெடுதலே முத்தி யென்பர். அருக சமயிகள் அருந்த ஞானம், அநந்த தரிச னம், அநந்த வீரியம், அநந்த சுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, சகல சம்மியக் பாவம் என்னுங் குணங்கள் எட்டும், பீதி, சுருதம், அவதி, மனபரியாயம், கேவலம் என்னும் ஞானு வா ணீயமும், சக்கு தரிசனம், அசக்குதரிசனம், அவதிதரிசனம், கேவல தரிசனம், நித்திரை, நித்திராநித்திரை, பிரசலை, பிரசலாப் பிரசலை, தியானக் கிரந்தி என்னுந் தரிசனுவாணீயமும், சாத வேத நீயம், அசாத வேதநீயம், என்னும் வேதநீயமும், தேவாயுஷியம், திரியக் காயுஷியம், மானுஷியாயுஷியம், நரகாயுஷியம் என்னும் ஆயுநீயங் களும், மித்தியா தத்துவம், மிகவு மித்தியாதத்துவம், சம்மியகம் பிரகிருதி, அந்தானு சந்திக் குரோதம், மானம், மாயாலோபம், அப் பிரத்தி, யாக்கியானதிக்குரோதம், சசுவலனம், அதிக்குரோதம், அதிமானம், அதிமாயம், அதிலோபம், சிரிப்பு, அரதிருதி, சோகம், பயம், நிந்தை, மாதாவேதம், புருடவேதம், அலிவேதம், சத்தாவ லோகனம், மாதிரு தரிசனம், சாகாகிரகண தரிசனம், ஞானம் என் னும் மோகனு வாணீயங்களும், வமயம், கந்தம், இரதம், பரிசம், உத்தியோகம், உச்சுவாசம், வாதாம் பரியாத்தி, அபரியாத்தி, சூக் கும வியாத்தி, பிரசித்தம், அப்பிரசித்தம், சீவகம், துர்ப்பகம், அதே யம், அநாதேயம், சாகாயம், சகீர்த்தி, அவகீர்த்தி, அகுரு, இலகு,

உபகாதா, பரகாதா ஆனுபூர்வி முதலாய தொண்ணூற்று மூவகை நாமங்களும், உயர்கோத்திரம், தாழ்ந்த கோத்திரம் என்னும் இரு கோத்திரங்களும், தானாந்தராயம், இலாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீர்யாணியந்தராயம் என்னும் அந்தராயங்களும் ஏனைய கன்மங்களுங் கெட்டு இருத்தலே முத்தி யென்பார்.

சமார்த்தர். அல்லது மிருதி வாதிகள் தன்மாத்திரா புவனத்தை யடைதலும், இந்திரி யான்ம வாதி இந்திரிய புவனத்தை யடைதலும், மனோவாதி மனோதத்துவத்தைச் சேர்தலும், தார்க்கிகர் எல்லாங் கெட்டுப் பாடாணம் போலிருத்தலும், சாங்கியர் பிரகிருதி புருட விவேக முறுகலும், பரிணத வேதாந்திகளும் பாஞ்சராத் திரிகளும் பிரகிருதி புவனப் பிராப்தி யாதலும், பாதஞ்சலர், விவர்த்த வாதிகளாகிய மாயாவாதியர் புருடதத்துவத்தை யடைதலும், பரசோம சித்தாந்திகள் வித்தியா புவனத்தை யடைதலும், சிவாவேச வாதியர் கலாபுவனத்தை யடைதலும், காலேசுரவாதிகள் காலதத்துவத்தைச் சேர்தலும் இங்ஙனமே மற்றையோரும் நிலமுதல் நாத மீறாக வுள்ள தத்துவங்களை யடைதலுமே முத்தியென்பர். அவ்வத் தத்துவங்களை யுணர்தலே ஞானமென்பர். இவையெல்லாம் பசுஞான பாசஞானங்களா யடங்கும். இனிப் பதிஞான மாகிய சிவஞானத்தைப் பற்றிச் சிறிது கூறுதும். முடிவாயுரைக்கு மிடத்து இச் சிவஞான மில்லாதார் ஙம்மின்பத்தையடைதலெக்காலு மில்லையாம்.

நாந்யப் பந்தா விமுக்தயேயஏதத்விதுரமிர்தாஸ் தேபவந்தி|
ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி |
ததாசிவ மவிஞ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி ||

என்னும் இருக்கு வேத வாக்கியப்படி "ஞானமன்றி வீடு பெற வழி வேறில்லை; எவரிதனை யறிந்தார் அவர் அமிர்த ராவார்; பிரமத்

தை யறிந்தவன் பிரமமேயாவன். அங்ஙனஞ் சிவஞான மில்லாதார்க்குத் துக்கந் தொலைவுறாது என்று அறிந்து கொள்ளுதி.

ஹே! †கௌசிக! இப்பதிஞான மாகிய சிவஞானத்தைப் பெறவேண்டுவோர் யாங்கூறிய விச்சமயங்களை யெல்லாம் விடுத்துச் சமயாதீதமாய் விளங்கும் சைவசித்தாந்த மாகிய அத்துவித நிலையை யடைந்து சோபான நெறிப்படுதல் வேண்டும். சோபான மார்க்கங்க ளைந்து. அவை தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பனவாம். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என முறையே கூறவும்படும். முத்தி என்னும் பேரின்பச் சுவையை அநுபவித்தற்கு இந்நான்குங் காரணங்க ளாகலால், அரும்பு, மலர், காய், கனிபோல விளங்கும். அரும்பின்றேல் மலரும், மலரின்றேற் காயும், காயின்றேற் கனியும், கனியின்றேற் சுவையும் எங்ஙன மில்லையோ அன்னவாறே, சரியை யின்றேற் கிரியையும், கிரியை யின்றேல் யோகமும், யோகமின்றேல் ஞானமும், ஞான மின்றேல் முத்தியின்பமும் இல்லையாகும். அரும்புளதேல் மலரும், மலருண்டாயிற் காயும், காய்தோன்றிய வழிக் கனியும், கனியாற் சுவையும் பெறப்படுதல் போல, சரியையுள் வழிக் கிரியையும், கிரியையுள்வழி யோகமும், யோகங் கூடிய வழி ஞானமும், ஞானமுள்வழி முத்தியின்பமுங் கைகூடு மென்க.

இவை உபாயச் சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாயஞானம் எனவும், உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் எனவும் இருவகைப் படலான் எட்டாகவும், சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோ

---

† ஈண்டுச் சொல்லப்பட்ட கௌசிக முனிவர், குசத்தினின்றும்பிறந்த காதிமைந்தரும் கௌசிகனன்று. யாரோவெனிற் பஞ்சரிஷி கோத்திரங்களு ளொருவராய கௌசிகரென்க. அது "கௌசிகக் காச்யபச் சைவ பாரத்வாஜோ," எனவரூஉஞ் சுக்கும ஆகம வசனங்களாலுணர்க.

கம், சரியையில் ஞானம் எனவும், கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் எனவும், யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் எனவும், ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனவும் வகைப்படலாற் பதினாறாகவும், உபாய முண்மை வகையாக்க முப்பத்திரண்டாகவும் விளங்கும் என்க. இவை அன்பு காரண மாக உண்மையாற் செய்வதூஉம், புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வதூஉ மாகிய வேறுபாடுபற்றி உபாயம் உண்மை எனப்பட்டன வென்றறிக. சிவதீக்ஷை யுடையராய் அன்பு காரணமாக உண்மையாற் செய்யுஞ் சரியை யாதிகளே விசேடம்.

அவற்றுட் சரியையிற் சரியை யாவது திருக்கோயில் அலகிடல், திருமெழுக்குச் சாத்தல், பூமாலை தொடுத்துச் சாத்தல், தீப தூபங்க ளிடல் முதலாயின.

சரியையிற் கிரியையாவது உமா மகேசர், இடபாரூடர், கல்யாணசுந்தரர், பிச்சாடனர், சபாபதி, காமாரி, காலாரி, திரிபுராரி, மாதங்காரி, அர்த்தநாரீசுரர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகளு ளொருவரை யாதல், அம்மை முதலாக வுடைய ஆவரண தேவதைகளு ளொருவரை யாதல் பூசித்தலாம். இருதய கமலத்தினிடத்தே யம்மைத் தியானித்தலே சரியையில் யோகமாகும்.

சரியையில் ஞானமாவது அத் தியானபாவனையி னுறைப்பானோ ரநுபவ வறிவு நிகழப் பெறுதலாம்.

கிரியையிற் சரியை யாவது—சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாஞ் செய்து கோடல். கிரியையிற் கிரியையாவது, சிவாகமங்களிற் கூறியவாறே பூத சுத்தி, மந்திர சுத்தி, திரவிய சுத்தி, ஆன்மசுத்தி, இலிங்க சுத்தி என்னும் ஐவகைச் சுத்தி முன்

ஞகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை. கிரியையில் யோகமாவது--சரீரத்தி னுள்ளிடத்தே பூசை, ஓமம், தியானம் என்னு மூன்றற்கும் மூவிடம் வகுத்துக் கொண்டு செய்யப்படும் அந்தரியாகம். கிரியையில் ஞான மாவது--அவ்வந்தரியாக வுறைப்பின்கண் நிகழுமோரநுபவ வுணர்ச்சியாம்.

யோகத்திற் சரியையாவது—இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் என்னும் நான்குமாம். யோகத்திற் கிரியையாவது—பிரத்தியாகாரம், தாரணை என்னும் இரண்டு மாகும். யோகத்தில் யோகமாவது—தியானம் ஆகும். யோகத்தில் ஞானமாவது சமாதி என்னும் அதுவாகும்.

ஞானத்திற் சரியையாவது - கேட்டல் என்பது. ஞானத்திற்கிரியையாவது—சிந்தித்தல் என்னும் அதுவாம். ஞானத்தில்யோகமாவது—தெளிதல். ஞானத்தில் ஞானமாவது—நிட்டைகூடல் என்பது.

இச்சரியை, கிரியை, யோகம், ஞான மென்பவற்றின் பேறு கூறுங்கால் சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுச்சியம் என்பனவாம். இவை ஆகமங்களி னுரைக்கப்பட்டன வன்றி வேதங்களினுங் கூறியுள்ளோம். சாலோக்கியம் முதலிய நால்வகை முத்திகளைப் போலி வேதாந்திக ளொப்பாது மலவாதனையா னிகழ்வர். அவர் பவப்பய னதுவே யென்று விடுக.

முக்திகோப நிடதத்திலே,

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।

[illegible] ।
[illegible] ।

என்று விதித்ததை யிருடியே யறிதி. இவற்றானேகைவல்லிய மகாசெல்வத்தை யளிப்பது பதிஞான மெனப்படூஉஞ் சிவஞானமே யாம். அஃதாவது நம்முடைய தடத்த சொரூப லக்கணங்களை யுள்ளவா றுணர்ந்து ஏகனாய் நம்பணியி னிற்றல். அந்தப் பதிஞானந் தான் பரம ஞானம், சிவ ஞானம், குகஞானம், பரஞானம், தத்துவ ஞானம், திருவடிஞானம், அருண்ஞானம், அத்துவித ஞானம், மெய்யுணர்ச்சி, அநுபவ ஞானம், உண்மை யறிவு எனப் பலவாறு கூறப் படும்.

[illegible]

[illegible] ।
[illegible] ॥

சித்திரு சாத்மநி த்ருஷ்ட்வே சந்தியக்த்வா வ்ருத்
திம் மரீசிகாம் | லப்த்வா சிவபதச் சாயாந் த்யா
யேத் பஞ்சாக்ஷரீம் சுதீ: |

"சிவஞான முள்ளவன் பேய்த்தேர்க் கொப்பாகிய இவ்விருத்திகளை விடுத்து ஞானக்கண்ணாகிய பதிஞானத்தாலே தன்னிடத்தில் ஈசனை மெம்மைப் பார்த்து நம் பாத நீழலை யடைந்து திருவைந் தெழுத்தைத் தியானிக்க வேண்டும்" என்றுரைத் திருப்பது முணர்தி. ஞானகிட்டையாம் அத்துவித ஞானத்தை யீண்டியா முணர்த்து கின்றேம். அங்ஙனே யிருந்து முத்தியைத் தலைப்படுதி யென்று, முன்னர் ஞான்று பரசிவனார் சனகர் சனந்தனர், சனந்தனர், சனற்குமாரர் என்னு நான்கு முனிவர்க்கும் உணர்த்தியது

போல் உணர்த்தி யருளினார். இங்ஙனம் ஆதிசைவ முனியாகிய கௌசிகனார்க்கு ஞானத்தி னியல்புகளை யெல்லாந் தேசிகனாக நின்று உபதேசித்தலாற் கந்தக் கடவுள் ஞான தேசிக மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

### சாமவேத வசனங்கள்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

### யசுர்வேதம்.


[illegible]
[illegible]
[illegible]

### சிவஞான போதம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத்தண்
ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

### சிவப்பிரகாசம்.

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலு
மீசனை யறிய வொண்ணா திறையருண் ஞான கண்ணித்
தேசுறு மதனுன் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ யோர்பாத்து நிற்பது ஞான நிட்டை.




அத்துவாமூர்த்தி.

மூர்த்திய வொருமையாலே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதா ஞக
வந்தவா றெய்த நிட்டை மருவுத லென்று நான்கா
மிந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பினரே.

சிவகங்கைப் புராணம்.

தீர்த்தமெல் லவற்றுந் துங்க பத்திரை சிறந்த தாங்குக்
கார்த்தவே லிறைவன் முன்னர்க் கவுசிக முனிவனுர்க்குச்
சீர்த்தஞா னங்க ளெல்லாந் தேசிக மூர்த்தி யாகி
வார்த்தன னென்று நல்ல வாரகமா புராணங் கூறும்.

திருக்கோளிலிப் புராணம்.

பரம்பிய தாங்கத் துங்க பத்திரை வடக்க தாக
நிரம்பிய ஞானப் பூக்கட் கவுசிக னென்னு நீர்மை
யருந்தவற் குண்மை ஞான வளப்பரும் போத மீந்து
பொருந்துமா சாரியப்பேர் கொண்டனன் புகழ்வே லண்ணல்.

ஞானதேசிக மூர்த்தயேநமஃ

பதினெட்டாவது,

# அத்துவா மூர்த்தி.

அத்துவா என்னுஞ் சொல்லுக்குப் பொருள் மார்க்கம், அல்லது வழி என்பதாம். வழியாவது விஞ்ஞானகலர் பிரளயகலர் சகலர் என்னு மூவகை யான்மாக்கட்கு முள்ள மலபந்தத்தை யறுத்துச் சிவஞானத்தை யுண்டாக்கிச் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களைப் பிரகாசிப் பித்துச் சனனத்திற் புகாதபடி முத்தியிற் கூட்டுவதற்கு வகுத்த வழியாம். அவ்வழிதான் ஆருக விருத்தலாற் கடந்

துவா (ஷடத்துவா) எனக் கூறுஞ் சிவாகமங்கள். அத்துவ சுத்தி
யில்லாது முத்தியை விரும்புவோர், கோலின்றி நடக்க வுன்னிய
குருடரைப் போலவும், மரக்கல மின்றி மகோததியைக் கடக்க
விரும்பு மதியீனர் போலவும் பெருந்துன்புறுவ ரன்றி யோர் நாளு
முத்தியிற் புகார். ஆகலாற்றான் றீக்ஷை யெவர்க்கும் வேண்டப்பட்
டது. அவ்வத்துவா மந்திராத்துவா, பதாத்துவா, வன்னத்துவா,
புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என அறுவகைப்
படும். இவை சொல்வடிவும் பொருள் வடிவுமாக விளங்கும். இவை
தன்மை வேறுபாட்டானே சுத்தம், சுத்தாசுத்தம் (மிசிரம்)
அசுத்தம் என மூவகைப்படும். * சுத்த அத்துவாவினுக்கு விந்து
என்னுஞ் சுத்தமாயையே முதற்காரணம். சுத்தா சுத்த அத்துவா
வினுக்கு அசுத்த மாயையே முதற்காரணம். அசுத்த அத்துவாவி
னுக்குப் பிரகிருதி மாயையே முதற்காரணம். இங்ஙனம் ஆறத்து
வாக்களும் மூவகைப் படலாற் பதினெட்டாகும். எங்ஙனமெனிற்
கூறுதும். சுத்த மந்திராத்துவா, சுத்த பதாத்துவா, சுத்த வன்னத்
துவா, சுத்த புவனத்துவா, சுத்த தத்துவாத்துவா, சுத்த கலாத்
துவா, சுத்தாசுத்த மந்திராத்துவா, சுத்தாசுத்த பதாத்துவா, சுத்தா
சுத்த வன்னத்துவா, சுத்தாசுத்த புவனத்துவா, சுத்தாசுத்த தத்து
வாத்துவா, சுத்தாசுத்த கலாத்துவா, அசுத்த மந்திராத்துவா, அசு
த்த பதாத்துவா, அசுத்த வன்னத்துவா, அசுத்த புவனத்துவா,
அசுத்த தத்துவாத்துவா, அசுத்த கலாத்துவா என்னும் பதினெட்
டுமாம். இப்பதினெட்டாகவும் இருப்பவர் தாமே என்பதைக் கந்
தக்கடவுள் தமது ஆறு திருமுகங்களாலும், பன்னிருதிருக்கரங்களா
லும் விளக்கி யருளுகின்றார். எனவே ஆறு அத்துவாக்களுந் தம
க்கு வடிவென்பதை அறுதிருமுகங்களாலும் விளக்கிடுதல் காண்க.

---

* மதங்கம், வீமதந்திரம் முதலிய ஆகமங்களுஞ் சுத்த அத்துவாவிற் புவனங்கள்
முப்பத்து மூன்றும், அசுத்த அத்துவாவில் இருநூற்று நாலென்றுங் கூறியது, இதனை
நன்கு வலியுறுத்து மென்க. இவ்வுண்மை யுணராதார் அத்துவாப் பேதமின்றென்பர்.

இவ்வத்துவாக்கள் ஆறும் ஒன்றி னொன்று வியாபித்திருக்கும். மந்திரம் அக்கரங்களின் கூட்டமாகிய பதத்திலே வியாபித்திருக்கும். அப்பதம் வன்னத்திலே வியாபித்திருக்கும். வன்னம் புவனத்தின்கண் வியாபித்து விளங்கும். புவனந் தத்துவத்திலே வியாபித்திருக்கும். தத்துவங் கலைகளினும், கலைகள் துணைக் காரணமாகிய சத்தியினிடத்தும் வியாபித்து விளங்கும். அச்சத்திதான் குகக்கடவுளாகிய ஒரு முதற்பொருளினிடத்து அடங்கும். அவ்வுண்மை சத்தியை (வேற்படையைத்) தரித்து இருத்தலானும், சத்தன், ஞான சத்தியான்மா, சத்திமான் என்னும் பெயர்களானுநன்கு தெளியப்படும். இங்ஙனம் வருண பத்ததியும், இரௌரவ ஆகமமுங் கூறுவது காண்க.

இங்ஙனம் ஒன்றினொன்று வியாபித்தலால் மந்திரங்கள் வியாப்பியம் பதங்கள் வியாபகம்; பதங்கள் வியாப்பியம் வன்னங்கள் வியாபகம்; வன்னங்கள் வியாப்பியம் புவனங்கள் வியாபகம்; புவனங்கள் வியாப்பியம் தத்துவங்கள் வியாபகம்; தத்துவங்கள் வியாப்பியம் கலைகள் வியாபகம்; கலைகள் வியாப்பியம் சத்தி வியாபகம்; சத்திகள் வியாப்பியம் சுப்பிரமணியக் கடவுள் வியாபகம் என்பது உண்மை நூற்றுணிபு. குகக்கடவுளாகிய சுப்பிரமணியப் பெருமானேசர்வவியாபகராகலால் ஆறத்துவாக்களானும் ஏற்பட்ட கன்மங்களைப் புசிப்பித்துக் கழிப்பிப்பவரும், புசியாத வண்ணம் ஞானவதி முதலாய தீக்கைகளானே நீக்கியருள்வோரும் அவரே என்க.

௧. மந்திராத்துவா என்பது, பதினொரு மந்திரங்களை யாகும்.
௨. பதாத்துவா என்பது, எண்பத்தொரு பதங்களை யாகும்.
௩. வன்னாத்துவா என்பது, ஐம்பத்தொரு எழுத்துக்களையாகும்.
௪, புவனாத்துவா என்பது, இருநூற் றிருபத்துநான்கு புவனங்களை யாகும்.

ரு. தத்துவாத்துவா என்பது, முப்பத்தாறு தத்துவங்களை யென்க.
சு. கலாத்துவா என்பது நிவிர்த்தி முதலிய ஐங்கலைகளை யென்க.

மேற்சொல்லிய மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் என்னு மிவ்வைந்துங் கலாத்துவா என்னும் ஐந்து கலைகளினும் அடங்கி விளங்கும் வகை காட்டுதும்.

க * நிவிர்த்தி கலையிலே,

சத்தியோசாதம், இருதயம் என்னும் மந்திரம்-உ.
" ஓம் நமோநம,, என்னும் பதமுதலாக,
" மகாதேவ,, என்னும் பதம் இறுதியாகவுள்ள பதங்கள் உஅ.
க்ஷ என்னும் வன்னம்-க.
பிரமாண்டத்துட் காலாக்கினி புவனமுதல் உருத்திர புவனமீறாகவுள்ள புவனம் சு.

| | | | |
|---|---|---|---|
| கபாலீசாதி திரிதேசாதிபதி யீறாகக் கீழ்த்திசைப் | புவனம் | கO. | புவனம். கOஅ. |
| அக்கினி ருத்திரர்முதல் க்ஷயர் முடிவாந் தென்கீழ் | ,, | கO. | |
| யாமியாதி அதன்ம ரீறாகத் தென்றிசைக்க ணுள்ள | ,, | கO. | |
| நிருதிமுதற் றௌட்டிகரீறாகத் தென்மேற்றிசை | ,, | கO. | |
| பலாதி சுதாந்த ருத்திரரீறாக மேலைத் திசைப் | ,, | கO. | |
| சீக்கிராதி மேகவாக னந்தம் ஆகவுள்ள வடமேற்றிசைப் | ,, | கO. | |
| நீதி சாராதி பிரகாச ருத்திராந்தம் வடதிசைப் | ,, | கO. | |
| வித்தியாதிபர் முதற் பலப்பிரிய ரீறாகவுள்ள வடகீழ்ப் | ,, | கO. | |
| கடாகக்கீழ் மாயனாதி யந்திவச்சிரதங்கட்டிர னிறுதியுள்ள | ,, | கO. | |
| டை ஒட்டின்மேற் சம்பு ருத்திராதி திரிலோசனாந்த | ,, | கO. | |
| வீரபத்திர பத்திரகாளி | ,, | உ. | |

ஆகக் கூடிய புவனம் கOஅ.

பிருதிவி என்னும் பெயருள்ள தத்துவம் க.
இவைகள் அடங்க நிற்கு மென்க.

---

* நிவிர்த்தி கலை யென்பது காரணப் பெயர். தன்கட் சேர்ந்த பக்குவர்கட்குச் சங்கற்பங்களை விலக்கித்து மீட்கின்றமையால் நிவிர்த்தி என்று பெயர். இதற்குத் தேவதை பிரம தேவன் எனக் கொள்க.

உ † பிரதிட்டா கலையிலே,

வாமதேவம் சிரசு என்னும் மந்திரங்கள் உ.
மகேசுரன் என்னும் பதமுதலாக, அரூபின் அரூபின் என்னும் பதங்கள் இறுதி யாகவுள்ள பதங்கள் உஎ.
ளகார முதல் டகார மீறாக வுள்ள வன்னம் உச.
அமரேசன்முதற் சீகண்ட புவன மிறுதியாகவுள்ள புவனம் ருசு.
அப்பு தத்துவ முதற் பிரகிருதி தத்துவ மீறாகவுள்ள தத்துவம் உ௩.
என்னும் இவைகள் அடங்கி நிற்கும் என்க.

௩. * வித்தியா கலையிலே,

அகோரம், சிகை என்னும் மந்திரங்கள் உ.
வியாபிங் வியாபிந் என்ற பத முதலாகத், தியானபத மீறாக வுள்ள பதங்கள் உ0.
ஞகார முதல், வகார மீறான எழுத்துக்கள் எ.
அராகம் முதல், மாயை யிறுதியாகவுள்ள தத்துவத்து, பிரசண்டாதி அங்குட்ட ருத்திராந்தமான புவனங்கள் உஎ.
புருடதத்துவ முதலாக மாயையீறாகவுள்ள தத்துவங்கள் எ.
என்னு மிவைகள் அடங்கு மென்க.

ச. † சாந்தி கலையிலே,

தற்புருடம், கவசம் என்னும் மந்திரங்கள் உ.

---

† பிரதிட்டா கலை என்றதுங் காரணப் பெயர். தன்னை யடைந்த ஆன்மாக்கட்கு முற்சொன்ன சங்கற்ப விகற்பங்களை விசேடித்து நிலை நிறுத்தலாற் பிரதிட்டை எனப் பெயராயிற்று. இதற்குத் தேவதை விட்டுணு.

* வித்யா கலை என்பதில், வித்யா என்றதற்கு அறிவு என்று பொருள். தன்னை யடைந்திருக்கும் ஆன்மாக்களின் அறிவைப் பிரகாசிப்பிக்கையால் அப் பெயர்த்து. இதற்குத் தேவதை உருத்திரக் கடவுள்.

† சாந்தி கலை என்பதிற் சாந்தி என்றதற்குச் சாந்தத் தன்மை என்று பொருள். இது தன்னைச் சார்ந்த உயிர்கட்கு விருப்பு வெறுப்பை யொழித்து, சங்கற்ப வழிச் செல்ல வொட்டாது முதன்மையான சாந்தத்தை விளைத்தலால் அப்பெயர்த்து. இதற்குத் தேவதை மகேசுரர்.

நித்திய யோகிநே என்னும் பதமுதல், வியோம வியோபி நே என்னும் பதங்கள் இறுதியாக வுள்ள பதங்கள் கக.
ம, வ, க என்னும் எழுத்துக்கள் ங.
சுத்த வித்தியா தத்துவத்தில் வாமாதி மனோன்மணி யீறான புவனங்கள். கூ.
ஈசுரதத்துவத்தில் அநந்தேசுராதி சிகண்டியீறான புவனங்கள் அ.
சாதாக்கியதத்துவத்திற் சாதாக்கியபுவனம் க. ஆகக்கூடிய புவனம் கஅ.
சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னுந் தத்துவங்கள் ங.

என்னு மிவைகள் அடங்கு மென்க.

ரு. ‡ சாந்தியதீத கலையிலே,

ஈசானம், அத்திரம், ¶ மூலம் என்னும் மந்திரங்கள் ங.
ஓம் என்னும் பதம் க.
அகார முதல் க்ஷ விறுதியாக வுள்ள எழுத்துக்கள் கசு.
சித்திதத்துவத்தில் உள்ள நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் புவனங்கள் ரு.
சிவதத்துவத் துள்ள இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவ காமினி, வியாபினி, வியோம ரூபினி, அநந்தை, அநாசிருதை என்னும் புவனங்கள் கO. ஆகக்கூடியபுவனம் கரு.
சத்தி தத்துவம், சிவதத்துவம் என்னுந் தத்துவங்கள் உ.

என்னும் இவைகள் அடங்கு மென்க.

---

‡ சாந்திக்கும் மேலாய பரம ஞானத்தை யுண்டாக்கலாற் சாந்தியதீதை என்று பெயர். இதற்குத் தேவதை சதாசிவமூர்த்தி. இவ்வைந்து கலைகளின் வடிவு, நிறம், குணம், அவத்தை, நாடி, வாயு என்பவற்றை மதங்க ஆகமம், சோமசம்பு பத்ததி, வருண பத்ததி, காலோத்தராதிகளிற் காண்க.

¶ சில ஆகமங்களிலே சாந்தியதீத கலையிலே குறித்த மூன்று மந்திரங்களுடன் நேத்திரமந்திரம் என்னும் ஒன்றுங் கூட்டி நான்கென்று கூறலால் ஐங்கலைகட்கும் மந்திரங்கள் பன்னிரண்டாதல் காண்க. இதுபற்றியே திருமுறைத் திருவருட்பாக்களும் பன்னிரண்டாயின என்க.

இவ்வாறு மந்திரங்கள் பதினொன்றும், * பதங்கள் எண்பத்தொன்றும் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றும், புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கும், தத்துவங்கள் முப்பத்தாறுங் கலைகளினடங்க, அக் கலைகள் தமது சத்தியினடங்கச் சத்தி தம்முளடங்கச் சுப்பிரமணியப் பெருமான் விளங்கா நிற்பர். முத்திக்கு வழியாகிய ஆறத்துவாக்களையுந் தமக்கு வடிவாகக் கொண்டு, கிரியா தீக்கை, ஞான தீக்கை, சாம்பவி தீக்கை என்னும் மூவகைத் தீக்கையானும் மூவகை யான்மாக்கட்கும் அத்துவ சுத்தியை வருவித்துக் கந்தக் கடவுள் தமது திருவடிப் பேற்றை அளித் தருளுவர்.

சுப்பிரமணிய பரப் பிரமத்திற்கு மந்திராத்துவா ஒருதிருமுகமும், பதாத்துவா ஒரு திரு முகமும், வன்னாத்துவா ஒரு திருமுகமும், புவனாத்துவா ஒருதிருமுகமும் தத்துவாத்துவா ஒருதிரு முகமும், கலாத்துவா ஒரு திருமுகமும் ஆகஆறத்து வாக்களும் † ஆறு திருமுகங்களாக விளங்கு மென்க. அதனானே சிவ பெருமான் திருமுகங்கட்கு ஈசானம், தற்புருடம் என்றின்னவாறு பெயர் வந்தாற்போல, அறுமுகக் கடவுடிருமுகங் கட்கும் முறையே மந்திரேசம், பதேசம், வன்னேசம், புவனேசம், தத்துவேசம் கலேசம் எனப் பெயர்கள் கூறப்படு மென்க. இவற்றானே சுப்பிரமணியக் கடவுளும் மந்திரேசன், பதேசன், வர்ணேசன், புவனேசன், தத்துவ ஈசன், கலேசன் எனப் பெயர் பெறுவார். கிரியாசத்தி யாராகிய

---

* சில ஆகமங்கள் எண்பத்தொரு பதங்களுக்கும் முந்நூற்றாறு எழுத்தெனக் கூறும். பதங்கள் தொண்ணூற்று நாலென்றும், பதங்களுக்கு அளவில்லை யென்றுஞ் சில ஆகமங்களிற் சொல்லப்பட்டன. எழுத்துக்கள் என்னும் வன்னங்கள், பிரதிலோமக் கிரமத்தாலே க்ஷகாரமுதலாகக் கொள்க. லகார எழுத்துக்கும், ளகார எழுத்துக்கும் பேதமின்மையால் அக்கரங்கள் ஐம்பது என்று சித்தியம் என்னும் ஆகமங் கூறுகிற்கும்.

† பிரணவங்களே ஆறுமுகமென்றும், அறுகுணங்கள், ஆறுசத்திகள், சடக்கரங்கள், சக்கர சக்கரி முகங்கள், பஞ்சாக்கரத்துடன் பிரணவம், சிவசடானனம் முதலியனவே முகங்களா மென்றுஞ் சிலநூல்கள் கூறுகிற்கும். அவை மூர்த்த பேதங்கள் எனக் கொள்க.

தெய்வயானையம்மையாரும் மந்திரை, பதரூபிணி, வர்ணை, புவனை, தத்வரூபை, கலாரூபை எனப் பெயர் பொருந்துவர்.

இவ்வாறு வடிவங் கூறப்படுவதன்றி யின்னுமோர் வகையாகவும் வடிவு கூறப் பட்டுள்ளது. எங்ஙன மெனில், சுப்பிரமணியப் பெருமானுக்கு இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம் முதலிய அங்கங்களாக முறையே புவனம், வன்னம், மந்திரம், பதம், தத்துவம், கலை என்னு மிவைகளாகின்றன. எனவே சுப்பிரமணியக் கடவுளார்க்கு முப்பத் தெட்டுக் கலைகள் திருக்காம், திருவடி முதலிய திருவுறுப்புக்க ளாகின்றன. சாந்தியதீதகலை திருத்தலையாகவும், சாந்திகலை திருமுகமாகவும், வித்தியாகலை திருமார்பாகவும், பிரதிட்டாகலை குய்ய மாகவும், நிவிர்த்திகலை முழந்தாள், கணைக்கால் ஆகவும், புவனாத்துவா திருமேனியாகவும், வர்ணாத்துவா தோலாகவும், மந்திர அத்துவா உதிர மாகவும், பத அத்துவா மாமிசமாகவும், தத்துவ அத்துவா எலும்பு மச்சை, சுக்கில முதலிய தாதுக்களாகவுஞ் சொல்லப்படும். இவை யிற்றை வடிவமாக் கோடலின் சுப்பிரமணியப் பெருமானர் சாந்தியதீதன், சாந்தேசன், வித்தியேசன், பிரதிட்டேசன், நிவிர்த்தீசன் எனத் துதிக்கப் படுவார். தெய்வயானை யம்மையாருஞ் சாந்தியதீதை, சாந்தை, வித்தியை, பிரதிட்டை, நிவிர்த்தை எனப் போற்றப்படுவா ரென்க.

இங்ஙன முள்ள திருவடிவங்களானே சுத்திபண்ணிப் பேரின் பத்தையருளும் புதுச்சந்நிதிக் கந்த சுவாமியாம் பெம்மான். அத்துவ சுத்தி யென்பது என்னெனில், ஆறத்துவாக்களினும் உள்ள சஞ்சித கர்மங்களை யெல்லாம் நசிப்பித்தல். கன்மங்களை நசிக்கவே மாயை அகலும். மாயை அகலவே ஆணவ மலத் தடையற்று ஆன்மாக்களின் சுவ ரூப ஞானம் பிரகாசிக்கும். அது பிரகாசித்தலால் அத்துவித ஞானம் வளர்ந்து இன்ப முறும். இவ்வாறே அத்துவாக்களைத் தமக்கு வடிவாக் கொண்டு ஆறுமுக மூர்த்தியாய், ஆன்மாக்

கலை முத்தியிற் சேர்த்தலால் அத்துவா மூர்த்தி எனக் கந்தக் கட வுள் தோத்திரிக்கப் பெற்றனர்.

பௌஷ்கராகமம்.

𑌨 𑌮𑌾𑌯𑌾 𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌨𑌾𑌣𑍁𑌰𑍍𑌨 𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌮𑌤𑍋 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌃 𑌪𑌰𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌾𑌤𑍍𑌰 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌚𑌿𑌦𑍍𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌣𑍁𑌕𑌃 ।
𑌮𑌾𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌮𑍋𑌹𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑍇𑌤𑌿 ।

நமாயா நேச்வரோ நாஞூர்நசக்திச்சுத்தவர்த்தமநஃ |
உபாதாந மதோபிந்தஃ பரிசேஷேண லப்பியதே |
நாத்ரசக்திருபாதஞ்சவித்ரூபத்வாத்யதாகுகஃ |
மாயாவிநாத்ரோபாதாநம்மோஹகத்வாகஸ்வதேஜஸேதி |

சுவாயம்புவ ஆகமம்.

[illegible]

[illegible]

### கிரண ஆகமம்.

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।

### மகுட ஆகமம்.


[illegible] ।
[illegible]
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।

### அசிதாகமம்.

[illegible] ।
[illegible] ।

என்றற் றொடக்கத்த சுலோகங்களானும் பெறுதும்.

இப்பிர மாணங்களே யன்றி, "சாந்தியா தீதகலை தன்னின் மந்திரங்க டாமூன்று பத மொன்றக் காங்கள் பதினாறு" எனவ



வியாக்கிராசுரசங்காரமூர்த்தி. ஃ. ரு. ம.

ரூஉஞ் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தானும்,“அத்துவாவடிவா மெம்மிறை முடிதான் கலைகளைந்தாகுஞ் சாந்திமுத லானநான் குரமாம்” என வரூஉஞ் சிவஞான தீபச் செய்யுளானு முணர்க.

அத்துவா மூர்த்தயே நமஃ

---

பத்தோன்பதாவது,

## * வியாக்கிராசுர சங்கார மூர்த்தி.

---

சுவேத வராக கற்பத்திலே பிரம தேவருக்கும் விட்டுணுவுக்குஞ் சண்டை நேரிட்டது. அதுகாலை மலரோன் திருமாலை நோக்கி, நந்த கோபன் மகனே! நானே பரப்பிரமம்; என்னை வணங்குதி யென்றார். மாயவன் அது கேட்டு மைந்தனே! நீ என் உந்திக் கமலத்தினின்றும் பிறந்தவன் அன்றோ? ஆகலான் நீ மகனாகின்றாய். யான் நுனக்குத் தந்தை யாகின்றேன். நுன்னாலுஞ்சகல சராசரப் பொருள்களாலும் வணங்கப்படுதற் குரியோன் யானேயென்றார். பிரம தேவர் கோபித்து; வெண்ணெ யுண்ட கள்வ! நீ எனக்குப் புத்திரன் மருகன், பௌத்திரன், பிரபௌத்திரன் என்னும் உரிமை யுடையை. உனது பத்துப் பிறவி யல்லாத † பதினைந்து

---

* சில புராணங்களிலே வியாக்கிராசுரனைச் சங்கரித்தது சிவபெருமானென்றே கூறப்பட்டுள்ளது. சிவனே குகன், குகனே சிவன் என்னும் ஒற்றுமை நயம் பற்றிக் குகக்கடவுள் செய்ததைச் சிவன் செய்ததாக் கூறிய தென்க. அங்ஙனமே சுப்பிரமணியப்பெருமானாற் செய்யப்பட்ட வராக வதம், கூர்மபங்க முதலியன வற்றையு முரைத்தமை யோர்க. காளிக்கடவுள் செய்தருளிய சிரக் கொய்வு, வீரபத்திரரியற்றி யருளிய யாகசங்கார முதலியனவுஞ் சிவபெருமானே செய்தா ரென்று சிலவிடங்களி லுரைக்கப் பட்டமை யுணர்க.

† பதினைந்து பிறப்புக்களாவன—சனகன், சனாதனன், சனந்தனன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, எச்சன் வியாதன், தன்வந்திரி, பௌத்தன் என்பனவாம். இங்ஙனம் பிங்கலந்தை கூறிற்று.

பிறவிகளுட் சனகன், சனந்தனன், சனந்தனன், சனற் குமாரன் என்னும் நான்கு முனிவராக என்னிடம் பிறந்தனை. நாரதனுகவுந் தோன்றினை. இவற்றானே எனக்குப் புத்திரன் ஆனாய். நான் பிதா ஆனேன். என்னாற் படைக்கப்பட்ட பூமிதேவியாகிய மகளை நினக்கு மனைவியாகத் தந்தேன். அதனால் நீ மருகன்; நான் மாமன் என்று அறிவாயாக. எனது மகனாகிய பிருகு முனிவனுக்கு மகன் இலக்குமி யன்றோ ? அவளைத் தானே நின் மனையாக் கொண்டாய். அது வன்றி என் குமாரனாகிய காசிப முனியின் மனைவியாம் அதிதி வயிற்றினிடத்து வாமனன் ஆகப் பிறந்தாய். இவற்றானே நீ பௌத்திரனும் நான் மூதாதையும் ஆகின்றேன். வியாசன் தத்தாத் திரேயன், கபிலன், விடபன் என்னு மிவராகப் பிறந்தது பற்றிப் பிரபௌத்திரனு மாகக் காணப்படுகின்றாய். இன்னும் நின்னைப் படைத்துப் படைத்து என் கைகளும் மனமுஞ் சலித்தன.

நினது உந்தியினின்றும் வெளிப்பட்டமையால் நீ பரப்பிரம மாக வணங்கப் படுதற் குரியையோ ? அங்ஙனாயின் நரசிங்க மாகத் தூணினின்றும் வெளிப்பட்டனை. அதுபற்றித் தூணைத் தந்தை யென்பதூஉம், அதனைப் பரப்பிரம மாக வணங்குவதூஉந் தகுதியாமோ ? அன்றியும் அதிதி வயிற்றில் வாமன னாகவும், இரேணுகை வயிற்றிற் பரசு ராம னாகவும், உரோகிணி வயிற்றிற் பலராம னாகவும், கௌசலை வயிற்றிற் றசரத ராமனாகவும், தேவகி வயிற்றிற் றசரத ராமனாகவும், தேவகி வயிற்றிற் கண்ண னாகவும் பிறந்தாய். சோம யசசு என்னும் அந்தணனையும், அவன் மனைவியையும் இனிப் படைப்பேன். அவள் வயிற்றில் உன்னையுங் குதிரையாகப் படைக்கச் சித்தமா யுள்ளேன். அவர்கள் யாவரும் நுனக்குத் தாயுந் தந்தையரு மாகலால் அன்னவ ரெல்லாம் பரப்பிரம மாவரேயோ ? ஆகார் ! ஆகார் !! அதுபோல நீ தந்தை என்பதூஉம், நின்னை வணங்க வேண்டு மென்பதூஉம் பொய்யாம் என்றார். இவற்றை

யெல்லாங் கேட்ட திருமால் வடவைபோற் கொதித்தெழுந்து கோர யுத்தஞ் செய்தார். பிரம தேவரும் இளைக்காது அவருடன் பொருதார். திருமால் மிகவுங் கோபித்து "இவனை யின்னே யழிக்கின்றும்" என்று எழுந்து, வியாக்கிர அசுரன் என்பானை வேள்வி யக்கினியி னின்றும் உண்டாக்கித் தமது தவ பலங்களை யெல்லாங் கொடுத்து விடுத்தார். பிரமதேவரும் அங்ஙனே யோர் அபிசார ஓமஞ் செய்து மகிடாசுரன் என்பானை யுண்டாக்கி விடுத்தனர். அவர்கள் இருவரும் நெடுநாட் பொருது, பின்னர் ஒருவரோ டொருவர் இணங்கிச் சீகண்ட ருத்திர மூர்த்தியை நினைந்து பன்னெடுங் காலந் தவம் புரிந்தார்கள். உருத்திர பகவான் றோன்றி அவர் வேண்டும் வரங்களை யெல்லாங் கொடுத்தருளினர்.

அதன் பின் புலிமுக முடையனாய், யமனும் நடுங்கத்தக்க பயங்கரமான தோற்ற முடையவனாய், வரபலங்களான் மேற்பட்ட அவன், மகிடாசுரனை மந்திரியாக வைத்துத் திரிலோகங்களையுந் தன் னடிப்படுத்தி அரசாள்வா னாயினான். தேவர், முனிவர், இந்திரன், பிரமன், விட்டுணு முதலினோரை யெல்லாம் புறமுதுகிட் டோடப் பாணங்களால் அடித்துத் துரத்தி, அவர் பதவிகளை யெல்லாந் தனதாக்கி யரசு செய்தான். பிரம தேவரையும் விட்டுணுவையுந் தேவர்கள், முனிவர்கள் முதலாயினோரெல்லா மிகழ்ந்தனர். அவர்களும் நாமே நமக்கு வினை தேடினோம் என நொந்தனர். அன்னவ ரிருவருஞ் செய்யுந் துன்பங்களை யெல்லாஞ் சிவபெருமா னிடத்தில் விண்ணப் செய்வோம். வருதிர் என்று திருமால் அவர்களை யெல்லாம் அழைத்துச் சென்றார். திருக்கயிலையை யடைந்து, திருநந்தி தேவர் விடைபெற்றுப் பரசிவனார் சந்நிதியிற் சென்று யாவரும்பன் முறை யடியற்ற மரம்போல் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி யெழுந்து,

[illegible]
[illegible]
[illegible] ।

அ

ஈசாநஸ் ஸர்வ வித்யாநாமீச்வரஸ்ஸர்வபூதாநாம்
ப்ரஹ்மாதிபதிர் பிரஹ்மணோதிபதிர் பிரஹ்மா
சிவோமே அஸ்து சதாசிவோம். |

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யரூபாய அம்பிகா
பதய உமாபதயே பசுபதயே நமோ நம: ।

என்னும் தைத்திரீய வேத ஆருண சாகா மந்திரங்களைச் சொல்லித் துதித்தார்கள். சிவபெருமான் திருவருள் சுரந்து கூறி யருளுவார். அகங்காரம் பெருந்துன்ப மயம். நீவிரிருவரும் அகங்காரங் கொண்டதனாலன்றோ அவ் வசுரரிருவருந் தோன்றினர். நுங்க ளகங்காரம் நுமக்கன்றி நும்மைச் சார்ந்த மற்றை யோர்க்கும் பெருந் துன்பை விளைத்தது. ஹே, மாலே! உயிர்களைக் காக்கின்ற பட்டத்தை யுடைய நீ, இங்ஙனஞ்செய்த தென்னை? என்று உரைத்துப் பரமனார் துர்க்கா தேவியையுஞ் சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினர். துர்க்கை மகிடனைச் சங்கரிக்கவந்தாள்.

அதனைக் கண்ட சுப்பிரமணியப் பெருமானார் அசுர சேனைகளை யெல்லாம் அதஞ்செய்தனர். மகிடன், வியாக்கிரன் என்னும் இருவரும் பெருங் கோபமுற்று, இத்தேவர்களா லன்றோ விவ் விருவரும் போர் புரிய வந்தனர். ஆகலிற் பிரமன் விட்டுணு முதலிய தேவர்களை யெல்லாம் இப்பொழுதே விழுங்கி யழிப்பே மென்று பல மாயா வடிவங்களைக் கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் கருடனைக் கண்ட பாம்பு போல மிக்க பயங் கொண்டு ஓலமிட்டார். துர்க்கா தேவியையுஞ் சுப்பிரமணியப் பெருமானாரையும் நோக்கி அபய மிட்டார்கள்.

தாமக்னிவர்ணாம் தபஸா ஜ்வலந்தீம் வைரோசனீம்
கர்மபலேஷு ஜுஷ்டாம் । துர்காம் தேவீம் சரண
மஹம் ப்ரபத்யே ஸுதரஸி தரஸே நம: ।

என்று துர்க்கா தேவியை நோக்கி அபய மிட்டார்கள். இந்த யசுர் வேத தோத்திரத்தைக் கேட்டதுந் தேவியானவள் எருமை முகத்தை யுடையானும் மகிடாசுரனை வளைத்துப் பொருது கொன்றாள்.

### ஸாம வேதம்.

* விஶ்வாநி நோ துர்கஹா ஜாதவேதஸ்ஸிந்தும் ந நா
வா துரிதாதிபர்ஷி । அக்நே அத்ரிவந்நமஸா க்ருணா
நோஸ்மாகம் போத்யவிதா தநூநாம் ॥

யஜ்ஞாயஜ்ஞா வோ அக்நயே கிராகிரா ச த
க்ஷஸே । ப்ரப்ர வயமம்ருதம் ஜாத
வேதஸம் ப்ரியம் மித்ரம் ந ஶம்ஸிஷம் ॥

என்று முருகக் கடவுளை நோக்கித் தோத்திரம் புரிந்தார். பெருமானார் அவ் வேத மந்திரங்களை யெல்லாங்கேட்டு, அஞ்சன்மின் அஞ்சன்மின் ! என அபயங் கொடுத்துப் புலிமுக முடைய அசுர வீரனைப் பொர வுன்னினார். தம்முடைய திருக்கரத்தின்க ணுள்ள அநந்த குணம் என்னும் பெரிய வில்லை வளைத்துத் தொனி செய்தார். வியாக்கிரன் மிகவும் பயந்து, குணத் தொனியே யிங்ஙனமாயின் இவர் வீர மெத்துணையதோ ? ஆயினும் இத்தகைய மகாவீரருடன் யுத்தஞ்செய்து இறப்பினும் எஞ்ஞான்றும் புகழ் இருக்கும். என்று துணிவுற்றுத் தன்வில்லை வளைத்து யுத்தம் புரிந்தான். பலப்

* இவ்வேத மகாவசனங்களிலே முருகக்கடவுளாரை அக்கினி எனவுஞ் சாதவேதா எனவும் கூறித் துதித்திருக்கிறது. "தேவாநாம் அக்ரே ஸர" அதாவது தேவதைகட்கு முன்னே இருக்கிறவன் ஆகலின் அக்கினி எனவும், ஜாதாநி—வேதா:ம் ஸி—யஸ்மாத்ஸ: அதாவது எவனிடத்தி னின்றுஞ் சகல ஞானங்களும் உண்டாகின்றனவோ அவன் ஜாத வேதா எனவுஞ் சொல்லுவார். அக்கினிபூ என்னலானும், புலிங்க மூர்த்தி என்னலானும் அங்ஙனம் வேதங்கள் கூறினவென்க.

பல வடிவங்களை யெடுத்துப் பாணங்களைப் பொழியா நின்ற காலை, பரப்பிரமப் பொருளாங் குகக் கடவுள் ஓரத்திரம் விடுத்து அவன் றலை கொய்து புறக்கடலில் வீழச் செய்தனர். தேவர்கள் யாவருந் துதித்து முன்போலப் பதவிகளிற் சென்று வாழ்ந்திருந்தனர்.

தேவர்க்குத் துன்பஞ் செய்த மகா வீரனாகிய வியாக்கிராசுரனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தருளினமையால் வியாக்கிராசுர சங்காரமூர்த்தி யெனத் துதிக்கப் பட்டார்.

### வாசிட்ட லைங்க புராணம்.


கண்ணுதற்கொருகண்ணையப்பியகண்ணனாமொருதிண்ணனன்
பெண்ணியாவருமுண்ணயந்திடவண்ணவாழியையுள்ளியெம்
மண்ணலாரடிகண்ணிடந்தவைமண்ணையுண்ணியுமெண்ணவாங்
கண்ணனும்முதருங்களென்றொருசண்டைகண்டனர்கற்பமே.

விண்டி யானுன தத்த னென்றிட வேதனேதிடு மாயனே
பண்டு நாலவர் மகதி யானென வென்கண் வந்தனை பார்மகட்
கொண்ட நன்மரு காகநின்றனை கூறுபோனு மாலையே
யண்டி யுற்றபி றப்பி னற்படை யங்கை சேர்ந்தது காண்டியே.

என்ன மாயனு மோர ழற்கொடி ருட்கடற்பரி போலவே
துன்ன வோர்புலி யுக்கிரத்துறு தூர்த்தனைப்பொர வுய்த்தன
னன்ன ணஞ்சிறை யன்ன னும்மகி டன்னே யுய்த்தன னன்னவர்
முன்னி நின்றமர் கொண்டி ணங்குரு மூன்றி னனரு ளூன்றினார்.

வியாக்கி ரன்றவ மேன்மை யால்வர வாய்மை யாற்பல வேந்தரைக்
குயாக்கி ரத்துலை யாக்கி வானவர் கோலு மாபத மாக்கியே
சயாக்கி ரத்தி னலைக்க வேன்முரு கத்த னாருள் சாரவே
புயாக்கி ரத்தினில் வந்த பொற்கணை பூப்ப வுண்டிட மண்டினான்.

வியாக்கிராசுர சங்கார மூர்த்தயே நமஃ



கயாரூடமூர்த்தி.

## இருபதாவது,

# கயாரூட மூர்த்தி.

பிரம விட்டுணுக்கள் இருவரும் பறவைகளாகிய அன்னம், கருடன் என்னும் இரண்டு பறவைகளை வாகனமாக் கொண்டு ஊர்வர். அவர்க்கும் மேலான கடவுள் யாமே என்பதனைச் சிவபெருமான் நீலகண்டம் முக்கண் முதலவற்றா னறிப்பதன்றி வாகனத்தானுமப்பாத்துவத்தை நன்குவிளக்கா நின்றனர். எங்ஙன மெனில், இடபம் என்னும் மிருகத்தை வாகனமாக ஊர்தலா லென்க. என்னை? பறவைகளினின்றும் மிருகம் ஏற்ற முடைமையா லென்பது. இங்ஙனம் இவர்களுள் இருவர் பறவைகளையும், ஒருவர் விலங்கினையும் ஊர்தியாகக் கொள்ள, இம் மூவர்க்குங் காரணராயிருந்து அதிட்டான வாயிலாற் படைத்தன் முதலிய தொழிலைச் செய்பவர் தாமே என்பதை விளங்க நங்குமாரக் கடவுளார் பறவைகளையும் மிருகங்களையும் வாகனமாக் கொண்டருளினார். எங்ஙன மெனிற், பறவைகள் இரண்டனையும், விலங்குகள் இரண்டனையும் ஊர்தியாகக் கொண்டதாம். பறவைகள் இரண்டாவன—மயில், கோழி. விலங்குகள் இரண்டாவன—ஆடு, யானை என்பன. இங்ஙனம்இருகாற் பிராணிகட்கும், நாற் காற் பிராணிகட்குந் தலைவராகிய பரப்பிரமம் யாமே யென்பதனைத் தெரித்தருளுஞ் சிவகுருநாதன்.

வேதங்களெல்லாம் "எவன் தேவர்கட்கு அரசன், எவனிடத்தே தேவர்கள் அடங்கி யுள்ளார். எவன் இந்த இருகால்களுக்கும் நாற்கால்களுக்கும் நாயகன்; அத்தகைய தேவனுக்கு அவிசு கொடுப்பேம்,, என்றும், "நாற்காற் பிராணிகளை முன்னர்ச் சிருட்டித்தான். இருகாற் பிராணிகளையு மங்ஙனே படைத்தான். முன்னர் அப்புருடன் உடல்களி னுயிருட் புகுந்து அந்தரியாமியானான்" என்று மின்னவாகக் கூறும் பிரமாணங்கட் கெல்லாம் (வேதவாக்கியங்கட்குத்) தாமே பொருளென அறிவித்த படியாம். அவ்வேத வசனங்களை

யிங்கே காட்டுவாங் காண்க. இங்ஙன முள்ள வாகனங்களுள் யானையு மொன் றென்றாம். அந்த யானை அயிராவண மென்பர் சிலர். அற்றன்று. அது இரண்டாயிரங் கொம்பர்களை யுடையதாய்ச் சிவபெருமானுக் குரியதாய்ச் சிவலோகத்தின்கண் இருப்ப தெனினும் "தந்தை பொருண் மைந்தர்க்கு" என்னு வழக்குப்படி, விநாயகர், சுப்பிரமணியர் முதலினோர்க்குப் பொது வாதல் கண்டுணர்க.

ஆகலி னன்றே பிரமதேவன் புத்திரிகளாகிய சித்தி புத்திகளை விநாயகனார் திருமணம் புரிந்த ஞான்று அவ்வயிராவணத்தினிவர்ந்து திருவுலாப் போந்தா ரெனப் பார்க்கவ புராணமும் பகர்ந்தது. ஈண்டுச் சுப்பிரமணியக் கடவுளார்க் குரிய யானை யெதுவோ வெனிற் "பிணிமுகம்" என்னும் பெயரை யுடைய தென்க. கருப்ப வாச மில்லாத முனிவரைத் துருவாச ரென்றாற்போலவும், இமைத்த லில்லாதவரை "இமையவர்" என்றாற் போலவும் எதிர்மறை யிலக்கணையான் வந்தபெயர் என்றறிக. என்னை? எவ்வாறும் பிணிக்கப் படாத (கட்டப்படாத) முகத்தை யுடையது என்று பொருளாகலின். அதற்கு ஏது யாதோ வெனிற் சொல்குதுங் கேண்மின். யானை யேற்றங் கொள்வோ ரவ்வியானையின் முக முதலியவற்றை யலங்கரிப்பர். முகத்திற்கு, முகபடாம் என்னும் வத்திரங்கட்டுவர். நுதற்கண் ஓடை (பட்டம்) கட்டுவர். கிம்புரிப் பூண் பூட்டுவர். கவரிகள் பிணிப்பர். இவைமுதலாம் பிணிப்புக்க ளின்றி யியற்கையே யவையெலா மமையப் பெற்றுத் தோன்றிய யானை யென்க. அல்லதூஉம் சடவடிவினையுடைய யானை யாகாது பதினோராந்திரு முறைத் திருவருட்பாக் கண்ணும், மெய்கண்ட சாத்திரம் பதினான்கனு ளொன்றாய நெஞ்சுவிடு தூதினு முரைத்தாங்கு பரஞான மென்னும் யானை யெனப் பகர்வாரு முளர். அவ்வாறு இயற்கையே யமைந்த அலங்காரத்தை யுடைய அப்பிணிமுகம் என்னும் யானை எல்லா யானைகளினும் மேலாயது.

ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவ பௌமம், சுப்பிரதீபம் என்னும் எட்டுத்திசை யானைகளும், அவற்றின் பிடிகளுஞ் சூழ்ந்து போற்ற விளங்குவது. ஐராவத யானையுங் குற்றேவல் புரிய விளங்குவது. சிவலோகத்திலே யுள்ள ஐராவணம் என்னும் யானையும் அதற்கீடாகாது. இருக்கு, யசுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு வேதங்களுஞ் சுப்பிரமணியக் கடவுளின் திருவடிகளை மேடமாக வுருவெடுத்து வேள்வி யக்கினியினின்றுந் தோன்றித் தாங்குதல் போல, வேதங்களின் முதலாய பிரணவமு மவ்வாறேயவர் திருவடிகளைத் தாங்க வெண்ணி, இப்பிணி முகப் பெருவடிவந் தாங்கி வந்திரப்பப் பெருமானார் அதனை யூர்தியாக் கொண்டருளினா ரென்று பிரமாண்ட புராணத்திலே நாரத விசய சம்வாதச் சருக்கத்து உரைக்கப்பட்டுள்ளது. ஆகலிற் பிரணவ யானை யென்றும், தாரகக்களிறு என்றும் அழைக்கப்படும். இது வன்றி வேறும் வரலாறுங் கூறப்படும்.

திருமால், தந்தையை இடபமாய்த் தாங்கிய தன்றி மைந்தரையும் யானையாகத் தாங்க நினைத்தார். அவர் அதிதி வயிற்றிலே உபேந்திரனாகத் தோன்றி யிருந்த காலையொன்று நினைத்தார். என்னுடனெதிர்த்த காலத்து நான் விடுத்த சுதரிசன சக்கரத்தைத் தன்கழுத்திலே மாலையாகத் தரித்த தாரகனால் நான் மிக்க அவமான மடைந்தேன். அவ்வவமானம் போக வவனைக் கொன்று காத்தருளியவர் சுப்பிர மணியக் கடவுளே. ஆகலி னவர்க்கு வாகனமாம் பேற்றை யடைந்து, இனி எந்த அசுரர்க்கும் பயப்படாதும், அவரா லிடையூறடைந்து அவமான முறாமலும் இருப்பேன். எனது தமயனாகிய இந்திரன் மயிலாகத் தாங்கினா னல்லனோ? என்று எண்ணி, மாவிர புரம் என்னுஞ் சீரிய தலஞ் சார்ந்து வாமனர் அருந்தவம் புரிவாராயினார். அவர் தவங் கண்டிரங்கிய பெருமான்,

ஒரு திருமுகமும், இரு விழிகளும், நான்கு திருக் கரங்களும், இடத்திருக்கரங்கள் எவற்றைக் கேட்பினு மவையெல்லாம் ஒரு

சேரக் கொடுத்தருளும் வெற்றி பொருந்திய வரதமும், கோழிக் கொடியும் கொண்டிருப்பவும், வலத்திருக் கரங்களில் வேலும் வாளும் பொருந்தி விளங்கவும் அநேக கோடி சூரிய ரொருங்குஉதயஞ் செய்தாற்போன்ற பிரகாசம் பொருந்திய திருமேனியும் உடையராய்த் தோன்றி யருளினர். வாமனர் அருந் துதிகள் புகன்று வீழ்ந்து வணங்கி யானந்தக் கூத்தாடினர்.

"நினக்கு என் வேண்டு" மென்று சுப்பிரமணியப் பெருமானர் கேட்ப, வாமனர் சொல்வார். அசுர குலாந்தகா! அடியேனை முன் அவமானம் புரிந்த தாரகன் றேவரீராற் கொல்லப்பட்டுச் சாத்தனர்க்கு யானைவாகனமாக விளங்குகின்றான். அவனும் நம்மைக் கண்டஞ்சுமாறும் அடியேனை யானை வாகனமாக்கி யெஞ்ஞான்றும் ஊருதல் வேண்டு மென்றார். வேண்டுவார் வேண்டியாங் கருளும் பெம்மான், அவ்வாறே வாமனரை யானை யாக்கி யூர்ந்தனர். வள்ளியம்மையார் அவதரித்த குறிச்சிநிலப் புட்களை வாகன மாகவுங் கொடியாகவுங் கொண்டருளினர். எனக் குரிமையா மொன்றையுங் கொண்டிலர் என்று ஊடல் கொண்ட தெய்வயானை யம்மையாரை மகிழ்விப்பான் வேண்டி, அவர்வளர்ந்த சுவர்க்கப் பொருள்களிற் சிறந்ததும், அவரை வளர்த்ததற் கினமாயதும், வள்ளியம்மையாரை யச்சுறுத்தியதை யொத்த வடிவினையுடையதும் ஆன இந்த யானையை வாகனமாக்கிக் கொண்டாரென்று தேவரெலாம் பூமாரி பொழிந்தார். இங்ஙனம் வாமனராகிய யானையின்மீ தூவரும்மூர்த்தியாய் விளங்கலிற் சுப்பிரமணியக் கடவுள் கயாரூட மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

யசுர் வேதம் - மந்திர சாகை.

[illegible]

[illegible]

[illegible]
[illegible]

### இருக்கு வேதம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

### குமார தந்திரம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

### தணிகைப்புராணம் - அகத்திய னருள்பெறுபடலம்.

ஒற்றை முகமு மிணைவிழியு மும்மைப் பயனுமொருங் களிக்குங்
கொற்ற வாத மூன்றலைக்குக் குடமோரிரண்டு மிடங்கதிர்ப்ப
மற்றை வலப்பான் மணிவேலும் வாளுங் கதிர்ப்பக் காநான்கும்
பெற்ற மதவெங் களிற்றூர்திப் பெருமானுருவஞ் சமைப்போரும்.

### திருமுருகாற்றுப் படை (பதினோராந் திருமுறைத் திருவருட்பா.)

ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி.

பரிபாடல். (எட்டுத்தொகை.)

"பாயிரும் பனிக்கடல்" என்னும் ஐந்தாஞ் செய்யுளில்,

"சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கி" என்றது முணர்க. இன்னும் பலப்பல பிரமாணங்களுள. அவையெலாம் விரிவஞ்சி விடுத்தாம்.

கயாரூட மூர்த்தயே நமஃ

---

இருபத்தோராவது,

## மாதங்காரி மூர்த்தி.

---

சியவன முனிவரின் புத்திரரான † ததீசி முனிவர், குபன் என்னும் அரசனுடன் நட்புற்றிருந்தார். ஒருநாள் முனிவர்க்கும் அரசகுமாரனுக்கும் ஓர் விவாத முண்டாயிற்று. என்னெனிற், பிராமண பலமோ? க்ஷத்திரிய பலமோ பெரியது? என்பதாம். குபராசன் "க்ஷத்திரிய பலமே பெரிது" என்ன, முனிவர் அந்தணர் வலிமையே சாலவும் பெரிதென்றார். அதனால் இருவர்க்கும் வீரவாதம் நேர்ந்து கோபம் அதிகரித்தது. முனிவர் குபனைத் தாக்கினர். அரசனுஞ் சினங் கொண்டு ததீசி முனிவரை வச்சிராயுதத்தினால் அடித்தான். அவ்வடியினாலே இருடி குமாரரின் உயிர் மேனுலகடைந்தது.

அதுபோது முனிவரின் மூதாதையாகிய சுக்கிரனார் ஓடோடி வந்து, சிவமகிமை துலக்கு மருந்தே! உயிர் விடுத்துச் சென்றை

---

† ஈண்டுக் கூறப்பட்ட ததீசி முனிவர்,

"[illegible]।"

என வாதுளாகமங் கூறியவாறு பஞ்சவிருடி கோத்திரத்தவராய ததீசி முனிவரல்லரென்றுணர்க.



(மாதங்காரிமூர்த்தி.)

12974
(7667)



யோ'' என்று வருந்தி, இரு துண்டமாய்க் கிடந்த அவரி னுடலைப் பொருத்தி, தமது சஞ்சீவினி வித்தையாலே முன்போலாகச் செய்து அவ்வுடற்கண் உயிர்வரும்படி செய்தனர். உடனே தூங்கி யெழுந்தவர் போலத் ததீசி முனிவர் எழுந்தார். சுக்கிரனுர் அவ ரைத் தழுவி முத்த மிட்டு வாழ்த்திக் குபனை நோக்கிக் கூறுவார். ''அரசகுமா! பிராமணர் பிழை செய்த காலத்தும் அவரைத் தண் டிக்கவேண்டின் அவர் தலையிற் குட்டல், அல்லது சிறையிடல் செய்வதன்றி, ஓரற்ப விடயத்திற்கா வவரைக் கொல்வாரைக் கண் டிலேம். அங்ஙனஞ்செய்த மன்னர் வழித்தோன்றியோ னீ யொரு வனே. நீ யிங்ஙன முறைதவறி மதத்தானுங் கோபத்தானும் வச்சி ராயுதத்தால் அடித்துக் கொன்றமையால், சித்தாந்த நிலையி னின் றும் விலகி, சிவதூடண னாகி, மாயனைக் கடவு ளென்று அலமந்து மாழ்கி மாண்டு, மறுபிறப்பில் மத யானையாகத் திரிந்து பவம் புரிந்து மாய்க'' என்று சபித்தார்.

அவ்வாறே குபன் சிவநெறியி னின்றும் விலகி, அவநெறியாகிய புன்மதத் தாழ்ந்து, மாயனே பரம்பொரு ளென்று மயங்கித் துன் புற்று மாண்டு, இலங்கை மண்டலத்திலே ‡ உவா என்னும் வனத் திலே கொடியயானைகட் கெல்லாந் தலைமையான இளம்யானையாகத் தோன்றித் திருகுற்ற சிந்தையா லுன்மத்தங் கொண்டு திரிந்தான். அநேக உயிர்களை யெல்லாங் கொன்றும், முனிவர் தவநிலைகளை யழித்தும், வேள்விகட்கு இடையூறு செய்தும் இருந்த யானையைத் தேவர்களுங் கண்டால் மிகவும் பயந்து ஓடுவார்; ஒளிப்பார். இவ் வியானை யாராற் கொல்லப்படுமோ? என்று யாங்கலக்கந் தீர்ந்திருப் பமோ என்று பலருங் கந்த நாதனைப் போற்றுவார்கள். இங்ஙன நிகழுநாளிலே,

‡ உவா என்பது இக்காலத்து ஊவா எனப்படும். அதுகண்டிக்குச் சமீபத்திலே சப்பிரகாமம் என்னு மூர்க்கு அருகி லுள்ளது. உவா = யானை. அது பிறந்த விடமாதலின் அப்பெயர்த் தென்றெண்ணக் கிடக்கின்றது.

தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்
கத்துபுன்சொலைவினவினரவன்செயல்காணார்
சுத்தவாதுள்முதலியதந்திரத்தொகுதி
யுய்த்துணர்ந்திடுநீரரேயொருசிறிதுணர்வார்.

என்றபடி சிவாகம வழிநின்று, அறுமுகக் கடவுளின் றிருவருட் பெருமைகளை யெல்லா முள்ளவாறுணர்ந்த சற்புத்திர னென்னும் வணிகர் ஒருவர் இருந்தார். தங்கள் செட்டிகுலத்திலே யவதரித்து அதனாலே செட்டி என்னுந் திருப் பெயரையுடைய கந்தக் கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற தலங்க ளெல்லாஞ் சார்ந்து தரிசனஞ் செய்து, "திருப்புகழ் பெற்ற தலங்களுட் கதிர்காமம் ஒன்று தரிசித்திலேன். மற்றைய வெல்லாந் தரிசித்து முற்றினேன். அக் கதிர்காமத் தலத்தையு மெம்பிரா னடியேற்குக் காட்டியருளுதல் வேண்டு"மென்று பிரார்த்தித்து வருவாராயினார். இவ்வாறு தரிசன விருப்பத் தழுந்தி நிற்குஞ் சற்புத்திர வணிகரது சொப்பனத்திலே சிறையிலே கிடந்து புலம்பிய சயந்த குமாரனுக்குத் தோன்றித் தெளிவித் தருளியதுபோலத் தோன்றி யருளித் திருவாய் மலர்ந் தருளுவார்.

"அன்பனே! கதிரைத் தலத்தைத் தரிசிக்கும் விருப்பமுடையனாய் நிற்கின்றாய். நாளைத் தினமே புறப்பட்டு வருதி" என்று மறைந்தருளினார். உடனே சற்புத்திர வணிகனார் விழித்தெழுந்து உடல நடுங்க, உரைதடுமாற, உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தக் கூத்தாடி, குகக் கடவுளின் றிருவருளை வியந்து, அன்று புலரிக்காலையி லெழுந்து வழிக்கொண்டார். பற்பல ஊர்கள் யாவுங் கடந்து * கண்டி என்னும் ஊர்க்கண் வந்தார். அதுபோது சமுத்திரங்

* குபன் என்னும் யானையைக் கண்டித்த ஊராகலினன்றே கண்டியெனப் பெயர் வந்தது. மகனறிவு தந்தை யறிவு என்றபடி தந்தையார் மாதங்காரியாய் விளக்கல்போல மைந்தரும் இதனால் மாதங்காரியென விளங்குதல் காண்க.

களை யெல்லாம் மொண்டு மொண்டு குடித்து இருண்டு மிக்கவேகத்துடன் புகர் நிறத்தையுடைய இந்திர வில்லையு மேந்திக் கொண்டு மேகக் கூட்டங்களெல்லா மொருங்கு திரண்டு இடித்து முழங்கி வந்த தென்ன, முற்கூறிய உவா என்னுங் குபயானை யதிர்ந்து நடந்து முழங்கி வந்தது. அதனைக் கண்ட வணிகனார், தமக் குறுதுணை சுப்பிரமணியக் கடவுளே யென்று துணிந்து, அவரை யன்புடன் றுதிப்பாராயினார்.

அருவம், உருவம், அருவுருவ மென்று சொல்லப்பட்டமூன்று வடிவங்களையு முடையவர் எவரோ? அம்மூவகை வடிவங்களுஞ் சுவேச்சையினால் மந்திர வடிவாக் கொண்டு இலய போக அதிகாரங்களை யாவர் செய்வாரோ? அவர் அடியேனைக் காத்தருள்க. ஆன்மாக்களாகிய எங்கள் பொருட்டு யாவர் ஆரணி சத்தியினாலே சங்கார அநுக்கிரக கிருத்தி யங்களைச் செய்வாரோ? யாவர் ஜநநி சத்தியினாலே படைப்புத் தொழிலை யியற்றுவாரோ? யாவர் உரோதயித்திரி சத்தியினாற் காத்தல் மறைத்த லென்னுந் தொழில்களைச் செய்தருள் வாரோ அவைகளை வேற்படை, தெய்வயானை, வள்ளியம்மை என்னுஞ் சத்திகளாக யாவர் காட்டுவாரோ அன்ன கடவுள் அடியேனைக் காத்தருள்க என்று துதித்தார்.

சுப்பிரமணியப் பெருமான் அந்தக் கணமே வேடர் போற்றிருவுருக் கொண்டு கையின் கண்ணே வேற்படை தரித்தவராய்த் தோன்றி, அன்ப! பயமுறற்க வென்று அபயங் கொடுத்து, ஓருங்காரஞ் செய்தார். யானை வீழ்ந்திறந்தது. குபன் தன்வடிவுகொண்டு வணங்கினான். குகக் கடவுள் மறைந்தருளினார். வணிகர் துதித்துக் குபாரசனோடுங் கதிரைத் தலமடைந்து மாணிக்க கங்கை நன்னதியாடித் தரிசித்தனர். அவருள் குபன், ததீசி முனிவர்க்குத் தான் செய்த பழிநீங்கப் பெற்றுத் தன் இராச்சியத்தைக் கைக்கொண்டான், வணிகர் இறுதியிற் குகபத மடைந்தார். யானையை

யழித்து வணிகரைக் காத்தருளி னமையாற் குகனூர் மாதங்காரி மூர்த்தி யாயினர். மாதங்க=யானையை, அரி=அழித்தவர்.

வாதுளாகமம்.

ஶிவதத்த்வம் ஏகமேவைக நிஷ்கலம் தத்த்வதஃ ।
ஸகலம் நிஷ்கலம் சைவ வ்யாபகம் வ்யாப்ய ரூபதஃ ।
ஏதத்ஸர்வம் ஸகலம் விஷ்ணு ப்ராத்ருவ்யா வ்யாபகம் ஶிவ ஏவ ஹி ।

மிருகேந்திராகமம்.

ஸோமஸூர்யாக்நி நேத்ராய வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணே ।
தத்த்வாதீதாய ஶுத்தாய ஶிவாய ஶிவரூபிணே ।
ஹவிஸ்ஸம்ஸ்தவிதம் ஸர்வம் ஹரிஶங்கர ரூபகம் ।
ஸர்வம் ஸர்வாத்மகம் ஸர்வம் ஹ்ருதி ।

பிரமாண்ட புராணம் (மொழி பெயர்ப்பு)

சிவமொன்றே முதலாகுஞ் சத்தியஞ்சத்
 தியமீது தெருட்டி னேனீ
ரவமொன்றிச் சுடுகிரயத் தாழ்கின்றீ
 ரெனப்புகலு மந்தச் சோதி
குவமென்றிக் கலகமிடப் புடைத்தனன் மற்
 றவனுமொரு கோலிற் றூக்கச்
சவமொன்றச் சுக்கிரனும் பதைத்தொருநற்
 சிவக்கொழுந்தே சார்ந்திட்டாயோ.

என்றிரங்கிச் சீவனியின் வித்தையா லுயிர்ப்பித்தே
 யிவனை நோக்கி
நன்றுநீ மதமாவிற் படுதியெனச் சூள் செய்தா
 னானு மீழத்



(யாக ரக்ஷக மூர்த்தி.)

தோன்றுவா னனத்துவா வெனத்தோன்றிக் கொடுஞ்செயல்க
ளுளுற்றியன்ப
னன்றுதலங் காணச்சென்ற டர்த்துவேள் கொன்றருள
வன்பிற் சார்ந்தான்.

மாதங்காரி மூர்த்தயே நமஃ

---

## இருபத்திரண்டாவது,

# யாக ரக்ஷக மூர்த்தி.

---

காசிப முனிவர், தக்கன் புத்திரிக ளாகிய திதி, அதிதி, தனு, அரிட்டை, சுரசை, கசை, சுரபி, விநதை, தாம்பிரை, குரோத வசை, இளை, கத்துரு, முனி என்னும் பதின் மூவரையும் விவாகஞ் செய்தார். அவருள், திதி யென்பாள் இரணியன், இரணி யாக்கன் என்னும் இருவர் ஆண்மக்களையும், சிம்மிகை யென்னும் பெண்ணொருத்தியையும் பெற்றாள்.

அவர்களுள் இரணியனுக்கு அனுகிலாதன், கிலாதன், பிரகலாதன், சங்கிலாதன் என்று நான்கு குமாரர் தோன்றித் தைத்திய குலத்தை விருத்தி யாக்கினர். இரணியாக்கனுக்குச் சருச்சரன், சகுனி, பூததந்த தாபனன், மகா நாபன், மகாபாகு, கால நாபன் என்னும் அறுவர் குமாரர் தோன்றினர். மற்றைய மனைவியர்க்கும் மகவுகள் பலப்பல தோன்றி யளவிறந்தனவாக விருத்தி யாயினர்.

திதியின் குமாரர்களான அசுரர்களுக்கும், அதிதி புத்திரர்களான தேவர்க்கும் போர் தொடங்கிப் பலர் இறந்தார்கள். விட்டுணு அவர் வேண்டுகோட் கிரங்கிப் பாற்கடல் கடைந்து, தோன்

றிய அமிர்தத்தைத் தேவர்க்குக் கொடுத்து, அசுர கூட்டங்களை யெல்லாம் வேரோ டறுத்தொழித்தார். அஃதறிந்த திதி யென் பாள் மிக மனம் வருந்தி, என்னுடைய குலத்தவர்களை யறுத்த இந்திர உபேந்திரர் முதலிய அதிதி புத்திரர்களை யெல்லாங் கொல் லத்தக்க புத்திர னொருவனைத் தந்தருளினால் என்னுயிரை வைப் பேன். அன்றேல் இப்போதே துறப்பே னென்று காசிப முனிவ ரிடம் முறையிட்டாள். அவர் அவளை நோக்கி, பிரியாய்! வருந் தற்க. அங்ஙன மொரு புதல்வனைத் தருகின்றே மென்று தேற்றி னார்.

முருகக்கடவுள் வீற்றிருந் தருள்கின்ற திருத்தலங்கள் அறு பத்து நான்கனு ளொன்றாய புத்திர காமம் என்னுந் திருத்தலத் தை யடைந்தார். ஆங்குள்ள நற்றான மொன்றிலே யாகசாலைவகுக் கத் தொடங்கினர். சால்யோத்தாரணம், தான சுத்தி முதலியவை களுஞ் செய்து யாகசாலை வகுப்பா ராயினார். மனு சூத்திரம், இரவி சூத்திரம், முனி சூத்திரம், மானவ சூத்திரம், திரபாக மண்டபம் என யாக சாலை யைவகைப்படும். அவற்றுள் தங்கருமத்திற் குரிய யாகசாலை மானவ சூத்திர மாகலின் அதனை வகுத்தார். வேதிகை, ஊர்த்துவ பட்டி, அதோபட்டி, துவாரம், குண்டங்கள் இவைகற் பித்து, வேதியின் நடுவிலே பிரமபத மெனவும், நான்கு பக்கத்தும் தெய்வபதம், மானுடபதம், பைசாசபதம், இராக்கத பதம் என்னும் பதங்களும், அவைகளில் ஊர்த்துவ மேகலை, அதோ மேகலை, மத் திய மேகலை யிவைகளும் கற்பித்துக் குண்ட யோனி முதலியவை யும் வகுத்தார்.

சிவபெருமான் பஞ்சவர்ண முடையாராய் விளங்கலானும் பஞ் சதானங்களி னின்றும் வெளிப்பட்டுப் பஞ்ச கிருத்தியஞ் செய்வ தாலும் பஞ்சாவரணங்களும், துவாரம், தோரணம், சூலம், நான்கு தம்பம், உருத்திராக்க, பஸ்ம, உபநயன தாரண வேதிகைகளு மியற்

றிச் செய்யவேண்டியன வெல்லாஞ் செய்து, யாகஞ் செய்தற்கு மிக வும் முக்கியமான அதர்வசிரோ மந்திரங்களையுஞ் சிவாகம மந்திரங் களையும் விதிப்படி கூறிச் செய்வாராயினர்.

"அந்த யாக முற்றுமேல் திதி யென்பாள் வயிற்றிற் கருப்ப முண்டாகும். அஃதுண்டாயி னமக்கும் நங்குலத்தார்க்கு மழிவு நேரிடும்." என்று இந்திரனுந் திருமாலு மிடையூறுகள் செய்யத் தொடங்கினர். காசிப முனிவர் அது தெரிந்து, வேள்விப் பதி யைத் துதிக்கத் தொடங்கினர்.

யாவனங்கி வடிவானோன் யாவ னயத்தை யூர்ந்திடுவான்
யாவனங்கி பூவெனமா மறைக ளியம்பு மகபலத்தை [ணன்
யாவன் கொடுக்கும் பொறியாகத் தோன்று மெழிலோன் முக்கண்
யாவனவன்றன் பதமலர்க்கிங் கடியேன் சரணம் புகுகின்றேன்.

யாவன் அக்கினி வடிவா யிருப்போன்; எவன் மேடவாகனத் தை யூர்வோன்; அம் மூர்த்தி அடியேனையும் யாகத்தையுங் காத் தருள்க. சிவாக்கினிபூ என்று வேதங்கள் முழங்கும் பொருளா யிருப்பவன் எவன்? யாகபலப் பிரதான மூர்த்தி யாவன்? ஊர்த் துவ ரேதசனும் அறுதிசைகளைக் காப்பவனும் யாவன்? குமாரன் திரியம்பகன் யாவன்? அக்கடவுளாவான் அடியேனையும்யாகத்தை யுங் காத்தருளும்படி யடைக்கலம் புக நின்றேன். யாகத்திலே மும் முறை "சுப்பிர மண்யோம்! சுப்பிர மண்யோம்!! சுப்பிர மண்யோம்"!!! என்று வேதங்களால் அழைக்கப் பெறுவோற்கு அடியே னடைக்கலம் அடைக்கல மென்றிவ்வாறு துதித்தார்.

இவ்வொலி கேட்டதுஞ் சேய்குரல் கேட்ட தாய் போலச் சுப் பிரமணியப் பெருமான் பால வடிவத் துடன் வேலாயுதமும் டில்ல வமுந் தரித்த திருக்கரத்தினராய்த் தோன்றி, முனியே! யாங் காக் கின்றும். அஞ்சற்க. யாகத்தை முடிக்குதி யென் றருளினர்.

காசிப முனிவர் கந்த சகத்திர நாமத்தால் அர்ச்சித்துச் சோடசரூப தியானஞ் செய்து யாகஞ் செய்வாராயினர் தேவர்கள் செய்த அபிசார வேள்வியி னின்றுந் தோன்றி மலையன், மாரன் என்னும் அசுரர் இருவர் அனுப்பப்பட்டார். அவ்வசுரர்கள் முனிவரையும் யாகப் பொருள்களையும் விழுங்குவே மென்று ஆரவாரித்து வந்து நெருங்கினர். காசிப முனிவர் பயந்து, "ஞானசத்திதரா! பால ரூபா! பரஞ்சுடரே யோல மோல" மென்றார். இளைய பிள்ளையார் தங்கரத்திருந்த பல்லவத்தா லெறிந்து அவ்வசுரர்க ளிருவரையுங் கொன்றருளினர்.

முனிவர் யாகத்தை நிறைவேற்றி ஆங்குச் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்து சென்றார். அதுவே புத்திர விருப்பத்தை யளித்தமையாற் புத்திர காமம் என்னும் பெயர் பெற்றது. இங்ஙனம் முனிவர் செய்யும் வேள்விகளையும், அந்தணர் செய்யும் மகங்களையும் யாதோ ரிடையூறும் வாராமற் காத்தும், காசிப முனிவர்செய்த யாகத்தை யழிக்க வந்த அசுரர்களைக் கொன்றும், அவர்யாகத்தைப் பரிபாலித்தும் விளங்கலாற் சுப்பிரமணியக் கடவுள் யாக ரக்ஷக மூர்த்தி யாயினர்.

### அசி தாகமம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

## சந்தான ஆகமம்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।

## குமார தரிசனம்.

* வானயன் சுதன்றன் மனையருட் டிதிதன்
வமிசத்தை யழித்தமா யவனை
யெரிசதக் கிருதை யழிசுதற் றருகென்
றிரக்கவோர் வேள்வியை யியற்ற
வரியிரு வருஞ்செ யல்லவை தீர
வந்தடர் மாரனார் மலையார்
பரிவுற வழித்துக் காத்தனன் வேள்விப்
பதிபுத்ர காமநற் றலமே.

## பதினோராந் திருமுறைத் திருவருட்பா.

மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வி யோர்க்கும்மே யொருமுகம்.

யாக ரக்ஷக மூர்த்தயே நம:

---

* இச் சரிதத்தை வேறு வகையாகவும் கூறப்படும். மாரன், மலையன் என்னும் அசுரர்களைச் சுப்பிரமணியக் கடவுள் இளமை வடிவுடன் வந்து வேல்விட்டுக் கொன்றருளியது "இளையனார் வேலூர்" என்னுந் தலத்தி லென்றுங் கூறுப.

## இருபத்துமூன்றாவது,

# புட்ப சந்திர மூர்த்தி.

---

நீர்வள நிலவள முதலிய எல்லா வளங்களாலும் பொலிவு பெற்றதாகி, ஈழம், பொன்னகரம், * தக்கிணகைலாயம் என்றின்ன பெயர்களை யுடைத்தாம் இலங்கை மாபுரியிலே யுள்ள † எருமா நாடு அதன் றிலகம்போற் சிறந்து விளங்கா நிற்கும். அத்தகைய வூரிலே குற்ற மின்றி விளங்கிய அறிவும், வலிமையும், முயற்சியு முடைய ஓவியர் குடியிலே, அற மெலாந் திரண்டு ஒரு வடிவெடுத் தாற் போலும் நல்லியங் கோடன் என்பவன் இருந்தான்.

அவன் அவ்வூரரசர்க்குத் தலைமை பெற்றோனாகி, தொண்டை நாட்டின்க ணுள்ள எயிற்பட்டினம், ஆமூர், வேலூர், மூதூர் என்னு நான்கு நகரங்களினும் அரண் கோலி யரசு புரிந்தான். மயிலுக்குப் போர்வை கொடுத்த ஆவியர் குடித் தோன்றலாம் பேகன், தடுத்த முல்லைக் கொடிக்குத் தன்றே ருதவிய பறம்பு மலைக்கு அரசனாகிய பாரி என்னும் வள்ளல், காரி யென்னும் பட்டத்துக் குதிரை யுடன் றனது நாட்டினையும் இரவலர் கேட்டவுடன் கொடுத்த காரி வள்ளல், பாம்பு கொடுத்த அரிய நீலநிறப் போர்வையை யாலின்

---

* இலங்கையிலே எருமாநாடு என்பது திரிகோண மலைப் பகுதிக்கணுள்ள வோரூர். அதனை எருமாவூர் எரூர் என்ப. இஃது மரூஉவிற்றென்று கூறுவர் பலர். கோடன் என்னும் பெயரானே தக்கிண கைலாச புராணத்திலே கூறப்பட்ட குளக் கோடனும் இவன் வழிவந்த வரசனென்றே கூறல் பொருந்தும். அவனும் எரூர்ப் பகுதியில் வசித்தா னென்றும் † கந்தளாய் என்ற குளந் தோண்டுவித்தா னென்றும் தெரிதலால் எரூரே எருமாநாடென்ப தொருதலை.

† வாயுவினாற் பறித்தெறியப்பட்ட சிகரங்கள் மூன்றனுள் ஒன்று திருக் காளத்தி, ஒன்று திரிசிராமலை, ஒன்று திரிகோணமலை யாகும். அது "முன்னர் வீழ்ந்திடு சிகரிகா ளத்தியா மொழிவர் - பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்கல் - அன்னதின்பிற கமைந்தது கோணமாசலம் - இன்ன மூன்றையுந் தக்கிண கயிலையென் றிசைப்பர்" என்னுஞ் செவ்வந்திபுராணச் செய்யுளானறிக. தக்கிணகைலாய புராணமு மிங்ஙன் கூறும்.



புட்ப சத்திர மூர்த்தி.

கீழிருந்த இறைவற்குச் சாத்திய ஆய் என்னும் வள்ளல், மலைச் சாரலில் நின்ற கருநெல்லியினது அமிழ்தின் றன்மை யுடையபழத் தைத் தான் நுகர்ந்து நெடுநாள் வாழாது ஒளவைக்குக் கொடுத்த அதிகன், ஓரி என்னுங் குதிரையை யுடைய ஓரி வள்ளல் முதலாய வள்ளன் மாரை நாணச் செய்யுஞ் சிறந்த ஈகை யுடையவன். செங் கோலன்; சத்தி நிலயங்கண்டு வழிபாட்டிற் சிறந்தோன். புலவர் இரவலர் முதலாயினோரைத் தெய்வமாக் கொண்டு அவர் மனம் வெ றுக்க வெறுக்கை யீவோன்; சுப்பிரமணியப் பெருமானையே குல தெய்வமாக் கொண்டு வழிபடுகின்றவன்.

கடைச் சங்கப் புலவராகிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத் தனார் பரிசில் விரும்பித் தன்மீது ‡ "சிறுபாணாற்றுப் படை" என் னும் பிரபந்தம் பாடிச் சென்ற காலத்து, அவர்க்கு யானைக்கன்றும் வளநாடும் வேண்டும் பொருள்கள் பலவுங் கொடுத்தோன். அவர் போலப் பரிசில் பெற்ற புலவர் அளவிலரே. சுப்பிரமணியக் கடவுள் விரதங்கள் பல அநுட்டிப்பவன். எயிற் பட்டினம், ஆமூர், வேலூர், மூதூர் இலங்கை யென்னும் இவ்விடங்களிலே முத்தமி ழாராய்ச்சி களும், வீணைவல்லார் கந்தக் கடவுளின் திருப்புகழ்களை யெல்லாம் அமைத்துப் பாடுதலும், புலவர் பிரசங்கங்களும், பாமாரி பொழித லும், தானம், தவம், சிறப்பு, பூசனை யென்பனவும், சைவசித்தாந்த ஆராய்ச்சிகளும் இடையீடின்றி விளங்கின.

இங்ஙன நிகழ்தலாலே சேர சோழ பாண்டிய ரென்னுமூவேந் தர் நாடுகளும் வெறுமை யாயின. சுவர்க்க லோகம் போலுந் திவ் விய போக்கியங்க ணிறைதலாலே இலங்கையைப் பொன்னகரம்

‡ இந்நூல் கடைச் சங்கத்தி லரங்கேற்றப் பட்டுப் பத்துப் பாட்டி லொன்றாய்ச் சேர்க்கப்பட்டு விளங்குகின்றது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைசெய்தனர். மூன்றா வது பாட்டாகவிளங்கி யகவற்பாவான் முடிந்து சொற்சுவை பொருட் சுவைகளுடன் இலங்குமென்க.

என்று புகழ்ந்தனர். அதுகண்ட மூவேந்தரும் பொறாமை யுற்று இவ
னது நாடுகளைத் தன்வயமாக்கக் கருதிப் படையெடுத்து வருதல்
கண்ட நல்லியக் கோடன், அதுபோது ஆமூர்க்க ணிருந்தா னாக
லின், தன் சேனைகளை யணிவகுத்துப் பகைவருடன் போர் புரிந்
தான். கோடன்றன் அமைச்சர்களுள் ஒருவன் பகைவர் பக்கஞ்
சார்ந்து அந்தரங்கங்களை யெல்லாஞ் சொன்னமையால் இவன் சே
னைகள் தோற்றொழிந்தன. அதனானே நல்லியக் கோடன் மனம்
வருந்தித் தன் மனைவியுடன் இரவிலே தெரியாது புறப்பட்டு வே
லூர்க் கோட்டை சென்று, ஆங்கிருந்து தனக்கு உற்ற துணையாக
நிற்கும் வேலாயுதப் பெருமானைத் துதித்து வந்தான்.

மானம் நின்று மனத்தை யலைப்ப, நல்லியக்கோடன் உளமிக
வருந்தி, குகா! சரவணபவா! குமாரா! கதிரை நாயகா! வல்லீப
தே! தேவயானை காந்தா! தேவர்க்கு விண்ணுல கீந்த தேவதேவா!
பக்த வற்சலா! பரம குரவே! அடியரிடர் தீர்க்கும் அருட் பெருங்
கடலே! இற்றைத் தினம் அடியேனுக்கு நல்லருள் புரியாயேல்
என்னுயிர் விட நினைத்திருக் கின்றேன். அது தேவரீர் அறிந்
தருள்க,, என்று பலவாறு துதித்து ஆங்குள்ள கேணியின் முழுகிப்
புலராத வத்திர முடுத்து, அன்புடன் ஆறெழுத்து மந்திரத்தையுச்
சரித்துப் பூசித்தான். அன்றிரவு மூன்று சாமங் காறும் பூசித்து,
நான்காஞ் சாமம் அயர்ந்து கண்படை கொண்டான்.

முருகக் கடவுள் அரசன்மீது இரக்க முற்று, ஒரு திருக்கரத்
தில் வில்லும், மற்றோர் திருக்கரத்தில் வேலுந் தரித்தவராய், முக்
கண்ணுங் கிரீடமுங் கடப்ப மாலையு முடையாராய், மயிலுஞ் சேவ
லும் பின்னர் வர, அரசன் கனவிற் றோன்றித் திருவாய் மலர்ந்தரு
ளும். "அன்பனே! அஞ்சற்க. அஞ்சற்க. நீ தோய்ந்து வருங்
கேணிக்க ணுள்ள புட்பத்தைக் கொய்து, நம் மந்திரங் கூறிப்பகை
வரை நோக்கி யெறிவாயாக" வெனத் திருவாய் மலர்ந்தருளி மறை

யே முக்கிய இராச தானியாகக் கொண்டு அரசுபுரிந்து வாழ்ந்து கந்தவேள் பதம் அடைந்தனன்.

நல்லியக் கோடன் என்னும் அரசனது அன்பின் மேலீட்டா னே அவனுடைய பகைவரை யழித்தற்குக் கேணிப் புட்பத்தை வேலாக்கிக் காத்தருளிய பேராற்ற லுடையாராகலாற் குமாரக்கடவுள் புட்ப சத்திர மூர்த்தி யாயினர். புட்பம்=பூ, சத்திரம்—வேல். புட்பத்தை வேலாக்கிய மூர்த்தி யென்க.

பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப் படை.

பொருபுன றரூஉம் போக்கரு மாபிற்
றென்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத் தழும்பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்,.

ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரை.

நல்லியக் கோடன் றன்பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழி பட்டவழி, அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை யெறி யென்று கனவிற் கூறி, அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்த தோர் கதை கூறிற்று. இதனானே வேலூர் என்று பெயராயிற்று.''



பத்திரசத்தி மூர்த்தி.

### குமார தரிசனம்.

பொன்னக ரேறு மாவெனு மூரிற்
பொலிவுடன் றோன்றுநல் லியக்கோ
டன்னுட னூர்த் தலக்கணிற் பகைத்த
தரியல ரவரெலாஞ் சரிக்க
நன்னயங் கனவி னுணர்த்திநீர்க் கேணி
நறுமலர் வேலினிற் செய்த
வன்னதை யுணர்ந்தே யானேயடைந்தே
னறுமுகா புட்பசத் திரனே.

புட்ப சத்திர மூர்த்தயேநமஃ

---

இருபத்துநான் ாவது,

## பத்திர சத்தி மூர்த்தி.

---

தேவ விருடி யென்று அரிய நூல்களாற் புகழ்ந்து கூறப்பட்ட சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் தமிழ் மீது மிக்க ஆர்வ முற்றுச் செந்தமிழ்ப் பாமாசாரிய ராகிய சுப்பிர மணியக் கடவுளைத் தியானஞ் செய்து திருவேங்கட கிரியிற் றவஞ் செய்தார். சடா தாரும் நாகாபரணரு மாகிய ஆகிய சேவ்வேட் பேருமான், கசநா யகி எனப்படுந் தெய்வயானை யம்மையாரும், இலவலி நாயகி என்னும் வள்ளியம்மையாரும் இருபாங்கரும் பொலிந்து விளங்க, மயில் வாக னருடனாய்த் தோன்றி யருளினர். சிகண்டி முனிவர் எழுந்து வணங்கித் துதிபாடி நின்றாராக, பெருமானர் இருடியைத் திருநோக்கம் புரிந்து, "அறவோய்! நின் றவத்தை மெய்ச்சினேம். நிற்கென் வேண்டுங் கூறுதி" என்று திருவாய் மலர்ந் தருளினர். முனிவனர் கைம்முகிழ்த்துக் கூறுவார். குதிரை நாதனே! அடி

யேற்குத் தமிழியல் யாவுஞ் செவியறிவுறுத் தருளல் வேண்டும்,, என்ன, சுப்பிரமணியக் கடவுள் திருவாய் மலர்ந்தருள்வார். "இருடியே! தமிழ்மொழியி னியலெல்லாந் தெளிய வேண்டுமேல், நமது மாணவன் அகத்தியன் பொதியமலைக்க ணிருக்கின்றான். அவனிடஞ் செல்லையேற் செந்தமிழ் நலனெலாஞ் செவி யறிவுறுத்துவான்,, என்று மறைந்தருளினர்.

சிகண்டி முனிவனார் அங்ஙனஞ் சென்று தீந்தமிழ்ப் பாராவாரத்தைப் பருகி, அநாகுலன் என்னுந் தெய்வப் பாண்டியனுக்குந் திலோத்தமைக்கும் பிறந்த சயந்த குமாரன், இசையை யுணர்த்தியருளல் வேண்டு மென்று கேட்ப, அவன் அறிதற்காக இசைநுணுக்க மென்னும் நூலை யியற்றித் தெளிவித்தார். அகத்தியனா ராணையாலும், முனிவர் தம் விருப்பினாலும், கதிரைத் தலமென்னுங்கதிர் காமந் தரிசித்தற்கு விருப்பி யது நோக்கிச் செல்வாராயினர். சிகண்டியார் போகுங் காலத்து அவர் சீடர்களுந் தரிசிக்க விரும்பினர். அவர்களையு முடன்கொண்டு பிரயாணஞ் செய்தனர். கதிரைத்தலந் தீர்ந்துச் சமீபமான வனத்திலே யானை யொன்று வந்து இவர்களை மறித்துத் தருக்களை முரித்து மதம் பொழிந்து கறுவிக் கொல்ல யத்தனித்தது.

சீடர்களும், மற்றைய பிரயாணிகளுஞ் சாலவும் அஞ்சி முனிவாடியிற்சேர்ந்து "தேவரீர் காத்தருள்க" என்றனர். அதனை நோக்கிய முனிவரனார், கதிரை வேலாயுதக் கடவுளைத் தம்முள்ளத்திற் றியானித்துச் சடக்கர மந்திரமுரைத்துச் சமீபத்தி லிருந்த வேற்றிலை யொன்றைப் பிடுங்கித் தங்கையிலே யேந்தி,

"ஒருதுரும் பினாலே முன்னர்த் தேவர்களை யெல்லாம் வென்றது உண்மையாயின், அன்னவர் மைந்தராம் அறுமுகக் கடவுள் திருவடியைப் பற்றுக் கோடாக வுடையேனானல், இவ்விலையே வேலாகச் சென்று அழிக்குக" என்று கூறி விடுத்தனர். அவ் வேற்

றிலே சுப்பிரமணியக் கடவுளின் திருவருளினலே வேலாகச் சென்று யானையைக் கிழித்துச் சென்றது. யானை வீழ்ந்ததும் ஆங்கிருந்து ஓர் தேவ வுருத் தோன்றி முனிவரை வணங்கி, ஐயனே! அடியேன் ஐராவசு என்னு மொரு கந்தருவ னுயிருந்தேன். பிருகற்பதியாம் வியாழ பகவானின் சொற்றவறி நடந்தமையினுற் சாபம் பெற்று இப்புன் பிறவி யடைந்து நீண்ட காலம்வருத்த முற்றேன்; குகன் அடியவ ராகிய தேவரீர் விடுத்த வெற்றிலே, கதிரை வேலாயுதக் கடவுளின் திருவருளாலே வேலாக வந்து உடம்பை யுருவிச் சென்றமையா லென்சாபந் தீர்ந்து இத்தெய்வப் பழைய வடிவடைந்தேன். ஆகலாற் குகனடியார் மகிமை கூற வல்லார் யார்? என மொழிந்து சென்றது.

முனிவரும் மற்றையோரும் மிக்க வியப்படைந்து, பத்திர சத்திர் மூர்த்தியே! மாணிக்க கங்கைப் பதியே! எனப் பரவிக் கதிரைத்தலஞ் சென்று பெருமானுரை வெளியி னின்றுந் தரிசித்து, அவர் திருவுருக்காண விரும்பி வரங் கிடப்ப, இறைவனுர் தமது இரகசிய வடிவைக் காட்டத் தரிசித்து வேண்டிய வரம்பெற்றுத் தஞ்சீடர்களுடன் பொதிய மடைந்தார். இவ்வுண்மையா னன்றே புலவர் பலரும் வேற்படையை "இலைவேல்" எனவியந்து கூறுவாராயினர். தெரியாதார் "இலைத்தொழின் முற்றிய வேல், இலைபோலும்வேல்" எனவுரைப்பர். இவ் வற்புதத்தைப் புறச்சமயிகளாகிய சமணர் தாமுந் தமது நூலிலே வியந்து கூறியுளார். பத்திரம்=இலே. சத்தி=வேல். அன்பர் துன்ப நீங்கும்படி அருள்சுரந்து வெற்றிலையை வேலாக்கியதனுற் குமாரக்கடவுள் பத்திர சத்தி மூர்த்தி யாயினர்.

சாமவேதம் - தலவகார சாகை.

[illegible]
[illegible]

𑌤𑌤 𑌏𑌵 𑌨𑌿𑌵𑌵𑍃𑌤𑍇 । 𑌨𑍈𑌤𑌦𑌶𑌕𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌯𑌦𑍇𑌤𑌦𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌿𑌤𑌿 ।

(இந்தத் துரும்பை உயர வெடுப்பாயாக வென்று அவ்வாயு தேவற்கு உரைத்து அவன் முன்னர்த் துரும்பை இயக்க மூர்த்திவைத்தனர். அதனையுயர வெடுக்குமாறு வாயு தன்முழுவேகத்துடன் கிட்டிச் சென்றான். அதையெடுத்தற்கு வன்மையில்லானாய் இயக்க மூர்த்தியாகிய சிவபெருமானை விட்டு நீங்கி, அவ்வுருவையானுணரவல்ல னல்லே னென்று ஏனைய தேவர்கட்கு உரைத்தான்)


## கதிர்காம மான்மியம்.

செகண்டிதமி ழார்வத்தாற் றவம்புரிய நாகத்தாற் றென்பாற்
சேறி, திகண்டவது முனிகூறு மெனவடைந்து தவன்சரணஞ் சிர
மேற்சூடி, யகண்டகலைக் கடலெல்லாந் தவாப்பருகி யிசைநுணுக்க
மாற்றிக்காம, நகண்டபுரி தரிசிப்பான் சீடரொடும் வரக்களிறு கணு
கிற்றன்றே.

மதம்பிலிற்றிப் பிளிறியொரு தருமுரித்து மறிக்கமுனி மாட்
சியாறு, சதஞ்செபித்து முருகடியைத் தரித்துநிலைப் பெரியானை
தனித்துக்கூறி, நிதந்தனக்கு மிலையெறிய வேலாகிக் கிழித்ததுட
னேர்ந்த சாற்றிப், பதஞ்செலவிங் கிவரிலைவேற் கடவுளோர்வெனப்
போற்றிப் பதிந்தார்மன்றே.

## சீவக சிந்தாமணி - காந்தருவ தத்தையா ரிலம்பகம். (௩௨௩)

நல்லவை புரியும் மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா
தல்லவை புரியு மாந்தர்க் கத்திர மொன்றும் வாயா
வெல்வதே குணத்தின் மிக்கார் வெற்றிலை விடினும் வேலா
மில்லையே வென்றி தீமை யிடங் கொண்ட மனத்தினார்க்கே.



சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரை.

இனித் தேவவிருடி யாகிய குறுமுனிபாற் கேட்ட மாணுக்கர் பன்னிருவருட் சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச் சங்கத்து அநாகுலனென்னுந் தெய்வப் பாண்டியன் தேரொடு விசும்பு செல்வோன், திலோத்தமை யென்னுந் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தாளைத் தேவரும் முனிவருஞ் சரியாநிற்கத் தோன்றினமையிற் சார குமார னென அப்பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்.,,

பத்திர சத்தி மூர்த்தயே நமஃ

---

இருபத்தைந்தாவது,

# பிரணவாசல மூர்த்தி.

---

பிரணவ வடிவினரும், பிரணவப் பொருளா யிருப்பவரும், பிரணவ அதிபரும் ஆகிய சுப்பிரமணியப் பெருமான் பிரணவாசல மூர்த்தி ஆகிய விவரத்தையுந் தெரிப்பாம்.

ஒரு கற்பாந்தரத்திலே இருக்கு முதலிய நான்கு வேதங்களும் கலி காலத்திற்கு அஞ்சிச் சிவபெருமானை நோக்கி அரிய தவத்தைச் செய்ய அவர் தோன்றி, அவைகளி னெண்ணப்படி, காஞ்சி மாநகர்க்குக் கிழக்கே ஒருபாங்கருள்ள அக்கினி மூலையில் திருப்பதமாக்கி யெழுந்தருளினர். வேதாசலம் என்பதும், திருக்கழுக்குன்றம் என்பதும் அதுவே. வேதங்கள் இவ்வண்ணம் வரம்பெற்றதை யறிந்து, சிவப் பிரணவம், சத்திப் பிரணவம், சத்தியதீதப் பிரணவம், மாயாதீதப் பிரணவம், ஆதிப் பிரணவம், அநாதிப் பிரணவம், ஏகாதசப் பிரணவம், சகசம், சகசானந்தம், சகசானந்தாதீதம்,

அநந்தசோதி, அநந்தசோதியதீதம், அதிமகானந்தம், அதிமகானந் தாதீதம், அதிமகானந் தாதீதோத்தரை, நிர்மலம், நிர்மலாதீதம், சிற்பிரணவம், சிற்பிரணவாதீதம், மகாசிற் பிரணவம், மகாசிற் பிர ணவாதீதம், சிதானந்தம், சிதானந்தா தீதம், சிற்கூடம், சிற்கூடா தீதம், சித்வியோமம், சித்வியோமாதீதம், நித்தியம், நித்தியாதீதம், நிராமயம், நிராமயாதீதம், அநந்தபூதம் முதலிய பகுப்பினையுடைய பிரணவங்க ளெல்லாஞ் சேர்ந்து பசுபதியினிடஞ் சார்ந்துவணங்கி, கயிலாய பதே! கங்காதரேச! வேதங்கள் எம்மை விடுத்துத் தவஞ் செய்து மலையாகும் வரமடைந்தன. எமக்கு இருப்பிடம் யாது என்று விண்ணப்பஞ் செய்தன. வேதமுதல்வ ராகிய சிவபெரு மான் அவற்றை நோக்கி, "நம்மைத் திருவுருவாகவுடைய நங்குமா னிடஞ் செல்க" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிரணவங்கள் வியாக்கிராசுர மர்த்தனராகிய முருகக் கடவுளை யடைந்து வணங்கித் துதித்து உற்றது கூறின. அவர் உத்தர வரு ளியபடி யுத்தமா புரி, சமராபுரி முதலிய பெயர்களை யுடைய திருப் போரூரின்கண் சென்று, வள்ளியா ரோடை என்னும் பொய்கை யின் முழுகி, ஈசான திசையிலே தம்பெயராற் பிரணவா மிர்தம் எனவழங்குந் தீர்த்த மொன்றெடுத்து, அதனீரால் முருகனை யபி டேகித்துப் பூசித்தன. சண்முகக் கடவுள் சுயம்பு மூர்த்தத்தி னின் றுந் தோன்றி, தம்மை வணங்கிய பிரணவத் தெய்வங்களைத் திருக் கடைக்கண் நோக்கஞ் செய்தருளி, இயந்திர மந்திரங்களால் நீவிர் சூழ்ந்திருத்தல் போல, இங்குநமது பிற்பக்கத்திற் சூழ்ந்து மலை வடிவாக விருத்திரொன்று மலையாக்கி, அத னுச்சியில் யாமும் இடைவிடாது வீற்றிருக்கின்றேம். உருத்திர கோடி என்னுந்தலத் தில் மலைவடிவமாக விளங்கும் வேதங்கள் உப நிடதங்களோடும் மந் திர சந்தசுகளோடும் நாடோறும் இவண் வந்து நம்மைச் சேவிக்கும். திருக் கழுக்குன்ற மாகிய வேதசைலத்தைத் தரி

செப்போர் நம்மை முதல் வணங்கிப் பின்னர் அதனை வணங்குவாராயின் அவர் பிறவித் துன்பங்களை நீக்கி நம்முடன் இரண்டறக் கலக்கும் பேரின்பமாகிய அத்துவிதானந்த வாழ்க்கையை யளிப்பேம் என்றும் வரமளித்தார்.

தந்தையா ராகிய சிவபெருமான் வேதங்களை மலையாக்கி யமர், மைந்தராகிய தாம், வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் மந்திரங்களுக்கும், ஏனைய உலகங்கட்கும் முதலாகிய பிரணவத்தை மலைவடிவாக்கி வீற்றிருந் தருளலாற் சரவணோற்பவ சுவாமி பிரணவாசல மூர்த்தி யாயினர்.

*** திருப்போரூர்ப் புராணம்.**

யுத்த மாபுரி யுயர்சம ராபுரி போரூர்
யுத்த வான்கிரிப் பதிபிர ணவபுர மொருவா
வைத்த வின்னன பெயர்கொளுந் தலமிது வாய்மை
யத்த லத்துறை தீர்த்தமொன் றதன்வளங் கேட்டி.

**திருப்போரூர்த்தல வெண்பா.**

பிரணவுங்க ளீசனருட் பேச்சானே போரூர்க்
காரணங்கள் சான்றே கடுநோன்—பாரணமுடன்
செய்யச்செவ் வேண்மலையிற் செய்தத்திற் சுக்கிலமா
வுய்தற் கிருக்கு மூவண்.

பிரணவாசல மூர்த்தயே நமஃ

---


* இக் காலத்துப் பிரணவாசலம் என்பது, திருப் போரூர் என வழங்கப்படுகின்றது. போரூர், சமரபுரி, யுத்தமாபுரி, தாரகப்புரம், பிரணவபுரம் என்பன அதன் பரியாயப் பெயர்கள் ஆகும். இப் பிரணவ மலைக்கட் சிவபெருமானும் வீற்றிருக்கின்றார். இது செங்கற் பட்டுச் சில்லாவிலே திருக்கழுக் குன்றத்திற்குச் சமீபத்தி லுள்ளது. திருப்புகழ் பெற்ற தலங்களுள் ஒன்று.

## இருபத்தாறுவது,

# இலிங்க தலேச்சுர மூர்த்தி.

---

அன்பர்கள் சோபான முறைப்படி யநுட்டித்து மேலதாயுள்ள நிருமல விலிங்கத்தில் வந்தகாலை அவர்க்கு மூத்தியுண்டெடன ஆகமங்கள் கூறுகிற்கும். அவ்விலிங்க தலங்கள் நூற்றொன்றுகும். இவை மூத்தித் தலத்திற்குக் காரணமாகும். விபூதித்தலம், உருத்திராக்கத்தலம், பஞ்சாக்கர தலம், பத்தத் தலம், உபயத்தலம், திரிவித சம்பத்துத் தலம், சதுர்விசாரதலம், உபாதித் தலம், நிருபாதித் தலம், சகசத்தலம், மகேசுரத் தலம், இலிங்கநிட்டைத் தலம், பூர்வாசரிய நிரசனத்தலம், துவித நிரசனத் தலம், ஆவாகன நிரசனத் தலம், அட்டமூர்த்தி நிரசனத்தலம், சர்வகத நிரசனத் தலம், சிவசெகதலம், பக்த தேகித்தலம், பிரசாதத்தலம், குருமகாத்மிய தலம், மகேசலிங்க மகாத்மிய தலம், மகேச சங்கம மகாத்மிய தலம், பக்த மகாத்மியதலம், சரணமகாத்மியதலம், பிரசாதமகாத்மியதலம், பிராணலிங்கத்தலம், பிராண விலிங்கார்ச்சனைத் தலம், சிவயோகசமாதித்தலம், இலிங்கநிசத்தலம், அங்கலிங்க தலம், சரணத்தலம், தாமதநிரசனத்தலம், நிர்த்தேசத்தலம், சீலசம்பாதனத் தலம், அயிக்கத்தலம், அத்துவிதானந்த வயிக்கத் தலம், சர்வாசார சம்பத்துத் தலம், எகபாசனத் தலம், சகபோசனத் தலம், தீட்சா குருத்தலம், சிட்சாகுருத்தலம், ஞானகுருத்தலம், கிரியா லிங்கத் தலம், பாவலிங்க தலம், ஞானவிலிங்க தலம், பக்த சுயதலம், பக்த சரத்தலம், பக்தபரதலம், பக்தலிங்கதலம், கிரியாகமத்தலம், மகேசபாவகதலம், மகேசுரமெய்ஞ்ஞானதலம், மகேசசகாயதலம், மகேசாகாயதலம், மகேசபாகாயத்தலம், தருமாசாரதலம், பாவாசாரதலம், ஞானசாரதலம், பிரசாதிகாயாநுக்கிரகதலம், இந்திரியாநுக்கிரகதலம், பிராணுநுக்கிரகதலம், பிரசாதிகாயார்ப்பிதத் தலம், பிரசாதி காணர்ப்பிதத்தலம், பிரசாதித்தலம், பிரசாதிபாவார்ப்பிதத்



இலிங்கதசேசுர மூர்த்தி.

தலம், சிசுருஷைத்தலம், பிரசாதி சேவியத்தலம், பிராணலிங்க தலம், பிராணலிங்கி யந்தராத்மதலம், பிராணலிங்கிப் பரமான்ம தலம், பிராணலிங்கி நிர்த்தேகான்மதலம், பிராணலிங்கி நிர்ப்பாவகாத்ம தலம், பிராணலிங்கி நட்டாகும தலம், ஆதிப்பிரசாதித் தலம், அந்திய பிரசாதி லிங்கதலம், தீட்சாபா தோதகத் தலம், அங்குட்ட பாததீர்த்தத்தலம், சரணசிட்சா பாதோதகத் தலம், சரணஞான பாதோதகத் தலம், கிரியாநிட்பக்தித்தலம், சரணபாவநிட்பக்தித் தலம், சரணநிட்பக்தித் தலம், சரண பிண்டாகாசத் தலம், சரண விந்தாகாசத் தலம்,மகதாகாசத் தலம்,கிரியாப்பிரகாசத் தலம், பாவப் பிரகாச தலம், ஞானப்பிரகாச தலம், சுவிகிர்தப் பிரகாசத்தலம், அயிக்க சிட்டோதனத்தலம், சாரசரத்தலம், அயிக்கபாண்டத்தலம்,அயிக்கபாசனத்தலம், அயிக்க அங்க லேபனத்தலம், அயிக்கசுபாரஞ்சத்தலம், அயிக்கபாவா பாவலயத்தலம், அயிக்கஞானசூனியத்தலம், சூனியத்தலம் என்பனவாம். இவற்றின் விரிவெல்லாம், வீராகமம், இலிங்க சோபானம், மதங்காகமம் என்னு மிவற்றிற் பரக்கக் காண்க.

இவைகளின் நின்று நின்று மேற்போய காலத்து முத்தியுண்டாம். இவைகள் எல்லாம், பரலிங்கதலம், பக்தலிங்கதலம், மகேசலிங்க தலம், பிரசாதிலிங்க தலம், பிராணலிங்கி தலம், அங்கலிங்க தலம் என்னும் ஆறினுளடங்கும். அவை ஆறு இலிங்கத்தினும், அவை சாதாக்கியம் ஆறினும், அவை கலைக ளாறினும், அவை சத்திகள் ஆறினும், அச்சத்திகள் முருகக்கடவுளின் ஆறுதிருமுகங்களினும் அடங்கு மென்க.

இங்ஙனம் முத்தியுபாய மாகிய சத்தி, கலை, சாதாக்கியம், இலிங்கம், அறுதலம் என்பவற்றுள் நூற்றொரு தலங்களையுங் கொடுத்துத் திருவடிப் பேறுதவும் ஈச்சுரராய் விளங்கலின் இலிங்கதலேச்சுரமூர்த்தி யாயினர்.

க0

### இலிங்காமிர்தம்.

[illegible]வி ரண்டு முகத்தினுஞ் சத்திகண்
  முன்னர்த் தோன்றக் கலைகள் சதாக்கிய
மாவி ருந்துரு வாரு மிலிங்கமவ்
  வவற்று நூற்றொரு மெய்த்தலங் காணுமே
தேவி ருந்த வவைதரி சித்தபேர்
  செப்பி லிங்கத் திலிங்கம தாவரே
கூவி ருந்த தலமிவை கொள்ளவே
  கூறு மாகம முண்மையிர் சொல்விரே.

இலிங்க தலேச்சுர மூர்த்தயே நமஃ

---

இருபத்தேழாவது,

## முட்டை நாமக் குமார மூர்த்தி.

---

* சோழ நாட்டிலே சைவ வேளாள குலத்திலே பிறந்து, திருச்செங்காட்டங் கோட்டத் துறையூர் சேர்ந்து, முத்தமிழினும் வல்லாராய், சிவபெருமான் ஒருவரையன்றி வேறெவரையும் பாடாது சிவபத்தியின் முதிர்ந்து விளங்கினமையாற் சிவகவி எனப் பெயரிய ஒருபுலவர் இருந்தார். அவரிடத்து ஓர் குகனடியார் சென்று, நல்லிசைப் புலவீர்! வேலாயுதக் கடவுள் மீது ஒரு பிரபந்தம் பாடித் தந்தருள்க என்றார். சிவகவி யாகிய பொய்யாமொழிப் புலவர் " ஐய! சிவபெருமானை யன்றி எந்நாவானது மறந்

---

* தென்பாண்டி நாட்டிலே யுள்ள பொய்யாமொழி என்னும் ஊர்ப்பிறந்தார் என்னும், அவ்வூர்ப் பெயர் முன்வைத்துப் பொய்யா மொழிப் புலவர் என வழங்கப்பட்டாரென்று முரைப்பாரு முளர். "பொய்யா! மொழி" எனவும், "குஞ்சைப் பாட்டமாட்டேன் என்றது, பொய் ஆம் மொழி எனவுஞ் சுப்பிரமணியப் பெருமான் உரைத்தமை யாலவந்த பெயரென்பது பலர் கருத்து.



விசுவரூபமூர்த்தி.

தும் பிறரைக் கூறாது. சிவனாகிய சேவற்கு ஒரு சிறுகுஞ்சு போன்ற அவனை நந் நாப் பாடாது,, என்றார். அடியவர் வருந்தி, "தந்நாக் குஞ்சினுக்கும் பாடும், கூழுக்கும் பாடும்" என்று, பெருமான்றிருக் கோயிற் சந்நிதி சென்று, தந் தூஷணத்தை யடியனேன் பொறுக் ககில்லேன். புலவன் அகங்காரத்தைப் போக்கியருளல் வேண்டு மென்று செவ்வேளை யிரந்தார். பெருமானார் அங்ஙன மாக வென் றறித்துச், சிவகவியார்க்கு மிடியைப் பெருக்கினார். புலவர்,

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

என்ற முதுமொழிப்படி, வறுமை வரவாப் பெரிதும் வருந்தி, தஞ் சைமா நகரத்தி லரசு புரிந்த இருகை படைத்த கற்பக தருவைப் போன்ற சந்திர வாணன் என்னும் அரசன் வண்புகழை யோர் அகப் பொருட் பதுந்துக் கோவைபாடி யரங்கேற்றினர். அரசன் ஒவ்வொருபாடலுக்கும் ஒவ்வோர் தேங்காயளவு பொன்கொடுத்து வேண்டிய பெரும் பொருள்களும் பரிசாக அளிக்கப்பெற்று, வறி யார்க்கு மிகுதியாகக் கொடுத்து, எஞ்சிய சிறிது பகுதியைக் கைக் கொண்டு வழிநடந்து வரும்போது, மனுடர் சஞ்சார மில்லாத அருஞ் சுர மெனப்படும் பாலை நிலம் நேர்ந்தது. ஆங்கு வெயில் வா தனை யாற்றாது விரைவுடன் நடக்கையில், குமாரக்கடவுள் அவ ரைத் தடுத்தாட் கொள்ள விரும்பி, திருக்கரத்திலே வேலும் வில் லும் அம்புகளும் கொண்டு, காலிற் செருடுதோன் மாட்டிக் கார்மேகம் போல வேகமா நடந்து ஆர்ப்பரித்து ஓர் வேடராக வந்தார். புல வர் கண்டு நடுநடுங்கி, "அந்தோ! பொருளாசை கொண்டு வந்து, பெறற்கரிய உயிரையும் இழக்க நேர்ந்ததே. பரமபதீ! நின்னையன் றிப் பாடாத விரதத்தை யழித்து நிருபனைப் பாடினமையால் வந்த துன்பமோ? என் செய்வே" னென்று நடக்குங் கால், வேடனார்,

அடா! நில்லு நில்லு என்று விளித்தார். அது கேட்டு இடிகேட்ட சர்ப்பம்போல் ஏங்கி யுயிரிழப்பார் போல நின்றார். வேடமூர்த்தி சமீபித்து நீ யாவன் என வினவ, புலவன் என்றார். குமார சுவாமி யாங்கிராத மூர்த்தி நகைத்து, புலவன் என்னும் பெயர் நங்குறிச் சித்தெய்வமாகிய செவ்வேடனக்கு ஏற்கு மன்றி வேறியாவர்க்கு அடுக்கும்? ஒரு சிறிது அத்தெய்வத்தின் மாணவன் ஆகிய அசத்தி யற்குஞ் சேறும். நீ புலவன் என்று மொழிவ தெமக்கு வியப்பே. ஆயினும் நினக்குக் கவி வருமோ வென்றார்.

புலவனார் அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பயநீங்கி விம்மித முற்று, இத்தகைய வேடன் பொருளைக் கவர்வானன்றி யுயிரைப் பருகான் எனத் தேறி, உன் பெயர் என்னென்றார். என்பெயர் முட்டை. அப்பெயரும், இந்நிலமும், சுரம் போக்குந் துறையும் அமைய வெண்பாவிற் "பொன் போல்" என்று தொடங்கிமுடித்தி யென்றார். பொய்யா மொழிப் புலவர் உடனே,

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு.

எனப்பாடினர். வேட மூர்த்தியாம் முட்டை நகைத்து, * புல வன் என்பது இடையினில் ஆயிற்று. நின்கவியிற் சொற்குற்றந் துவளினும், மிகையாம் பொருட் குற்ற மொன்றனைக் காட்டுகின் றோம். சதுரக் கள்ளிச் செடிகள் எரிந்து பொறிபறக்கும் பெரு நெருப்புமிக்க காட்டினிடத்தே, சிறுநெருப்பிற்குத் தானும் வெந்து சாம்பராகும் வேலமரத்து முட்கள் தைத்தல் யாங்ஙனம்? ஆதலாற்

* புலவன் என்பது இடையினில் ஆயிற்று, எனக் கொண்டு, புல்லவன் ஆனாய் எனவும், கவிலே அப்புலமைத் தன்மை இலதாயிற்று எனவும் வேறு பொருள்கடோன்றி நின்றது. இக்கதையைப் புலவர் புராணத்தாசிரியர் சிறிது பேதமுறச் சொல்வர்.

பொய்யாம் மொழிப் புலவ ஞயினே. நிற்க, யாம் பாடுகின்றேம். அதன்கட் குற்ற முளதாயிற் றெரித்தி. அக்கவியில் நின் பெயரும், பாலைநில வருணனைகளும், உரிப்பொருளும், இரங்கற் றுறையும் அமைவதன்றி, நீ குற்றத்துட் டவறி, விரதத்திற் றவறி "விழுந் ததுபோல்" என்னுங் கூட்டுமமையப் பாடுகின்ருேம் என்று,

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழி
னெழுந்து சுடர்சுடு மென்றுஞ் - செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிபகைஞர் போல்.

என்னுந் திருவெண்பாவைச் சொல்லினர். பொய்யாமொழிப் புல வன் நீயா, அல்லது யாமா எனக் கேட்டனர். புலவனர் என்று மடையாத அதிவியப்புந் திகிலு மடைந்து வேடரை வணங்கினர். வேடர், புலவ வருந்தலை என்று தமது வடிவத்தைக் காட்டி, அன் ருெருநாள் நமது அடியவன் துதிகூறுக என்று கேட்ட காலத்து, "கோழியைப் பாடிய வாயாற் குஞ்சினைப் பாடேம்" என்று இழித் தனை யன்ருே! இப்போது கோழியினுங் குஞ்சினும் முட்டை பெரிதாயிற்ருே ? யாமுஞ் சிவமும் வேறல்லேம். எம்மையும் அவரை யும் புராணுதிகள் மைந்தன் றந்தையெனக் கூறுவது உபசாரமே. சிவாகம வேதங்களி னுண்மைப் பொருடெரியாமையால் எம்மை வேருக எண்ணினை. சித்தாந்த வுண்மைகளைத் தெளிந்துய்தி அகத் தியனிடத்து,, என்று ஓதி மறைந்தருளினர். புலவர் பொதியஞ் சென்று தவங்கிடந்து அகத்திய முனிவருழை யவ்வுண்மை விளங் கப் பெற்றுக் குகேசன் றிருவரு ளடைந்தார்.

"குஞ்சினைப்பாடேன்" என்று இழித்த புலவரைப் பொய்யா கும் மொழி யாக்க வேடவடிவு கொண்டு, முட்டையென்னும் பெயர் சொல்லிப் பாடுவித்து ஆட்கொண்டமையால் முட்டைநாமக் குமார மூர்த்தி யென்று உலகங் கூறுகிற்கும்.

## பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.

வாரக் தான்வரு மமரிட மெனப்பொடித் தளற்றி
வாரந் தான்வரெ னுளங்கனி ரெனவசி வரையன்
வாரந் தான்வரு பாடல்சொல் லவன்றன்மேன் மலர்வாய்
வாரந் தான்வரப் பெற்றவன் வளவனுட் டவனே.

## புலவர் புராணம்.

பொருவாதுயர் சுவைதோயகப் பொருட்கோவைசொ லிடனு
மொருபாடலுக் கம்பொன்னொரு தேங்காயள வொப்பப்
பெருகார்வமொ டுதவிப்பிற பொருளும்பல பெய்தா
னருகோர்துணை யில்லானவை கொடுவீதிய ணைந்தான்.

ஆயினென்பெயர் முட்டையா மென்மிசை
யருந்தமிழ்க்கவியொன்று
தீயினுங் கொடிதாய விப்பாலையின்
திறத்தொடு பகரென்றான்
வாயியம்புமுன் பொன்புரை கள்ளியின்
வன்பொறி யுருங்காளிற்
போயினுள்சிறு பேதைவேன் முட்டையைப்
போற்றலா ரெனவந்தோ.

குஞ்சின் மேற்கவி பாடிடே னென்றதிற்
குறியமுட் டையைப் பாடற்
கொஞ்சி லானது கேட்டுள நாணிமற்
றொருவ ரின்மையை யுன்னி.

வேடன்பாடல் கேட்டப்பெரும் புலவன்றான்
வெட்க மிக்குறும் வேலை
யாடன்மாமயிற் பரியிற்றன் கோலமா
யரிவைய ரிருவோருங்
கூட வைகுறத் தேவர்கள் சூழ்தரக்
குலவு சேவைய ளித்தான்.

முட்டைநாமக்குமார மூர்த்தயே நமஃ

---



சகத்திராண்ம பரிபாலனமூர்த்தி.

இருபத்தெட்டாவது,

# சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி.

மதுரையிலே * கணக்காயன் மகனார் நக்கீரர் என்பார், சரசுவதியி னம்சமாகலாலே கலைகளில் மாபெரும் புலவரா யிருந்தார். முச்சங்கத்துட் டிருவாலவாய்க்கணிருந்த கடைச்சங்கம் உண்டாய போது சங்கப் பலகையில் முதன் முதல் ஏறி வீற்றிருந்தவர் இவரே. சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மருள் நடு நாயகமாக விளங்கினோரும் இவரே. இத்தகைப் பெருந்தகைப் புலவர், திருவாலவாயடிகளாற் செய்தருளப் பெற்ற,

> கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
> காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
> செறியெயிற் றரிவை கூந்தலி
> னறியவு முளவோ வறியும் பூவே.

என்னுந் திருமுகப் பாசுரத்திலே குற்றங்கூறி, ஆலவாய்க் கடவுளுடன் நேர் நின்று வாதித்தார். பெருமானார். "இவனுக் கிலக்கணஞ் செவ்வனே தெரிந்தில" தென்று, அகத்திய முனிவரை யழைத்துப் போதிப்பித்தருளினார். ஆகவே யிந்நக்கீரனார் அகத்தியனார் மாணாக்கரு மாவர். அகத்திய ருபதேசங் கேட்ட வக்கணமே தாம் வாதித்தன வெல்லாம் வெறுமையன வென்றுணர்ந்து பரிவுற்றுச் சிவபெருமான் மீது அன்பு செய்து வழிபடுவாராயினார். ஒருநாள் மதுரைக்குச் சமீபமானதும், குமாரக் கடவுளின் ஆறுதிருப்படை வீடுகளு ளொன்றாயதும், தெய்வயானை யம்மையாரை இறையவன் திரு

* கணக்காயர்—உபாத்தியாயர். மதுரையிலே நெய்தனிலத்தில் ஒருபரவனுக்கு மகனாகப் பிறந்தார் என்றும், பாலப்பன் என்பது அவரது பிள்ளைத் திருநாம மென்றும், "சங்கறுப்ப தெங்கள்குலம்" என்னும் பாடலை நக்கீரனார் பாடியதாகக் கொண்டு தீர்மானிக்கப் படுமென்றுங் கூறுவார் சிலர். சங்க நூல்களுள் இன்னவற்றிற்கு ஆதாரங் காணேம்.

மணஞ்செய்த தலமானதும், சிபிச் சக்கிரவர்த்தி, அரிச்சந்திரன் முதலாயினோராற் பூசிக்கப்பட்டது மாகிய திருப்பரங்குன்றத் தெய்வத்தைத் தரிசிப்பான் சென்றார். ஆங்குள்ள சரவணப் பொய்கையி னீராடி நித்திய கரும முடித்து, பஞ்சாக்கரப் பாறை யென்னும் பெயருடைத்தாய் அரசமா நிழற்கணிருந்த வத்தலக்கணிருந்து பஞ்சாக்கர செபஞ் செய்யா நின்றார். * சீகாளத்தி புராணம் ஞானப் பூங்கோதை யம்மையாராந் தேவியார் திருக்கூந்தலுக்கும் இயற்கை வாசனை யில்லை யென்று உரைத்தமையினாலே நக்கீரனார்க்குக் குஷ்ட நோய்வந்தது. அது கைலை தரிசித்தாற் றீருமென்று சிவனாருரைத்தவாற்றாற் கைலைக் கேகுவாராய் இமயமலைத் தடாகத்தி னருகுள்ள ஆலமரத்தி னிழலி லுட்கார்ந்தாரென்று கூறும்.

இங்ஙனஞ் செபஞ் செய்து சிவபூசை இயற்றுங் காலத்தே, சததளத்தாமரை மலர்கள் விளங்குஞ் சரவணப் பொய்கைக் கரையிலே யுள்ள அரச மரத்தி லோர் விசேட முண்டு. என்னை யெனில், அதன் இலைகீழே விழுங்கால், நீரிலே வீழின் மீனாகவும், நிலத்திலே வீழிற் பறவையாகவும் போதல் வழக்கம். அற்றைப் போது வீழ்ந்த இலையோ பாதி நிலத்தினும், மற்றோர் பாதி நீரினும் விழுந்தமையால் ஓரதிசயங் காணப்பட்டது. என்னை? நீரில் வீழ்ந்தது மீனாகி நீர்க்குட் செல்வான் இழுப்ப, நிலத்தில் வீழ்ந்த மற்றைப் பாதி பருந்தாகி மேலே பறப்பான் இழுப்ப விரண்டும் இன்னற்படுவதை யறிந்த நக்கீரனார் பார்த்து மனமுருகினார். அவற்றின் துன்பத்தைக் களைதல் மேலான புண்ணிய மாகு மென்று நினைத்துத்

* இக் நக்கீரர் சரிதத்தைச் சீகாளத்தி புராணம், திருப்பரங்கிரிப் புராணம், புலவர் புராணம் என்பன பலவேறுபாடுறப் பகர்ந்தன. நக்கீரர் காளத்திக்குத் தங்குட்டந் தீர்க்கச்சென்ற வழியினிது சேர்ந்த தென்றதுமொன்று. திருப்பரங்கிரிப் புராணம் நிலத்தில் வீழ்வது பறவையாமென்ன, புலவர் புராணத்தார் ஓந்தியென்றார். அது "அங்குதிர்ந்த வாசிலை யொன்று நீர்ப் - பங்குபாதி கரையினிற் பாதியா - யங்கு மீனுட னோந்தியு மாகியே - யிங்கு மங்கு மிழுக்கைகண் டானரோ" என்ற செய்யுளாற் றெரிக. புலவர் புராணத்தாரின்னும் பல வேறு பாடுரைத்தலி னது கருதற்க.

t2974



தாஞ் செய்திருந்த பூசையை முடிக்காது இடையே யெழுந்து சென்று பறவை வேறாகவும், மீன் வேறாகவுஞ் செல்லுமாறு கூறாக்கி வாராநின்றார்.

அதற்கு முன்னரே யிவர் போற் சிவபூசையி னின்றுந் தவறினார். தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மரை யெடுத்துத் தம்மலைக் குகையுள் அடைத்து, உண்ணுதற்கு இன்னும் ஒருவர் குறைந்தமையால், குறித்த அரசினிலையை நிலத்திலும் நீரிலும் பாதிபாதியா விழுமாறு கிள்ளி யெறிந்து நக்கீரரைத் தூக்குதற்காக விருந்த * அண்டாபரணன், உக்கிரன் என்னும் பூதங்கள் அவரை யெடுத்துச் சென்று தம் மலைக் குகையி னுள்ளே வைத்து, நீராடுவான் சென்றன. அக்குகையி னுள்ளே யமர்ந்த வவரெல்லாம் எக்கமுற்று நக்கீரரிடம் வந்து சூழ்ந்து வைவாராயினார். பாவியே! எமன் போல இவண் வந்தனையே. இந்நாள் காறும் பூதங்களாற் கொடுக்கப்பட்ட சீரிய வுணவுகளை யெல்லாம் விலாப் புடைக்க நன்கு புசித்து மகிழ்வுற்றிருந்தேம். இற்றைத்தினம் நங்களுயிரைப் பறிக்க வந்தனையே. ஐயகோ! என் செய்கேம். பூதங்களோ நீராடுவான் குகையை யடைத்துச் சென்றன. வந்தது மொருசேர விழுங்குமே யென்று வருந்தா நின்றனர்.

நக்கீரர் குமாரக் கடவுளை நினைந்து அன்புடன் றுதிக்கத் தொடங்கி யவர்களைப் பார்த்துச் சொல்வார். அன்பர்களே! ஒன்றற்கும் நீவிரஞ்சற்க. திருவருளாலே யறுமுகப்பரம் பொருளை யறியலாம். ஆகம அநுமானாதிகளாலுந் தெருண்டு வாழலாம். ஆனந்தாநுபவ மடையலாம். மலமாயா கன்மங்களா லுண்டாகுந் துன்பங்களையும் போக்கலாம். குமார பக்தர்களாகிய நுங்களுடன் கூடும் வாழ்வைப் பெற்றேம். நுங்களையும் உயிர்பிழைக்கச் செய்வே மென்று குகபரப்பிரமத்தின் மேற் றுதிகூறத் தொடங்கினர். பிரமா, விட்டுணு, காலருத்திரர் என்னு மூவரையும் அதிட்டித்துச் செய்யும்

முத்தொழிலையு முடையது உலகம். மூலகிருத்தியத்தையிவர் அதிட்டான வாயிலாற் செய்து, சூக்கும கிருத்தியத்தைத் தாமாகவே செய்து ஞான, தான, கிருத்திய தார தம்மியங்களாற் பலவகைப் பட விளங்கும் பரமபதி உலகப் பொருள்க ளெல்லா முவப்பவருள் செயற் பால ரென்னுங் கருத்தை யமைத்து "உலகமுவப்ப" எனத் தொடங்கி, முதலாவது படைவீடு திருப்பரங் குன்றாகக் கொண்டு துதித்து, மற்றைய திருச் சீரலைவாய், திருவாவி னன்குடி, திருவேரகம், பழமுதிர் சோலை, குன்று தொருடல் என்னுந் திருத்தலங் களைவைத்து அகவற்பாவாற் றுதித்து முற்றி, இறுதியில் வெண் பாக்களுங் கூறினர். அவை வருமாறு:—

### நேரிசை வெண்பா.

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா—யென்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேறே
யுளையா யென்னுளத் துறை. (க)

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல். (உ)

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. (ங)

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். (ச)

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. (ரு)

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
* வெஞ்சமரந் தோன்றில் வேலொன்று—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோது வார் முன். (சு)

முருகனே செந்தின் முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான். (எ)

* காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி. (அ)

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். (கூ)

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினான்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும். (க0)

என முடித்துத் திருமுருகாற்றுப் படை யென்னுந் திவ்விய பிரபந்தத்தைத் தத்துவங் கடந்த தனிப்பரம் பொருளாகிய கந்தழி யென்னுங் கந்தக் கடவுளின் றிருவடிமீது சாத்தினார்.

முருகக் கடவுள் மயில்வாகனா ரூடரா யெழுந்தருளி, வேற் படையை விடுத்து, அம்மலைக்கண்ணே யின்று மிக் கலியுகத்தோர் காணும்படி பாறையைக் கிழித்து, பூதங்களையு மோட்டிக் கீர வருக வென்றருளினர். "பூதம் உண்ண வந்த போது வேலாயுதக் கடவுள் அதனைத் தண்டத்தா லடித்துக் கொன்று மலையையு மோதிப் பிளந்து வெளிப்படுத்தினார்" என்று திருக் காளத்தி புராணங் கூறிற்று. * நக்கீரரும் மற்றையோரும் பேரானந்தத்துடன் வெளிப் போந்து ஆடினர்; பாடினர். பிரம விட்டுணுக்க ளிருபக்கத்துந் துதித்து நிற்ப, பூத கணங்கள் புடைசூழ, தேவர் முனிவர் வணங்கி வணங்கி யெழ, மயில்வாகனத்துத் தேவிமார் சகிதமாய் விளங்கியருளிய சுப்பிரமணியப் பெருமானை நக்கீரர் தரிசித்துப் பரவச மடைந்தார். பெருமானார் நக்கீரனாரைத் திரு நோக்கஞ் செய்து, "அன்பனே! நினக்கு என் வேண்டும். கூறுதி தருதும்" என்ன, நக்கீரர் கூறுவார். "தேவரீர் திருவருளையடைந்த வெற்கு இனிவேண்டப் பெறுவதூஉ மொன்றுளதோ, ஆயினும் அன்பர் பலர் காசியிற் கங்கையை யீண்டழைப்பித்தருளல் வேண்டு மென்றனர். அதனை யங்ஙன மழைப்பித்துத் தரல்வேண்டு" மென்று பிரார்த்தித்தார். குகபரஞ்சுடர் அங்ஙனே யழைப்பித்து மலையினுச்சியிலே காட்டி, கங்கை யென்பதற்கு அடையாளமாக ஐவகை நிறமுடைய தேளி மீன்கள் இருத்தலையுங் காட்டி மறைந்தருளினார். நக்கீரரும் பிறரும் அதன்கண் தோய்ந்து அவனைப் பூசித்திருந்தனர். வேலாற் பிளக்கப்பட்ட பாறைஇன்றும் வேலெறிந்த பாறை யெனச்சொல்ல இருக்கின்றது.

---

* "வெஞ்சமரி லஞ்சலென வேறேன்றும்" எனவும் பாடம். சில பிரதிகளிலே ஏழு செய்யுள்களும், சிலவற்றிலே இப்பத்துச் செய்யுள்களுங் காணப்பட்டமையால் அவைகளையுங் காட்டினோம். இத்திரு முருகாற் றுப்படை பத்துப் பாட்டின் முதலாவதாய்ச் சேர்க்கப்பட்டது. பதினோராந் திருமுறைத் திருவருட் பாக்களுள்ளு மொன்றாக நம்பியாண்டார் நம்பிகளான் வகுக்கப்பட்டது. இதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியருரைசெய்துளார். இது பாராயண நூல்களுள் ஒன்று.

"பின்னர் முருகக்கடவு ளாஞ்ஞையாலே அவ்விமயமலைக்க ணுள்ளதோர் தடாகத்தின் மூழ்க, அது பொன்முகலி நதியின் கரையேற்ற எறித், திருக்காளத்தி மலைசென்று அந்தாதிபாடிக் குட்டநோய்நீங்கப் பெற்று முத்தியடைந்தன" ரென்று திருக்கா ளத்தி புராணஞ் செப்பிற்று,

பூதங்களால் அடைக்கப்பட்ட ஆயிரவரை மலைக் குகையைப் பிளந்து காத்தருளினமையாற் சுப்பிரமணியக்கடவுள் **சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி** ஆயினர். சகத்திரம்=ஆயிரம். ஆன்மபரிபா லன=ஆன்மாக்களைக்காத்த, மூர்த்தி=திருவடிவினர் என்பதாம்.

மகிம்ந ஸ்தவம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஆதித்தியபுராணம். (பிரமகைவர்த்தம்.)

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ।

திருப்பரங்கிரிப் புராணம்.

**அப்பணிதஞ் சிரத்தேந்தி யப்பணிவோ னருள்குமா னருளையெ ண்ணுச், செப்பரிய நக்கீரன் சரவணப்பூந் தடங்குடைந்து திருநீ றிட்டுக், கப்பெழுந்த திருவாசி னீழலிலே மருவுபஞ்சாக் கரவெண்**

பாறை, யொப்பரிய தலனிருந்தே யஞ்செழுத்தை யுருவியற்றி யுறைந்தகாலை.

திருவாசி னிலைச்சருகு தெண்ணீரில் விழும்பொழுது சேலதாகும், பொருகரையில் விழும்பொழுது பறவையா மென்றுவரும் பூதர் தேர்ந்து, மாமுடியிற் சருகதனைக் கிள்ளியிட வங்குமிங்கு மருவி வீழப், பரியகய லொருபுறமும் பறவையொரு புறமும் பதப்பக் கண்டான்.

அப்பொழுது நக்கீரன் றமிழ்மாலை யிளையோனென் றறைந்து சூட்டச், செப்பரிய குடமுனிவர்க் குபதேசஞ் செலுத்துமொரு செஞ்சொ லாளி, யிப்பொருப்பி லடையாளங் கலியுகத்தோர் கண்டிடவே வெறியப்பாறை, யொப்பறநே ரேகிழித்தங் கிருபிளவாய்ப் பிளந்திடவே யுவப்பின் வந்தான்.

திருநாராசந்தி புராணம்.

முருகனைத் தொழுது சென்று மூழ்கினு னத்தடத்தி
லிருவினைக் குறும்பு கொல்லு மிலங்குதென் சயிலைதோன்றப்
பொருதிரைக் கங்கைநாளும் பொன்முக ரியினெழுந்தான்
சுரர்கண்மொய்த் தலர்பூமாரி சொரிந்தனர் விசும்பு போர்ப்ப.

பாடும்புலவன் றனக்கொருதான் பரிசுகொடுப்பத் திருவுளங்கொண்
டாடும்பெருமா னெதிர்நின்றே யறைதிவேண்டிற் றெனவுடம்பு
கூடும்பிணியிங் கொழித்தவருட் குன்றேயென்றும் போறிவை
மூடும்பிணியுங் களைந்துனது முளரித்தாட்கீ ழிருத்தென்றான்.

அந்தமாதி யிலாக்கயிலை யமர்ந்தபெருமா னந்தாதிச்
சந்தமாலைப் புலவனது சத்திபாதத் துயர்ச்சியாற்
பந்தபாச மறமாற்றிப் பன்றியுருவாய்க் காண்பதற்கு
வந்தமாலு மறியாத மலர்த்தாணிழலி லிருத்தினான்.

சகத்திரான்ம பரிபாலன மூர்த்தயே நமஃ



வரதராஜ,மூர்த்தி.

## இருபத்தொன்பதாவது,

# வரத ராச மூர்த்தி.

---

வாமன கற்பத்திலே திரிகூடாசலம் என்னுந் திருத்தலத்தின் வடகீழ்த் திசையிலே இலஞ்சி என்னுங் குமாரதலம் ஒன்று உள்ளது. ஆங்கே பிரம புத்திரராகிய காசிப முனிவரும், திருமாலின் அம்ச மாகிய கபில முனிவரும், சீகண்ட பரமசிவ னிடத்தி னின்றுந் தோன்றிய துருவாச மகாமுனிவரும் ஒருவரை யொருவர் சந்தித்தனர். அக மகிழ்ச்சியுடன் பல விடயங்களை விசாரித்தனர். காணப்படுகின்ற இவ்வுலகம் உள்பொருளா? என்னும் வினா நிகழ்ந்தது. அப்போது கபில முனிவர் உலகம் மித்தையே. பிரமம் ஒன்றே உள்ளது.

அகமேகஃ தமமாஸம்| வர்த்தாமிச பவிஷ்யாமிச| நாங்யஃ சச்சிமத் தோவ்ய திரிக்தஃ| யதாத மீஸ்தந் நதி வாநராத்ரஃ நசந் நசா ஸச்சிவ எவ கேவலஃ| ப்ரஹ்மாவா இத மக்கிர ஆசீத்| ஏகமேவாத் விதீயம்| (யானொருவனே யாதியி லிருந்தேன்| இருக்கின்றேன்; இருப்பேன்| என்னிலும் வேறா யொருவனு மிலன்| என்ஞான் றிருளிருந்தது; அஞ்ஞான்று அங்குப்பகலில்லை. இரவில்லை; சத்தில்லை; அசத்தில்லை; தனித்த சிவனே யிருந்தான்.| பிரம மன்றோ விது; ஆதியிலுள்ளது; ஒன்றே யுள்ளது; இரண்டற்றது.)

எனவரூஉம் வேதவசனங்களானே துணியப்படலால் உலகம் மித்தையே. அதாவது இல்பொருளே. கயிற்றிற் பாம்பு கானனீர், கிளிஞ்சில் வெள்ளி, சொப்பன வுலகு, வானத்து மை, மலடி மகன், முயலின் கொம்பு இவைபோலச் சச்சிதானந்தபரப்பிரமத்தினின்றுஞ் சகசீவபரங்கள் தோன்றலிற் பொய்யே.

[illegible] ।
[illegible] ||

(இந்தப் புருடனிடத்தே பிராணவாயு மனம், எல்லா விந்திரியங்கள், வெளி வாயு, தீ, நீர், எவற்றிற்கும் ஆதாரமான மண் என்பவைகள் உண்டாயின.)

இங்ஙனம் யசுர்வேத சாகை முதலாயின வியம்பாநின்றன. ஆகலின் ஒன்றே பொருள். அதுவே சத்து. இரண்டாவதில்லை என்றியம்பினர். துருவாச மாமுனிவரும் காசிப முனிவருங் கபிலரை நோக்கி, முனியே! உலகந் தோன்றிநின்று ஒடுங்கக் காண்கின்றேம். அவன் அவள் அதுவெனக் காணப்படும் இவ்வுலகங்காரிய வடிவாகக் காணப்படலாலே நிமித்த காரணனுங் கடவுள் தோற்றுவித் தொடுக்குகின்றார். ஆகலான் மகாசங்கார காரணனாகியமுதலையுடைத்து. என்னை? உலகம் முத்தொழிலை யுடைத்து. அம் முத்தொழில் வினையுஞ் செய்வோரின்றி நிகழாவாகலிற் கர்த்தாவை யுடைத்து. என்பது வேதமுடிபாகலின். "உள்ளது போகாது இல்லது வாராது" என்ற முது மொழிப்படி முயற்கோடு எங்ஙனந் தோன்றாதோ அங்ஙனமே யிவ்பொருளுந் தோன்றாதென்க. என்றின்ன வுண்மைகளை வலியுறுத்தி யுலகமும் உள்பொருளே யென்றனர். வேதங்கள் உலகம் பிரமத்தினின்றுந் தோன்றிய தென்றது கிழங்கினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கயம், சலசம் என்றாற்போலுமென்க என்றனர். அதனையொப்பினார் கபிலரும். அதன் பின்னர் அந்நிமித்த காரணக் கடவுள்யாவன் என்னும்ஆராய்ச்சி யவர்க்குள் நிகழ்ந்தது.

பிரம புத்திர ராகிய காசிப முனிவர் தமது தந்தையாகிய பிரமனே உலகங்களைப் படைக்குங் கருத்தா வென்றனர். திருமாலின் அம்சமாகிய கபிலனார் தம் அம்சமாகிய திருமாலே அக்கடவுளாமென்றார். துருவாச மாமுனிவர் அவையிற்றைக் கேட்டுச் சொல்வார். அவ் விருவருங் கருத்தா வாகார். என்னை யெனிற் கூறுதும். அவ்விருவரையும், அவர்தந் தொழில்களையும் அவ்விரு தொழிலாணிகழு முலகத்தையும் அழிக்கின்றவனே சிறந்தோனாகலின் உருத்

திரனே காரணக் கடவுளாமெனக் கழறினர். இங்ஙன மூவரும் வேறு வேறு மூவகைக் கொள்கை யுடையாராய் வாதிட்டுக் கலாய்த்தனர். அப்போது இத்தலத் தெழுந்தருளிய குமாரக்கடவுளே யிவ்வுண்மையைத் தெரித்தருளுவா ரென்று துருவாசமாமுனி தோத்திரித்தார்.

அதுகாலைக் குமாரக் கடவுள் ஆடகப் பொன்போன்ற திருமேனியும், ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும், வலத்திருக்கரம் இரண்டினும் வரதம் வேல் என்பன பொருந்தவும், இடத்திருக்கரங்கள் இரண்டினும் அபயம் குக்குடம் என்பன பொருந்தவும், இளமைப் பருவ முடையாராய் வெளிப்பட் டருளினார். அப்போது முனிவர் மூவரு மெழுந்து வணங்கிப் பலதுதிகள் பாடினர் ஆடினர். முருகக் கடவுளார் தாபதர்களே! நுமக்கென் வேண்டு மென்று கேட்டருளினர். அவர்கள் கலையுணர்புலவ! குன்றெறிந்த குகனே! மூவர்களுள் யாவர் பரப்பிரம மாவர்? அதனைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளி யடியேங்களின் ஐயப்பாட்டை யொழித்தருள வேண்டு மென்று இரந்தனர். பெருமானார் அவர்மீது கருணைகூர்ந் தறைவார். இருடிகளே! இரணிய கருப்பன் கடவுளல்லன். அவன் நான்முகனானதைக் கேட்டிலிரோ? நம்மாற் சிறை யிடைப்புக்குப் பல்லாயிர வருடகாலம் வருந்தியதும், வேடனாய்ப் பிறந்து துன்பத்தில் வீழ்ந்ததும் அறியீர்போலும். மற்றைய திருமால் பிறவிகளிற் புக்கமையும் சாப வயத்தாற் றுன்பமுற்றதும், மதனெரிந்த காலை மௌனமாகி மறைந்ததும், வாசுகி விடத்தாற் கருநிற மடைந்ததுங் கேட்டிலிரோ? ஆகலாற் றிருமாலுங் கடவுளல்லன். உருத்திரனும் அன்னவாறே யாவர்.

மூவர்க்கும் மேலாய மகாசங்காரணனே கருத்தா. அவனருளானே தாங்கியே யுலகங்களுள் அணுத்துணையினு மணுத்துணையாய பகுதியைப் படைத்துங் காத்துந் துடைத்து நிற்கின்றனர். ஒவ்வோரண்டங்களினும் நாம் அதிட்டித்து நிற்கும் பலப்பல பிரமர்களும்

பலப்பல விட்டுணுக்களும் இருக்கின்றனர். அவர்களை யெல்லாம் பார்க்கக் கடவிர் என்று அழைத்துக் காட்டி யருளினர். இங்ஙனம் எத்தனையோ பிரமர்கள் விட்டுணுக்கள் முதலியோர் மாண்டனர். மகாசங்கார காரணனாகிய கருத்தாயாமே. யாமே விதியாக நின்று படைப்பேம்; அரியாக நின்று காப்பேம்; மற்றையோராக நின்று அழிப்பேம். ஆகலின் மும்மூர்த்தியாக விளங்குவோர் நாமே. அவ்வுண்மையை யினிது தெளியக் கடவீர் என்று மும்மூர்த்திகளும் ஒருவடிவத்திற் பொருந்துமாறு காட்டியருளினர்.

பிரமனது வடிவமும் அவன் கையிலே தரித்தவும், விஷ்ணு வடிவமும் அவர்கையிலே தரித்தவும், உருத்திர வடிவமும் அவர் திருக்கரத்திலே தரித்தவுங் காட்டி யொரு திருவுருவமும், மூன்று திருமுகங்களும், ஆறு திருக்கரங்களும், இரு திருவடிகளும் பொருந்திய திருக்கோலங் காட்டியருளி யுரைத்தருள்வார். முனிவர்காள்! இன்னு மிவ்வுண்மையை மூவிலைகளையும் ஒரு தாளையு முடைய சூலாயுதத்தானும் வேற்படைக்கலத்தானும் அறிந்து கொள்ளுதிர். வேல் ஞானசத்தி, வள்ளி இச்சாசத்தி, தேவகுஞ்சரி கிரியாசத்தி. அன்றி யிவை முத்தொழிற்குங் காரணமாய ஆரணி, செனனி இரௌத்திரியுமாகும். இவற்றானே யாமே முக்குண வேறுபாட்டை யடைந்தவர்போல மும்மூர்த்தியாகி மூவினையுஞ் செய்வேமென்று தெரித்தருளி யவர் வேண்டிய வரங்களையுங் கொடுத்து அத்தலத்தி லெழுந்தருளினர். அம்முனிவர்கள் தேவரீர் இவ்விடத்தி லெழுந்தருளி யிருந்து வழிபடுவோர் யார்க்கும் வரத்தைக் கொடுத்தருளல் வேண்டு மென்று வேண்டிக் கொண்டமையால், சுப்பிரமணியக் கடவுள் ஆங்கு வரதராச மூர்த்தியாய் விளங்காநின்றார்.

சிவஞான போதம்.

ஸ்த்ரீ பும்நபும்ஸகாதித்வாஜ்ஜகத: கார்யதர்ஶநாத்।
அஸ்தி கர்த்தா ஸ ஹ்ருத்வைதத் ஸ்ருஜத்யஸ்மாத் ப்ரபுர்ஹர:



சந்தான ஆகமம்.

[illegible]

[illegible]

[illegible]

ஆதித்திய புராணம்.

யதாஜ்ஞயா ஜகத் ஸ்ருஷ்டா விரிஞ்சஃ பாலகோ ஹரிஃ|
ஸங்ஹார் தாகாலருத் ராக்யோ நமஸ் தஸ்மை பிநாகிநே |

திருச்செந்தூர்ப் புராணம்.

திரிகூடா சலத்தீ சான திக்கினி லிலஞ்சி யான
புரியினிற் கபில ராதி யோகியர் புகழ்ந்து கேட்ப
வரியமுத் தேவர் மூவ ராவது நாமே யென்று
சுருதியின் வாத ராசத் தொல்பெயர் சூட்டிக் கொண்டான்.

வரதராச மூர்த்தயே நமஃ

---

முப்பதாவது,

# பஞ்சாயுதப் பிரதான மூர்த்தி.

---

சிவபெருமா னிடத்தில் வரம்பெற்றுவந்த சூரபன்மன் சிங்கமுகன், தாரகனென்னு மூவரும், அசுர குருவாகிய சுக்கிரனாலே அண்டங்களி னளவுகளையும் நிலைமைகளையு முணர்ந்து திக்கு விசயஞ் செய்யப் புறப்பட்டார்கள். அப்போது தாரகாசுரன் றன் றமையன்மார்க்கு முன்னே பதினாயிரங் குதிரைகள் பூட்டப்பட்ட தேரிலேறிக்கொண்டு எண்டிசைப் பாலகர் நகரங்கடோறுஞ் சென்று அவர்களை வென்று, பாதலங்களிலுந் தீவுகளிலும் போய் ஆணை

நிறுவி வந்தான். அதன்பின் விட்டுணு துயிலும் பாற்கடலை யடைந்தான். அசுர சேனை வெள்ளங்கள் பாலைக் குடித்துத் தேக்கெறிந்து கடல் வெள்ளத்தைக் கலக்கி யார்ப்பரித்தன. பூதேவி சீதேவி யிருவருந் திருமாலைத் துயிலி னின்று மெழுப்ப, அவரும் போர்க்கோலங் கொண்டு வந்து யுத்தம்புரிந்து அசுர சேனைகளைச் சிதறச் செய்தனர்.

பின்னர்த் தாரகன் வந்து எதிர்க்கப் பல மாய வுருவங்கொண்டு பொருதார். தாரகனுந் தன் குருவாகிய மாயை யுபதேசித்த மந்திரத்தை நினைத்துத் தானும் பல வடிவங் கொண்டு யுத்தஞ் செய்தான். தேவ மானப்படி பன்னிரு வருடம் யுத்தம் நடந்தது. தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டிலும், இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், துரியோதன பாண்டவர்களின் யுத்தம் பதினெட்டு நாளிலும், வஞ்சி வேந்தன் செங்குட்டுவனுக்கும் ஆரியமன்னருட் பாலகுமரன் புதல்வ ராகிய கனக விசயருக்கும் நடந்த யுத்தம் பதினெட்டு நாழிகையினு முற்றின வென்று பெரியோர் கூறுவர். அவையெல்லா மவ்வாறு முடிந்து மிவர் யுத்தம் பன்னிரு வருடம் நடந்ததே யென்று கண்டோரெல்லா மிறும்பூ துற்றார்.

நாராயண மூர்த்தி யேந்திய கௌமோதகி யென்னுந் தண்டாயுதமும், நந்தக மென்னும் வாளும், பாஞ்ச சன்னிய மென்னுஞ் சங்கமுஞ் சார்ங்க மென்னும் வில்லும் பொடியாக்கப்பட்டன. நாரணர் மிகுசீற்றமுற்றுச் சிவபெருமானாலே கண்ணிடந்து ஆர்ச்சித்த காலத்துக் கொடுக்கப்பட்ட சுதரிசனம் என்னுஞ் சக்கரப் படையை விடுத்தார். அது சிவ வரப்பிரசாத முடைய தாரகன் கழுத்தில் மாலையாக விழுந்தது. வாசுதேவன் போராச்சரிய முற்றுத் தாரகனையுந் தமயன்மாரையு மாசிகூறிச் சென்று குமாரக்கடவுளை யடுத்திருந்து அவனிறந்த பிற்றை ஞான்று தமது ஐந்தாயுதங்களையு மிழந்தமை பற்றி வருந்துவாராயினார். நாரத மாமுனிவர் தோன்றி, காத்தற் றொழி லுடையோய்! ஒன்றற்கு மஞ்சாதி. குமாரக் கடவுளை யுன்னி

வாங்கிடப்பையேல் அவற்றைப் பெறுவது திண்ணம் என்று கூறிப் போயினார். திருமாலும் அவ்வுண்மை தெளிந்தவராய் விபூதி ருத்திராக்க தாரணம் புரிந்து தவஞ் செய்வான் றொடங்கினர்.

அலையிலாக் கடல்போ லடங்கிப் பதுமாசன மிட்டு நூறு ஊழிக் காலம் நோற்றார். நாராயண மூர்த்தியின் வடிவத்தைப் புற்றுக்கள் மூடின. நீலநிறக் கடலின்மீது செங்கதிர் பலகோடி திரண்டு உதித்தாற் போலப் பங்குனி மாதத்திலே ஆதிவாரத்திலே உத்தர நட்சத்திரத்திலே, சண்முகக் கடவுள் நீலமயின்மீ திவர்ந்து தோன்றியருளினார். பலகோடி கணங்கள் சூழ வெளிப்பட் டருளுதலும், நாராயண மூர்த்தி யெதனு லறிந்தன ரெனின், அக் கணர்களுட் பாஃ ம்ப னென்னுங் கணாதன் றன்னாயிரம் வாய்கடோறும் சங் வைத்து முழக்கினன். அந்த முழக்கத்தைக் கேட்டுப் பெரு பிரசன்ன மாயினா ரெனத் தெரிந்து, நாராயண மூர்த்தி ர் புற்றினின்றும் பாம்பு வெளிப்பட்டாற் போல வெளிப் த் தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கி "துன்பங் களைந்து இன்ப குஞ் சோதியே! முன்னர்க் காலத்திற் குபனென்னும் அரச ரகப் பரிந்து சியவன முனிவர் குமாரரான ததீசி முனிவ ன் செய்த யுத்தத்தில் எனது சக்கரங் கூர் மழுங்கிற்று.

அதனாற் பாசிவ நாதனிடங் கண்ணிடந்து அருச்சித்துச் சுதரி ம் பெற்றேன். அதனைச் சிறுவிதி யென்னுந் தக்கனது வேள் ல் வீரபத்திரப் பெருமானிடம் ஏவ, அதனை யவரது வெண்டலை ாவிற்று. அதனை யருளுமாறு வீரபத்திரக் கடவுளைப் பிரார்த்தித்த காலை, அப்பெருமான் வெண்டலைகொடுக்கப் பெற்றுக் கொள்க" என்றருளினார். விகடக் கூத்தாடினேன். அதனைக்கண்டு யாவருஞ் சிரித்தனர். வெண்டலையுஞ் சிரித்தது. சக்கரம் விழுந்தது கண்ட முன்னவரான விநாயகக் கடவுளார் அதனை யெடுத்துக் கொண்டு சென்றார். அவர் திருச்சந்நிதானத்துஞ் சென்று அங் ஙனம் விகடக் கூத்தாடினேன். அவர் இரக்கங்கொண்டு அளித்தரு

னினூர். அத்துணைப் பிரயாசமுற்றுப் பெற்ற சக்கராயுதத்தைத் தாரகன் வந்து பொருதகாலை யவன்மீது பிரயோகித்தேன். அன்னது அவன் கண்டத்தே மாலையாக விழுந்து விளங்கியதை யென்னென்றுரைப்பல். முன்னர் என்சக்கரந் தன் கூர்மழுங்கி வீழ்ந்ததும், வெண்டலை கௌவியது மன்றி இதுபோல மாலையாக விழுந்ததின்று. இது மிக்க வியப்பே. அதுமட்டோ!

ஐயனே! அடியேன் மற்றைய ஆயுதங்களையும் அவன் பொடியாக்கினமையா லிழந்து நின்றேன். இங்ஙனம் நிராயுதனானது ஒருகாலத்து மின்று. இவ்வாறிருப்பனேற் றுட்டர்களைக் கண்டித்துச் சிட்டர்களைக் காப்பது எங்ஙனெற்காகும்? ஆகலாற் பெரும! பஞ்சாயுதங்களையும் எளியேன் றரிக்க முன்னருள் புரிந்து உய்வித் தருளுதி யென்று இரந்தார். அது கண்ட வரைபக வெறிந்த கதிரைநாயகன் றன்றிருவுளத் துன்னிய மாத்திரையினே சூரியப்பிரகாசம் போன்ற சுதரிசனமும், சந்திரப் பிரகாசம் போன்ற பாஞ்ச சன்னியமென்னுஞ் சங்கமும், மற்றை யாயுதங்களும் வந்து தோன்றின. அவற்றை விட்டுணு கண்டு மிக்க வியப்படைந்து ஆனந்த முற்றவராய்,

நாடாது வேட்ட நனிவழங்கும் வள்ளன்மை
தாடாழு நர்ப்பாற் றகைக்குங் கருணையா
ஞேடாத தானை யுருமுச் சினச்சூரைக்
கோடாப்போர் வெங்களத்துக் கொன்றவிறை போலுங்
குருபரனைத் தாழ்த்த குருநாதன் போலும்.

அறிவிரண்டு மாய வலங்கறிவிற் றாழ்ந்தோர்
செறிவகன்ற யாக்கைச் செருத்தே ருகைப்போ
னுறுவலியின் வைய முடற்றுதக லூர்ந்த
வெறுழ்மிகுத்த நாற்கோட் டிபப்பாகன் போலு
மெழிற்கலவ மஞ்ஞை யினிதுகைத்தான் போலும்.

என்றின்னவாறு துதித்தார். சுப்பிரமணியப் பெருமானார் ஐந்தாயுதங்களையும் அவர் கையி லளித்து, அன்பனே! இவை யினியொருவரானு மழிக்கப்படா. நினக்குப் பின்னர்த் தோன்றுந் திதிக்கடவுளர்க்கு மிவை வழிவழி யாயுதமாகக் கடவன. நீயும் அன்னோரும் பஞ்சாயுதர் எனப் பெயர் பெறுதிர். குழவிப் பிரபந்தக் காப்பினிவ்வைங் கருவி பற்றி யெல்லாத் தேவரினு நின்னையே யுலகம் முற் கொண்டு புகழ்க. இப்படைகளி னுருவந் தீட்டிய (பஞ்சாயுத) மணியை யணிந்த குழவிகட்குத் தேவர்கொலை நீங்கிடுக" என்று வரமுமளித்து அந்தர்த் தான மாயினார். நாராண ரிவைபெற்ற தலம் சித்தாச் சிரமம் எனவும், தான பஞ்சக மெனவுஞ் சொல்லப்படும். நாரணருக்குச் சிறந்த ஐந்து ஆயுதங்களையுங் கொடுத் தருளினமையாற் குகக் கடவுள் பஞ்சாயுதப் பிரதான மூர்த்தியாயினர்.

அதர்வண வேதச் சரப' உபநிடதம்.

யோவாமபாதார்ச்சித விஷ்ணு நேத்ர
ஸ்தஸ்மை ததௌ சக்ர மதீவ ஹ்ருஷ்ட: ।
தஸ்மை ருத்ராய நமோ அஸ்து.

தணிகைப் புராணம்.

ஆர்ங்கதிர் வேணிய னாக்கி யளித்தெதி
ரீர்ங்கவுண் மாமுகன் மார்பிடு மாழி
சார்ங்கமு மற்றவுஞ் சாமி யளித்தான்
பீர்ங்குரு வீயுற ழாடையன் பெற்றான்.

பஞ்சாயுதப் பிரதான மூர்த்தயே நமஃ


முப்பத்தோராவது,

# சதுர்முக சாபாரி மூர்த்தி.

---

புதுச்சந்நிதி யென்னும் பொற்கோயிற் றலக்க ணெழுந்தருளும் புண்ணிய வடிவான கண்ணுதல் குமாரனார், சூரபன்ம னாதியரைச் சங்கரித்துக் கிரியா சத்தி யெனப்படுந் தெய்வ யானை யம்மையாரைத் திருப்பரங் குன்றத்திலே திருமணஞ் செய்து எழுந்தருளியிருக்கு மோர்நாளில் தேவர் முதலாயினோர் குழுமிப் போற்றுஞ் சபையிலே, தந் திருக்கரத்தின் கணுள்ள வேற்படைக் கலத்தைச் சுட்டிக் காட்டி, "தேவர்முதலிய கணர்காள்! நமக்கு இப்பெருமையெல்லாந் தந்தது இவ்வேலாகும்" என்று ஓர் திருவிளையாட்டலாகக் கூறியருளினர். அதனைக் கேட்ட வருகி லிருந்த பிரமன் "இவ்வேலிற்கு இந்நிலை யென்னால் வந்த தன்றோ" என்று தனதறி யாமையானும் அகங்காரத்தானு முரைத்தான். குழகனா மிறைவன் அது கேட்டுச் சிறிது வெகுளி யுற்று, "ஆணவமலத்தாற் சிமிழ்ப்புற்ற கீழோய்! என் மொழிந்தனை. நங் கரக்கட்பிரியா துறையு ஞான சத்திக்கு நீ கொடுப்பதொரு சத்தியு முண்டோ? முன்னர்ச்சிறையிருந்ததை மறந்தனையோ பேதாய். நீ பூமியிற் புன்பிறப்பை யடைதி" என்று சபித்தருளினார்.

பிரமன் நடுநடுங்கிச் சாமிநாதன் றிருவடிகளிற் றஞ்சமென வீழ்ந்து புலம்பினன். கருணையங் கடலாங் கதிரை நாயகன் றிருவுள மிரங்கி, "பிரமனே! நீயிப்பாவத்தைச் செய்தமையால் அநுபவித்தே தீர்த்தல் வேண்டும் பின்னர் நின்னை யாட்கொள்வாம்" என்று அருளினர். விதியோன் றன்னுரு மாறிப் பூமியிற் சென்று அந்திமான் என்னும் வேடனாகப் பிறந்தான். வனத்திற் கொலைத் தொழில் கொண்டு திரிந்த காலத்தில், இமய மலைச்சாரலிடஞ் சென்றான். அங்கே மிருகங்க ளகப்படாமையாற் பட்டினியாயிருந்து பசியாலும் மிருக பயத்தாலும் விழித் திருந்தான். அன்று



சதுர்முகசாபாரிமூர்த்தி.

கார்த்திகைநா ளாயிற்று. மறுநாட் காலையிற் * பிப்பலாதமுனிவர் அவ்வழி வந்தனர். யாதேனும் பொருளாவது உணவாவது அவரிட மிருக்குமென்று நினைத்து ஓடிச் சென்று அவர்தம் முடலைப் பற்றிக் கையா லிறுகக் கட்டினன். முனிவனார் சுப்பிரமணியக் கடவுளின் திருவருட் பெருமைகளை யெல்லா மெடுத்துரைக்கும் வேத கானங் களைப் பாடினார். அதனைக் கேட்ட வேடற்குப் பண்டைய நல் லுணர்வு தோன்றித் தான்செய்த செய்கைகட்குப் பெரிது மிரங்கி, முனிவர் அடிகளில் வீழ்ந்து வணங்கி, அவராற் றன்பழைய வரலா றெல்லா முணர்ந்தான்.

முனிவர் பெருமானே! கந்தக் கடவுளின் திருவருள் விரை விற் கிடைக்குமாறு உபதேசித் தருள்க" என்று முனிவனைப் பணிந்து கேட்டனன். முனிவனார் "சரவண வாவியிற் படிந்து கார்த்திகை விரதத்தை யநுட்டிப்பையேல் உன் பவம் நீங்கும்" என்று சடக்கர மந்திரமும் உபதேசித்து விடுத்தார். அங்ஙனே அந்திமான் அவ்விரதத்தை யாற்றுவா னாயினன். விரத பலத்தானே வேடத்தன்மையி னின்று நீங்கி அரசனாகிக் கொடைத்தொழில் விசேடத்தானே இடை வள்ளன்மா ரெழுவரு ளொருவனாய் விளங் கினான்.

இங்ஙனம் பிரமன் பூமியிற் றங்கலாற் சிருட்டித் தொழில் நடவாதாயிற்று. அதனாற் றிதித் தொழிலும், சங்காரத் தொழிலு மில்லையாயின. அதனால் வருணன் சோமன் இந்திரன் திருமால்

---

* பிப்பலாதர் என்பவர் வேதங்களிலே பிரதி பாதிக்கப் பெற்றவோர் முனிவர். அதர்வண வேதம் கண்டு பிடித்த அதர்வண விருடியின் குமாரர் தத்தியங் என்னும் இருடி. அது "தமுத்வா தத்தியங் ருஷி: புத்ர ஈதே அதர்வண: தத்தியங் ஙாதர் வண:" என்ற வேத வசனங்களாற் பெறப்படும். அந் தத்தியங் ரிஷி புத்திரர் ததீசி முனி. அத் ததீசி முனி புத்திரர் பிப்பலாத முனிவர் என்று பிரம புராணத்திலே கூறப்பட்டுளது.

முதலியோர் * "சித்தன் வாழ்வு" என்னுந் திருப்படை வீட்டுத் தலஞ்சென்று தேவ நாயகனைச் சேவித்தார். பழநிப் பெருமான் அவர்கட்குமுன்னே பாலப்பருவமும், நான்கு திருக்கரங்களும் பொன்போலுங் காந்தியும் வேலாயுதமுங் கோழிக் கொடியும் வரதமும் அபயமும் பொருந்திய திருக்கரங்களு முடையராய்த் தோன்றினர். தேவர்க ளெல்லாந் துதித்தனர். சுப்பிரமணியக் கடவுளார் அந்நீமானை யுடனே யழைத்துப் பலம் போக்கிப் பிரமனுக்கு முத்தொழிலு நடக்குமாறு திருவருள் செய்து மறைந்தனர். சதுர்முகனாகிய பிரமனது சாபத்தை அரித்தமையால் (அழித்தமையால்) சதுர்முக சாபாரிமூர்த்தி யாயினர். இதனுல் முத்தொழிற்கும் மும்மூர்த்திகட்கும் முதற்பொருளா யிருப்பவர் செவ்வேட் பெருமானே யென்பது சித்தாந்த மாதல் காண்க.


### பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப் படை.

புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய

---

* சித்தன் வாழ்வென்றது திருவாவினன்குடி யென்னும் பழநித்தலத்தை. அதனை,, "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்-வில்லந் தொறுமூன் றெரியுடைத்து-நல்லமரவப், பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியரின் - நாட்டுடைத்து நல்ல தமிழ்" என்னும்ஔவையார் திருவாக்கானு முணர்க. சித்த னென்பது முருகக் கடவுளி னாயிர நாமத்துளொன்று. அது பிரமாண்டபுராணத்திற் சகத்திரநாம அத்தியாயத்திற் காண்க.

(ந-2.)



வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேறுவே றுலகந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி.

விம்பாகமம்.

𑌚𑌾𑌪𑌸𑌵𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍋 𑌬𑌾𑌹𑍁𑌭𑍇𑌦𑍈𑌃 𑌕𑌪𑌾𑌲𑌸𑌹𑍍𑌯𑌃 ।
𑌶𑌕𑍍𑌤𑌿𑌖𑌡𑍍𑌗𑌧𑌰𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤 𑌕𑌪𑌾𑌲𑌿𑌨𑌃 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌂 ॥

சதுர்முகசாபாரி மூர்த்தயேநமஃ

---

முப்பத்திரண்டாவது,

# யோகாசாரிய மூர்த்தி.

---

வானளாவி யுயர்ந்த சையசித்தம் என்னும் தலத்திலே, கபிலர், கௌதமர், சுதீக்கணர், தத்தாத்திரேயர், பைங்கலர், தூர்வாச முனிவர் முதலிய பலஇருடியர்கள் கூடியிருந்தார். அப்போது பைங்கல முனிவர் மற்றை முனிவர்களை நோக்கி, அறவீர்! வேண்டிய சித்திகளையும் ஞானத்தையும் அடைதற்கு யாம்செய்யும் உபாயம் யாது? என்று வினவிய காலத்து ஒவ்வொருவரும் ஒவ்வோர் உபாயங்கூறினர். அவர்கள் அவ்வாறு பிணங்கிய காலத்தே தேவ விருடியாகிய நாரதமுனிவர் தோன்றி, சிவயோகமே சித்திகளையும்

ஞானத்தையும் முத்தியையுங் கொடுக்கத் தக்கது. அதன் இலக்கணங்களையெல்லாம் உணர்த்த வல்லவர் குகப்பெருமானே. அவரை நினைந்து தவஞ்செய்திர் என்று மறைந்தார். முனிவர்கள் அதனையொப்பித் தவம் புரிந்தார். குமாரக் கடவுள் தோன்றி, யோகவியலையுணர்த்துந் திருக்கோலத்துடன் வீற்றிருந்து உபதேசிப்பாராயினர்.

மாதவஞ் செய்யும் முனிவர்களே! யோகம் மற்றையவை போலவாக்கினல் உணரப்படு மொன்றன்று. செய்கையானும் நல்லாசிரிய னிடத்தே முறையே யுணர்ந்துபழகலானுந் தெளியப்படுமொன்று. யாம் வாக்கினுலுஞ் செய்கைகளானும் தெரிக்கின்றேம். யோகம்-மந்திரயோகம், அடயோகம், இலயயோகம், இராசயோகம், தியானயோகம், பாவயோகம், கன்மயோகம், மாயோகம், ஆதாரயோகம், நிராதாரயோகம், மீதானயோகம், தாரகயோகம், சாங்கியயோகம், அமனசுகம், பரிசயோகம், அபாவயோகம், சந்திரயோகம், சூரியயோகம், இலம்பிகாயோகம், அமிர்தயோகம், ஆனந்தயோகம், பன்னகயோகம், வச்சிரயோகம், சித்தயோகம், ஞானயோகம், பரமயோகம், முத்தியோகம் எனப் பலவகைப்படும். அவற்றுள்.

**மந்திரயோகம் ஆவது** - மூலாதாரம் முதலிய ஆறு தாரங்களையும், பிரமசக்கரம், சிகாரசக்கரம், பச்சிமசக்கரம், அனுச்சக்கர முதலிய பத்துவகைச் சக்கரங்களையும் ஏனைய பதினெருவகைச் சக்கரங்களையும், செவித்துவாரம் இரண்டு, கண்துவாரம் இரண்டு, உண்ணுக்குத் துவாரம் ஒன்று, அபரோக்கத்துவாரம் ஒன்றுஎன்னும்எண்வகைத் துவாரங்களையும், இவ்வெட்டின் கூறுபாடான நால்வகைத் தளங்களையும், ஆதாரதேவதைகளையும், பிரம வெழுத்து முதலிய எழுத்துக்களையும், மந்திரங்களையும், யந்திரங்களையும், சகுண தேவதைகளையும், பிரகாசங்களையும் குருமுகமாக அறிந்து அநுட்டிப்பதாம்.

இலயயோகம்ஆவது-நாடி சுத்தி, ஆதாரசுத்தி, பிராணாயாமம் முதலிய சாதனங்களைச் செய்யுமிடத்து, இவைகள் சுத்தமாயின வென்னுஞ் சோதனையை யறிந்தபடிஆதார தேவதைகள் வெளிப்படும்போது தசநாதங்களுந் தோன்றும். அவற்றைத் தியானஞ்செய்யும்போது மனம் இலயமாகும். இதுவே இலயயோகம் எனப்படும்.

அடயோகம் ஆவது - இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம்' சமாதி என்னும் எட்டு அங்கங்களோடுசெய்வது. இதனை அட்டாங்கயோகம் எனவுங் கூறுவர்.

இராசயோகம் ஆவது-மூவகைப்பட விளங்கும் யோகமாம், மூவகை யாவன - தாரகம், சாங்கியம், அமனசிகம் என்பனவாம். அவற்றுள் தாரகம் ஆவது - சிற்சத்தி யானது மகாமாயை யுடன் கூடி பு.. சிருட்டியுண்டாக்கும் போது இரம்மித்துக் கலக்குங்கால், சூரியகிரணம் பளிங்கிற்பட்டுஅக்கினி பிரகாசிப்பதுபோல, நிவிர்த்திமுதல் அநாசிருதை யிறுதியாக பதினாறு கலைகளுந் தோன்றி, அவற்றினின்றும் அநேக கோடிகலைகள் தோன்றி, அதன்கண் தண்டம், தாரகை, குண்டலம், அர்த்தசந்திரம் தர்ப்பணம், சோதி முதலான அளவற்ற வன்னவேறுபாட்டு வடிவுகள்தோன்ற அவற்றைத் தரிசிப்பதாம். சாங்கிய யோகமாவது எல்லாத்தத்துவங்களையும் நேதிகளைந்து தன்னையும் புருடனையும் உள்ளவாறு அறிதலாம். அமனசிக யோகமாவது - மனமிறந்து நிற்பதாம்.

ஆதார யோகமாவது - இயம முறையுடன் வான் எழுத்தை வாயுஎழுத்துடன் பொருத்துவித்து, மேலாக விளங்குஞ் சோதியைப் பிரமாந்திரத்துள்ள வெளியிலே கொண்டு செலுத்துவதாம். இதுசெய்வரின் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் வன்மையுண்டாம். இனி அட்டசித்தியோகம் கூறுவாம்.மூலாதாரவடிவின் சுழுமுனைத்துவாரத்திலே மனத்தை வைத்து அக்கினியை ஒருவருடம் இடைவிடா

துநோக்கினுற் பொன்னிறமா யணுவைப் போன்ற வடிவங்கொள்வர். இது அணிமாசித்தியோகம். அவ்வக்கினியைத் தானே மேருத்துவாரவழியாக வாயுவினுலே குண்டலி வரையும் எழுப்பி யேற்றி இருவருடம் நோக்கில் நீர்நுரைகள் போலத் தேகம் மெத்தென வாகும். இது இலகிமாசித்தியோகம். குண்டலிகாறும் எழுப்பிய அக்கினியை நாபி இருதயங்களி லேற்றி மேருத்துவாரவழி மூவாண்டு நோக்கின் ஆகாயமளவு ஓங்கி வளருதலுண்டாம். அணுவினுஞ்சிறிதாயிருக்குந் தன்மையு முண்டாம். இதுகரிமா சித்தியோகம். முன்சொன்ன மூலாக்கினியை இருதயமுதற் கண்டங் காறுமேற்றி ஐயாண்டு நோக்கின் முற்காலசம்பவ மெல்லா முணர்வான். இது பிராத்திசித்தி யோகமாதும். கழுத்துமுதற் கண்கள் வரையும் எற்றி ஆறு வருடம் நோக்கினுல் மண்ணி லெத்தனைகாலம் புதைக்கினும் அவ்வுட லழியாதிருக்கும். மீளவும் பிறவியில்லை. இது பிராகாமியசித்தியோகம் சிரத்தி லேற்றி யேழாண்டு வரையும்நோக்கின் யாவருக்கும் உள்ள தீவினைகளைப் போக்கி யெல்லா வுயிர்களிலும் ஏகமாய்க் கலந்து நிற்பான். இது ஈசத்துவ யோகம். இனித் தலைக்கணுள்ள அக்கினியைப் பிராணவாயுவினுலே வாங்கி நாசி நுனியிலே எட்டாண்டு நோக்கின் மூதண்டங்களைப் படைக்கு முதல்வன் போலாகி வேண்டிய அண்டங்களையும்படைப்பான்.இதுவசித்துவ யோகம். இந்நாசியின் அனலைச் சிகையளவுஞ் செல்லநோக்கின் எந்தவடிவு எடுக்க வேண்டுமோ அந்த வடிவெடுக்கும் வன்மையுடையனுவன். இது காமரூப சித்தியோகமாம். இங்ஙனம் அவ்வவ் யோகங்களி னியல்களை யெல்லாம் எடுத்து உணர்த்தியருளி மறைந்தனர். முனிவர்கள் அங்ஙன முள்ள யோகத்துள் அட்டாங்க யோகப் பயன்களை யடைந்து ஞானம் பெற்றுர்கள்.

ஏனையவற்றி னியல்களை யெல்லாம். சிவயோகசாரம், சூத சங்கிதை, யோககாரிகை, பாதஞ்சலம், சிவயோக மஞ்சரி, யோகாஸ்தவம், அடப்பிரதீபிகை என்பவற்றினும், புராணங்களினும், பெருக்

திரட்டு, சிறுதிரட்டு, மெய்ம்மொழி, சகலாகம சிகாமணி, சிவதருமோத்தரம், திருமந்திரம், தத்துவப் பிரகாசம் முதலியவற்றினுங் காண்க.

இங்ஙனம் யோக சாதனங்களை யெல்லாம் உணர்த்தியருளும் மூர்த்தியாக விளங்கலால் யோகாசாரிய மூர்த்தி யாயினர்.

### திருமந்திரம்.

எற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வார்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண வல்லிரே
நீரா யிரமு நிலமா யிரத்தாண்டும்
பேராது காயம் பிரானந்தி யாணையே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல யாக்கி
உறுப்புச் சிவந்திடு முரோமங் கறுத்திடும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

### யோக தரிசனம்.

அக்கினியிற் பொறிவடிவா யுதித்தனில வனற்றேவ னவே தாங்க, மிக்கினிய சரவணத்திற் சார்ந்துவிளை யாடுமொரு வேளோன் காற்றைத், தொக்கினிலேற் றெழுப்பியனல் சுவாலிக்கச் செயும் யோகத் துணைவன் முன்ன, ரக்கினிய காக்கபிலன் முதலோர்க்குப் போதித்தா னவற்றை மன்றே.

யோகாசாரிய மூர்த்தயே நமஃ

முப்பத்துமூன்றுவது,

# குழந்தை வேலப்ப மூர்த்தி.

பாண்டி நாட்டிலே யுள்ள திருவாவினன்குடிப் பதியிலே சுப்பிரமணிய பத்தியிற் சிறந்த வைசிய குலத்திலே சுவணதத்தன் என்பவன் ஒருவனிருந்தான். அவன் மனையாள் அருந்ததிபோன்ற கற்பினையுடைய மகேசை யென்பவளாகும். அவளுடன் இல்லற நடாத்தி வருநாளிலே, புத்திரப் பேறின்மையால் மிகவும்வருந்திச்சண்முகநதிக்குக் கீழ்த்திசையினுள்ள பாத்துவாச ஆச்சிரமத்திலிருந்து திருமறு மார்பனுகிய சீதா மூர்த்தியை வழிபட்டுத் தவஞ் செய்தார். காவற் கடவுளாகிய நாரணர் இவர் பல காலமாகத் தவஞ் செய்தல் கண்டு மனமிரங்கித் தோன்றினுர். சுவணதத்தனும் மனைவியும் வணங்கித் துதித்து, அண்ணலே! அடியேங்களுக்குப் புத்திரப் பேற்றை யளித்தருள வேண்டுமென்று குறையிரந்து வேண்டினர். மாயவன் அவர்களை நோக்கி, "தலையன்புடையீர்! நுமக்குப் புத்திரரில்லை. புத்திரர் பிறந்தாலும் இறந்துவிடும்" என்றுர். எங்ஙனமாயினும் ஒருபுத்திரன் பிறக்க அருளுக என்று பிரார்த்தித்தனர். "அவ்வாறே தந்தேம்" என்று மறைந்த திருமால் தமது பாஞ்சசன்னியமாகிய சங்கத்தை நோக்கி, "சங்கே! நீ மகேசைவயிற்றிற் றேன்றிச்சிலகால மிருந்து வருக" வென்றுர். அப்பணியைச் சிரமேற்கொண்டபாஞ்ச சன்னியம் மகேசை வயிற்றிற் பாலனுகத் தோன்றிற்று. புத்திரன் பிறந்ததுங் குழந்தை வேலப்பன் என்று நாமகரணஞ்செய்து வளர்த்து வந்தார். அப்புத்திரனும் வளர்ந்து ஐந்துவயதடைந்து அரசகுமாரருடன் செய்குன்றுகளிலும் நதிகளிலும் சோலைகளிலும்விளையாடி வந்தான். ஒருநாள் பழநிக்குச் சமீபமாயுள்ள வில்வவனத்தின்கணுள்ள தேனுதீர்த்தத்திலே நீர்விளையாடுங் காலத்திற் பழமையாகிய பேறிவு தோன்ற, அப்பாலகன் நீருளாழ்ந்து சங்காகித் திருமால் கையி னடைந்தான்.

(கூகூ)



குழந்தைவேலப்பமூர்த்தி.

குழந்தை வேலப்பன் நீருள் மூழ்கி நெடுநேரஞ் சென்றும் வெளிவாராமையாற் பார்த்திருந்தோரும், கூடிவிளையாடிய மற்றைப்பாலகரும் மனமாழ்கிப் பதைபதைத்துத் தேடியுங் காணாது எக்கமுற்றுத் தாய் தந்தையர்க்கு அறிவித்தனர். அதனைக் கேட்ட சுவணகுப்தனும் மனைவி மகேசையுந் தலையினும் மார்பினும் அடித்துப் புரண்டழுதுஓடிச் சென்று நேனுதீர்த்த நீர்க்குள் மூழ்கித் தேடியுங்காணப் பெறாது துக்கசாகரத்துள் மூழ்கிப் புலம்பி யினி உயிரை விடுவேமென்று துணிவுற்றார். சுற்றத்தாரும் அயலாரும் வருந்தி யிரங்கினர். தாய்தந்தையர்கள் புத்திர சோகத்தாற் கொண்ட துன்பஞ் சொல்லுந்தரமோ? அவற்றைக் கண்டோர் யாவரும் பழநிப்பதியே! பரமகுருவே! தண்டாயுத பாணியே! தேவரீர்க்கு அபயம் அபயம் என்று அன்புடன் இரங்கித் துதித்தார்.

சுவணகுத்தன் நீரில் முழுகி யிறக்கவும், மகேசை நெருப்பின் முழுகியிறக்கவுந் தீர்மானித்தது கண்ட தண்டதரஸ்வாமி, பக்தவற்சலனாகலால் அவர் துன்பங்களை நீக்கத் திருவுளங் கொண்டுகடப்ப மலர்மாலை யணிந்த சிகையும், இரத்தினச் சுட்டி யணிந்தநெற்றியும், இரத்தினக் குண்டலங்க ளணிந்த திருச்செவிகளும், கோவைப் பழம்போலும் வாயும், இளமுறுவலும் அழகைச் செய்ய, மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பட்ட புலிநகங்களுடன்கூடிய பஞ்சாயுத மணியும், இளந்தோளும், இரத்தின மோதிரமணிந்த விரல்களும் ஒளியை வீச, பட்டுடையும் அரைஞாணும் ஏனையாபரணங்களும் மின்ன, தட்டை, சிலம்பு முதலிய ஆபரணங்கள் ஒலிக்குந் திருவடிகள் நோவத் தீர்த்தத்தினின்றும் எழுந்து வருவார் போலச் சுவண குத்தனுக்கும் அவன் மனைவிக்கும் முன்னர்த் தோன்றியருளினார்.

வணிகனும் மனைவியுங் கண்டு கரையிறந்த ஆனந்தமுற்று, தமது புத்திர னென்று எடுத்து மார்போடணைத்து, "குலமணியே

யாண்டுச் சென்றாய். புத் என்னும் நாகத்தில் யாங்கள் வீழ்ந்துவருந்துவேமென்று இரங்கி வந்தனையோ'' என்று பலவாறு கூறிமகிழ்ந்தனர். அதுபோது சுவண குத்தனையும் மகேசையையுந் தடுத்தாட்கொள்ள விரும்பிப் பழநிப் பெருமான் குழந்தைவடிவை மறைத்து, ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும், அவற்றிற் பொருந்திய ஆயுதங்களும், அருள்பொழியும் பதினெட்டுத் திருக்கண்களும், மயில்வாகனமுந் தோன்ற ஆகாயத்திற் பிரசன்னமாயினர். தேவர்கள் பூமாரி பொழிந்தார். மண்ணவர்கள் மழைபொழிந்தார். வணிகனும் மனைவியும் பரவச மடைந்தார். தேவதுந்துபிகளொலித்தன. குத்தனும் மகேசையும் தெளிவுற்றெழுந்து பெருமானை வணங்கினர். அறுமுகக் கடவுள் திருவாய் மலர்ந்தருள்வார்.

"வழிவழி யன்பீர்! புத்திரப்பேற்றைத் திருமாலிடங் கேட்டீர். கோவிந்தன் நுங்கட்குப் புத்திரப் பேறில்லை யென்றான். நீவிர்பிறந்து செத்தாலும் புத்திரன் வேண்டு மென்றீர். அதனால் அவனது கையின்கணுள்ள நமது பாஞ்ச சன்னியம் புத்திரனாகப் பிறந்து காலம்வர, குளத்துண் மூழ்கிச் சங்காகி வைகுண்ட மடைந்தது. நுங்கள் வாட்டங் கண்டு, அதனைத் தீர்க்கும்படி குழந்தையாய் வந்தேம்'' என்று பழநிப் பெருமான் பலவரங்களையுங் கொடுத்து மறைந்தருளினர். வணிகனும் மனைவியுஞ் சிலகாலம் பெருமானை யுபாசித்து அவர் திருவடியை யடைந்தின்புற்றார்.

சுவண குத்தனும் மனைவியும் உய்யும் பொருட்டுக் குழந்தை வேலப்ப மூர்த்தியாய் வந்தருளினமையாற் குழந்தை வேலப்ப மூர்த்தி யெனப்பெயர் பெற்றார். செட்டிக்குப் பிள்ளையா வந்தமைகுறித்துச் செட்டி யெனவுங் கூறப்பட்டார்.

பழநித்தலபுராணம் - சுவணகுத்தச் சருக்கம்.

எடுத்தனைக்கு மதுபோழ்தி னிருவரையு முலகறியத்
தடுத்தடிமை கொளவேண்டிச் சண்முகமாய்ப் பன்னிருகைத்



கோர நிருதாரி மூர்த்தி.

தொடுத்தபடை களுங்கருணை சுரந்தநய னமுந்தோகை
மடுத்தமயி லுந்தோன்ற நின்றனன்வா னவர்கோமான்.

முன்னீர்மா தவநெடுநாண் முயறலுமுந் நீருறங்கு
மைந்நீர்மே னியன்றோன்றி மகப்பெறன்மற் றில்லையென்றான்
பின்னீர்பெற் றிறந்தாலு மகப்பேற லருள்கவென்றே
சொன்னீரா கலின்மகவாய்த் தோன்றியதொண் காச்சங்கம்.

ஆவலினம் பருவம்வைகி யடைந்ததுமீண் டதுபுரிமால்
யாவதும்யா மளியுடையீ ராதலினிவ் வாறுநும்பாற்
றாவறவாற் றினமென்னாச் சாற்றிவரம் பலநல்கித்
தேவதே வன்றிருவா வினன்புரிச்சே திமஞ்சென்றான்.

குழந்தை வேலப்ப மூர்த்தயே நமஃ

முப்பத்துநான்காவது,

# கோர நிருதாரி மூர்த்தி.

அறுபத்து நான்கு திருவிளையாடல்களையுங் குமாரக்கடவுள் நடித்துக் காட்டத் தரிசித்த பெரும்பேறுடைய விஜயனுக்குக் குருகன்பிறந்தான். அவனுக்கு விருகன் பிறந்தான். விருகாசனுக்குப் பாகு என்னும் அரசன் மகனான். அவன் அரசாளுங் காலத்திற் கேகய தால சங்காதியர்களாலே வெல்லப்பட்டு இருமனைவியருடன் வனம் சென்றான். அங்கு அவன் மனைவியருள் மூத்தவள் கருப்பவதியானாள். இளையமனைவி பொறாமை கொண்டு உணவுடனே விடத்தையும் ஊட்டினாள்.

அதனால் அக்கருப்பம் ஏழாண்டளவும் வயிற்றில் இருந்தது. அதற்குட் பாகுராசனும் இறந்தான். அப்போது கருப்பவதியான

மனைவி தன்கணவனுடன் இறக்கத் தீர்மானித்து விறகடுக்கினாள். முக்காலமுமுணர்ந்த அவுர்யமுனிவர் தடுத்துத்தம் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்று உபசரணை செய்தனர். சிலநாள் கழிந்திடப்பே ரழகுடைய ஒருபுத்திரன் விடத்துடன் கூடப்பிறந்தான். நஞ்சுடன் கூடப் பிறந்தமையாற் சகரன் எனப் பெயரிட்டார் ச=கூட, கரன்=நஞ்சுடன் பிறந்தவன். கரம்=நஞ்சு. அவன் விதர்ப்பை சுமதி யென்னும் இருமனைவியரை விவாகஞ் செய்தான். அவருள் மூத்தமனைவியிடம் உதித்தான் அசமஞ்சன். அவன் மகன் அஞ்சுமான். அவன் புதல்வன் திலீபன். அவன் மகன் பகீரதராசன்.

இப்பகீரதராசன் அரிய தவங்களைச் செய்து கங்கையைப் பூமியிற் கொணர்ந்து தன் முதாதையரை நற்கதி சேர்த்துப் பெரும்புகழுடன் அரசாண்டான். அதுகாலை, கோரன் என்னும் இராக்கதனொருவன் தவபலத்தினாலே யாவரினும் மேம்பட்டு மிக்க வலியுடையனாய்த், தேவர், முனிவர், திசைகாப்பாளர் யாவரையும்வென்று பூவுலகிற்குவந்து பகீரதனோடு எதிர்த்தான். பகீரதன் தன் நாற்படைகளுடன் தீரத்துடன் நின்று பொருதும், கோரன் மகாகோபத்துடன் சேனைகளை யெல்லாம் அழித்து, பகீரதனைக் கையாலெடுத்துப் பந்துபோற் சுழற்றி வீசினன். அந்தூரத்திற் சென்ற பகீரதன் மிக்க நெடுந்தூரத்திலுள்ள ஓர் வனத்தில் விழுந்தான். இங்கே கோரன், அரண்மனையுட் புகுந்து தன்னாணை செலுத்தி எவரையும் அடக்கி யரசாண்டான். மனைவியும் மக்களும் பகீரதனிடஞ் சார்ந்தார்கள். அவற்றை யெல்லா மறிந்த பகீரதன் இதற்கென்செய்வோம். கோர ராக்கதனுடன் யான் சண்டைசெய்து வெற்றிகொள்ளல் முடியாது என்று வருந்தி மனைமகா ருடன்வா வனங்கடோறுஞ் சென்றான். செல்லுங் காலத்துப் பிருகு முனிவரின் ஆச்சிரமந் தோன்ற அங்குப்போய், அவர் திருவடிகளில்வீழ்ந்து வணங்கி நடந்ததெல்லாம் உரைத்து, அடியேன் உய்வதற்கு உபாய மருளுதல் வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

முனிவர் அபயங் கொடுத்து, அரசனே! கோர ராக்கதன் தவ வலிமை யுடையவன். திரிமூர்த்திகள் வந்து எதிர்ப்பினும் அவனை வெல்லுதல் அரிது. நீயும் நின்மனைவி மக்களும் ஒருமை யுற்று அடியரிடர்தீர்க்குஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து, அவரது விரதங்களுட்சிறந்த சுக்கிர வார விரதந்தை விதிப்படிமூன்று வருடம் அநுட்டிப்பீராக. அதன்பின் முருகக் கடவுளின் திருவருளாலே முன்னர்ப்போல அரசாட்சி பெற்றுச் செல்வ மோங்கி வாழ்வீர் என்றார். அச்சொற்களை யமிர்தம்போ லுட்கொண்டு அரசனும் மனைவியும் பிள்ளைகளுஞ் சேர்ந்து அநுட்டித்தார் சுக்கிர வார விரதத்தை. மூன்றாம் வருடத்து இறுதியிலே சுப்பிரமணியப் பெருமான் றோன்றி, "நமது வேல் கோரனைக் கொல்லும். நீவிர் பயமின்றி வேண்டிய செல்வத்துடன் அரசாட்சி செய்துவாழ ஆங்குச் சென்மின்" என்று கட்டளை யிட்டருளினார். அரசனும் மனைவி மக்களுங் வணங்கித் துதித்து நகர நோக்கிச் சென்றார். உடனே படைக்கல நாயகமாகிய வேலாயுதஞ் சென்று இராக்க தனுயிரை யுண்டு உடலையுங் கண்டித்தது. பகீரதனும் மனைவி மக்களுங் கண்டு பகவானைத் துதித்து, அவர் திருவருளாலே குறைவற வாழ்ந்தனர்.

மெய்யன்பனான பகீரதற்காக, மகாபல முடைய கோரன் என்னும் நிருதனைக் கொன்று காத்தருளினமையாற் கோர நிருதாரிமூர்த்தி யாயினர்.

### கந்தபுராணம் - கந்த விரதப் படலம்.

பகீரத னென்னும் வேந்தன் படைத்தபா ருலகை யெல்லா
நிகரறு கோர னென்னு நிருதனங் கொருவன் வௌவ
மகவொடு மனையுந் தானும் வனத்திடை வல்லை யேகிப்
புகரவன் றனது முன்போய்த் தன்குறை புகன்று நின்றான்.

பார்க்கவ னென்னு மாசான் பகீரத னுரைத்தல் கேளா
வேற்கரன் மகிழு மாற்றால் வெள்ளிநல் விரதந் தன்னை

நோற்குதி மூன்றி யாண்டு நுங்களுக் கல்லல் செய்த
மூர்க்கனு முடிவ னீயே முழுதுல காள்வை யென்றான்.

நன்றென வினவி மன்னன் ஞாயிறு முதலா நாளி
லொன்றெனும் வெள்ளி முற்று முணவினைத் துறந்து முன்பின்
சென்றிடு மளவின் * யாண்டு மூன்றளவு நோற்றான்.

நோற்றிடு மளவி லைய னுதியுடைச் செவ்வேல் வந்து
மாற்றல னுயிரை யுண்டு வல்லையின் மீண்டு செல்லப்
போற்றியே பகீர தப்பேர்ப் புரவலன் றன்னா ரெய்தி
யேற்றதொல் லரசு பெற்றா னின்னுமோர் விரதஞ் சொல்வாம்.

கோர நிருதாரி மூர்த்தயே நமஃ

---

முப்பத்தைந்தாவது,

## இடும்பாசுர சிக்ஷாரக்ஷக மூர்த்தி.

செந்தமிழ் ஆசிரியராகிய அகத்திய முனிவர் கந்த மலையின் சிகரங்களுட் சிறந்த சத்திசிகரம்,சிவசிருங்கம் என்னும் இரண்டனையும் சத்தி சிவமாகப் பாவித்துப் பூசித்துக் கந்தவேளின் உத்தரவின் படி அவற்றைப் பொதியமலையின்கண் கொண்டு வந்து பூசிக்க நினைத்துப் பெயர்த்துக் கொண்டு பூவுலகில் வந்தார். பூர்ச்ச வனம் என்னுந் தலம் வந்ததும் செவ்வேளின் றிருவருளினாலோ அச்சிகரங்கள் இரண்டனையும் அங்கு வைத்துப் பொதியை நோக்கி வருவாராயினார்.

சூரபன்மன் சிங்கமுகன் தாரகன் என்னும் அசுரர்களின் சேனைகளுக்கும் அக்குலத்தாருக்கும் வில்வித்தை முதலிய அத்திர சத்திர வித்தைகளைப் பயிற்றிய இடும்பாசுரன் என்பவன், குமாரக்கட



இடும்பாசுரசிக்ஷாரணியமூர்த்தி.

வுளின் வேலாயுதத்தாலே அவர்கள் யாவரும் அழிந்தமையால், தன் மனையாளான இடும்பியுடன் மகேந்திர புரியை விடுத்து † வனத்திற்செல்வானாயினான். வழிச்செல்லுங்காலத் திருக்குற்றாலத் தலசமீபத்திலே அகத்தியரைக் கண்டு வீழ்ந்து வணங்கித் தன்வரலாறு கூறி, நாயினுங் கடையேனாகிய அடியேனை யாட்கொண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். முனிவர் பெருமான் முகமு மிதயமு மலர்ந்து, அவ்வாறாகுக வென்று கையமைத்து ஒன்று கூறும்.

அன்பனே! திருக்கேதார தலத்திற்குப் பக்கத்திலுள்ள பூர்ச்சவனத்திலே இரு சிகரங்கள் இருக்கின்றன. அவற்றை யெடுத்து நம்பொதியைக்குக் கொண்டு வருவையேல், அதனாற் பெறற்கரும் பேற்றையடைவாய். அவ்விரு சிகரங்களின் மகிமை கூறுதற் கியலாது என்று வழிகளும் உணர்த்தி, மூலமந்திரமும் வழிபாடும் உபதேசித்து அனுப்பினர். இடும்பன் தன்மனைவியாகிய இடும்பி யென்பாள் காய் கனிகிழங்கு முதலியன உதவி யுபசரித்துவர, அகத்திய முனிவர் தெரித்த வழிச்சென்று, ஆங்காங்குள்ள தலங்களை யெல்லாந் தரிசித்துப்பூர்ச்சவனம் என்னுந் தலத்தையடைந்து சத்திசிகரம் சிவசிகரம் என்னும் இருசிகரங்களையும் தரிசித்தானந்தித்தான். யான் செய்த தவமே பெருந்தவ மென்று புகழ்ந்தான். இடும்பி பணிகள் செய்ய, இருமலைகளையும் பூசித்தான். அகத்திய முனிவர் உபதேசித்த மூலமந்திரத்தை விதிப்படி யுளத்தழுத்தித் தவஞ் செய்தான். அப்போது பிரம தண்டம் புயதண்டாகவும், அட்டதிக்கு நாகங்களும் கயிறாகவும் தன்பக்கத்தில் வந்தமர்ந்தமை கண்டு அதிச

† வனசஞ்சாரஞ் செய்யுங் காலத்துச் சிவபெருமானைப் பூசித்துத் தேவசேனாபதியாகிய குமாரக்கடவுளின் திருவருளுடன் அவர்க்கு அடிமையாகவேண்டுமென்றே பூசித்தான் என்றும், சிவபெருமான் தோன்றி நினக்கவைகூடுமென்றாரென்றும், அத்தலம் இடும்பவனம் என்றும் கூறுவார். அவ்விடும்பவனம் என்னும் தலம் கோயிலூருக்குத் தென்கிழக்கேபத்துமைலில் உள்ளதென்றறிக. திருக்கன்றாப்பூரிலும் பூசித்து வரம் பெற்றானென்றுஞ் சரிதம்.

யித்து, மேகம்போல் எழுந்து கைகுவித்து, இருமலைகளையும் பாம்புகளால் உறிபோலச் செய்து அகப்படுத்திப் பிரமதண்டுடன் பிணித்து, மூலமந்திரத்தை யுன்னிப் புயதண்டத்தைத் தோளில் வைத்து, மண்ணில் முழங்காலை யூன்றி யெழுந்தான். கந்த நாயகன் றிருவருளாலே மலைகள் இரண்டு மெழுந்தன. இடும்பன் அவைகளைக் காவிக்கொண்டு, காவடி யெடுப்பார் போல நடந்து கடந்தான். செவ்வேளின் றிருவிளையாட்டினாலே வழிமயங்கி விந்தமலை வழியாகச் சென்று மல்லிகார்ச்சுனம் திருக்காளத்தி திருவண்ணாமலை விருத்தாசலம் புட்பகிரி என்னுந் தலங்களை யடைந்து வழி தெரியானாக, செவ்வேள் ஓர் அரச குமார வடிவங் கொண்டு இடும்பன் எதிர் சென்று, நீ இவ்வழிபோய் வராகமலையிற் சென்று தங்கி அவ்வழியே பொதியைக்குப் போதி யென்றார். இடும்பன் அகமகிழ்ந்து சென்று வராகமலை வழிபோனான்.

திருவாவினன்குடி யாகிய பழநித்தலத்தை யடைதலும் குமரன் றிருவிளையாட்டானே யிடும்பனுக்கு அதிபாரமாகத் தோன்ற, உடலம் இளைத்து அங்கே யிறக்கி வைத்து, வாம தேவ முனியாச்சிரமஞ் சென்று இடும்பி யுதவிய கந்தமூலங்களை யுண்டு இளைப்பாறி, மலைகளைத் தூக்க ஆரம்பித்தான். மலைகள் எவ்வளவு முயற்சியாகத் தூக்கினும் மேலெழாமை கண்டு சுற்றிப் பார்த்தான். சிவகிரியின் ஒருசாரிற் குராமர நிழலிலே மழலை முதிர்ந்த கனிவாய்ச் சிறுவனிற்பது கண்டு, இறும்பூதுற்று, இக்கட்டழகுடைப் பாலன் இயக்கனோ? முருகனோ? என்றெண்ணிச் சமீபித்தான். பிடரிற் றூங்குங் குஞ்சியும், கருணைக் கடலொழுகுந் திருக்கண்களும், ஆயிர கோடிசூரியர் ஒன்றெனத் திரண்டாற்போன்ற காந்தியும், உபவீத மணிந்த மார்புந் தண்டாயுத பாணியும் விளங்க நிற்றல் கண்டு, குமாரனே! நீ தனிநிற்றலென்? வழிதப்பி வந்தனையோ? என்று வினவினன். குமாரக் கடவு ளொன்று முரைக்காது நகைத்தார்.

இடும்பன் சினங் கொண்டு, குன்றினை விடுத்து அப்பாற் போதி. யான் கொலைசெய்யும் அசுரனுகு மென்றான். குமார சுவாமி, "அசுர! நீகொண்டு வந்த இம்மலைகள் எம் இருக்கை யாகும். உனக்கு வலிமை யுளதேற் கொண்டுபோதி" என்றார். இடும்பன் கோபம் பொங்க, வஞ்சனையில் வல்லைபோலும். நன்று நன்று. யானே திருமாலினைச் சிவனுக்கிய குறுமுனியின் அடியவன். உன்வலி காண்கின்றே னென்று பிசைந்த கையினன், கடித்த பல்லன், நெறித்த புருவத்தன், மடித்த வாயினனாய்க் குராவடியிற் பாய்ந்தான்.

பாய்ந்த காலத்துச் சுடர்வேலோ, அடர்கோலோ யாதோ கொன்றது அறிகிலேம். மூதண்ட முகடு உடைந்து வீழ்ந்தாற்போல வீழ்ந்துஇறந்தான். நாகங்களும் பிரமதண்டும் அஞ்சி யகன்று அகத்திய முனிவர்க்கு அறிவித்துத் தத்த மிருக்கை சேர்ந்தன. விழுந்திறந்த சத்தங் கேட்ட இடும்பி மனம் பதைபதைத் தோடிவந்து புலம்பி மாழ்கினள். குமாரக் கடவுள் மயில்வாகன ரூடராய்க் கணங்கள் புடைசூழ, வாத்தியங்கள் ஒலிப்ப வந்தருளியது கண்டு துதித்து மங்கிலியப் பிச்சை கேட்டாள். குமாரப் பெருமான் றிருக்கடைக் கண்ணோக்க இடும்பனுந் துயில்விட் டெழுந்தான் போல வெழுந்து வணங்கித் துதித்து, அடியனேன் இம்மலை யடிக்க ணிருந்து தேவரீரது குற்றேவல் புரிந்திருக்க வரம் அருளல் வேண்டு மென்று இரப்ப, பெருமானும் அவ்வா றருளிச் சென்றார்.

இடும்பாசுரனைத் தண்டித்து, மலையைக் காக்கும் பெருவரமளித்து இரட்சித்தமையாற் சுப்பிரமணியப் பெருமான் இடும்பாசுர சிக்ஷா ரக்ஷகமூர்த்தி யாயினர்.

பழநித் தலபுராணம் - மலைகள் பழநியடைந்த சருக்கம்.

கொடுந்தொழிற் சூர னாதி கொலைகணி யவுணர்க் கென்று
மடும்படைத் தொழில்ப யிற்று மடற்பெருங் குரவர் கோமா
னிடும்பனென் பவன்கொல் சீயத் தெறுழ்வலித் தடந்தோள் வீரன்.

இன்றுதடுத் தாண்டனையென் கொண்கனையென் றூலு
மிரு நிலத்தில் வானி
லுன்றனடிச் சேரியரிற் றமியனுமோர் தொழும்பி யன்றோ
வும்பர் கோவே
மின்றவழு மங்கிலியப் பிச்சையிட வேண்டுமென
விழிநீர் சிந்தி
முன்றொழுதா டனக்குவிழிக் கடையளித்தான் முடிந்தானு
மெழுந்தான் மன்றே.

ஞானகுண னுடனிவ்வா றேத்திநவின் றிடுமேல்வை
யீனவினை தொலைந்தோய்கேள் யாதுமீ குதுமெனச்சேய்
தானவில யாதுபெறு வதுதமியேன் றணவாதுன்
பானவிர மிசையேவல் பணித்திடலே பணியென்றான்.

இடும்பாசுர சிக்ஷா ரக்ஷக மூர்த்தயே நமஃ

---

முப்பத்தாறுவது,

# சர்வலோக க்ஷணப்பிரதக்ஷிண மூர்த்தி.

---

முன்னொரு காலத்து ஆயிர நரம்புகளையுடைத்தாய மகதிவீணை யில் வல்ல நாரத முனிவர் சத்திய வுலகஞ் சார்ந்து, பிரமதேவரை வணங்கி, அவரை மகிழ்விக்க எண்ணி, சித்திரப் படத்துள் இருந்த மகதி யாழை யெடுத்து மாதங்கியென்னுந் தெய்வத்தைத் தொழுது பாடத் தொடங்கினர். பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எட்டுக்

(ரு-சா.)



சர்வலோகக்ஷணப்பிரதக்ஷிணமூர்த்தி.

கலைத் தொழில்களானும் இசை யெழுப்பி, பண்பாகுபாட்டிற் குற்றந் தீர்ந்து, மெல்லிய விரல்கள் பாடுகின்ற வண்டுக் கூட்டங்களைப் போல நரம்புகளின் மீதுபடா, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடைஎன்னும் இசைக்கரண வுறுப்புக்கள் எட்டினாலும் பருந்தி னியக்கமும் நிழலும்போலப் பாடினர். சபையி னுள்ளாரும் பிரமதேவரும் சிவபெருமானது கீதாமிர்த விசைகேட்டுக் களித்தனர். அதுபற்றிப் பிரமர் ஒரு மாதுளம்பழங் கொடுத்தார். அதனைச் சிவபெருமானது திருவடியில் வைத்து வணங்கினர் நாரதர். பெருமானார் விருப்புட னெடுத்துநாரதர்க்கு நல்லருள் புரிந்தமர்ந்த காலை, விநாயகக் கடவுளுஞ் சுப்பிரமணியக்கடவுளும் வந்து தமக்கு அப்பழத்தைக் கொடுக்குமாறு வேண்டினர்.

பெருமானார் அதனைப் பாதி பாதியாகப் பகிர்ந்து அளிக்கலாமன்றோ? பிருதிவி முதல் நாதமீறான அளவிலாத வுலகங்களையெல்லாம் ஒருநாளிற் சுற்றிவருகின்றவன் யாவனோ அவனே தேவர் யாரினும் பெரியோன். அவனே பரப்பிரமம் என்று தேவர் முதலிய பதினெண் கணத்தவர்களுஞ் சபையிலே பேசித் தீர்மானித்தார். அவ்வணஞ் சுற்றிவருதற்கு விட்டுணுமுதலிய தேவர்கள் தாமும் இயலா தென்று இருந்தார். தேவர்களுக்கு நேர்ந்த ஐயத்தையறுக்கவும், சர்வ லோகங்களையும் ஓர் நொடிப்பொழுதினுள் வலம்வரவும், எல்லாவற்றையும் அறியவும், படைக்கவும் காக்கவும் அழிக்கவும் மறைக்கவும் அருளவும் வல்லவர் சுப்பிரமணியக்கடவுளோ வென்று அறித்தற் காகவும் ஒருபாயஞ்செய்வாராயினர்.

"அன்புடை மைந்தர்களே! நீவிர் இருவரும் ஒருகனியைக் கேட்பின் என்னென்று உதவுவேம். நும்மில் எவர் ஒருக்ஷணத்துள் உலகை யெல்லாம் வலம் வருகின்றனரோ அவர்க்கே இப்பழம் உரியதாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். இச்சொல் முடியு முன்னரே சர்வ கர்த்தத்துவ பதியாகிய சுப்பிரமணியப் பெருமான் நீல

வாம் புரவியாகிய மயில் வாகனத்தின்மீது இவர்ந்து விரைவிற்சென்ருர். வாயுவேகம் மனேவேகம் என்று சொல்லப்படும் வேகங்கள் அவர் போன வேகத்திற்கு ஓரிலேசா லேசந்தானும் ஒவ்வா. அவ்வேகம் யாராற் கூறலாகும். அதலம் விதலம், சுதலம் நிசாதலம் தராதலம், இரசாதலம், பாதலம் என்னும் எழனையும், அவற்றிற்குமேல் உள்ள எட்டிலக்கம் யோசனை தூரமுடைய கனிட்டம் என்னும் எட்டாவது பாதலத்தையும், பூமிக்கணுள்ள சத்த தீவம், கடல் மலைகள் முதலாயினவற்றையும், மேகம், வாயு, சூரிய சந்திர நட்சத்திர மண்டலங்களையும், துருவ நட்சத்திர முள்ள புவர்லோகம், இந்திரன் வாழும் சுவர்லோகம், மார்க்கண்டேயர் முதலாம் இருடிகள் வசிக்குஞ் சனலோகம், பிதிரர் வாழுந் தவலோகம், சனகாதியர் தவம்புரியும் மகலோகம், விதியோன் வீற்றிருக்குஞ் சத்தியலோகம், மூண்டகக்கண்ணன் அண்டியிருக்கும் வைகுண்டலோகம் முதலிய வுலகங் களையும், இங்ஙனமே பிரமாண்டங்களையும், பிருதிவி யண்டத்துள்ள ஆயிரகோடி யண்டங்களையும், அப்பு அண்டம், தேயு அண்டம், வாயு அண்டம், ஆகாய அண்டம், தன்மாத்திராண்டம், அகங்காரபுவனமுதலாக நாதமீரு யுள்ள உலகங்களான பஞ்ச கலைகளுக்குமுட்பட்ட மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம் என்னுஞ்சொற்பொருட் பிரபஞ்சங்களை யெல்லாம் ஒருநொடியிற் கண்டு திருக் கயிலை நோக்கினர்.

சுற்றி வருதற்குட் கடலெத்தனை, மலைக ளெத்தனை, திக்குயானைகள், திக்கு நாகங்கள் எத்தனை, திசைப் பாலர்கள் எத்தனையர்? சூரிய சந்திர அக்கினி வாயு மேகங்கள் நட்சத்திரங்கள் எவ்வளவு, பிரம விட்டுணுக்களும் சத்தியலோக வைகுண்டங்களும் இந்திரர்களும் சுவர்க்கங்களும் உருத்திரர்களும் புவனங்களும் எண்ணிறந்தவரும் எண்ணிறந்தனவு மாகும். யாவரையும் யாவற்றையுங் கண்டு கண்டுசெல்ல அவர்களும் இவரை அஞ்சலி செய்து வணங்கி யுள்

ளார். எங்கும் வியாபியாய்ச் சர்வ லோகங்களையும் தமக்கு அங்கமாக் கொண்ட அத்துவா மூர்த்தியாகிய நம்பெருமானுக்கு இஃதோ ரருஞ் செயலோ? இது பற்றியே.

ஈசோபநிடதமும்.

அநேஜதேகம் மநஸோ ஜவீயோநை
நத்தேவா ஆப்நுவன் பூர்வமர்ஷத் |
தத்தாவ தோந்யா நத்யேதிதிஷ்டத்
தஸ்மிந் நபோமாதரிச்வாததாதி |

என்று முழங்கிற்று. (அதாவது பதி யொருவர். அவர் அசைய வால்லர். மனத்தைப் பார்க்கினும் அதிக விரைவாகச் செல்பவர். ஐம்பொறிகளினும் மிக்க வேகமாக முழ் செல்லும் இப்பதிப்பொருளைப் பொறிகளி லொன்றும் அடையமாட்டாது. அவர் திரமாக விருந்தும் விரைவாகச் செல்லும் மனமுதலிய கருவிகளையுங் கடந்து செல்கின்றார். காற்று அவருழை யிருந்தே உயிர்களுக்கு உடலினசைவைக் கொடுக்கின்றது. என்பதேயாம்.)

இங்ஙனம் எங்கும் நிறைந்த பழம்பொருள் எங்குஞ்சென்றுவலம்வந்தா ரென்பது உபசாரமேயாம். சொல்லளவை பொருளளவைகட்கடங்கா உலகத்தை யொரு நொடியில் வலம் வருதல் யாவரா லியலும். எங்கும் முகங்களும், எவ்விடமுங் கண்களும், எவ்விடமுஞ் செவிகளும், எவ்விடமும் கைகளும், எவ்விடமுந் திருவடிகளும் எவ்விடமும் வடிவமுமாகப் பெற்றார் ஒருவர்க்கன்றி யேனையோர்க்கு முடியா. அத்துணைப் பெருஞ் சிறப்புடைய பரம்பொருள் தாம் என்பதை விளக்குதற்கன்றோ சுப்பிரமணியப் பெருமான் உலகை யொருநொடியில் வலம் வந்து அவ்வுண்மையை விளக்கியருளினார். இவ்வுண்மையை.

யசுர்வேதச் சுவேதாச்சுவதர உபநிடதமும்,

𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌵𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌭𑌵𑍍𑌯𑌮𑍍 ।
𑌉𑌤𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑍋 𑌯𑌦𑌨𑍍𑌨𑍇𑌨𑌾𑌤𑌿𑌰𑍋𑌹𑌤𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 ।

புருஷ ஏவேதஞ்சர்வம் யத்பூதம் யச்சபவ்யம் |
உதாமிருதத்வஸ்யேசானோயதந்நே நாதிரோகதி |
ஸர்வத : பாணிபாதந்த சர்வதோக்ஷி சிரோமுகம் |
ஸர்வத : ச்ருதிமல்லோகே ஸர்வமாவருத்யதிஷ்டதி |
ஸர்வேந்திரிய குணாபாசம் ஸர்வேந்திரியவிவர்ஜிதம் |
ஸர்வஸ்ய பிரபுமீசாநம் ஸர்வஸ்ய சரணம் சுக்ருத் |

என்றுகூறி வெளியாக்கிற்று. இக்கருத்தையே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுந் தாம் அருளிச் செய்த கந்த புராணத்தில்,

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிக
ளெங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் காங்க
ளெங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவ
மெங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே.

என்று எடுத்துரைத்தருளினர். இங்ஙனஞ் சண்முகப் பிரபுஉலகை வலம் வந்து கயிலை வருமுன் என்செய்தார் கணபதி. சர்வலோகங்களிலும் பால்நீர், வெளிகாற்று, உடல்உயிர், கண்ணொளி சூரியவொளிபோலப் பிரிவற அத்து விதமாக வியாபித்து நிற்குந் தந்தை

யாரை வலம் வந்து, உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந் தோங்கி யிலகும் பரஞ்சுடர் தேவரீ ரன்றோ? தேவரீரை வலம் வந்தது உல கைச் சுற்றியதனோ டொக்கும். ஆகலாற் கனியைத் தந் தருள்க வென்று வாங்கிக் கொண்டனர்.

குமாரப் பெருமான் சர்வ லோகங்களையும் ஒருக்ஷணத்துள் வலம்வந்து சர்வ வியாபகத்துவ சர்வாந்தர்யாமித்துவ சர்வபூதேச, சர்வவிசுவரூப மூர்த்தி தாமென்பதை விளக்கி யருளலாற், சர்வ லோகக்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தி யாயினர்.

பழநித் தலபுராணம் - திருவாவினன்குடிச்சருக்கம்.

மகதி யாழ்முனி விடைகொண்டு கனிவல கயிலைப்
பகவன் முன்புவைத் திறைஞ்சின னெடுத்ததைப் பரம
னிகல்க டந்தவை வேற்படைச் சேயினை யானைப்
புகர் முகத்தனை நோக்கினன் புன்னகை முகிழ்த்தான்.

யாவராயினுமிக்கனிவிழைந் துளோர்கணத்திற்
பூவலங்கொடுவருதிரேலவர்க்கெனப்புகலத்
தூவியம்பசுந்தோகைமாமஞ்ஞைமேற்றோன்றித்
தேவர்சேனைகாவலன்கிரியிழிந்துபார்சேர்ந்தான்.

ஈரு ருத்திரர் வசுக்கண் மாமுனிவர்
தீர்த்தர் பூத்திர ணிரப்பவே
மேரு வாதிகிரி புவன மெண்களிறு
விண்டு வாதிபுடை மண்டவே
சார தத்தலை சிறந்துளோ ரொடு
மீச னஞ்சலி திருத்தவே
கார்ம யிற்பரி நடாவிபோய்வினொர்
கணந்தனிற் கயிலை மேவினான்.

சர்வலோக க்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தயேநமஃ

முப்பத் தேழாவது,

# தண்ட தூரக் குமார மூர்த்தி.

குமாரப் பெருமானார் உலக மெல்லாவற்றையும் ஒரு நொடியில் வலஞ்செய்து திருக்கயிலைமலை வந்தார். அங்கு விநாயகக் கடவுள் * மாதுளம்பழம் வைத்திருத்தல் கண்டு, பிணக் குற்றார் போல, மயிலை விடுத்து, மகுடம் குண்டலம் பொன்னுடை முதலிய ஆபரணங்களை யெல்லாங் கழற்றி யெறிந்து, கேதனம் வச்சிரம், அங்குசம், விசிகம், வேல், பங்கயம், கண்டாமணி, மழு, வில், வாள், தோமரம் என்னும் ஆயுதங்களையும் வீசி, தண்ட மொன்று கையினேந்தி, கௌபீன தாரியாய்த் திருக்கயிலையி னின்றும் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச் சென்று தேவகிரியை யடைந்தார். அங்கே தம்மை நோக்கித் தவஞ் செய்த முனிவர் தேவர்க்கு வரங்களைக் கொடுத்து, வைகா நாட்டிலே யுள்ள திருவாவினன் குடிக்குச் சென்று, சிவகிரி யமர்ந்து, இலக்குமி, சூரியன், காமதேனு முதலினோர்க்கு நல்லருள் புரிந்து பற்பல திருவிளை யாடல்களைச் செய்திருந்தார்.

இவண் உமாதேவியார் தமது செல்வக் குமாரர் உலகை வலம் வந்ததும், விநாயகர் கனிவாங்கியதும், அதனாற் பிணக் குற்று, அந்தக் குமாரர் தண்ட பாணியாக வெளிப் பட்டதும் அறிந்து, அவர்தம் பிரிவிற்குச்சிறிதும் ஆற்றாதவராய், இறைவருடன் திருவாவினன் குடிக்குச் சென்றனர். கதிரை வேலாயுதக் கடவுள் தாயையுந் தந்தையையும் வணங்கினர். திருமல ராகிய பரம சிவம் உளங் கனிந்து வேதாகம மோதுந் திருவாயினாலே இன் சொற்கள் கூறி யெடுத்தணைத்து முதுகு தைவந்து உச்சி மோந்து, அருகிருந்த பிராட்டியாரைத் திருநோக்கஞ் செய்தார். உமையம்மையார் திருப் புன் முறுவல் கொண்டு,

---

* மாம்பழ மென்று சில விடங்களிலே கூறப்பட்டது.



தண்டதாக்குமாரமூர்த்தி

கந்தா வருக வுலகமெலாங் கணத்திற் புடைபோய் வந்தவொரு
காரே வருக மாதுளநற் கனிக்குப் பிரிந்தோய் வருகவரு
மெந்தாய் வருக வேள்வருக வினியோய் வருக வெவ்வுயிர்க்கு
மேந்தால் வருக தண்டதர வேறே வருக நங்கடிரு
மைந்தா வருக சிவகிரிநோர் வாழ்வே வருக வின்பமுள
மணியே யணியே வருகநலம் வந்தாய் வருக வருள்சுரக்குஞ்
சிந்தே வருக வினன்குடியிற் றிருவே வருக வருகவே
தேவே ஞானப் பழநீவா செல்வா வருக வருகவே.

என்று வருகைப் பருவங் கூறி வாரியெடுத்துத் தோண்மே லணைத்து மீட்டும் இறைவன் கையிற் கொடுத்தனர். பெருமானார் மடியினில் வைத்துச் "செல்வக் கண்மணியே! நீ யென்று மிளமை யையுடையாய். எல்லா வறிவு முள்ளாய். நீ சிறுவனோ? இல்லை இல்லை. பெரியோன் கிழவோ னன்றோ? மாதுளங் கனியு மொரு கனியோ? நீயே என்றுந் தெவிட்டாப் பேரின்பச் சுவையை யிடை விடாது கொடுக்குஞ் சிவ ஞானப் பழம் ஆகும். அங்ஙன முள்ள பழநீ யாகவும், நுனக்கு வேறு பழமும் வேண்டுமோ? "என்றிவ் வாறு பலப்பல இனிய மொழிகள் கூறி, "மைந்த! யாமுஞ் சத்தியும் நீயே யன்றோ? அது எம்முடைய ஐந்து முகமும், தேவியின் ஒரு முகமுஞ் சேர்ந்து நினக்கு ஆறு திரு முகங்களாக விருப்பதனுல றிதி. எம்மைக் குறித்துச் செய்யும் வழிபாடும், நின் னன்னையைக் குறித்துச் செய்யும் பூசனையும் நினக்கே யாகும். எம் மிருவரையும் பூசை செய்தடையும் பலம் நின்னைப் பூசை செய்வதனு லுண்டா கும். நின்னைப் பூசித்தவர் எம்மிருவரையும் பூசித்தவ ராகின்றார்" என த் திருவாய்மலர்ந்து அத்தலத்தில் வீற்றிருந்தனர்.

பரசிவப் பிரபுவுந் தேவியாரும் "பழநீ" எனப் புகன்றமை யால் அத்தலம் அற்றைநாட் டொடங்கிப் பழநியெனப் பெயர்பெ ற்றது.

சுவாமியும் பழனி யாண்டவன் எனவும், தண்டாயுத பாணி யெனவும் ஞானப்பல மூர்த்தி யெனவும் பெயர் பெற்றார். ஞானமாகிய பல மூர்த்தி யென்க. பலம்=பழம். இம் மூர்த்தம் மேல் வருஞ் சாம வேத மகாமந்திர வசனப் பொருள்களை நுட்பமாயுணர்த்தக் கொண்டருளியதுமாம்.

சாந்தோக்கியோப நிடதம்.

7ம் பிரபாடகம்—துவாதச கண்டம். க-உ.

𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌫𑌲𑌮𑌤 𑌆𑌹𑌰𑍇𑌤𑍀𑌦𑌂 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 𑌭𑌿𑌨𑍍𑌧𑍍𑌧𑍀𑌤𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑌤𑍍𑌰 𑌪𑌶𑍍𑌯𑌸𑍀𑌤𑍍𑌯𑌣𑍍𑌵𑍍𑌯 𑌇𑌵𑍇𑌮𑌾 𑌧𑌾𑌨𑌾 𑌭𑌗𑌵 𑌇𑌤𑍍𑌯𑌾𑌸𑌾𑌮𑌙𑍍𑌗𑍈𑌕𑌾𑌂 𑌭𑌿𑌨𑍍𑌧𑍍𑌧𑍀𑌤𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑌤𑍍𑌰 𑌪𑌶𑍍𑌯𑌸𑍀𑌤𑌿 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌨 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑌂 𑌵𑍈 𑌸𑍋𑌮𑍍𑌯𑍈𑌤𑌮𑌣𑌿𑌮𑌾𑌨𑌂 𑌨 𑌨𑌿𑌭𑌾𑌲𑌯𑌸 𑌏𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌸𑍋𑌮𑍍𑌯𑍈𑌷𑍋𑌽𑌣𑌿𑌮𑍍𑌨 𑌏𑌵𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।

ந்யக்ரோத பலமத ஆஹரேதீ தம்பகவ இதி, பிந்தீதி பிந்நம் பகவ இதி கிமத்ர பச்ய சீத்யண்விய இவே மாதாநா பகவ இத்யாசா மங்கைகாம் பிந்தீதி பிந்நா பகவ இதி கிமத்ர பச்யசீதி நகிஞ்சந பகவ!

தங்கோ வாசயம்வை சோம்யைத மணிமாநம் நநிபாலயச ஏதஸ்ய வைகில சோம்யை ஷோணிம்ந ஏவம் மகாந் ந்யக்ரோதஸ் திஷ்டதி |



புராணபாலன கிருபாமூர்த்தி.

## பழநித் தலபுராணம்.

"தந்தை மலர்க்கைச் செழுங்கனிதன் றமையன் றனிச்கை தனிற் காணச், சிந்தை தெளிந்தாண் டொருவியுயர் தேவகிரிச்சே திமம்வைகி."

"சேயதிருவா வினன்குடியிற் சென்றான்குன்று தொறுநின்றான்".

ஈசனுருகி மடியினில்வைத் தென்று மிளையோ யறிவுடையை
தேசுதருநம் வாணுதற்கண் மணிநீசிறுவ னேபெரியை
வாசநறுமென் கனியுமொரு கனியோமதுர மொழிவாயாற்
பேசவரிய மறைஞானப் பிள்ளைபழநீ யெனப்புகன்றார்.

கூறுடை யாளுங் குன்றாக் குணப்பெருங் குன்று ஞானப்
பேறுடைப் பழநீ யென்னப் பெயரது மருவி யெங்க
ளாறுமா முகவன் வைகு நகரமு மன்று தொட்டு
வீறுதொல் பழநி யென்றே விளம்பின வுலக மூன்றும்.

தண்டதரக் குமார மூர்த்தயே நமஃ

---

முப்பத்தெட்டாவது,

# புராண பாலன கிருபா மூர்த்தி.

---

தாம்பிர வன்னி நதிக்குத் தென் றிசையிலே செயந்தி மாநகரம், திருச்சீரலைவாய் எனவரும் பெயர்களை யுடைய திருச்செந்தூர் என்னுஞ் சுப்பிரமணிய தல முள்ளது. அது படைவீட்டுத் தலம் ஆறினுள் மிக விசேட முடையது. அவ்விடத்தி லெழுந்தருளி யிருக்கும் எமது பரம கிருபா நிதியாகிய குமாரக்கடவுளை மெய்யன்புடன் பூசித்து, அவரது திருவடிகளையே யன்றி மறந்தும் புறந்தெ

மூாத திரிசுதந்திரப் பிராமண முனிவர் இரண்டாயிரவர் உளர். அவருள் ஒருவரது தவமேலீட்டானே தோன்றிய வென்றிமாலை ஐயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியிற் பிரிய மின்றி வாளா காலங் கழித்தமையாற் றந்தையார் அவரைக் கந்தநாதனது திருக்கோயிலிலே மடைப்பள்ளி வேலையி லமரச் செய் வித்தனர். அவர் அங்கு மெய்யன் புடன் திருவமுது முதலியன செய்து கொடுத்து வருங் காலத்திலே, ஒரு நாட், குமான் றிருவருளாலே நைவேத்தியஞ் செய்தற்குக் காலந் தாழ்த்தனர். அதனாற் றலத்தாரு மக்கோயிலி லுள்ளவர்களுஞ் சினமுற்று இவர்க்குக் கடுந்தண்டனையைச் செய்தனர். அத்துன்பத்தைச் சகிக்க முடியாது அற்றை யிரவிலே, இவ்வாறிருப் பதினும் உயிர் விடுதலே மிக்க நல மென்று கருதிச் செவ்வேளைத் தம்மனத்தி லன்புடன் நினைந்து துதித்து, ஆலயத்தின் பக்கத்தே யுள்ள ஆழியில் விழுவான் சென்றார். வீழுஞ் சமையத்தில் அன்பினரைக் கைவிடாத தடங்கருணைப் பெருங் கடலாஞ் சத்திதர மூர்த்தி வெளிப்பட் டருளி அவர் கையைப் பற்றித் திருவாய் மலர்ந்தருள்வார்.—

"அந்தணனே! நீ யொன்றற்கும் அஞ்சற்க. யாம் இத்தலத்தின்கண் நுமர்க்காக வீற்றிருக்கின்றேம். இனி நின்னை யவரும் பிறரும் போற்றி வணங்கும் வாத்தனுக்குவேம். இத் தல மான்மியத்தைத் தமிழிலே பாடுதி" யென்று திருவாய் மலர்ந்தருளினர். வென்றி மாலை ஐயர் என்பவர் பரவச மடைந்து, வணங்கி யெழுந்து "சர்வலோகாதிபதீ! புழுத்த நாயினுங் கடையேனை யொரு பொருட்டாக் கொண் டெழுந்தருளினையோ! அடியனேன் றமிழ் நெடுங் கணக்குத்தானும் முற்றுந் தெரிந்திலனே. எவ்வாறு மான்மியத்தை யறிவல். எங்ஙனம் பாடுவே னேழையேன்" என்றார். சண்முகப் பெருமான் றிருவுள மிரங்கி, "அளியோய்! செவ்வல் என்னும் நகரத்திலே கிருட்டிண சாத்திரி என்னும் பிராமணனிடஞ்

செல்வாய், அவன் அறிப்பான். அப்போது உனக்குப் பாடும் வன்மையுண்டாகும்'' என்று மறைந்தனர். அதனைச்சிரமேற் கொண்டுசென்று சாத்திரியாரைக் கண்டு நிகழ்ந்தது கூற, அவர் தமக்கும் அங்ஙனம் அறிவித்தருளியதை நினைந்து அழலின் மெழுகது போல் உருகித் தல மான் மியங்களை வடமொழியி னின்றும் உணர்த்திய மாத்திரையே பேராழி கரைபுரண் டோடினாற் போலச் செந்தமிழிற் கவிகள் பாடி முடித்தார். சாத்திரியார் அவர்கள் இவரது கவிகளின் சொற் சுவை, பொருட் சுவை, வனப்பு முதலாயவற்றையும், கவிபாடும் விரைவினையுங் கண்டு புகழ்ந்து விம்மிதமு மன்பும் மேலிட, வென்றி மாலைக் கவிராசர் எனச் சிறப்புப் பட்டமுமளித்து அன்புடன் விடுத்தார். கவிராசர் அவர்கள் தாம் பாடிய திருச் செந்தூர்ப் புராணத்தைச் சுவாமியின் திருச் சந்நிதானத்திலே அரங்கேற்றும்படி வந்தார். அவ்வுண்மையறியா அவ்வூரிலுள்ள திரிசுதந்திரராகிய பிராமணர்கள் கேட்டு, பரிசாரகனாவது பாடுகிறதாவது ஈதென்ன புதுமை? அரங்கேற்ற வொட்டேமென்று நிந்தித்துத் தடுத்தார். அவர் தன்மையை யறிந்த கவிராசர் அவர்கள் வருந்தி, ''அரங்கேற்றுவார் அரங்கேற்றுக; மதிப்பார் மதிக்கட்டும்'' என்று அப் புராணத்தைச் சமுத்திரத்தி லெறிந்து தாஞ் சிவயோக பராய்க் கந்தக்கடவுள் திருவடியை யடைந்தார்.

கடலிலே எறியப் பட்ட புராண மானது அக்காலத்தே திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் வையை யாற்றி லிடப்பட்ட தமிழ் வேதத் திருவருட்பாத் திருவேட்டினைப் போல எதிரேறிக் கால் கொண்டு சென்று இலங்கையிலே யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலேயுள்ள உபயகதிர்காமம் என்னும் புதுச்சந்நிதித் தலத்திற்கு அணித்தான பனைமுனையை யடைந்தது. பனையோலையில் வரையப்பட்ட நூலடைந்த முனையாகலாற் பனைமுனை யெனப் பெயர் பெற்றது. புராணமுனை யென்றும் வழங்குவதுண்டு. அதனைச் சுப்பிரமணிய

ஸ்வாமியின் தொண்டராய், கந்த புராண பாராயணராய், அந்நூலைத் தால பத்திரத்தின்கண் எழுதிப் பல திருமுறைகளாக்கி ஒவ்வோர் ஆலயத்திற்கும் வழங்கி வருதலையே தொழிலாக வுடையவராய், வம்மிச பரம்பரையில் வந்த மூருகதாசர் சுப்பிரமணியப் பெருமான் சொப்பனத்தி லறிந்தாங்கு அவண் சென்ற காலை, திருச்செந்தூர்ப் புராணத் திருமுறை கடற்கரையி லடைதல் கண்டு அறுமுகக் கடவுளின் றிருவரு ளிருந்தவா றென்னை யென வியந்து துதித்து, பூம் பல்லக்கில் வைத்து, வாத்தியங்கள் பல முழங்கக் கொண்டு சென்று பூசித்து வந்தார். அதன் பிரதிகள் பற்பல எழுதித் திருச் செந்தூர் முதலாய சுப்பிரமணிய தலங்களுக்கு அனுப்புவித்தார். தினந் தோறும் பாராயணஞ் செய்து வருவார். இங்ஙனமிருக்கு நாளிலே சக்கர சுவாசம் என்னுங் காற்றின் வேகத்தாலே வவ்வூர் முழுதினு முள்ள ஒவ்வோர் வீடுகளினும் பலர் இறக்கவும், இவர் இருக்கும் வீதியினுள்ளார் ஒருவரும் அக்கெடுதிக் காற்றினால் இறக்கா திருத்தலைக் கண்டு, புராணத்தின் பெருமையோ வென்று சந்தேகித்தார். சந்தேகித்த அவரது கனவின்கண் வேற் பெருமான் அவ்வுண்மையைத் தெரித்தருளிச் சென்றார். ஒவ்வொருவரும் பிரதிக ளெழுதுவித்துத் தத்தம் இல்லங் களினும், கோயில், மடம் என்னு மிடங்களினும் வைத்துப் பத்தியுடன் பாராயணஞ் செய்து பயன் பெற்றார். இங்ஙனம் புராணத்தைப் பாடுதற்கும், வழங்குதற்குங் கிருபையைக் காட்டிய மூர்த்தி யாகலாற் புராண பாலன கிருபா மூர்த்தி ஆயினர்.

### திருச்செந்தூர்ப் புராணம் - சிறப்புப் பாயிரம்.

கந்தவேளோடிவந்துவேதியனைக்கைப்பிடித்தொன்றுக்குமஞ்சே
லெந்தனுவவுணர்குலத்தைவேரறுத்தேயமரரைப்புரந்துசெந்தூரா
மிந்தமாதலத்தையுற்றனமதனாலித்தலமகிமையாம்வடநூல்
செந்தமிழானுஞ்சிறக்கவினிதுசெப்புவாயென்றுரைசெய்தான்.



இந்திரபோகாநுக்கிரகமூர்த்தி.

தடையற யாவுந் தெளிந்த தோர் கிருட்ண சாத்திரி மகிழ்ந் தனன் கதிர்வே, லுடையவன் றன்பான் மொழிந்த மாற்றமு நன் கொத்திருப்பது கண்டு வியந்தே, யிடைவிடா திருந்து செந்தின் மான்மியத்தை யியம்பியே முடித்தபின் கடலின், மடைதிறந் திட்ட வெள்ளம்போல் வென்றி மாலைக்கு வந்தன வாக்கு.

இன்னகுறிப் புணர்ந்துபெரி தாகுலித்து மனவருத்த மெய்த லோடு, முன்னருமவ் வேடதனை யலைகடலில் வீசியெறிந் தோடிப் போனான், பின்னரவ்வே டலையொதுக்குண் டுழத்துத் துறைசேரப் பெற்றதந்த, நன்னகரு ளானொருவன் காண்டலுங்கைக் கொண் டில்ல நண்ணினானால்.

**தணிகைப் புராணம்.**

“ஏடெழு தாசி பாச மீந்தவ ரெழுதி வைப்போர்
பீடுறப் பயில்வோர் சொல்வோர் பெரிதரும் பயன்க ளாய்வோர்”
“ஆய்ந்தவர்க் கன்ன மாதி யளிப்பவர் முதலா னோரு
மேய்ந்தநற் சுற்றத் தோடுஞ் சிவபுரத் தெல்லை சேர்வார்.”

புராண பாலன கிருபா மூர்த்தயே நமஃ

முப்பத்தோன்பதாவது,

# இந்திரபோகாநுக்கிரக மூர்த்தி.

கொடுவினை முதிர்ந்த சூரபன்மன் முதலிய அசுரர் கூட்டங் களை யெல்லாம் அழித்து, இந்திரனை முன்போல விண்குடி யேற்றி னார் குமாரக்கடவுள். அங்ஙனம் அரசாட்சி பெற்ற இந்திரனான வன், ஆங்குள்ள போகப் பொருள்களாய ஐராவதம், காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சியமந்தகமணி, சூளாமணி, சிந்தாமணி, சிந்தா

னம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம், உச்சைச் சிர வம் என்னும் புரவி, சுதன்மை என்னுஞ்சபை, வசந்தமெனும் மண்ட பம், அரம்பையர் முதலியன, பானுகோபன் ஆதியான வசுரர்களா லே கவரப்பட்டும் அழிக்கப்பட்டும் வெறுமையதாய் விண்ணுலகு விளங்கியது கண்டு, அவைகளை முன்போ லெற்கு அளித்தருள வல்லவர் சரவணபவனே யெனத் தனது உள்ளத்து எண்ணிப்பூவு லகையடைந்தான். ஆங்குக் கணிகவெற்பு, அகோர கைவல்லியப் பிரதம், பிரணவார்த்த நகரம், மூலாத்திரி, கற்பசித்து, நாரதப் பிரி யம், சீபூரண கிரியெனத் திருநாமங்கள் வகித்த தணிகைமா தலத் தைச் சார்ந்தான். கிரிகண்டு வணங்கி வலம் வந்து, திருக்கோயி லின் சமீபத்துள்ள தீர்த்த மொன்றை யடுத்துத் தேவதேவனது அருச்சனை செய்ய விரும்பிச் சிலவரைப் பார்த்து, ஏவலீர்! கற்பகச் சோலைக்க ணுள்ள மடுவினிடத்தே பூத்தொளிருங் குவளையங் கொ டியைக் கொணர்வீ ரென்னலும் அவர் கொடுவந்தார். அதனைத் திரு மால்தவஞ் செய்த இடத்தின்க ணுள்ள சுனையிலே பதித்து அம் மலர்கொண்டு அருச்சித்தான். அதனால் அவணெழுந்தருளி யிருக் கும் விநாயகப் பெருமான் அற்றைநாட் டொடங்கிச் செங்கழுநீர் விநாயகர் எனத் திருநாம முற்றார்.

அதன் பின்னர் இந்திரன் வேத முதல்வராகிய ஞானசத்திதர ரப்பெருமான் திருக்கோயிலி னுட்சென்று பணிந்து, மூழ்கினோரது பெரும் பாவங்களை யெல்லாந் தீர்க்க வல்ல குமார தீர்த்தத்தும் அவ் வாறே செங்கழுநீர்க் கொடியைப் பதித்து, காலைப் போதி லொரு மலரும், உச்சிக் காலத்தி லொருமலரும், மாலைக் காலத்தி லொரு பூவுமாக மலரும் வண்மைகண்டு அதிசயித்து அவைகளாற் சிவா கம முறைப்படி பூசை யாற்றினன். இங்ஙனம் முக்காலத்தும் மெய் யன்புடன் இயற்றுவது கண்ட தணிகை நாயகன், கார்த்திகை மா தத்திலே கார்த்திகை நட்சத்திரத்திற் பூரணைத் திதியிலே யிந்தி

ரன்மூற் றோன்றியருளினர். அது கண்ட இந்திரன் அளவிலா வானந்தம் பொங்கப் பன்முறை வீழ்ந்து வீழ்ந்து வணங்கிப் பெருமானைத் துதிப்பா னாயினன்.

பேரரு ளுடையா னென்னும் பெற்றிமை யுலகோர் தெள்ளக்
கூரிருண் மலத்தி னாழ்ந்து கொட்புறு மிழுதை யேற்குஞ்
சீரருள் புரிந்து தேவர் சிறையினைச் சீத்துக் காத்த
வாரருள் போற்றி யாரு யிரமுறை போற்றி போற்றி.

மண்ணுயி ரனைத்து மல்க மழைமுகி லானாய் போற்றி
விண்ணுயி ரனைத்து மல்க மிளிரமிழ் தானாய் போற்றி
கண்ணுருக் காணக் கண்ணுட் கனலுரு வானாய் போற்றி
யெண்ணுயிர்த் தொழின்மை முற்ற விரந்தா மானாய் போற்றி.

என்றிவ் வாறு துதித்தான். மாமனாராம் மாகனர் போற்றிய தற் குவகைகொண்டு, மருகனாராம் முருகநாதன் திருவாய் மலர்ந்தருளும், "ஆகண்டலோய்! நினக்கு என்வேண்டுங் கூறுதியெமக்"கென்றார். "இந்திரன் பெருமானே! சுவர்க்கத்துள்ள போகப் பொருள்கள் யாவும் பெறுவான் தேவரீர் திருத்தல மடைந்தேன். ஏனைய தேவரும் தாந்தாம் வரங்களைப் பெறுமாறு வந்துளர். இவ்விடத்து எளியனன் நாட்டப் பட்ட குவளை யுலக மெல்லாம் அழியுங் காலத்தும்ஒழியா திருத்தல் வேண்டும். இம் மலரை யணியும் வரைக்கும் எளியனேனுக்கு எவ்வகைத் துன்பமும் இல்லையாதல் வேண்டும். ஆதியந்த மில்லாப் பரஞ்சோதி யாகிய தேவரீர் காட்சியருளிய இந்நன்னாளில் இத் தீர்த்தத்தில் மூழ்கினவர் பருகினவர் தெளித்துக் கொண்டோர் யாவரும் இருவினைகளும் மலமு மொழிந்து தேவரீரது திருப்பதத்திற் சார்ந் திரண்டறக்கலக்கும் இணையிலா முத்தியை யடைதலும் வேண்டும்" என்றிரந்தான். தணிகைப் பெருமான் அவ்வரங்களையு முதவி, அவற்குரிய போகப் பொருள்களையும் அளித்து முன்போல் இருந்து அரசு செய்யுமாறுங் கருணை பாலித்தார்.

இந்திரனுக்குப் போகப் பொருள்களை யெல்லாம் அளித்து விண்ணுலகை நிறுத்தினமையாற் பெருமானார் இந்திர போகாநுக்கிரக மூர்த்தி ஆயினர்.

தணிகைப் புராணம்.

இந்திரன் வேட்ட வெல்லா மெம்பிரா னருளிச் செய்தா
னந்தார் தாமுந் தத்த யாக்கமுற் றருளப் பெற்றார்
பைந்தரு காம தேனு பகர்நிதி மணிக ளாய்தஞ்
சந்தமார் சுதன்ம மென்னுஞ் சபைமுத லனைத்தும் பெற்றான்.

இந்திர போகாநுக்கிரக மூர்த்தயே நமஃ

---

நாற்பதாவது,

## நாகவாதனை நிவாரண மூர்த்தி.

---

இப் பிரமாண்டத்தி னடியிலே சலத் தம்பமாக விளங்கும் சுவர்ண மயமான ஆதார சத்தியின் றலைமீது இரணிய மயமான தாமரை மலர் போல நூறு கோடி யோசனை யகல முள்ள ஆதிகூர்மம் இருக்கும். அதன் முதுகிலே எட்டுத் திக்குகளினும் எட்டு யானைகள் அமரும் அவைகளின் நடுவிலே எட்டுமாநாகங்கள் இருந்து பூமியைத் தாங்கா நிற்கும். தக்கன், வாசுகி, அனந்தன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்னும் அவ்வெட்டனுள் வாசுகியே சிறந்தது. இது முப்பதினாயிரம் யோசனை யகலமுடைய ஆயிரம் படத்தலைகளை யுடைத்தாய், வெண்ணிறக் காந்தியுடையதாய், அநேக சர்ப்பர்கள் சூழ்ந்து போற்ற மகா பல முடையதாய், தன் பிடரை வளைத்துப் படங்களால் தரணியைச் சுமந்து நிற்கும். துரியோதனன், குந்தி புத்திரனாகிய வீம



நாகவாதனை நிவாரணமூர்த்தி.

னைக் கட்டி யாற்றி விட அவன் பாதலத்தில் வீழ்ந்த போது, இந் நாகராசனை யவனது விடநோய் தீர்த்துத் தன்னிடத்துள்ள அமிர்தத்தைக் குடங் குடமாகக் கொடுத்துப் பல்வித ஆபரணங்களுடன் பதினாயிரம் யானை பலத்தையும் அளித்து அனுப்பினேன். இவ்வாறாய வாசுகியைத் தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்திற்காகப் பாற்கடல் கடைந்த காலத்தே மந்தர மலையாகிய மத்திற்கு நாணாகப் பூட்டிக் கடைந்தார்கள்.

அசுரர்கள் வாசுகியின் தலைகளிலும், தேவர்கள் அதன் வாலிலும் பற்றி மிகு வேகத்துடன் இழுத்துக் கடைந்தார்கள். வாசுகி நாகம் அதனைப் பொறுக்க லாற்றாது தன் வாய்களினின்றும் விடத்தைக் கால, அதற்கு அஞ்சித் தேவாசுரர்கள் யாவரும் ஓடினர். விபூதியுண்டதனால் வெள்ளை மேனியனாய் விளங்கிய யாதவன் காக்கின்றேனென்று எதிர் நின்றமையாற் காளமேனியனாயோடினன். அதனை யந்தி வண்ணனார் உண்டருளிப் பின்னருங் கடையுமாறு ஆஞ்ஞாபித்தார். அவர்கள் முன் போலவே கடைந்து அமிர்த முண்டார். இவ்வாறு கடைதலால் வாசுகியி னுடல் அவர் கைகளில் நெரிந்தும், மலையி னுரோஞ்சுப் பட்டும் தேகமெல்லாம் பெரும் புண்ணுற்று மிக்க வருத்த முற்றது. அமிர்த முண்டும் அகன்றிலதவ் வருத்தம். பரசிவப் பிரபுவின் திருக்கண்டத்தைக் களங்கமாக்கிய பாதகமே யிவ்வருத்தத்திற் கேது வென்று உணர்ந்து, அப்பாதகமும் இவ்வாதனையுந் தீர்ப்பவன் வாயுவாற் றாங்கப் பட்ட சிகிவாகன மூர்த்தியே என்று பெருமானை நோக்கித் தவங் கிடந்தான். அறுமுகக் கடவுள் தோன்றி யெவ்வரம் வேண்டு மென்றார். நாகராசன், "சுவாமீ! இப்புண் வாதனை யெவ்வாற்றானுந் தீராது பெரிதும் வருத்துகின்றது அதனாற் பூமியைத் தாங்கு மாற்றலில்லா தாயிற்று. அன்றியுந் தேவரீரது தந்தையாரது திருக்கண்டத்தைக் கறைக் கண்டமாக்கிய பாதக நோய் மிகுதியும் என்

னுளத்தைச் சுட்டழிக்கின்றது. என் செய்கேனென, சேந்தப் பெருமான், வாசுகியின் உடலைத் தைவந்து (தடவி) "நாகராச! இனிஉடல் வாதனை யொழிந்தது. முன்னையதினும் அனந்த மடங்கு வலிமையை யளித்தேம். இனி முன்போற் பூபாரந் தாங்கக் கடவை. பிரம விட்டுணு முதலிய தேவர்களும் எவர்களும் மலவசத்தாற் றாமே பிரமம் என்று மயங்காது, எந்தையே பரம்பொருளென் றுணர்ந்து வழிபட் டுய்தற்குரிய அடையாளமான நற்கறையாக விருத்தலால், அதுகறை பாதக மாகாது. எந்தை திரிபுர மெரிக்குங் காலத்து, மந்தரமலையிற் கயிறாக் கிடந்த நீ அவர் திருக்கரத் தேந்திய மேருமலையாம் வில்லிற்கு நாணுயிருப்பதால் அச்சிறுமை நீங்குவை" என்று அருளிச் சென்றார். வாசுகி நாகத்தின் உடலவாதனையையும், கிலேசத்தையும் நீக்கி யருளினமையாற் குகேசப் பிரபு நாக வாதன நிவாரண மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

கந்த லகரி (மொழிபெயர்ப்பு.)

வாசுகி கிரக் கடல்கடை தலினால் வருபுண்ணு
    மெமதுதந் தையனு
மீசனற் களத்தைக் கறையதாக் கிட்டே னெனவது
    பதகமென் றுளைந்த
மாசையுங் கெடுத்து முதல்வலி யருளும் வள்ளலே
    கந்தநா தப்பேர்த்
தேசனே ஞானத் தெளிவமு தளிக்குந் திருவருட்
    கடலெமக் கருளே.

தணிகைப் புராணம் - நாகமருள்பெறு படலம்.

பன்னெடு நாள்கழி வெய்த வுளம்பரி விற்றீர்ப்பான்
கன்னி மயிற்பெரு மானெதிர் போந்து கருந்திண்மை